# தேவாரத் திருநெறிக் கட்டுரை

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

சௌ. சிவா

3-10-'62.

[illegible]

கழக வெளியீடு, கக0௪

# தேவார ஒளிநெறிக் கட்டுரை

[ சுந்தரர் ]

தணிகை மணி, ராவ்பகதூர்

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

திருநெல்வேலி - 6. சென்னை - 1

1962

வடக்குப்பட்டு சுப்பிரமணிய [illegible] பிள்ளை (1883)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1, August 1962

Q23:417x4:g
K2

# THEVAARA OLINERIK KATTURAI

Appar Achakam, Madras-1.

# பதிப்புரை

வரலாற்றுக் காலத்துக்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே நம் தொன்மைத் தமிழகம் உலகியல் வளர்ச்சி முறையில் மிகவும் சிறப்புற்றிருந்தது. அதுபோன்று செந்தமிழ் மொழியினும், சிவவழிபாட்டு முறையினும், செந்நெறிச் சீரினும் உயர்வற உயர்ந்த ஒரு பெருந்தன்மையாக நின்று நிலவுகின்றது: பொதுவாகத் திருமுறைகளும், மெய்கண்ட நூல்களும் இல்லையாயின் செந்தமிழ்த் தொன்மை மெய்ப் பொருட் பெற்றியும், ஒரு முழுமுதல் வாய்மையும், திருவருட்டன்மையும், தமிழ்மறைமாண்பும், சித்தாந்தச் செந்நெறியே வையப் பொது நெறியென்னும் பொன்றுப் பொற்பும் எவரும் எட்டுணையும் உணர்ந்துகொள்ள வாய்ப்புண்டாகாது.

சிறப்பாக நால்வரருளிய நற்றமிழ் மாமறைகள் எல்லையில்லாப் பல சிறப்புடையன. தென்றமிழ் நாட்டுத் திருக்கோவிலும், ஆங்கு முதன்மையாக நிகழ்ந்துவரும் சிவலிங்க வழிபாடும் ஒப்புயர்வில்லன. இவ்வுண்மைகள் அனைத்தும் "தேவார ஒளிநெறிக் கட்டுரை (அப்பர்)" என்னும் சீரிய நூலின் பதிப்புரைக்கண் விரித்து விளக்கப்பட்டுள்ளன.

அதுபோல் இந்நூல் சுந்தரர் பாடியருளிய தேவார ஆய்வின்பயனைத் "தேவார ஒளிநெறிக் கட்டுரை (சுந்தரர்)" என்னும் திருப்பெயருடன் வெளிவருகின்றது. அடங்கன் முறை பாடியருளிய மூவருள்ளும் **சுந்தரர்** செறிவுநெறி (யோகநெறி) யின் திறத்தினை உலகுக்குக் காட்டியருளும் முறையில் ஒருவராய் நின்று சொல்லாலும் செயலாலும் விளக்கியருளினர். அவரே குடும்பவாழ்க்கையுடன் கூடி வாழ்ந்து சிவபெருமானின் திருவடிசேரும் செம்மையினைக் காட்டியருளினர்.

ஆதலால் அவர்தம் திருப்பாடல்களில் அகத்துறைப் பகுதிகளும், புறத்துறைப் பகுதிகளும் ஆங்காங்கு மிக்கு விரவிக் காணப்படும். மேலும் சிவபெருமான் திருப்பெய அவர்தம் அருளிப்பாடு, நடுநிலை வழாத்தன்மை, முறைப்பு முதன்மை, பிழைபொறுக்கும் பெற்றிமை, அடியவர்த முள்கூட்டுறவுற்று அளவளாவச் செய்யும் அருமைப்பாடு அடியவர் தம்மை இந்திரன்மால் முதலான எழின்மிகு தேவர்களைக்கொண்டு வணங்கி வனப்பமை வெள்ளானை மீது ஏற்றிவரச் செய்யும் மிகுதிப்பாடு, செந்தமிழ்மொழியி மாட்டுத் தாம் நில்வுலகத்தின்கண் கொண்டுள்ள அள பருங் காதலை நீடுலகமாகிய திருக்கயிலையின் கண்ணு காட்டுவித்துத் தாம் விழையுடன் ஏற்றுக்கொள்ளும் வ பாடு செந்தமிழ்த் திருமாமறைவழிப் புரியும் வழிபாடே என்னும் வாய்மையினைப் புலப்படுத்துதல் முதலிய பல்வ இவர்தம் திருப்பாடல்களில் பரக்கக் காணலாம்.

இவற்றையெல்லாம் பொருத்தமான பல்வேறு தலை புக்களில் பொற்புடன் விளக்கும் பெற்றிமை நற்றவப் பெ யாராம் இந்நூலாசிரியர்க்கே நன்கு அமைந்துள்ளன. இ பெரியார் இதுபோன்று 'தேவார ஒளிநெறிக் கட்டுரை (சம்பந்தர்)', 'தேவார ஒளிநெறிக் கட்டுரை (அப்பர்)' என இருநூல்கள் இயற்றியுள்ளனர். அவையுங் கழகவழியா வெளிவந்துள்ளன. இப்பெரியாரவர்கள் புலமைமாண்ட சிவபத்திச் சீர்மை, திருத்தணிகை ஈசன் திருவடிப்பற்று வழிவழியாகத் திருப்புகழ் பரப்பும் தெய்வப்பணி, கட டுரை, பேருரை, கவிபுனைவு முதலிய தெய்வக் கலைவளப் அன்பும் அடக்கமும் அருளும் நிறைந்த திருமேனிப் பண்பு தவநெறி யொழுக்கம் முதலியன நிறைந்த தனிப்பெரு தகைமையர்.

# பதிப்புரை

கட்டுரை 'கணபதி' முதல் 'ஜீவராசிகள்' ஈறாக [illegible]க்களால் விளங்குகின்றது. இக்கட்டுரையின் [illegible]மல் சுந்தரர் திருவரலாறும், அவர்தம் தேவார [illegible]ளும், அத்தேவாரங்களின் பொருள் விளக்கங்களும், [illegible]களும் பிறவும் எளிதினும் இனிதினும் உணரலாம்.

இவ்வரும் பெரும் சிவத்தொண்டினை ஓவாவுழைப் [illegible]ற்றியளித்த நம் சிவத்திருவினர் தணிகை மணி [illegible]கநூர், வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. அவர் [illegible] கழகத்தார் நன்றி என்றும் உரித்தாகுக.

இந்நூலினைப் பொதுவாகச் செந்தமிழன்பர்களும் [illegible]ாகச் செந்நெறிச் செல்வர்களும் வாங்கியும் வாங்கு[illegible]றும் கற்றும் கற்பித்தும் பெரும்பயன் எய்துவார்க[illegible].

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

அத்தாளன் ஆருயிரே அம்பொன்மலை
வல்லிபங்கா அரனே அன்று
வித்தாரம் புகன்றுருகிப் பழிச்சுநருக்
கருள்புரியும் விமலன் கேட்பப்
பித்தாஎன் றரும்பதிகம் ஓதுதிரு
நாவலூர்ப் பெருமான் தாளை
இத்தேகத் தியாம்துதிக்க எத்துணைதே
கங்கள்தவம் இயன்ற அம்மா!

தேவார ஒளிநெறிக் கட்டுரை—சம்பந்தரும் அப்பரும்—கழக வெளியீடாக முன்னரே வெளிவந்துள. சுந்தரர் தேவார ஒளிநெறிக் கட்டுரையாம் இந்நூலும் கழக வெளியீடாகவே வெளிவருகின்றது. சுந்தரர் தேவாரத்தின் சிறப்பும் பெருமையும்,

"ஆரூரன் உரைத்த தமிழ்
சொல்லுதல் கேட்டல் வல்லா
ரவர்க்கும் தமர்க்கும் கிளைக்கும்
எல்லியும் நண்பகலும் இடர்கூருதல்
இல்லை யன்றே" (7-22-10)

எனவரும் அவர்தம் அருமைத் திருவாக்கினின்றே அறியக் கிடக்கின்றன. இவ்வுண்மையை ஓர்ந்து கடைப்பிடித்து இக் கட்டுரையை வெளியிடும் திருப்பணியை மேற்கொண்ட கழகத் தலைவர்—மெய்வருத்தம் பாராது, செவ்வி அருமையும் பாராது, கருமமே கண்ணான—சைவத் திருவாளர் வ. சுப்பையா பிள்ளையவர்களும், அவர்கட்கு உறுதுணையாக நிற்கும் பிற அன்பர்களும் தணிகையெம் பெருமான் திருவருளால் நோயின்றிப் பல்லாண்டு சகல இன்பத்துடன் வாழ்வார்களாக.

சுந்தரர் தேவார ஒளிநெறியும் விரைவில் வெளிவரும்.

292, இலிங்க செட்டி தெரு,
சென்னை-1.

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.
23—7—1962.

# உள்ளுறை


| கட்டுரைத் தலைப்பின் எண் | பொருள் | ஒளிநெறியில் இத் தலைப்பிற்குரிய தலைப்பின் எண் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | கணபதி | 1 | 1 |
| 2. | அகப்பொருள் | 2 | 1 |
| 3. | அங்கங்களின் தொழில் | 3 | 3 |
| 4. | (1) அடியார் | 4 (1) | 3 |
| ,, | (2) ,, சுந்தரரின் தேவாரத்தை ஓதும் அடியார்கள் | 4 (2) | 4 |
| ,, | (3) ,, பாடும் அடியார்கள் | 4 (3) | 4 |
| ,, | (4) ,, பஜனை செய்யும் அடியார்கள் | 4 (4) | 5 |
| ,, | (5) ,, பூசிக்கும் அடியார்கள் | 4 (5) | 5 |
| ,, | (6) ,, அடியார்கள் பத்தி செயும் வகை | 4 (6) | 5 |
| ,, | (7) ,, அடியார்கள் பெறும் பேறு, அடியார் பெருமை | 4 (7) | 5 |
| ,, | (8) அடியார்களைக் குறிக்கும் சொற்கள் | 4 (8) | 6 |
| 5. | அடியாரும் சிவனும் | 5 | 6 |
| | 1. பிரான் அடியார்க்கு அருளுதல் | 5 (i) | 6 |
| | 2. அடியார்கள் பெருமானைப் போற்றுதல் | 5 (ii) | 7 |
| | 3. அடியார்கள் செய்யும் பணிகள் | 5 (iii) | 7 |
| | 4. அடியவர்க்காகப் பெருமானது செய்கை | 5 (iv) | 7 |
| | 5. அடியவர் பூசையைச் சிவபிரான் விரும்புவது | 5 (v) | 7 |
| | 6. அடியார் பெறும் பேறு | 5 (vi) | 7 |
| 6. | அடியார் அல்லாதவர் | 6 | 8 |
| 7. | அடியார் அல்லாதவரும் சிவனும் | 6 | 8 |
| 8. | அடுக்குச் சொற்கள் | 7 | 9 |
| 9. | அரக்கர், அசுரர் | 8 | 9 |
| 10. | அரசர், ஆட்சி | 9 | 10 |
| 11. | அருவியும், அருவியில் வரும் பொருள்களும் | 10 | 13 |
| 12. | அறச்செயல்-பாபச் செயல் | 11 | 13 |
| 13. | ஆடை, உடை | 12 | 13 |
| 14. | ஆறுகள் | 13 | 13 |

| | | | |
|---|---|---|---|
| 15. | ஆற்றில் வரும் பொருள்கள் | 14 | 16 |
| 16. | இசையும் பண்ணும் | 15 | 17 |
| 17. | இந்திரன் | 16 | 17 |
| 18. | இலக்கண விசேடங்கள் | 18 | 17 |
| 19. | இலக்குமி | 19 | 18 |
| 20. | இலிங்கம் | 20 | 18 |
| 21. | இறப்பு | 21 | 18 |
| 22. | இனச் சொற்கள் | 22 | 18 |
| 23. | உபதேசம் | 23 | 19 |
| | (i) உலகுக்கு | 23 (i) | 19 |
| | (ii) நெஞ்சுக்கு | 23 (iii) | 20 |
| | (iii) புலவர்க்கு | 23 (ii) | 21 |
| 24. | உயிர் | 24 | 22 |
| 25. | உலகங்கள் | 25 | 22 |
| 26. | உலோகம் | 26 | 22 |
| 27. | உவமைச் சொற்களும் உவமைகளும் | 27, 28 | 23 |
| 28. | உழுதல் | 29 | 23 |
| 29. | உறவினர் | 30 | 23 |
| 30. | எண்கள் | 31 | 23 |
| 31. | எதிர்மொழிகள் | 32 | 24 |
| 32. | ஐந்தெழுத்து | 33 | 24 |
| 33. | ஐம்புலன்கள்—அவைதம் ஆட்சி | 34 | 24 |
| 34. | ஐம்பூதம் | 35 | 24 |
| 35. | ஐராவதம் | 36 | 25 |
| 36. | ஒருபொருள் இரட்டைச் சொல் | 37 | 25 |
| 37. | ஒலி, ஒலிக்குறிப்பு, ஓசை | 38, 39 | 25 |
| 38. | ஒற்றுமை அடிகள் | 41 | 25 |
| 39. | ஒன்று என்னும் சொல்லாட்சி | 42 | 26 |
| 40. | கங்கை | 43 | 26 |
| 41. | கடல், கடல் சார்ந்தவை | 44 | 26 |
| 42. | கணங்கள் | 45 | 27 |
| 43. | கதி | 46 | 27 |
| 44. | கவி | 47 | 27 |
| 45. | கலை, கல்வி, கலையும் சிவனும் | 48 | 28 |
| 46. | காமதேனு | 49 | 28 |
| 47. | காமன் | 50 | 28 |
| 48. | காலமும், ஊழிக்காலமும் சிவனும் | 51 | 29 |
| 49. | காலன், காலதூதர், யமதண்டனை | 52 | 29 |
| 50. | காளி | 53 | 30 |
| 51. | கோட்டை | 54 | 30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 52. | சங்கு | 55 | | 30 |
| 53. | சமணர், சாக்கியர், தேரர் | 56 | | 31 |
| 54. | சமணும் சிவனும் | 57 | | 32 |
| 55. | சமயம், சிவனும் சமயமும் | 58 | | 32 |
| 56. | சாதி, குலம் | 59 | | 32 |
| 57. | சிவபிரான் அட்டமூர்த்தி | 60 | | 34 |
| 58. | சிவபிரான் அட்ட வீரச்செயல் | 61 | | 34 |
| | (1) அந்தகாசுரனைச் சங்கரித்தது | 61 | (1) | 34 |
| | (2) காமனை எரித்தது | 61 | (2) | 34 |
| | (3) காலனைச் செற்றது | 61 | (3) | 35 |
| | (4) சலந்தரனைத் தடிந்தது | 61 | (4) | 35 |
| | (5) தக்கன் வேள்வியைத் தகர்த்தது | 61 | (5) | 35 |
| | (6) திரிபுரம் எரித்தது | 61 | (6) | 36 |
| | (7) பிரமன் சிரத்தை அறுத்தது | 61 | (7) | 38 |
| | (8) யானையை அட்டது | 61 | (8) | 38 |
| 59. | சிவபிரான் அணிவன, சூடுவன | 62 | | 39 |
| | 1. சிவபிரான் அணிந்துள்ளன, கொண்டுள்ளன | 62 | | 39 |
| | 2. சிவபிரான் அரையில் அணிவன | 63 | | 39 |
| | 3. ,, கழுத்தில் அணிவன | 64 | | 40 |
| | 4. ,, காதில் அணிவன | 65 | | 40 |
| | 5. ,, காலில் அணிவன | 66 | | 40 |
| | 6. ,, கையில் அணிவன | 67 | | 40 |
| | 7. ,, தோளில் அணிவன | 68 | | 42 |
| | 8. ,, மார்பில் அணிவன | 69 | | 42 |
| | 9. ,, சிரசிற் சூடுவன | 70 | | 43 |
| 60. | சிவபிரான் அபிடேகப் பொருள்கள் | 71 | | 44 |
| 61. | ,, அர்த்தநாரீசுரர் | 72 | | 45 |
| 62. | ,, அறம் உரைத்தது | 73 | | 45 |
| 63. | ,, ஆடல், பாடல் | 74 | | 45 |
| 64. | ,, ஆடை, உடை, போர்வை | 75 | | 46 |
| 65. | ,, இருவர்க்கும் அரியர் | 76 | | 46 |
| 66. | உலா | 77 | | 47 |
| 67. | உறைவிடம் | 78 | | 47 |
| 68. | ,, கொடி | 79 | | 49 |
| 69. | ,, சடை | 80 | | 49 |
| 70. | ,, சுடர், சோதி, ஒளி | 81 | | 49 |
| 71. | ,, தன்மை, பெருமை முதலிய | 82 | | 50 |
| | (1) அக்ரமம் | 82 | (1) | 50 |
| | (2) அகரம் போல்வார் | 82 | (2) | 50 |
| | (3) அடையாளம் | 82 | (3) | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| (4) | அறு | 82 | (4) | 50 |
| (5) | அந்தணர்-வேதியர் | 82 | (5) | 51 |
| (6) | அமுது | 82 | (7) | 51 |
| (7) | அரசாட்சி | 82 | (9) | 51 |
| (8) | அரண் | 82 | (10) | 51 |
| (9) | அரியவர் | 82 | (11) | 51 |
| (10) | அல்லல், இடர் அறுப்பார் | 82 | (12), (60) | 52 |
| (11) | அழகர் | 82 | (13) | 52 |
| (12) | அற்றவர்க் கருளல் | 82 | (14) | 52 |
| (13) | அறம் | 82 | (15) | 52 |
| (14) | அறிதற்கரியர் | 82 | (16) | 52 |
| (15) | அன்பு | 82 | (17) | 53 |
| (16) | ஆக்கல்-அழித்தல் | 82 | (18) | 53 |
| (17) | ஆண், பெண், அலி | 82 | (19, 20) | 53 |
| (18) | ஆதி, அந்தம் | 82 | (21, 22) | 53 |
| (19) | ஆழி | 82 | (24) | 53 |
| (20) | இனியர் | 82 | (32) | 53 |
| (21) | உரு | 82 | (37) | 53 |
| (22) | உள்ளவை | 82 | (40) | 54 |
| (23) | எல்லாம் ஆனவர் | 82 | (45) | 54 |
| (24) | எளியர், அணியர் | 82 | (52) | 54 |
| (25) | ஓசை, ஒலி | 82 | (56) | 54 |
| (26) | கண், கண்மணி | 82 | (63, 64) | 54 |
| (27) | கருணை, அருள்பாலித்தல் | 82 | (67) | 54 |
| (28) | கொள்கை | 82 | (83) | 56 |
| (29) | சீலம் | 82 | ([illegible]9) | 56 |
| (30) | செய்கை | 82 | (93) | 56 |
| (31) | செல்வம் | 82 | (94) | 57 |
| (32) | சொல், பொருள், எழுத்து ஆவர் | 82 | (98) | 57 |
| (33) | தன்மை | 82 | (104) | 57 |
| (34) | திரிதல் | 82 | (108) | 57 |
| (35) | தொழில் | 82 | (117) | 58 |
| (36) | நெறி | 82 | (129) | 58 |
| (37) | நோய், பிணி களைவார் | 82 | (130) | 58 |
| (38) | நோய் தருவார் | 82 | (131) | 58 |
| (39) | பரிசு | 82 | (141) | 58 |
| (40) | பாவநாசர் | 82 | (148) | 59 |
| (41) | பித்தர், பேயர் | 82 | (149) | 59 |
| (42) | பிறப்பு அறுப்பார் | 82 | (150) | 59 |

| | | | |
|---|---|---|---|
| | (43) பிறப்பு, இறப்பு, மூப்பு இல்லாதவர் | 82 (151) | 59 |
| | (44) புகழ்—பேர் | 82 (152) | 59 |
| | (45) பொருள் | 82 (160) | 59 |
| | (46) மௌன யோகநிலை | 82 (185) | 60 |
| | (47) விளக்கு | 82 (196) | 60 |
| | (48) வினை தீர்ப்பர் | 82 (197) | 60 |
| | (49) பிற | 82 (202) | 60 |
| 72. | சிவபிரான் திருவுருவம் | 83 | 65 |
| 73. | ,, நஞ்சுண்டது | 84 | 68 |
| 74. | ,, நடம் | 85 | 68 |
| 75. | ,, நாமம், நாம விசேடம் | 86, 87 | 70 |
| 76. | ,, நிறம் | 88 | 72 |
| 77. | ,, படை | 89 | 72 |
| 78. | ,, பராக்ரமம்—சிவசரிதம் | 90 | 73 |
| 79. | ,, பலி ஏற்பது | 91 | 74 |
| | (1) உணவு | 91-1 | 74 |
| | (2) பலிக்குச் செல்லும் கோலம் | 91-2 | 74 |
| | (3) மடவாரிடம் பலி தேர்தல், | | 75 |
| | மடவார் பெருமானை வினவுதல் | 91-3 | 75 |
| | (4) பலி சம்பந்தமாக வினாக்கள் | 91-4 | 76 |
| 80. | சிவபிரான் பாம்பாட்டுதல் | 92 | 77 |
| 81. | சிவபிரான் மாலைகள் | 93 | 78 |
| 82. | ,, வண்ணம் | 94 | 78 |
| 83. | ,, வாகனம் | 95 (1) | 78 |
| ,, | ,, விடைமேல் வருகோலம் | 95 (2) | 79 |
| 84. | ,, விரும்புவன | 96 | 79 |
| 85. | ,, வேடங்கள் | 97 | 80 |
| 86. | சிவபிரானை வைதல் | 98 | 80 |
| ,, | ஏ. சிவனும் அடியாரும் | | 80 |
| | தலைப்பு 5 'அடியாரும் சிவனும்' பார்க்க | | |
| 87. | சிவனும் அண்டங்களும் | 99 | 80 |
| 88. | ,, ஆகமமும் | 100 | 81 |
| 89. | ,, இசையும் | 101 | 81 |
| 90. | ,, இந்திரனும் | 102 | 81 |
| 91. | ,, இருவரும் | 103 | 82 |
| 92. | ,, உடைமையும் | 104 | 82 |
| 93. | ,, உயிர்களும் | 105 | 82 |
| 94. | ,, உலகும் | 106 | 83 |
| 95. | ,, ஊரும் | 107 | 83 |
| 96. | ,, ஐம்பூதமும் | 108 | 83 |

| | | | |
|---|---|---|---|
| 97. | சிவனும் கங்கையும் | 109 | 83 |
| 98. | ,, கடலும் | 109 ஏ. 44 (8) | 83 |
| 99. | ,, கணங்களும் | 110 | 84 |
| 100. | ,, கொன்றையும் | 111 | 84 |
| 101. | ,, சித்தரும் | 112 | 84 |
| 102. | ,, ஞாயிறும் | 113 | 84 |
| 103. | ,, தமிழும் | 114 | 84 |
| 104. | ,, தவத்தினரும் | 115 | 85 |
| 105. | ,, திங்களும் | 116 | 85 |
| 106. | ,, திருநீறும் | 117 | 85 |
| 107. | ,, தேவர்களும் | 118 | 85 |
| 108. | ,, தேவியும் | 119 | 86 |
| 109. | ,, தேவியும், கங்கையும் | 120 | 87 |
| 110. | ,, தேவியும், திருமாலும் | 121 | 87 |
| 111. | ,, நாகரும் | 122 | 87 |
| 112. | ,, நாடும் | 123 | 87 |
| 113. | ,, நாளும் | 124 | 87 |
| 114. | ,, பாட்டும் | 125 | 87 |
| 115. | ,, பிரமனும் | 126 | 88 |
| 116. | ,, புகழும் | 127 | 88 |
| 117. | ,, பூதமும் | 128 | 88 |
| 118. | ,, பெரியோர்களும் | 129 | 89 |
| 119. | ,, பேயும் | 130 | 89 |
| 120. | ,, மலையும் | 131 | 89 |
| 121. | ,, மறையவரும் | 132 | 90 |
| 122. | ,, மறையும் (வேதமும்) அங்கமும் | 133 | 90 |
| 122 ஏ. | ,, முனிவரும் தலைப்பு 216 பார்க்க | 134 | 91 |
| 123. | ,, யோகமும் | 135 | 91 |
| 124. | ,, வெண்மையும் | 136 | 91 |
| 125. | சுடலை-சுடுகாடு இடுகாடு | 137 | 92 |
| 126. | சுந்தரர் அருளிய திருப்பாட்டைக் குறிக்கும் சொற்றொடர்கள் | 138 | 92 |
| 127. | ,, அருளிய தேவாரத்தை ஓதுவோர், கற்போர் கேட்போரைக் குறிப்பன | 139 | 92 |
| 128. | ,, இறைவனிடம் அசதி ஆடல் | 140 | 93 |
| 129. | ,, இறைவனிடம் — வேண்டுகோள்களும், முறையீடுகளும் | 141 | 105 |

| | | | |
|---|---|---|---|
| 130. | சுந்தரர் கண்டு தொழ விரும்பியவை | 142 | 108 |
| 131. | ,, தம்மைத் தாமே இழித்துக் கூறும் சொற்கள் | 143 | 108 |
| 132. | ,, தம் குறைகளை எடுத்துக் கூறுவதும், வாழ்க்கை நிலையாமையைக் குறித்து அஞ்சுதலும் | 144 | 108 |
| 133. | ,, தமது நெஞ்சொடு கிளத்தல் | 145 | 109 |
| 134. | ,, வரலாறு | 146 | 110 |
| 135. | சுந்தரருடைய பத்திநிலை, மனநிலை முதலிய | 147 | 131 |
| 136. | சுந்தரரும் அடியார்களும் | 148 | 134 |
| 137. | ,, அடியார் அல்லாதாரும் | 149 | 135 |
| 138. | ,, சிவனும் | 150 | 136 |
| 139. | ,, பரவையாரும், சங்கிலியாரும் | 151 | 137 |
| 140. | ,, பார்வதியும் | 152 | 139 |
| 141. | ,, முருகவேளும் | 153 | 140 |
| 142. | ,, யோகமும் | 154 | 140 |
| 143. | ,, வனப்பகையும், சிங்கடியும் | 155 | 140 |
| 144. | சுந்தரரைக் குறிக்கும் சொற்கள் | 156 | 141 |
| 145. | ஞாயிறு | 158 | 141 |
| 146. | ஞானம், ஞானியர் | 159 | 141 |
| 147. | தமிழ்—தமிழ்ப் புலவர் | 160 | 141 |
| 148. | தலங்கள் | 161 | 142 |
| 149. | தலங்கள்—ஆற்றங் கரையன | 162 | 177 |
| 150. | தலங்கள்—கடற்கரையன | 163 | 178 |
| 151. | தலம்-சுவாமி பெயர்-தேவி பெயர் முதலிய | 164 | 179 |
| 152. | தலமும், கோயிற் பெயரும் | 165 | 179 |
| 153. | தலமும், தலத்துக்கு ஏற்ற சுவாமி திருநாமங்களும் | 166 | 179 |
| 154. | தல விசேடங்கள் | 167 | 180 |
| 155. | தவம்—தவத்தினர் | 168 | 180 |
| 156. | தானியங்கள்—பயிர்கள் | 169 | 181 |
| 157. | திங்கள் (சந்திரன்) | 170 | 181 |
| 158. | திருநீறு | 173 | 181 |
| 159. | திருமால், திருமாலும் சிவனும் | 174, 175 | 1, 182 |
| 160. | திருவிளையாடற் சரிதங்கள் | 176 | 183 |
| 161. | தீர்த்தங்கள் | 177 | 183 |
| 162. | தென்றல் | 178 | 184 |

| | | | |
|---|---|---|---|
| 163. | தேச சரித்திரம் | 179 | 184 |
| 164. | தேவதைகள் | 180 | 184 |
| 165. | தேவர் முதலானோர் | 181 | 185 |
| 166. | தேவாரம் ஓதும் முறை, கற்கும்முறை முதலிய | 182 | 186 |
| 167. | தேவாரம் ஓதுவதால் கேட்பதால் வரும் பயன் | 183 | 186 |
| 168. | தேவாரம்—மனப்பாடம் செய்ய வேண்டிய பதிகங்களும், பாடல்களில் ஒருசிலவும் | 184 | 187 |
| 169. | தேன் | 185 | 187 |
| 170. | தொகை | 186 | 188 |
| 171. | தோத்திரம் | 187 | 189 |
| 172. | நகர லக்ஷண உறுப்புக்கள் | 188 | 189 |
| 173. | நகைகள் | 189 | 191 |
| 174. | நகைச்சுவை | 190 | 191 |
| 175. | நரகம் | 191 | 191 |
| 176. | நாகரிக நிலை | 192 | 192 |
| 177. | நாடு—நாட்டின் பகுதி | 193 | 193 |
| 178. | நாயன்மார் | 194 | 193 |
| 179. | நிலம்—நிலப் பகுதி | 195 | 202 |
| 180. | நீதி | 196 | 202 |
| 181. | நீதி மொழிகள்—பழமொழிகள் | 197 | 202 |
| 182. | நீர்நிலைகள் | 198 | 203 |
| 183. | நூல் | 199 | 204 |
| 184. | நெஞ்சம்—மனம்—சித்தம்-உள்ளம் | 200 | 204 |
| 185. | நெறி | 201 | 205 |
| 186. | நோய் —பிணி | 202 | 205 |
| 187. | பஞ்சம்—மழையின்மை | 203 | 206 |
| 188. | படைகள் | 204 | 206 |
| 189. | பதிகப் பாகுபாடு (இயற்றமிழ்வழி) | 205 | 206 |
| 190. | ,, (நாடுகளின் வழி) | 206 | 208 |
| 191. | ,, (பண் வகையில்) | 207 | 208 |
| 192. | பதிக விசேடங்கள் | 209 | 208 |
| 193. | பவளம், பொன், மணி முதலிய | 210 | 209 |
| 194. | பழக்க வழக்கங்கள் | 211 | 210 |
| 195. | பழம், காய், பழவகைகள் | 212 | 212 |
| 196. | பாட்டு, பாடல் | 213 | 212 |
| 197. | பாடல் விசேடங்கள் | 214 | 213 |
| 198. | பார்வதி தேவி | 215 | 213 |
| 199. | பிரமன் | 216 | 217 |

| | | | | |
|---|---|---|---|---|
| 200. | பிறப்பு | 218 | | 217 |
| 201. | புகழ் | 219 | | 218 |
| 202. | பூதம் | 220 | | 218 |
| 203. | பேய் | 221 | | 218 |
| 204. | பொருள்—பொருள் அழகு | 222 | | 219 |
| 205. | பொழிலும் சோலையும் | 223 | | 219 |
| 206. | மக்களைக் குறிப்பன | 224 | | 220 |
| 207. | மந்திரம் | 225 | | 222 |
| 208. | மரம், செடி, கொடி, மலர் | 226 | | 222 |
| 209. | மலை | 227 | | 229 |
| 210. | மழை, மேகம், மின், இடி, | 228 | | 229 |
| 211. | மறை, வேதம், அங்கம் | 229 | | 229 |
| 212. | மறையவர் | 230 | | 230 |
| 213. | மாதர்கள் | 231 | | 231 |
| 214. | மாலை வகைகள் | 232 | | 233 |
| 215. | முகஸ்துதி | 233 | | 234 |
| 216. | முனிவர், பெரியோர், முனிவரும் சிவனும் | 134, 234 | | 235, 236 |
| 217. | முயலகன் | 235 | | 236 |
| 218. | முருகவேள் | 236 | | 236 |
| 219. | யாக்கை, மூப்பு, வாழ்க்கை | 237 | | 237 |
| 220. | யோகம் | 238 | | 238 |
| 221. | ராவணன்—ராவணனும் சிவனும் | 239 | | 238 |
| 222. | லோபிகளின் தன்மை | 240 | | 239 |
| 223. | வயல்—கழனி | 241 | | 239 |
| 224. | வர்ணனைகள் | 242 | | 240 |
| 225. | வரலாறுகள் | 243 | | 245 |
| 226. | வழிபட்டவரும் தலங்களும் | 244 | | 243 |
| 227. | வழிபட்டுப் பேறுபெற்றோர் | 245 | | 248 |
| 228. | i. வழிபாடு—பூஜை | 246 | (1) | 251 |
| | ii. வழிபாட்டினால் வரும் பேறு | 246 | (2) | 251 |
| | iii. வழிபாட்டுக்கு உரிய சாதனங்கள் | 246 | (3) | 252 |
| | iv. வழிபாடு—வேளை | 246 | (4) | 252 |
| 229. | வாத்தியங்கள் | 247 | | 252 |
| 230. | விசயன்—விசயனும் சிவனும் | 248 | | 253 |
| 231. | விதி | 249 | | 254 |
| 232. | வியாபாரம் | 250 | | 254 |
| 233. | விழா | 251 | | 254 |
| 234. | விளங்காத இடம் | 252 | | 255 |
| 235. | விளையாட்டு | 253 | | 255 |
| 236. | 1. வினைகள் | 254 | | 255 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2. அடையாளம் கூறி வினவுதல் | 254 | (ii) | 258 |
| | 3. மாதர்களின் காதல் மொழி | 254 | (iii) | 261 |
| 237. | வினவும் விடையும் | 255 | | 261 |
| 238. | வினை | 256 | | 263 |
| 239. | வினை தீரும்வழி | 257 | | 263 |
| 240. | வீடு | 258 | | 265 |
| 241. | வேடர்களின் நாகரிக நிலை | 192 | | 266 |
| 241ஏ. | வேதம்—மறை | 229 | | 266 |
| 242. | வேள்வி | 259 | | 266 |
| 243. | வைதற் சொற்கள் | 260 | | 267 |
| 244. | ஜீவராசிகள் | 261 | | 267 |
| | I. ஊர்வன | 261 | I | 267 |
| | II. நீர்வாழ்வன | 261 | II | 269 |
| | III. பறவைகள் | 261 | III | 271 |
| | III.ஏ மக்கள் [ தலைப்பு 206 பார்க்க ] | 224 | | |
| | IV. விலங்குகள் | 261 | IV | 278 |

திருச்சிற்றம்பலம்

# தேவார ஒளிநெறிக் கட்டுரை

## (சுந்தரர்)

### 1. கணபதி *[1]

கணபதி வயிறுதாரி. கணக்கற்ற உணவை உட்கொள்ளும் பெருவயிற்றுப் பெருமான். ஒன்றும் அறியாதவர்போல் இருப்பார்.

### 2. அகப்பொருள் [2]

(i) சுவாமிகள் அருளிய பதிகங்களுள் 36, 37 எண்ணுள்ள பதிகங்கள் அகப்பொருட் பதிகங்கள்.

(ii) தலைவனை (இறைவனை)க் கண்ட பெண்களின் கூற்றாக வந்துள்ளவை :

பெருமானே! நீர் ஏன் எலும்பு, ஆமை, யானையின் தோல்—இவைகளைப் பூண்டுள்ளீர்? உமது மேனி அந்தி வானத்தின் நிறத்தைக் கொண்டதோ? நீர் பாம்பாட்ட வல்லவரோ? ஆடல், பாடல் வல்லவரோ? உமது ஆரம் (மாலை) பாம்பா? நீர் ஆறுதாங்கிய சடையரா? நீர் ஏன் கொன்றையையும் எலும்புகளையும் அணிந்துள்ளீர்? ஏன் ஐயம் ஏற்கின்றீர்? உமது ஊர் காடு, உமது கையில் ஓடு—இங்ஙனம் நீர் இருந்தால் உம்மிடத்தில் அன்பு வைத்தவர்கள்

---

* ஆங்காங்கு [ ] இக் குறிக்குள் உள்ள எண் அவ்வத் தலைப்புக்கு உரிய 'ஒளிநெறி'த் தலைப்பின் எண்.

உம்மிடம் பெறக்கூடியது யாது? பெண்களின் வளைகளைக் கொள்வதுதான் உமது தொழிலோ? இரவில் 'எம் வீடு உமக்குத் தெரியுமே, நடந்துவரக்கூடும் அன்றோ?

உமது கையில் ஒரு பாம்பு, அரையில் ஒரு பாம்பு, கழுத்தில் ஒரு பாம்பு, உடலெங்கும் திருநீறு, ஓதுவது வேதகீதம், உமது வெள்ளேறு கோபித்து நோக்கும், உமது பாம்பு தீயைக் கக்கிப் பெருமூச்சு விடும், சுடுகாட்டிற் பேயொடு ஆடுவதை இனி விட்டுவிடும், நீர் பித்தரா என்ன? செந்தமிழின் பண்புகளில் வல்லவர்தாமே நீர்? பின்னை ஏன் உமது முன்கையிற் பாம்பு ஆட எங்கள் முன் வந்து நின்று அச்சம் தருகின்றீர்; உமக்கு ஐயம் (பிச்சை) இட வரமாட்டோம். பக்கத்தில் அழகி ஒருத்தியுடன் பிச்சைக்கு வந்துள்ளீரே! நடவும், நடவும்—நாங்கள் உமக்குப் பிச்சையிடமாட்டோம்; பலவித வாத்தியங்களுடன் இன்னிசை பாடுகின்றீர், ஆடுகின்றீர்; பிச்சைக்கு வரும் உமது கையிற் பாம்பு இனி வேண்டாம் ஐயா! உமது ஊர் திருப்பைஞ்ஞீலி என்கின்றீர், பிச்சைக்கு வந்த நீர் சிங்காரவிலாசத்துடன் மெல்ல வந்து நிற்கின்றீரே; ஏன் இந்த அழகுக் கோலங்கள்! சொல்வீராக.

(iii) பறவை முதலியவற்றைத் தூதுவிடுதலும், தூதுவிடு சேதிகளும்.

தலைவனிடம் (ஆரூர்ப் பெருமானிடம்) தமது நிலையைக் கூறப் பெண்கள்—அன்னப்பெடை, கிளி, குயில், குருகு, கொண்டல் (மேகம்), சக்ரவாளப்புள் (பேடை), சேவல், நாரை, பூவை, வண்டு இவைகளை விளித்து—

நாங்கள் அவர்மீது பாடவேண்டும், அவரைப் பணிந்து ஏத்த வேண்டும், அவருடன் கூடவேண்டும், ஊடவேண்டும் என்பதையும், அவரை மறக்கமுடியவில்லை என்பதையும், அவரை நினைந்து உள்ளமும் உடலும் உருகுவதால் எங்கள் ஆடையும், வளைகளும் கழலுகின்றன என்பதையும், முலைகள் பீர் (பசலைப் பொன்னிறம்) கொண்டுள்ளன என்பதையும், தூக்கமில்லாமல் அவரடியே நாங்கள் பாடியும் பரவியும்,

அவரை நினைந்து உருகியும் அவரை நாடுகின்றோம் என்பதையும், காமத்தீயால் உடல் மெலிவுபடுகின்றதென் பதையும், அவர்மீது எங்களுக்கு மன வேறுபாடு ஒன்றும் இல்லை என்பதையும், அவரைத் தவிர எங்களுக்கு வேறு பற்று உறவு ஒன்றும் இல்லை என்பதையும்—இங்ஙனம் எங்கள் நிலை முழுமையும் - நீங்கள் தூதுசென்று உணர்த்த முடியுமா என்று வினவுகின்றார்கள்.

(iv) தலைவன் கவர்ந்தனவாகக் கூறப்படுவன :—
எழில், சிந்தை, நிறை, நீர்மை, வளை.

## 3. அங்கங்களின் தொழில் [3]

சிவனே! என்னுடைய நா உன்னுடைய பெருமை, பராக்ரமங்களையே பேசும், பாடும். நான் மறந்தாலும் என்னுடைய 'நா' 'நமச்சிவாயவே' என்னும் திரு மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே யிருக்கும்.

## 4. அடியார் [4(1)]

### (1) அடியார்

(i) காலை, உச்சி, மாலை மூன்று பொழுதினும் இறைவனை அடியார் ஏத்துவர்; எண்ணி இருந்தும், கிடந்தும், நடந்தும் அண்ணல் என நினைந்து போற்றுவர்; என்றும் ஒரு தொரு முட்டும் (தடையும்) இன்றிப் பாடிப் போற்றுவர்; பாச மயக்கை அறுப்பார்; இறைவனைக் கருதி உள்ளம் கசிவார்; கல்லும் குழையுமாறு உள்ளம் கசிவர். கன்று ஈய்ப்பசுவின் மடியில் முட்டி உண்ணப் பால் பெறுவது போலப் பயன்பெறப் பெருமானை விடாது பாடுவர்; சிவபிரானை நினைந்து கண்ணீர் பெருக உருகுவர்; இறைவனுக்குப் பணிசெய்து தமது தவத்தைப் பெருக்குவர்; பரிசுத்தமான அன்புடன் பெருமானது திருவடியில் வீழ்ந்து வணங்கும் செல்வத்தினராய் விளங்குவர். பெருமானின் திருநாமங்களைக் கற்று ஓதுவர்; அவருடைய திருவடிகளி

லேயே தமது மனத்தை வைப்பர்; அடியார்க்கு அடியாராய்த் தொண்டுபுரிவர்; நரிபோன்ற வஞ்சகநினைவு இல்லாமல் நாள்தோறும் தியானித்துப், பிரியாத அன்பினராய்ப் பெருமானை இறைஞ்சுவர்; பண் விளங்க இன்னிசை பலநாளும் பாடி ஆடுவர்; அடியார்க்குரிய *பத்து இலக்கணங்களுடனும் விளங்குவர்; பரசிவத்தையே பணியும் சிந்தையராய் விளங்குவர்; நன்மை பெற்றபோதும், பெறுதபோதும் இறைவன் திருவடியை விரும்பிப், பிற பற்று ஒன்றும் இன்றி, இறைஞ்சுவர்; பொய்யா நாக்கொண்டு இறைவனைப் புகழ்வர்; மனம்போன போக்கை விலக்கிப் பெருமானிடம் அன்புகொள்வர்; அன்புடனே இறைவன் திருவடிக்குப் பணிபுரிவர்.

கலைபயின்ற அந்தணர்கள் சொல்லும் பொருளும் சிறப்புடன் அமைந்த நான்கு வேதங்களையும் பல தோத்திரங்களையும் சொல்லித் துதித்து இறைஞ்சுவர்; அத்தனையதுதிகளைக் கற்பாரும் கேட்பாருமாய்த் திகழ்வர்.

## (2) சுந்தரரின் தேவாரத்தை ஓதும் அடியார்கள் [4(1),(2)]

[தலைப்பு 127 பார்க்க]

ஆரூரர் அருளிய இசைநிறைந்த பாடல்களைப் பொய்யிலாச் சிந்தையுடன் அடியார்கள் உவப்புடன் பாடிப் புலம்புவர்; அவை தமை மலர்கொண்டு பூசித்து ஓதுவர்;

## (3) பாடும் அடியார்கள் [4(3)]

அடியார்கள் சந்தம் பலவும் பாடுவர்; பாடிப் பரவித் திரிவர்; பண் நிறைந்த இன்னிசையுடன் பலநாளும் பாவித்துப் பாடி ஆடுவர்.

---

* 1. கண்டம் தழுதழுத்தல். 2. நா அசைதல். 3. இதழ் துடித்தல். 4. நடுக்கமுறல். 5. மயிர்பொடித்தல். 6. அங்கம் வெதும்பி வியர்த்தல். 7. தள்ளாடி வீழ்தல். 8. கண்ணீர் பிலிற்றல். 9. கலுழ்ந்து இரங்கல். 10. ஆர்வத்தால் பரவசப் படுதல்.

### (4) பஜனைசெய்யும் அடியார்கள் [4(4)]

இவர்கள் அன்புபூண்டவராய்க் கூடிக்கூடி, கொண்ட் டாடி குறையாவண்ணம், ஆடுவர், பாடுவர்; அழுவர், சிரிப்பர்; பேரன்பு பூண்டவராய் இறைவன் திருவடிக்கு ஆட்பட்டவர்களின் பாததூளியைத் தமது சிரசிற் சூடிக் கொள்வர்; மெய்யடியார்களின் கூட்டத்துடன் முழவொலி, பாட்டொலி விளங்க இறைவனைப் போற்றி வாழ்வர்.

### (5) பூசிக்கும் அடியார் [4(5)]

இறைவன் திருவடியில் மலரிட்டு அடி பரவுவர்; இலை கொண்டு அன்புடன் பூசிப்பர்; காதல் செய்து நறுமலர் களைக் கொண்டு பூசித்துக் களித்துப் பிதற்றுவர்; கண்ணீர் அரும்ப நிற்பர்; புதுமலர் தூவித் தொழுவர்; நீறு பூசுவர், நெய்கொண்டு அபிடேகித்துப் பணிவர்; நொச்சிப் பச்சிலை கொண்டும், தெளிந்த நீர்கொண்டும் பூசனை செய்து தொழுவர்.

### (6) அடியார்கள் பத்திசெயும் வகை [4(6)]

இறைவனைப் போற்றி உரைப்பவர்தம் உரைகளை உகந்து மனப்பாடம் கொள்வர்; இருந்தும், கிடந்தும், நடந்தும் 'அண்ணல்' எனத் தியானித்து ஏத்துவர்; காதல் செய்து களித்துப் பிதற்றுவர்; நெறிதவறாது ஆவன செய்வர்; இறைவனுடைய ஆடலைக் கண்டு துள்ளிப் பாடுவர்; அன்புடன் அடி போற்றுவர்; செங்கை கூப்புவர்; வாய்க்கு வந்த பல தோத்திரங்களைச் சொல்லுவர்.

### (7) அடியார்கள் பெறும் பேறு, அடியார் பெருமை [4(7)]

எப்போதும் மன ஒருமையுடனே பெருமானைத் தொழும் அடியார்கள் வான் ஆளப்பெறுவர்; பெருமானை வாழ்த்தும் வழி அடியார்கள் பொன்னுலகம் பெறுவர் என்பது கண்கூடு.

### (8) அடியார்களைக் குறிக்கும் சொற்கள் [4(8)]

அடியார், அடைந்தவர், அன்பர், உற்றவர், கலந்தவர், சார்ந்தவர், தொண்டர், தொழுபவர், நண்ணினர், நம்பினர், நினைப்பவர், பணிபவர், பத்தர், பாவிப்பார், வந்திப்பார்—போல்வன.

## 5. அடியாரும் சிவனும் [5]

### (1) பிரான் அடியார்களுக்கு அருளுதல் [5(i)]

அடியார்களின் உடலுறு நோய்களைப் பெருமான் ஒழித்தருளுவார்; அடியார்களை ஆண்டருளுவார்; தம்மை இச்சிக்கும் அடியார்களுக்கு அணியர் அவர்; அடியார்கள் பற்றும் செந்நெறி அவர்; தம்மை அடைந்தவர்க்கு அமுது போன்றவர்; தம்மை அடைந்தவர்களின் வினைகளை அறுத் தருளுவார்; அவர்களுக்கு உதவுவார்; தம் புகழ்மாலை களை மகிழ்ச்சியுடன் எண்ணி இன்புறுபவர்களின் உச்சியில் விளங்குவார். இருந்தும், கிடந்தும், நடந்தும் தம்மைச் சதா நினைப்பவர்களின் வினையைத் தீர்ப்பார்; இம்மையிலும் அம்மையிலும் அவர்களுக்கு இன்பம் ஊட்டுவார்; நரக தண்டனை வாராமே காப்பார்; குற்றமிலா அடியார்களுக்கு வீட்டின்பத்தை அளிப்பார்; உலகச் சிக்கலிற் படாது தம் முடைய மெய்யடியார்களுக்குப் பணிசெய்து வாழ்பவர் களுக்கு வழுவாநெறியைக் காட்டி அருளுவார்; இந்த நிலை யாத வாழ்வை நீக்கி அருள்புரிவார்; தம்மைச் சரண் அடைந்தவர்களின் நெஞ்சிற் குடிகொள்வர்; தம்மைத் தொழுபவர்களின் துயரைத் தீர்ப்பார்; தம்மை நண்ணின வர்க்கு நல்லவர் அவர்; நம்பினவர்க்கு அருள்புரியும் அந்தணர் அவர்; தம்மைப் பாவிப்பவர் மனத்தில் ஊறும் தேன் அவர்; பாடியாடும் பத்தர்மாட்டு அன்புடையவர்; பிடைதீர அடியார்களுக்கு அருள்புரிபவர்; அடியார்களின் அஞ்ஞானத்தை நீக்கி அருள்புரிபவர்; வெய்ய நரகத்தில் அழுந்தா வண்ணம் நமக்கு மெய்ந்நெறியைக் காட்டும் வேத முதல்வர்; தொழுகின்ற அடியவர்களுக்கு வான் ஆட்சியைத் தருபவர்; வஞ்சம் அற்ற மனத்தாரை மறவாதவர்.

## (2) அடியார்கள் பெருமானைப் போற்றுதல் முதலிய [5(ii)]

பெருமானை; "அடிகள்" எனப் போற்றித் தொழுவார்கள் அடியார்கள்; அலரிட்டு அடிபரவித் தொழுதேத்தி நிற்பார்கள்; பெருமான் ஊர் ஊராகத் திரிந்து உடைதலையிற் பலிகொள்வதைக் கண்டு கவலைப்படுவார்கள்; மனம் உருகுவார்கள்.

## (3) அடியார்கள் செய்யும் பணிகள் [5(iii)]

கல்லவடம் என்னும் வாத்தியத்தை வாசிப்பார்கள்; குடம் எடுத்து நீரும் பூவும் கொண்டு ஏவல் புரிவார்கள்; மலர் தூவிப் பணிவார்கள்.

## (4) அடியவர்க்காகப் பெருமானது செய்கை [5(iv)]

அந்திவேளையில் தாமும் அடியாருமாகச் சந்திகள் தோறும், வீடுகள்தோறும் பலிவேண்டித் திரிவர்; தாம் பாடிப் படைத்த பொருள் எல்லாம் தம் தேவிக்குச் சேர்ப்பர் போலும்; தண்டியடிகள் நாயனார் போன்ற சிறந்த அடியார் கூட்டத்தை உடையவர் பெருமான்; தம்மை வாழ்த்தினார்க்கும், பற்றினார்க்கும் நல்லவர் அவர்; தருமனார் தமர் செக்கில் இடும்போது தடுத்து ஆட்கொள்வர் தமது அடியார்களை; தம்மை நினைக்கும் நினைப்பைத் தருபவர் பெருமான்.

## (5) அடியவர் பூசையைச் சிவபிரான் விரும்புவது [5(v)]

அன்புடன் அடியார்கள் செய்யும் மலர்ப்பூசையைப் பெருமான் விரும்புவர்.

## (6) அடியார் பெறும்பேறு [5(vi)]

பெருமானைத் தொழுபவர்கள் தமது உள்ளத்தில் உள்ள குற்றங்கள் ஒழியப்பெற்றுப் புகழுடன் வானில் உயர்ச்சி

பெறுவார்கள்; பெருமானின் திருவடிப்பேறு அவர்களுக்குக் கிடைக்கும்; துயர் ஒழியும்; அன்புடன் இலைகொண்டு பூசிப்பவர்களைப் பிறவித் துன்பத்தினின்றும் பெருமான் மீட்டு அருள்புரிவார்; ஊன் உடலைப் போற்றாது பெருமானை மகிழ்ச்சியுடன் நாடுபவர்கள் ஞானியுராவார்கள்;

பெருமானை நினைந்து அழுமலர்க் கண்ணினை உடைய அடியவர்தாம் அவரது திருவடியிணையை அறிதல் கூடுவதாகும். நல்ல அடியார்களின் மனத்து எய்ப்பினில் வைப்பு அவர். சிறியரோ பெரியரோ அவர்தம் மனத்திற் பெருமான் குடி கொள்வாராஞல் அத்தகையோர் இறைவனைத் தொழுகின்ற நிலையராய்ப் பிறப்பு இறப்பு இன்றித் திகழ்வார்கள்; சித்தி முத்தி பெறுவார்கள்.

## 6. அடியர் அல்லாதார் [6]

பனங்காட்டூர்ப் பரமனை உணராதார் உணர்வும், அறியாதார் அறிவும், சாராதார் சார்வும், நினையாதார் நினைவும், பயிலாதார் பயில்வும், பரவாதார் பரவும், பேசாதார் பேச்சும், அவரது அடிமைக்கட் குழையாதார் குழைவும் பயன்தராதனவாய்ப் பயனிலவாய் ஒழியும் என்க.

பரமனை ஒருமை மனத்துடன் தொழுகின்ற அடியார்கள் வான் ஆளப்பெறுகின்ற வார்த்தையைக் கேட்டும் மக்கள் நாள்தோறும் மலரிட்டு வணங்குகின்றார் இல்லை; பெருமான் நம்மை ஆள்கின்ற தன்மையை உணர்கின்றார் இல்லை.

## 7. அடியார் அல்லாதவரும் சிவனும் [6]

பெருமான் தம்மை அணுகாதவரை அணுகார்; தம்மை நினைந்து உள்ளம் கசியாதவர்க்கு அகப்படார்; அவர்க்கு நன்மைபுரிய வரமாட்டார்; வெகுதூரத்தில் நிற்பார்; வஞ்சகர் மனதிற் சிறிதளவும் அணுகார். அன்பரல்லாதார் கொன்றை சூடியாம் சிவனுடைய திருவடியைச் சேரார்.

## 8. அடுக்குச் சொற்கள் [7]

அனல் அனல், கடை கடை, சட சட, தேடுவன் தேடுவன், பெற்றனன் பெற்றனன், வளை வளை—போன்ற 69 அடுக்குச் சொற்கள் 'ஒளிநெறி'யில் எடுத்துக்காட்டப் பட்டுள.

## 9. அரக்கர்—அசுரர்—அவுணர்—தானவர் [8]

### (1) பொது

**அவுணர்**

சிவபிரான் திரிபுரத்தை எரித்தபோது, அவுணர்களின் பெண்டிரும் மக்களும் வெந்து ஒழிந்தனர்.

**தானவர்**

தானவர் சிவபிரானை வணங்குவார், தொழுவார், அர்ச்சிப்பார்; தானவர்க்குப் பெருமான், தானவர்க்கு அரசர் சிவபெருமான். வானவரொடு கூடித் தானவர் கடலைக் கடைந்தனர்.

### (2) சிறப்பு

1. **அந்தகாசுரன்** [தலைப்பு 58(1) பார்க்க]
2. **சலந்தராசுரன்** [தலைப்பு 58(4) பார்க்க]
3. **சிங்கமுகாசுரன்**

   இவனை முருகவேள் அட்டனர்.
4. **சூரன்**

   கடலுள் மாமரமாய் நின்ற இவனை முருகவேள் அட்டனர்.
5. **தாருகாசுரன்**

   போரிடும் பலங்கொண்ட அசுரன்; இவனுடன் போர் செய்து இவனைக் கொன்ற முருகவேளைப் படைத்து மகிழ்ந்த புனிதர் சிவபெருமான்.
6. **திரிபுராதிகள்** [தலைப்பு 58(6) பார்க்க]
7. **ராவணன்** [தலைப்பு 221 பார்க்க]

## 10. அரசர், ஆட்சி [9]

பொது

1. திருச்சுழியற் பெருமானை வழிபடும் அடியார்களின் திருவடியைத் தொழுபவர் திசை மன்னராய் திரு நீங்காது அரசாளுவர்.

2. புலவர்களே! திருப்புகலூரைப் பாடுவீர்களாக; நீங்கள் தேவலோகத்தை ஆள்வீர்கள்; இதில் ஐயப்பாடு ஒன்றுமில்லை.

3. அரசுபுரிந்த பல்லவர்க்குத் திறைகொடாத *மன்னவருக்குக் கலக்கந் தந்த பெருமை வாய்ந்தவர்கள் தில்லை வாழ் அந்தணர்கள்.

4. பல்லவர்களுடைய ஆட்சித் தலைநகர் காஞ்சிமா மாநகரம்.

5. ஆரூரருடைய பாடல்களைப் பாடவல்லவர் மண்டல நாயகராய் வாழ்வர் என்பது நிச்சயம். அவர்கள் யானை மன்னவராகி விண்ணுலகை ஆள்வார்கள்.

6. யானைமேல் ஏறிவரும் மன்னர்களே! நீங்கள் செத்தபோது உங்களுக்குத் துணை யாருமில்லை என்பதைச் சிந்தையிற் கொள்ளுங்கள்.

7. எண்ணிறந்த மன்னர் இறைவனை எங்கும் ஏத்துவர்.

8. திருப்பரங்குன்றத்தில் சேர, சோழ, பாண்டியர்களாம் மூவேந்தர்களின் முன்னிலையில் ஆரூரர் பாடின பதிகத்தைக் கற்று வல்லவர் வானோர்க்குத் தலைவராய் விண் முழுதாளுவர்.

9. வேந்தராய் உலகாண்ட அரசருடைய உடலும் துயர்க்கிடமாகி அழிவுறும். இப் பொய்வாழ்க்கையை நெஞ்சே! நீ விட்டொழிப்பாயாக.

---

* இதன் விவரம் 'நாயன்மார்' என்னும் தலைப்பு 178-3 (1)-ல் பார்க்க.

## சிறப்பு

இமவான், உறையூர்ச் சோழன், ஐயடிகள் காடவர் கோன், கழற்சிங்கர், கூற்றுவநாயனார், கோச்செங்கட் சோழன், தொண்டைமான், நரசிங்க முனையரையர், நெடுமாறன், பகீரதன், பாரி, புகழ்ச்சோழன், மூர்த்தி நாயனார், ராவணன், விஜயன், வீமன்—கூறப்பட்டுளர்.

இவர்களுள் :

1. **இமவான்**

பொன்மலைக்கோமான், மலையரசன்.

2. **உறையூர்ச்சோழன்**

ஆற்றில் நழுவவிட்ட ஆரத்தை ஆனைக்கா அண்ணல் ஏற்றுக்கொள்ளும்படி செய்தவன். விவரத்தை தலைப்பு 148-10-ல் பார்க்க.

3. **ஐயடிகள்**

இவர் காடவர் தலைவர்.

[காடவன்—பல்லவர்களின் சிறப்புப் பெயர்]

4. **கழற்சிங்க நாயனார்**

உலகைக் காத்து ஆண்ட காடவர்கோன் இவர்.

[தலைப்பு 178-18 பார்க்க]

5. **கூற்றுவ நாயனார்**

இவர் களந்தைத் தலைவர்.

[தலைப்பு 178-22 பார்க்க]

6. **கோச்செங்கட் சோழன்** [தலைப்பு 178-23 பார்க்க]

*பாண்டிநாட்டையும் ஆண்டனர் இவர்.

---

* 'தென்னவனாய் உலகாண்ட செங்கணான்' தேவாரம் 39-11.
'நிம்பநறுந் தொங்கற் கோச்செங்கணான்'
—திருத்தொண்டர் திரு அந்தாதி, 82.

நிம்பம் - வேம்பு. வேப்பமாலை பாண்டியர்க்கு உரியது.

7. தொண்டைமான்

இவர் ஏறிவந்த யானையின் கால் முல்லைக்கொடியிற் சிக்கிக்கொள்ள, இறைவன் அங்கு வெளிப்பட்டனர். வட திருமுல்லைவாயில் தல விவரம் தலைப்பு 148-87-ல் காண்க.

8 நரசிங்கமுனையரையர்

மெய்யடியார் என்று பாராட்டப்பட்டுள்ளார். தலைப்பு 178-45 பார்க்க.

9. நெடுமாறன்

திருநெல்வேலியை வென்றவர். திருநீறு விளங்கும் திருமேனிப் பாண்டியன். தலைப்பு 178-46 பார்க்க.

10. பகீரதன்

இவ்வரசனது வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபிரான் அருள்புரிய, கங்கை ஆரவாரித்து (விண்ணினின்று) இறங்கிற்று.

11. பாரி

(கொடைவள்ளலாம்) பாரியே நீ என்று கூறிப் புகழ்ந்தாலும் கொடுப்பவரைக் காணோம்.

12. புகழ்ச்சோழ நாயனார்

இவர் கருவூரில் உயிர்நீத்தவர்.

[தலைப்பு 178-47 பார்க்க]

13. மூர்த்தி நாயனார்

இவர் திருநீறு, ருத்ராக்ஷம், சடைமுடி—இவை மூன்றையும் தரித்து ஆட்சிபுரிந்தவர். தலைப்பு 178-55 பார்க்க.

14. ராவணன் [தலைப்பு 221 பார்க்க]

15. விசயன் [தலைப்பு 230 பார்க்க]

விற்போரில் பராக்ரமசாலியாம் விஜயனே நீ என்று புகழ்ந்தாலும் கொடுப்பவரைக் காணோம்.

16. வீமன்

வீரம், வலிமை இல்லாதவனை பீமனே நீ என்று புகழ்ந்தாலும் கொடுப்பதைக் காணோம்.

## 11. அருவியும், அருவியில் வரு பொருள்களும் [10]

மழைபெய்ய அருவிகள் மலையினின்றும் கடுவேகமாய் வழிந்து பாயும். நிலங்களையும் வயல்களையும் கவர்ந்து பாயும். வெண்ணிறமாயிருக்கும்; ஒலிசெய்யும்.

அகில், சங்கு, சந்தனத் துண்டங்கள், பொன், மணி, மலர், முத்து, யானையின் தந்தம் இவைகளை அடித்துக் கொண்டுவரும்.

## 12. அறச்செயல்—பாபச்செயல் [11]

### 1. அறச்செயல்

நல்ல நீரும் சோறும் நகைப் பேச்சுடன் பேசிஇடுதல்.

### 2. பாபச்செயல்

1. நல்ல நினைப்பு இல்லாமை.
2. உயிர்களைக் கொல்லுதல்.

## 13. ஆடை—உடை [12]

காம்பு, கோசிகம், நேத்திரங்கள்—பட்டு எனப்படும் பட்டாடை வகைகள், மெல்லிய துகில், குற்றுடுக்கை கூறப்பட்டுள.

## 14. ஆறுகள் [13]

1. அரிசில்

இந்த ஆற்றில் கயல், சேல், வாளைமீன்கள் பாயும்; கெண்டைமீன் துள்ளும்; அன்னங்கள் இதைக் கவனித்துப் பொருந்திக் குணமடையும் (ஊக்கம் கொள்ளும்). ஆற்று வெள்ளத்தில் அகில், இலவங்கம், ஏலம், கதலிக்கனி, கமுகின் பழுக்காய், கரும்பு, கலைமான் கொம்பு, கவரி (வெண்கவரி),

கேதகை (தாழை), கொடிமுல்லை, கோங்கமலர், சந்தனத் தளிர், சந்தனம், செண்பகம், பலங்கனி (பழங்கள்), பாதிரி, பொன், மணி, மயிற்பீலி, மல்லிகை, முத்து, யானை மருப்பு, வேங்கைமலர், வேய் (மூங்கில்)—இவை அலையுண்டு வரும்.

2. கங்கை

கங்கைநீர் கடற்கரையொடு பொருது இழியும்; கங்கை வான்நின்று இழிந்தது; கடல்போலத் திரைகள் புரள வீசக் கொண்டது.

3. காஞ்சி

கொங்குநாட்டில் உள்ளது. பேரூர் என்னும் தலம் இந்த ஆற்றின் கரையில் உள்ளது.

4. காவிரி

இது பொன்னி எனவும்படும். கடலொடு கூடும். இதன் கரையெலாம் வளப்பம் பொருந்தியவை. சோற்றை விளைவிக்கும் ஆறு. இதனில் ஆடுபவர்களின் பாவம் தீரும்; அஞ்ஞானம் ஒழியும்; இதன் நீர் கங்கைநீரின் பெருமை வாய்ந்தது; காவிரிநீர் பாயும் புலமெலாம் பொன் என விளைவுதரும்; இதன் கரையில் உள்ள மரங்களிற் குயில் கூவும்; கரையில் மயில் ஆடும்; அன்னங்கள் உலவும்; காவிரி சோழநாட்டைச் சூழ்ந்து செல்லும்; தேசத்தில் உள்ளவர்கள் எல்லாம் காவிரிநீரில் தோர்ந்து ஆடுவர்; காவிரி மருகிற் பொழில்கள் நெருங்கி வளமும் அழகும் தருவன வாகும்; கரும்பு ஆலைகள் ஒலிசெய்யும்; காவிரிநீரில் மாதர்கள் குடைந்தாடுவர்.

காவிரியாற்று வெள்ளநீரில் அடித்துவரும் பொருள்களாவன:

அகில், ஏனல், ஐவனம் (மலைநெல்), கரும்பின் ரசம், கவரிமயிர், கறிமிளகு, கனி, கோங்கம், சந்தனத்துண்டம், புளிங்கு, பொன், மணி, மயிற்பீலி, மராமரம், மருதம், மலர், மாங்கனி, முத்து, யானைமருப்பு, வாழைக்கனி, வேங்கைமலர்.

5. கெடிலம்

கெடிலநீரிற் கயலினங்கள் குதிகொண்டு குலவும்; மராமரங்களும் மலையாரமும் எறிபட்டு வரும்.

6. கொள்ளிடம்

மணிகளைக் கொழிக்கும்; இதன்நீரில் மடவார்கள் உடை அவிழக், கூந்தல் அவிழக், குடைந்தாடுவார்கள்; குங்கும மரங்கள் உந்தப்பட்டு வரும்.

7. கோதாவிரி

கூறப்பட்டுளது.

8. சிற்றாறு (குழகனாறு)

இந்த ஆற்றின் கீழ்க்கரைமேல் வெஞ்சமாக்கூடல் என்னும் தலம் உளது. இது குழகனாறு என வழங்குகின்றது. காடு, மலை, நாடு வழியாக ஓடிவருகின்றது இந்த சிற்றாறு. குளங்களையும் குழிகளையும் நிறைத்துச் செல்கின்றது. அகில், இஞ்சி, இலவங்கம், ஏலம், சந்தனம், தாமரை, தக்கோலம், மணி, முத்து, வேய்—இந்த ஆற்று வெள்ளத்தில் அடிபட்டு அலையுண்டு வரும்.

9. நிவா

இந்த ஆற்றின் கரையில் நெல்வாயில் அரத்துறை என்னும் தலம் உளது. அகில், இலவங்கம், ஏலம், கறி மிளகு, கனகம், கோங்கமலர், மணி, வன்மரம், வேங்கை மலர், வேய் (மூங்கில்) இந்த ஆற்றின் அலையில் அடிபட்டு வரும்.

10. பாலாவி

(இலங்கையில் உள்ள) இந்த ஆற்றின் கரைமேல் திருக்கேதீச்சுரம் என்னும் தலம் உளது.

11. பாலாறு

இந்த ஆற்றுக்கு வடஎல்லையில் உள்ளது (வட) திருமுல்லைவாயில். அகிற்கட்டை, சந்தனவேர், பவளக் கொடிகள், மயிற் பீலிகள், முத்துக்குவைகள், யானைத் தந்தங்கள் பாலாற்றின் வெள்ளத்தில் அடிபட்டு வரும்.

"12. பெண்ணையாறு

சீர்பெற்ற நதி இது. இந்த ஆற்றில் அகில், கொன்றை மலர், கோங்குமலர், சந்தனம், செடிகள், செண்பகம், தேன், பலா, பொன், மண், மணி, மயிற்பீலி, மல்லிகை மலர்த் தாது, மா, முத்து, யானைத்தந்தம், வயிரம், வன்னி, வேங்கைமலர், வேய் (மூங்கில்) இவை அலையில் அலையுண்டு வரும்.

12-i. பொன்னி

காவிரி பார்க்க.

13. மண்ணி நதி

இந் நதிக்கருகே வாளொளிபுற்றூர் என்னும் தலம் உளது. இந்த நதியின் பெருக்கில் அகில், கவரிமயிர், யானைத் தந்தம் அலையுண்டு வரும்.

14. முத்தாறு

திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) என்னும் தலத்தை இந்த ஆறு வலம்வரும். முத்திதரும் பெருமையது இந்த ஆறு. 'முத்தி முத்தாறு' எனப்பட்டுளது.

## 15. ஆற்றில் வரும் பொருள்கள் [14]

அகில், இஞ்சி, இலவங்கம், ஏலம், ஏனல், ஐவனம் (மலைநெல்), கமுகின் பழுக்காய், கரும்பு, கரும்புரசம், கலைமான் கொம்பு, கவரிமயிர், கறிமிளகு, கனிகள் (வாழை, மா, பலா), குங்கும மரம், குலைகள், கேதகை (தாழை) கொடிமுல்லை, கொன்றை, கோங்கமலர், சந்தனம், சந்தனத் துண்டம், சந்தனவேர், சாமரை, செடிகள், செண்பகம், தக்கோலம், தெங்கு, தேன், பலா, பவளக்கொடிகள், பளிங்கு, பாதிரி, பெருமரம், பொன், மண், மணி, மயிற் பீலி, மராமரம், மருதம், மல்லிகை, மலர்த்தாது, மா, மாலைகள், முத்து, யானைத்தந்தம், வயிரம், வன்மரம், வன்னி, வாழைக்குலை, வேங்கைமலர், வேய் (மூங்கில்).

## 16. இசையும் பண்ணும் [15]

திருஞானசம்பந்தர் நல்ல இன்னிசை பாடித் தமிழைப் பரப்பினார்; (சுந்தரரும்) ஏழிசைத் தமிழால் தம் பாடல்களைப் பாடினார். பண் இசை மொழியால் இறைவனைப் பலரும் ஏத்திப் பணிவார்கள். பண் நிறைந்த மொழியாள் தேவி. பண் மயமாம் மொழியாள் பரவை. தொண்டர்கள் பறையும் முழவும் ஒலிக்கப் பாடல்கள் பயில்வார்கள். வண்டுகள் பண்பாடும்; நீலோற்பல மலரில் இருந்து பல வகைப் பண்களைப் பாடும்; ஆண்வண்டும் பெண்வண்டும் மது உண்டு இன்னிசைப் பண்களைப் பாடும்; கொன்றைமலரில் அமர்ந்து வண்டுகள் பாடும்; சோலைகளில், பொழில்களில் புதுமணம் வருதலை அறிந்து அங்குள்ள தேனை விரும்பிச் சென்று பாடல்வண்டுகள் நாதகீதங்களை எழுப்பும்.

ஏழிசை, ஏழ்நரம்பின் ஓசை, ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ், பண் சீகாமரம், குறிகொள் பாடல்களின் இன்னிசை, சந்தம், இசைவல்லவர்கள், இலயம், சதி, தமிழும் இசையும், திவ்யகீதங்கள், தமிழ் வல்லவர்களின் ஏழிசை, ஏழ்நரம்பின் ஓசை, பண்ணார் பாடல்கள், பண்ணார் தமிழ், பண் காட்டும் யாழ், மருதப் பண், வேதகீதங்கள் கூறப்பட்டுள.

## 17. இந்திரன் [16]

[சிவனும் இந்திரனும்—என்னும் தலைப்பு 90-ம் பார்க்க]

உம்பரார் கோன், தேச வேந்தன், வானவர் கோன், என்னும் பெயர்களால் இந்திரன்—குறிக்கப்பட்டுள்ளான்.

## 18. இலக்கண விசேடங்கள் [18]

சுந்தரரது திருவாக்கில் - அசைச்சொற்கள், அணிகள், இடைநிலைத்தீபம், எதுகை-மோனை விசேடங்கள், போலி, மரூஉ, முதல்-இடை-கடைக் குறைகள், பூரண்தொடை, வேற்றுமை உருபு மயக்கம்—முதலிய இலக்கண விசேடங்களைக் காணலாகும். [ஒளிநெறியிற் பார்க்கவும்.]

## 19. இலக்குமி [19]

அலராள், செம்பொன், திரு, திருமகள், திருமாமகள், பங்கயமாது என இலக்குமி கூறப்பட்டுளள். நிலந்தரு மாமகள் (சீதேவி), நப்பின்னை கூறப்பட்டுளர். இலக்குமி யின் கணவர் திருமால். சீதேவி, நப்பின்னை இவர்களின் நாயகர் திருமால். இலக்குமி(செந்தாமரை) மலரில் வீற்றிருப் பவள். திருச்சுழியற் பெருமானை வழிபடுவோர்களின் திருவடியைத் தொழுபவரைவிட்டுப் பிரியாள் இலக்குமி.

## 20. இலிங்கம் [20]

வெண்மணலாற் சிவலிங்கம் அமைத்து அதற்குப் பால் அபிஷேகம் செய்து வழிபட்டார் (தண்டி என்கிற) சண்டேசுரர்.

மூன்று போதிலும் (காலை—உச்சி—மாலை) இலிங்க உரு அமைத்துச் சிவபிரானை இறைஞ்சினர் அகத்தியர்.

## 21. இறப்பு [21]

நம்மீது அன்பு வைத்துள்ள சுற்றத்தாரும், நட்பினரும் பிறரும் கண்டு அழ உயிர் உடலைவிட்டுப் பிரிந்துபோவது நிச்சயம். ஆதலின் நம் வாழ்வு பேதை வாழ்வு என்னும் படியான ஓர் இடர்ப்பாடு. நமன் தமர் வரும்போது ஐம்புலனும் மயங்கும், மனம் குழையும், அவதிப்பட்டு அயர்ந்துபோவோம்.

## 22. இனச்சொற்கள் [22]

அன்னை அத்தன், ஆடிப்பாடி, ஊன் உயிர், சொல் பொருள், பாடியாடி—என்பன போன்ற 28 இனச்சொற்கள் ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

# 23. உபதேசம் [23]

## (1) உலகுக்கு [23(i)]

பக்தர்களே! அடியார்களின் பாததூளியைச் சூடிக் கொண்மின்; பெருமானைக் கைகூப்பி உகந்து ஏத்தித் தொழுமின்; (ஆரூரன்) பாடிய பாமாலையைப் பாடிப் பரவுமின்; நம் பிரானை உணராதார் உணர்வும், சாராதார் சார்வும், நினையாதார் நினைவும், பயிலாதார் பயில்வும், பரவாதார் பரவுதலும், அவர் திருவடிக்குக் குழையாதார் குழைவும், அவரைப்பற்றிப் பேசாதார் பேச்சும் பயனற்றன ஆகும். பெருமானுடைய நினைவுடன் எங்கேபோனாலும் அவர் பயம் இல்லை. சமணராதியோர் பேச்சைக் கருதாது அவனைக் கைதொழுமின்; கொலை காரணமாக வந்த பாவம், பிணி இவை நீங்கவேண்டில் அடிக்கடி திருக்கழுக்குன்றத் தலத்துக்குப் போய்த் தேவர்பிரானைப் பணிமின், தொழுமின்; ஏமாற்றத்தை விடுமின்; உயிர்களைக் கொல்லுதலைத் திட உறுதியுடன் தவிர்மின்; சித்தசுத்தியில்லாமல், தவமென்று அவமாயின புரிந்து, சடை முடி முதலிய வேடங்களைப் பூண்டால் பிறவிக்கடலை நீந்துதல் அரிதென்பதை அறிமின்; பொருட்செல்வத்தை மனத்தில் வைத்து, வாழ்வதே கருதி, ஒருவர்க்கும் ஈயாமல், நரகில் துன்புறும்போது துணை செய்வார் யாரும் இல்லை. ஆதலால், யோசியாது அறம் புரிமின்; யானைமீதேறி மன்னர் சூழ வருபவரும், சாம்போது துணையற்று நிற்பர் என்பதை நினைப்பில் வைம்மின்; இந்தப் பாவப்பிறப்பு நீங்கவேண்டுமானால் பெருமானை மலர் கொண்டும் நறும்புகை கொண்டும் நினைந்து ஏத்துதல்தான் வழியில்லையாம். திறமுளவழியாம் என்பதை உணர்மின்; வாழ்வு ஒரு மாயம்; அது மண்ணாவது திண்ணம். ஆதலால், பிறவியை ஒழிக்க முயலுமின்; மாதர் வலையிற் சிக்காதீர்கள்; காலன் வருமுன் பெருமானுக்கு ஆளாம் அடிமையைப் பூண்மின்; வெட்டென்று பேசன்மின்; அஞ்ஞான இருள் நீக்கப் பெருமானைத் தொழுமின்; பெருமானது திருவடியைப் பற்றிநின்று பழிபாவங்களை ஒழிமின்; பெருமா

னுடைய திருநாமங்களைக் கற்றவர் நற்கதி பெறுவர்; ஆதலால், அவரை ஏத்துதல் நமது கடமை என அறிமின்; அடியார்கள் வான் ஆளப்பெறும் வார்த்தையைக் கேட்டும், மலரிட்டுப் பெருமானை வணங்காமலும், பெருமான் நம்மை ஆள்வதை அறியாமலும் காலம் கழிக்கின்றீர்; உங்கள் சுற்றத்தார்க்கெலாம் துணையாவீர் எனக் கருதி உங்களைப் பலர் முன்பு அழைக்கின்றேன்; வம்மின்! வந்து திருவாரூர்ப் பெருமானை மறவாது தொழுமின்.

## (2) நெஞ்சுக்கு [23(iii)]

உள்ளமே! ஊன் உணவைப் பாராதே, நினையாதே, விரும்பாதே; புலியூர்ச் சிற்றம்பலத்துப் பெருமான் நமது பாவத்தைத் தீர்ப்பார்; இறைவனுக்குக் குற்றேவல் செய்வாயாக. கூச்சத்தைவிட்டு, குற்றங்களை ஒழித்து, கோப மனத்தை அடக்கி, மாதர்மீதுள்ள ஆசைகளை ஒழித்து இறைவனிடம் அன்புசெலுத்தி, அவரது தலமாம் எதிர் கொள்பாடியை அடைவாயாக. என்வழியில் இணங்கி நீ திருப்புனவாயிலைக் கருது; மாதர்களின் வஞ்சனைச் சூழலில் மயங்காதே; மதி உண்டு, நல்ல விதியின் பயன் உண்டு; திருஆரூர்ப் பெருமானை எக்காரணத்தாலும் மறவாதே!

தந்தையும் தாயும் எள்ளளவும் சார்வு ஆகார்; மனமே! என்னோடு இணங்கி வாழ்; திருத்தினைநகரில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தைச் சிந்தனை செய்வாயாக; தோற்றம் உண்டு என்றால் மரணம் உண்டு; மனைவாழ்க்கை துயரம் தருவது; அறிவு மாறினால் வஞ்சனை ஏற்படுகின்றது. ஆதலால், நற்கதிபெற எதிர்கொள்பாடி என்னும் தலத்தை அடைவோமாக; பிறவியைப் பழித்து நீக்குவோமாக; புறம்பயம் என்னும் தலத்தைத் தொழப்போவோமாக;" நமது ஊர், நமது சுற்றம், நாம்பெற்ற மக்கள், பெண்டிர், நிதி இவை கூடிய மனைவாழ்க்கையைப் பற்றிய நினைப்பை ஒழிப்பாயாக; பிணிக்கு இடமாகிய இவ்வுடல், பிறப்பு—இறப்பு ஆகிய துன்பங்களை நீக்கி, ஈசன் திருவடிக்கு ஆளாக நீ விரும்பினால் திருத்தினைநகர்ச் சிவக்கொழுந்தினை, மனமே! நீ சிந்திப்பாயாக!

, மனமே! நீ நைந்து கவலைப்பட்டாதே! இம்மையிற் போற்றித்' துதித்தால் ,அம்மையில் நமக்கு அருளுவார்' எதிர்கொள்பாடிப் பெருமான். வேந்தராய் உலகாண்டு அறம் புரிந்து வீற்றிருந்த உடலும் துயர்க்கு ஆளாகும், ஆதலால், நெஞ்சே! திருத்தினைநகர்ச் சிவக்கொழுந்தினை அடைந்து போற்றுவாயாக.

## (3) புலவர்களுக்கு [23(ii)]

புலவீர்காள்! உங்கள் செயலை என்னென்று சொல்வது! ஓர் எள் கீழே விழுந்தாலும் அதை விடாது தேடி எடுப்பவரை, ஒரு ஈக்குக்கூட ஒன்றும் ஈயாதவரை நீங்கள் வள்ளலே என்று வாழ்த்தினாலும், கல்வி அறிவு இல்லாதவனைக் கற்ற பெரியோன் நீ, காமதேவனுக்கு நிகரானவன் நீ என்று புகழ்ந்தாலும், முடியத் தெரியாதவனை முற்றும் தெரிந்தவன் நீ என்று துதித்தாலும், நிலம் பெரிது உடையவன் நீ, சுற்றத்தாரை விரும்பி விருந்து ஓம்புகின்றவன் நீ என்று அப் பெருமைக்கு உரியன் அல்லாதவனை நீங்கள் புகழ்ந்தாலும், பெண்களுக்குக் காமதேவன் நீ, மிக்க அழகுக்கு இருப்பிடம் நீ, வேற்படைக் கையன் நீ என்று நீங்கள் போற்றினாலும், நரைகள் போந்து, உடல் தளர்ந்து, மூத்து, நடுங்கிநிற்கும் கிழவனை மலைபோலத் திரண்ட தோளன் நீ என்று வாழ்த்தினாலும், நலம் இல்லாதவனை நல்லன் நீ என்றும், கிழவனை இளைஞன் நீ என்றும், குலம் இலாதவனைக் குலவன் நீ என்றும், நோயாளியைத் தடந்தோளன் நீ என்றும், அற்பனைப் பெரியோன் நீ, புலவோர்க்குத் தாய் நீ என்றும் நீங்கள் புகழ்ந்து கூறினாலும், மிடுக்கு என்பதே இல்லாதவனைப் பீமன் நீ என்றும், ஈயாதவனை நீ பாரி வள்ளல் என்றும், வஞ்சக நெஞ்சப் பஞ்சபாதகனும் துஷ்டனைச் சாது நீ என்றும் நீங்கள் வாழ்த்தினாலும், அத்தகைய வாசகங்களுக்கு மகிழ்ந்து உங்களுக்கு ஏதும் கொடுப்பார் இல்லை. ஆதலால், புலவீர்காள்! அந்தப் பொய்ம்மையாளர்களைப் பாடாதீர்கள். [illegible]ரைப் பாடுமின்கள்; உங்களுக்கு இம்மையில் உடையும் [illegible]றும், மறுமையிற் சிவலோக ஆட்சியும் அமருலக

ஆட்சியும் கிடைப்பது நிச்சயம்; நரகில் இடர்ப்படீர், கவலைகள் சேரா; உய்தி கிடைக்கும்.

## 24. உயிர் [24]

[சிவனும் உயிரும்—என்னும் தலைப்பு 93-ம் பார்க்க]

ஆருயிர், உடலத்து உயிர், ஏழுலகத்து உயிர், ஒன்றலா உயிர் (ஒன்றுதல் - பொருந்துதல்), பல்லுயிர், பிறந்த உயிர், வெய்தாய வினைக்கடலில் தடுமாறும் உயிர், உயிர் போகும் நாள், உயிர் உடலைவிட்டுப் பிரிந்து போவது நிச்சயம்—என்றெல்லாம் 'உயிர்' விளக்கப்பட்டுளது.

## 25. உலகங்கள் [25]

உலகங்களுள்—மண்ணுலகம், விண்ணுலகம், சிவலோகம், பாதலம், கூறப்பட்டுள.

உலகு—மூன்று என்றும், ஏழு என்றும், கடலால் சூழப்பெற்றது என்றும், நீதிவேதியர் நிறை புகழ்கொண்டது என்றும், நிலைத்திராதது என்றும் குறிக்கப்பட்டுளது.

**விண்ணுலகம்**—அமரலோகம், இமையோர் உலகு, பொன்னுடை உலகம், வான் உலகு, வான நாடு என்றும், **சிவலோகம்**—சிவபிரானது அருமை உலகம் என்றும், பொன்னுலகம் என்றும், **பாதலம்**—சேடன் உறையும் இடம்—என்றும் அறிவிக்கப்பட்டுள. உருத்திரலோகமும் தவலோகமும் பரலோகமும்—கூறப்பட்டுள.

## 26. உலோகம் [26]

இரும்பு:- சூலம் இரும்பினால் ஆயது. 'இரும்புண்ட நீர்' என்பது ஒரு பழமொழி. இதன் பொருளை, 'இரும்புண்ட நீரென என்னை உள்வாங்கி இருந்தனன் நந்தி' என்னும் திருமந்திரம் (2592) விளக்குகின்றது.

## 27. உவமைச் சொற்களும், உவமைகளும் [27, 28]

உலாவிய, ஓடிய, கொண்ட, படைத்த, மலிந்த, பொலிய—போன்ற சில அரிய உவமைச் சொற்கள் ஆளப்பட்டுள.

கடலின் திரை மலைக்கும் மழைக்கும், கண்ணிலான் கொலைப்பற்ற இழுக்கப்படுதல் கழித் தலைப்பட்ட நாய்க்கும், குதிரையின் வேகம் காற்றுக்கும், குராமலரின் அரும்பு பாம்பின் எயிற்றுக்கும், சலந்தராசுரன் வாய் பிலத்துக்கும், மனம் கவலையால் சுழற்சியுறுதல் சுழித்தலைப்பட்ட நீர்க்கும், இராவணன் கருவரைக்கும், வேடர் முசுக்களுக்கும் ஒக்கும் (ஒப்பாவார்) என அருமை உவமைகள் சில விளக்கப்பட்டுள.

## 28. உழுதல் [29]

இறைவன் ஏறும் விடை (எருது) உழுபவர்களுக்குக் கிடைத்தற்கரிய எருது. எருதுகொண்டு உழுகின்றபோது பறவைகள் ஒலிசெய்யும் (அதிகாலை என்றபடி).

## 29. உறவினர் [30]

அப்பன், கணவன், தந்தை, தாய், பிள்ளை, மகள், மகன், முற்றவை (பாட்டி) முதலிய உறவினர்கள் கூறப்பட்டுள்ளார்கள்.

## 30. எண்கள் [31]

ஒன்று முதல் எட்டு வரை, பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதினெட்டு, இருபது, அறுபது, தொண்ணூற்றாறு, நூறு, முந்நூற்றறுபது, எழுநூறு, ஆயிரம், பல்லாயிரம், நாலாயிரத்துத் தொளாயிரம் (4,900), கோடி, ஆன்ணுயிரகோடி—என்னும் எண்கள் கூறப்பட்டுள.

## 31. எதிர்மொழிகள் [32]

அடி—முடி, இம்மை—மறுமை, காடு—நாடு, சேயார்—அணியவர், நன்று—தீது, பந்தம்—வீடு, புறத்தும்—அகத்தும், பெருமைகள்—சிறுமைகள், மெய்—பொய், வேம்பு—தீங்கரும்பு, இவை போன்ற எதிர்மொழிகள் எண்பத்து நான்கு ஒளிநெறியின் பகுதியிற் காட்டப்பட்டுள.

## 32. ஐந்தெழுத்து [33]

ஐந்தெழுத்து—நமச்சிவாய : ஐந்தெழுத்தை முப்பொழுதும் (காலை, உச்சி, மாலை) மூன்று வேளையும் உருவேற்ற வேண்டும். ஐந்தெழுத்தைச் சிந்தையில் ஆதரவுடன் வைத்து ஓதினால் பழவினைகள் நம்மைப் பீடியா.

## 33. ஐம்புலன்கள்—அவைகளின்—ஆட்சி [34]

ஐம்புலன்களும் நம்முள் வாசம் செய்து அரசர்போல ஆட்சிபுரிகின்றன. அவை ஆறலைக்கும் தன்மையவாய் நம்மை அரித்துத் தின்று நம்மைவிட்டு ஒருகாலும் நீங்காமல் வாழ்கின்றன. இந்த ஐம்புலன்கள் போகும் வழியேதான் நான் நடக்கின்றேன். செய்வகை வேறு அறியேன்; நான் எங்ஙனம் உய்வேன், சிவலோகா; உய்வகை நீதான் அருள வேண்டும். இப் புலன்களின் ஆட்டம் ஒடுங்கினபின் ஈற்றில், கடவுளே! உனக்குப் பாரமானேன். இந்த ஐம்புலன்களின் ஆட்சியால் நாம் இகழப்பட்டுத் துன்பத்துக்கு ஆளாய் விழாமல் எதிர்கொள்பாடி என்னும் தலத்தை அடைவோமாக.

## 34. ஐம்பூதம் [35]

[சிவனும் ஐம்பூதமும்—தலைப்பு 96-ம் பார்க்க]

பூதங்கள் ஐந்து—மண், நீர், தீ, காற்று, வான்.

**மண்**—தரிக்குந் தரை எனவும், **நீர்**—சுழித்தலைப்பட்ட நீர், பில்குபிக் கொழும் தெண்ணீர் எனவும், **தீ**—ஓங்கெரி, இயங்கு தீ எனவும், **காற்று**—நெடுங்காற்று, தாழ்வளி எனவும்; **வான்**—நெடுவான்கம் எனவும் விவரிக்கப்பட்டுள.

## 35. ஐராவதம் [36]

நான்கு தந்தங்களை உடைய (ஐராவதம் என்னும்) யானை (இறைவனே) உன் திருவடிகளை ஏத்தின உடனே நீ அதற்கு விண்மிசை வாழும் பீடும் பெருமையும் கூடும்படி அருளினை; அத்தகைய உன் கருணையைக் கேட்டு நான் உன் திருவடியை அடைந்துள்ளேன்.

## 36. ஒருபொருள் இரட்டைச்சொல்—இரட்டைச்சொல் போல்வன [37]

அயல்—அருகே, அலங்கல்—மாலை, ஆழி—கடல், கனி—பழம், நிச்சயம்—திண்ணம், பொடி—நீறு, மேகம்—முகில், வயல்—கழனி. விடை—ஏறு முதலிய ஒரு பொருள் தருவனவும், தருவன போல்வனவுமான 40 இரட்டைச் சொற்கள் ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

## 37. ஒலியும், ஒலிக்குறிப்பும், ஓசையும் [38, 39]

ஒலி

அர ஒலி, குழல் ஒலி, சங்கொலி, செந்தமிழ் ஒலி, பறை ஒலி, பாட்டொலி, மறை ஒலி, முழவொலி, விழவொலி, விளையாட்டொலி, வேத ஒலி—கூறப்பட்டுள.

ஒலிக் குறிப்பு

'ஆயோ', 'கறகற', 'கிண்', 'கூகூ', 'சடசட', 'ஞமண ஞாஞண ஞாண ஞோண', 'தென்னத் தெனத்தெத்', 'மூசு', 'மொட்'—எனும் ஒலிக்குறிப்புக்கள் ஆளப்பட்டுள.

## 38. ஒற்றுமை அடிகள் [41]

ஒரு அடியின் பாகம் அப்படியே பிறிதோரிடத்து வரும் இடங்கள் 17 ஒளிநெறியிற் காட்டப்பட்டுள.

## 39. "ஒன்று" என்னும் சொல்லாட்சி [42]

'ஒன்று' என்னும் சொல்லாட்சி, சம்பந்தர், அப்பர் தேவாரத்திற்போல, ஈண்டும் உளது. 'பிழைப்பொன்றிலர்', 'வஞ்சமொன் றின்றி' என்பன போன்ற ஆட்சி சில ஒளி நெறியிற் காட்டப்பட்டுள.

## 40. கங்கை [43]

[ஆறு—தலைப்பு 14-ம், சிவனும் கங்கையும், சிவனும் தேவியும் கங்கையும்—தலைப்புக்கள் 97, 109 பார்க்க]

கங்கை ஆயிரமுகம் உடையவள். குயிலன்ன மொழி யாள். சிவபிரானுடைய காதலுக்கு உரியவள். முன்பு பகீரதன் வேண்ட ஆர்ப்பரித்து இழிந்துவந்த கங்கை நங்கையைத் தமது சடைமிசை ஒளித்துவைத்துள்ள தீர்த்தன் பெருமான். அக் கங்கை நங்கையைத் தாரமாகக் கொண்டு, வேறு இடம் இல்லாததால் அவளைத் தமது சடையில் வைத்துள்ளார் பிரானார், "கங்கையாள் வாய் திறவாள்" என்கின்றார் சுந்தரர்.

## 41. கடலும், கடல் சார்ந்தவையும் [44]

(1) கடலின் பிற பெயர்கள்

பரவை, பௌவம், வேலை.

(2) கடல் வர்ணனை

கடல் கருநிறத்தது; நீல நிறத்தது; நீண்டது, பெரியது, பொங்குவது. ஒலி, குளிர்ச்சி, செழுமை உடையது; அலை வீசுவது, ஆழமுடையது, பல அரிய பொருள்களை உடையது; பொருள்களைக் கொண்டுவரும் கப்பல்கள் உலவுவது; வானவரும் தானவரும் கடைந்தது.

(3) கடல் உவமிக்கப்பட்டது

1. கடவுள் - கற்பகக் கடல்; *ஓமக்கடலார்.
2. பிறவி - பிறவிக்கடல். 3. வினை - வினைக்கடல்.

---

* ஓமம் - வேள்வி.

(4) கௌவைக் கடல்—திருச்சுழியலில் உள்ள திருக்குளம், எழுகடல், குண்டுகடல்(கிழக்குக் கடல்) கூறப்பட்டுள.

(5) திரை

திரை உலவும், உந்தும், விரியும், மலைபோல எழும், கப்பல்களையும், படகுகளையும் கரைக்கு ஓட்டும் ; மடிப்புக் காட்டி எழும்பும்.

(6) கடலிற் கிடப்பன ; கிடைப்பன

இப்பி, உப்பு (கழிப்பால் கண்டு), சங்கம், சலஞ்சலம், சுறுமீன், பலநிதியம், பவளம், பொன், மகரமீன், மணி, முத்து, வயிரம், வலம்புரி.

(7) கடற்கரை மரங்கள், செடிகள்

ஞாழல், தகரம், தாழை, தெங்கு, பனை, புன்னை.

(8) கடல் சார்ந்தவை

கழி, கானல்.

## 42. கணங்கள் [45]

தேவர்கணம், பதினெண்கணம், பேய்க்கணம் கூறப்பட்டுள.

கூட்டங்களிற் பிள்ளைகளின் கூட்டம் கூறப்பட்டுளது.

## 43. கதி [46]

திருச்சுழியற் பெருமானுடைய திருநாமங்களைக் கற்றவர்கள் கதிபெறுவர். ஆதலால் அந் நாமங்களைச் சொல்லி அவரை ஏத்துவது நமது கடமையாகும்.

## 44. கலி [47]

கலைகற்ற அந்தணர்கள், விடமுண்ட ஆர்த்த நாரீசுரப் பெருமானிடத்தில் திடபக்தியுள்ள அந்தணர்கள் வேள்வி செய்து கலியை வாராது தடுத்தனர்.

## 45. கலை—கல்வி—கலையூர் சிவனும் [48]

கலய நல்லூர் என்னும் தலத்தில் நல்ல கலைபயின்ற அந்தணர்கள்—கற்பாரும் கேட்பாருமாய் எங்கும் நிறைந் திருந்தனர்.

2. இறைவன் பல்கலைக்கும் பொருளானவர்; கற்ற கல்வியிலும் இனியவர்; கலை மலிந்த தமிழ்ப் புலவர்கள்—தமிழ் கற்ருேர்—இவர்தம் இடர்களை இறைவர் தீர்ப்பர்.

3. கண்ணப்பர் ஒரு "கலைமலிந்த சிறப்புவாய்ந்த நம்பி"—என்பர் சுந்தரர், (ஏனெனில் அவர் தமது சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்.)

4. மார்க்கண்டேயர் நிரம்பு பல்கலைப் பொருளாற் சிவனது கழலை வழிபட்டார், போற்றினுர்.

5. கலைகள் ஒன்றும் கற்றிலேன், ஞானமும் கொண்டிலேன் நான் என்கிருர் சுந்தரர்.

6. காமம், குரோதம், லோபம், மதம் இவைகளைப் பற்றிக் கலைநூல்கள் கூறுகின்றன.

## 46. காமதேனு [49]

சூரியன் உதிக்குமுன்பு எழுந்து தன் முலைக் கலசங்களின் பால் சொரிந்து சிவபிராற்கு அபிஷேகம் செய்து காமதேனு பூசித்தது.

## 47. காமன் [50]

[சிவபிரான்—அட்டவீரச் செயல்: 'காமனை எரித்தது' என்னும் தலைப்பு 58 (2)ம் பார்க்க.]

காமன் [illegible]ன் அழகினுல் மாதர்களை வசிகரிக்கும் தன்மையுன். அழகுள்ளவர்களைக் காமனுக்கு நிகர் என்பர்.

## 48. காலமும்—ஊழிக் காலமும்—சிவனும் [51]

அந்தி, சந்தி; இன்று—நாளை—நெருநல்; சிறுகாலை; காலை, உச்சிப்போது, மாலை; பகல், கங்குல்; நண்பகல், புலரி, நாழிகை, மாத்திரை, கார்(காலம்), ஊழி, ஆகிய காலப் பகுதிகள் கூறப்பட்டுள.

சிவபெருமான் நாளை, இன்று, நேற்று என நிற்கின்றார்; பகலும் கங்குலுமாய் விளங்குகின்றார்; காலமும் ஊழிக் காலமும் அவரே; காலனுடைய காலத்தையும் (ஆயுளையும்) அறுத்தவர் அவர்.

## 49. காலன் (யமன்) காலதூதர், யம தண்டனை [52]

[தலைப்பு 58(3)-ம் பார்க்க]

1. குறிக்கும் பெயர்கள்: காலன், கூற்றம், தருமன், நமன்—எமன், என்னும் பெயர்கள் ஆளப்பட்டுள; காலதூதர்—நமன் தமர், தருமன் தமர் எனக் குறிப்பிட்டுளர்.

(2) காலன் படை

தண்டம், வலயம், வேல்.

(3) காலன் வர்ணனை

காலன் கடுமையும் கொடுமையும் உடையவன்; மிடுக்கும், வலிமையும் கொண்டவன்; இடி போன்றவன்; கையில் தண்டம், வேல், வலயம் (வட்டமான பாசக் கயிறு) பூண்டவன்; உயிர் உண்பவன்; உயிரின் முடிவுநாளைக் குறி வைத்துத் தூதர்களை அனுப்புபவன்; தருமனார் (யம தர்ம ராஜர்) கீருசிறத்தவர்.

(4) காலன், காலதூதர் செயல்

கால தூதர்கள் வாழ்க்கையின் நாள்முடிவில் குறி வைத்து வருவர்; அப்போது புலன்கள் கலங்கும், நெஞ்சும் குழையும்; தூதர்கள் வருத்தும்போது மயங்கி அயர்வோம்; பாசக்கயிறேந்திக் கூற்றம் மேலே வர அவனது குரலைக்

கேட்டுச் சிந்தை பிரமித்துச் செயலற்றுச் சிலைபோல அடங்கி நிற்கவேண்டி வரும். யம தூதர் நம்மைக் கலக்கி நம்முடன் போராடித் துயர், வேதனை விளைவிப்பார். நம்மைக் கட்டுவர்; நரகில் இடுவர்; செக்கில் ஆட்டுவர்.

2. திருச்சுழியல் என்னும் தலத்தை எக்காரணத்தால் நினைத்தாலும் நினைப்பவரை யம தூதர்கள் துன்புறுத்தமாட்டார்கள்.

## 50. காளி [53]

[தேவதைகள் என்னும் தலைப்பு 164-ம் பார்க்க]

கொதித்து எழுந்த காளியின் கோபத்தைக் குறைப்பதற்காகச் சிவபிரான் கூத்து ஆடினர்.

## 51. கொடை [54]

கொடைக் குணமே இல்லாதவனைக் (கொடை வள்ளலாம்) பாரியே நீ என்று புகழ்ந்து கூறினும் கொடுப்பதைக் காண்கிலோம். அகங்காரம் கொண்டு பொருள் ஈட்டுவதையே மனத்தில் வைத்து, தாம் வாழ்வதையே கருத்திற் கொண்டு — ஈதல் என்பதே இல்லாதவர் நரகத்து ஆழ்குழியிற் பட்டு வேதனைப்படும்போது அவர்க்கு உதவுபவர் யார் உளர் (ஒருவரும் இல்லை என்றபடி.)

கண்ணிலாக் குழிக்கண்ணர்களின் கையில் ஒரு பொருளையும் ஈகின்றேன் இல்லை. சின்னஞ் சிறிதளவும் இரப்பவர்க்கு ஈயமாட்டேன்.

## 52. சங்கு [55]

இப்பி சங்கு, சலஞ்சலம், வலம்புரி—இவை கடலிற் கிடைப்பன. சங்கு—குழைக்கு உபயோகப்படும். திரை மோதி எற்றுவதால் சங்கு அங்காந்து முத்தைச் சொரியும். திருமறைக்காடு திருவலம்புரம் என்னும் தலங்களின் கடற்கரையில் வலம்புரியும் சலஞ்சலமும் திரையால் ஒதுக்கப்படும்.

## 53. சமணர்—சாக்கியர்—தேரர் [56]

(1) சமணர்

அமணர், காடி யாடு கழுக்கள், கரிய மனத்தர், குண்டர், கூறை(ஆடை)யின்றித் திரிபவர், *குமணமா மலைக் குன்றுபோல் நிற்பவர், சமண் பேய்கள், நாணமிலாதவர், நின்றுண்பவர், புன்சமணர், பொய்ச் சமணர்—எனக் குறிக்கப்பட்டுளார்கள்.

நமண நந்தி, கருமவீரன், தருமசேனன் என்பன போன்ற பெயர்களைக் கொண்டவர்கள்; "ஞமண ஞாஞண ஞாண ஞோணம்" என மந்திரத்தை ஓதுபவர்; கையிற் குண்டிகை உடையவர்கள்: சமணர், சாக்கியர் தங்கள் வாக்கு வல்லமையால் வசீகரித்துக்கொண்டாலும், வசீகரித்துக்கொள்வதை நான் கண்டாலும் அவர்களை (ஒரு பொருளாக) எண்ணி மதிக்கமாட்டேன்; சமணர், சாக்கியர் கூறும் காரணங்களை நீங்கள் ஆராயாதீர்கள்; பிரான் வீற்றிருக்கும் திருமறைக்காட்டை (வேதாரணியம் என்னும் தலத்தை) கைகூப்பித் தொழுவீர்களாக.

(2) சாக்கியர்

சாக்கியப் பேய்கள், ஓலைக் குடையினர், மிண்டர்கள்—என இவர் குறிக்கப்பட்டுளர்.

(3) தேரர்

இருந்து உண்பவர்கள்; நன்மை ஒன்றும் இலாதவர்கள்—என இவர் குறிக்கப்பட்டுளர்.

(4) உபதேசம்

தேரர்—சமணர்—இவர்கள் சமயம் அவத்தை தரும் தன்மையது. ஆதலால் நன்மையை விரும்பினல் (அவரொடு சேர்க்கையை) விட்டொழிமின்; விட்டொழிந்து உங்கள் பழிபாவங்களைத் தீர்த்துக்கொள்மின்.

---

* அழகிலாத மலை; குமணனது மலை என்பாரும் உளர். பெரியபுராண விரிவுரை.

## 54. சமணும் சிவனும் [57]

சமணரும் தேரரும் சிவபிரானைப் புறங்கூறினர். ஏசி நின்றனர்; அவர்களிடம் வசவு உண்ணும் தன்மையோ எம்பிரானுக்கு? இறைவா! ஏன் அவர்களுக்கு இந்த மனப் பான்மை? அவர்களுடைய பழிப்புரை இறைவருக்கு எவ்வித குறைபாட்டைத்தான் தரும் (ஒருவித குறையை யும் தராது என்றபடி); அவர்கள் அங்ஙனம் அறியாமை யாற் பழிப்பது அவர்கள் தலைவிதி. அந்த அறியாமையை—மூடத்தன்மையை அவர்களுக்கு அளித்தவர் இறைவரே. (உலகீர்) நீங்கள் அவர்களோடு சேராமல் சிவபிரானைப் பற்றி நின்று உங்களுடைய பழிபாவங்களை ஒழிப்பீர்களாக.

## 55. சமயம்: சிவனும் சமயமும் [58]

சமயங்களுக்குத் தலைவர் சிவபிரான்; அவர் தமது தோள்மிசை எலும்பைச் சுமந்த மாவிரத சமய கோலத் தவர். அறிவு சிறந்த அறுவகையான சமயங்களை அவ்வவர்க்கு அங்கங்கே அருள்புரிந்து அமைத்துள்ளார் அவர்.

## 56. சாதி—குலம் [59]

### I. போது

குலத்திற் பிறந்தவன் குலவன்; எல்லாச் சாதியரும் தத்தம் சாதித் தலைவனை அறிவர்.

### II. சிறப்பு

**(1) அந்தணர்**

தாமரை மாலைக்கு உரியவர் சுந்தரர்.

**(2) குயவர்**

திருநீலகண்டர் குயவர்.

**(3) குறவர்-குறத்திகள்**

திருமுதுகுன்றம் (விருத்தாசலத்து) மலையிடையே ஆண்யானையை ஆளி கொல்லக் குறத்தியர்தம் இல்லத்து முன்றிலில் இருந்த பெண்யானை மனம் நொந்துவாடும்.

(4) பாணர்

திருநீலகண்ட யாழ்ப்பாணர்—பாணர் குலத்தினர்.

(5) வணிகர்

அமர்நீதி நாயனர்—வணிகர் குலத்தினர்.

(6) வேடர்

கானவர், மறவர், வேடுவர், குற வேடுவர், வடுக வேடுவர்—என்பன நூலிற் கூறப்பட்டுள.

1. (திருமறைக்காட்டுக்கு அடுத்த) **கோடிக்கரை:** குழகர் கோயில்: இங்கிருந்த வேடர்கள் கொடியவர்கள், மிகவும் தீக் குணத்தவர், குற்றம் செய்பவர்கள்.

2. (ஸ்ரீசைலம்) **திருப்பருப்பதத்திலிருந்த வேடர்கள்:** ஆண் யானைகள் ஓடிப்போய்ப் பெண்யானைகளின் கூட்டத்தில் திரிவதைக் கண்ட [(ஓடமுடியாமல்) ஓரிடத்திலேயே இருக்க வேண்டி வந்த] பெண் யானை ஒன்று தலையிறங்கி மிக வருந்துவதைக் கண்ட வீரமுள்ள நற்குணமுள்ள (ஸ்ரீசைலத்து) வேடர்கள், இலைகளைக் கொண்டு தொன்னை செய்து அதிலே தேனைப் பிழிந்து அந்தப் பெண்யானைக்கு இனிப்புற ஊட்டுவர்.

3. **திருப்புனவாயிலில்** இருந்த வேடர்கள் அவ்வூர் வழியாக வரும் வியாபார வணிகர் கூட்டத்துடன் எப்போதும் போரிடுவர்; அந்த வேடர்களின் அம்புகளுக்குப் பயந்து மான் கூட்டங்கள் ஓடிப் புகுந்து மறையும்.

4. **திருமுருகன் பூண்டி வேடர்கள்:** இவர்கள் பசுக்களைக் கொன்று தின்னும் பாவிகள்; பாபச் செயல் இன்னது என்று அறியாதவர்கள்; உயிர்க்கொலை பல செய்தவர்கள்; கிழிந்த கந்தல் உடையினர்; இடுப்பில் வாள் கட்டிவைத்திருப்பவர்கள்; விரிந்த தலைமயிரினர்; [முசுக்கள் (கருங்குரங்கு) போல்பவர்; வெட்டென்று பேசுபவர்; வன்கண்ணர்—(இரக்கம் இல்லாதவர்); வடுகர் (தெலுங்கு பேசுபவர்)]; வில்லைக் காட்டி வெருட்டி, கல் எறிந்து, மோதி அன்பு

கலவாத வார்த்தைகளைப் பேசித், திடுக்கிடும்படி, நாள் தோறும் மொட்டென்று குத்தி மோதி ஆடையைப் பறிப்பவர்கள்.

5. வெஞ்சமாக் கூடல் என்னும் தலத்தில் வேடர்கள் விரும்பி வாழ்ந்தனர்.

## 57. சிவபிரான்—அட்டமூர்த்தி [60]

நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், திங்கள், ஞாயிறு, இயமானன் (ஆன்மா-உயிர்) என்னும் எட்டுமாய் நிறைந்திருப்பவர் இறைவர்; ஆதலால் அவர் 'அட்டமூர்த்தி' எனப்பட்டார்.

## 58. சிவபிரான்—அட்ட வீரச்செயல் [61]

### 1. அந்தகாசுரனைச் சங்கரித்தது [61(1)]

கரிய நிறத்தைக் கொண்ட அந்தகாசுரனைப், பெருமானே! நீர் உமது திரிசூலத்தைச் செலுத்தி அழித்தீர்.

### 2. காமனை எரித்தது [61(2)]

காமன் ஐவகைய நறுமலர்ப் பாணங்களைக் கொண்டவன்; அவன் வில் கரும்பு வில்; தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிவபிரானுடைய யோக நிலையைத்—தவ நிலையை—உயர் தவத்தை—அழிப்பதற்காகத் தன் மலர்ப் பாணங்களுடன் அவரை மிக்க மன எழுச்சியுடன் அணுகினன்; அவனுடைய தந்தை (திருமாலின்)கண் எதிரிலேயே சிவபிரான் அவனைத் தமது கண் சிவக்கக் கோபித்துத் தமது ஒரு கடைக்கண்ணால் அவன் எரிந்து பொடிபட நெருப்பெழ விழித்தார்; காமன் உடல் எரிந்து அழகு குலைந்து வெந்து பொடியானான்; ஐங்கணைவேள், கடிபடு பூங்கணையான், காமவேள், மதனன், மாரனார்—எனக் காமன் குறிக்கப்பட்டுள்ளான்.

## 3. காலனைச் செற்றது [61(3)]

அந்தணாளனும் பாலனுமாணி(மார்க்கண்டர்)—நிரம்பிய பல்கலைப் பொருளால், நறுமலர் கொண்டு சிவபிரானைப் பூசித்துப் போற்றி செய்தார். பிரானது திருவடிக்கே அடைக்கலம் என்று சரண் புகுந்தார். அத்தகைய அடியான்மீது அன்பு வைக்காமல் அவனைக் கட்டிப்பிடிக்கப் பகைத்தெழுந்து உக்ரமாய்க் கோபத்துடன் வந்தான் காலன். தனக்கே கேடு வரும் என்னும் விளைவை உணராது அந்தப் பாலகனது உயிரை வவ்வ முயன்றான்; இறைவர் இதைக் கண்டார். பாலகனைக் காக்கவேண்டி அக் காலன்மீது கோபித்து அவன் கலங்கி உருண்டோடி விழத் தமது காலால்—கால் மெல்விரலால்—அவனது நெஞ்சில் உதைத்தார். அவன் பாரிடை வீழ்ந்து மாண்டான். இங்ஙனம் காலனைக் கொன்று (தாம் அடியார்க்கருள்பவன், அடியார் மீது கோபிப்பவரைக் கோபிப்பவன் என்னும்) ஒரு கருத்தை உலகறிய உணர்த்தினார் இறைவர்.

கூற்றம், கூற்று, இடி போன்ற கூற்றம், குறி தவறாத கொடுமையாளன், கறைகொண்ட வேலை ஏந்தியவன், வெற்றிப் பெருமிதத்துடன் வருபவன், இரக்கமில்லாதவன்—என்று குறிக்கப்பட்டுள்ளான் காலன்.

## 4. சலந்தரனைத் தடிந்தது [61(4)]

பிலம்போன்ற வாயையும், மிக்க வலிமையையும், போரை விரும்பினவனுமான சலந்தரனை ஒளிவீசும் சக்கரத்தினால் இரண்டு பிளவாக்கினார் பிரானார். அந்தச் சக்கரத்தைத் திருமாலுக்குத் தந்தருளினார்.

## 5. தக்கன் வேள்வியைத் தகர்த்தது [61(5)]

ஒழுக்கமுறை உணராமல், தம்மை விரும்பாது, மதியாது, புகழாது பழித்த தக்கனுடைய நிரம்பிய பெரு வேள்வியைப் பெருமான் சிதற அடித்து, அது நடைபெறு வண்ணம் அழித்தார். அந்த வேள்வியில் அவி உண்ண வந்திருந்த தேவர்களை உருண்டோடும்படி உதைத்து

வெருட்டினர்; சந்திரனுடைய கலைகளைத் தமது திரு விரலால் தேய்த்தார்; ஒரு சூரியனுடைய கண்ணைப் பறித் தார்; பிறிதொரு சூரியனுடைய பற்களை உகுத்தார் தக்கன், எச்சன் இவர் தம் சிரங்களைச் சேதித்தார்; இந்திர னுடைய தோளை முரித்தார்; அக்கினி தேவனுடைய கரத்தைச் சேதித்தார்; பல தேவர்களைத் தண்டித்து அவர் அங்கங்களைச் சிதைவித்தார்; இங்ஙனம் தண்டித்து அறிவூட்டி அருள்புரிந்தார் பெருமான்.

## 6. திரிபுரத்தை எரித்தது [61(6)]

### (1) திரிபுரத்தை எரித்த வகை

மகாமேரு மலை வில்லாகவும், திருமாலும் அக்கினியும் அம்பாகவும், வலிய நாகம் நாணாகவும் அமையக் கொண்டு, கொடிகள் விளங்கின மதில்கள் சூழ்ந்து பொலிவு பெற்றிருந்த முப்புரங்களும் ஒருங்கே வெந்தழியச் சீறி, அவை பொடி யாம்படி நகைத்து, ஒரிமைப்பொழுதில் எரித்தார் சிவபிரான்; முப்புரத்தில் இருந்த பெண்டிரும் மக்களும் வெந்தழிந் தனர்.

### (2) முப்புரங்கள்

அந்தரத்தில்—விண்ணில்—ஓடித் திரிவன; உயர்ந்த நெடிய, வலிய மதில்களொடு கூடியன. சிறப்பும், பொலி வும் உடையன; வஞ்சகச் செயல்களுக்கு ஆதாரமானவை; வஞ்சகர்களின் இருப்பிடமானவை; கொடி விளங்கும் மும்மதில்களைக் கொண்டவை.

### (3) முப்புரத்தினர்

இகழத்தக்க தன்மையினர்; பிறரை இகழும் தன்மை யினர்; நல்லுணர்வு இல்லாதவர்; பிறர் சுகத்தை எண்ணா தவர்கள்; திருத்தினும் திருந்ாதவர்; கெட்ட நடவடிக்கை யுள்ளவர்; இறைவனைத் தொழுது உய்தி பெறுவோம் என்று உணராதவர்; கடவுளை நினையாதவர்; போருக்கு நிற்பவர்; மூர்க்கர்; வஞ்ச நெஞ்சினர்; வரங்கள் பெற்றுத் திரியும் அரக்கர்.

4) சிவபிரான் கொண்ட வில், அம்பு, நாண், தேர், குதிரை

மகாமேரு மலையே வீர வில்லாக அமைய, அதை ளைத்துப் பிரானார் திரிபுரங்களை எரித்தார்; திருமாலும், அக்கினியும் கொடிய அம்பாக அமைய, அந்த ஓர் அம்பைக் கொண்டே முப்புரங்களும் தீப்பற்றி எரியச் செய்தார்; ரிய வலிய பாம்பே வில்லின் நாணாக அமைந்தது; ணிய தேரின் குதிரைகளாக வேதங்களே அமைந்தன.

5) போருக்கு விடையேறிச் சென்றது

*செங்கண் மாலாம் விடைமீதேறிச் சென்று பகைவருடைய ஊர்களை நெருப்புக்கு இரையாக்கினர் பெருமான்.

6) திரிபுரங்களை எரித்த விதமும், வேகமும், காரணமும்

திருமாலும் பிரமனும் பிற தேவர் கூட்டமும் தம் குறைகளைக் கூறிப் "பெருமானே காத்தருளுக" என வேண்டிக்கொள்ளப், பெருமான் அவர்களுடைய துன்பத்தைக் களைய அருள் பூண்டு, தேர் ஏறிச் சென்று, வில்லை வளைத்து முப்புரங்களை எரிக்கு இரையாக்கினர்: முப்புரங்களும் கண்ணிமைப்பொழுதில்—கைந்நொடிப் பொழுதில்—ஒரு மாத்திரை நேரத்தில்—வெந்தழியும்படி நகைத்தே எரித்தார். அப்போது திருமால், பிரமன், இந்திரன் ஆகிய ம் மூவரும் இறைவனுக்குக் குற்றேவல் செய்தனர்.

(7) திரிபுரம் எரிந்த ஞான்று மூவர்க்கருளியது

திரிபுரங்கள் திகுதிகென எரிபட்டபோது, திரிபுரத்துத் தலைவர் மூவரும் பெருமானைத் தியானித்து வணங்கிச் சரணம் என ஓலமிட்டனர். பெருமான் அம்மூவரும் உய்யும் வகையை அருளி மூவரில் இருவர் - தமது திருக் கோயிலில் வாயில் காப்பாளராகவும், ஒருவன் - தாம் டலையில் நடனம் செய்யும்போது மணி முழவு முழக்கும் தொழிலாளனாகவும் அமையுமாறு அருள் பாலித்தனர்.

* திருமால்; தடமதில்கள் ... தழலெரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.—திருவாசகம் 12-15

## 7. பிரமன் சிரத்தை அறுத்தது [61(7)]

அடக்கமிலாத பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைப் பெருமான் விரைவில் அறுத்து அப் பிரமனுடைய பெருமையைக் குலைத்தார். அறுத்த தலையிற் பலிகொண்டு தேவர்களுக்குத் தமது திருவருளை வெளிப்படுத்தினர்; அறுத்த தலை நிறையத் திருமாலின் ரத்தத்தை ஏற்றுத், தமது தோள் மிசை எலும்புக் கூட்டினை விளங்கச் சுமந்து *மாவிரத கோலம் பூண்டார்.

அந்தணன், அயன், பார்படைத்தான், பிரமன், மலரோன், விதி—என்பன பிரமனைக் குறிக்கின்றன.

## 8. யானையை அட்டது; அதன் தோலை உரித்தது [61(8)]

### (1) யானையை அட்டது

எவரும் தடுக்க ஒண்ணாத வகையில் மதத்துடன் வந்த யானை நடுங்கி வருந்தி, அதன் உடலின் மாமிசம் தமது கை நிறைய ஆகும்படி, அதன் ரத்தம் சொட்டச் சொட்ட, அதன் தோலைப் பீறி உரித்தார் இறைவர்; உரித்த உரியைப் போர்த்து மகிழ்ந்தார்; இந்தத் தோல்தானு எம்பிரானுக்குப் போர்வையாகக் கிட்டியது? இவ்வண்ணம் உரித்துப் போர்த்த கோலாகலத்தைக் கண்டு தேவி மனங் கலங்கினள், நடுங்கி அஞ்சினள்; பாகத்தில் இருந்த தேவி அஞ்ச யானையின் தோலை உரித்தார், போர்த்தார். அங்ஙனம் தேவி அஞ்ச யானையை அட்ட காரணம் யாதோ!

அத்தி, ஆனை, கரி, களிறு, குஞ்சரம், கைம்மா, பகடு, மதமா, மைம்மா, வேழம்—இவை யானையைக் குறிப்பன.

### (2) வந்த யானையின் வர்ணனை

பருத்த தாள்களையும், ஆறுபோலப் பெருகி ஒழுகும் மதநீரையும் கொண்ட கொலையானை அது; போர்க்கு என்றே மாறுபட்டுக், கொல்லும் எண்ணத்துடன் காட்டிடையே வந்த வலிய கொடிய யானை அது.

* மாவிரதம் - சைவ சமயத்தின் உட்சமயம் ஆறனுள் ஒன்று

## 59. சிவபிரான் அணிவன, சூடுவன [62]

### 1. சிவபிரான் அணிந்துள்ளன: கொண்டுள்ளன [62]

ஆரம், எலும்பு, நீறு, பாம்பு, பூதிப்பை, மலர்வகை, முண்டம் (கபாலம்), வெண்டலை.

இவற்றுள், (1) அவர் அணியும் திருநீறு சுடலைப்பொடி என்பதும், அது பால் வெண்ணீறு என்பதும், தேவியும் தாமுமாக நீற்றை அணிவர் என்பதும், திருநீறே அவருக்குச் சாந்தம் என்பதும், மெய் முழுதும் நீறு பூசுவர் அவர் என்பதும்; (2) அவர் அணியும் பாம்பு "விலையில்லாத அணிகலம்" என்பதும், அவர்க்கு ஆரம் பாம்பு என்பதும், அவர் அணியும் கச்சும் பாம்பே என்பதும் விளக்கப்பட்டுள. அவர் பாம்பைத் தமது கரத்திலும், கழுத்திலும், சிரத்திலும், தோளிலும் அணிந்துள்ளார் என்பதும், அவர் கழுத்திலும் தோளிலும் கட்டி உள்ள பாம்பு 'மூக்கப் பாம்பு' 'பொறிகொள் பாம்பு' என்பதும் குறிப்பிடப்பட்டுள.

[மூக்கம் - சீற்றம். பொறி - வரி, புள்ளி.]

மேலும், அவருடைய கையிலும் சிரத்திலும் உள்ள பாம்பும், கச்சாக அமைந்துள்ள பாம்பும் பொறி கொண்டன என்பதும், இவையன்றி, ஆயிரம் படம் கொண்டதும், பெரிய படப் புள்ளிகளை உடையதும், பசிய கண்ணையும், அகன்ற வாயையும், நெருப்பையும் விஷத்தையும் உமிழும் பற்களை உடையதுமான பாம்பையும் அவர் அணிந்துள்ளார் என்பதும் தெரிகின்றன.

பிரான் அணிந்துள்ள மலர் வகையில், ஆத்தி, எருக்கு, கரந்தை, கூவிளம், கொன்றை, மத்தம், வன்னி கூறப்பட்டுள. அவர் அணியும் வெண்டலை—நரி உலவும் சுடலை வெண்டலை.

### 2. சிவபிரான் அரையில் அணிவன [63]

(1) அக்கு - எலும்பு.

(2) கீளும்-கோவணமும்-கோவணத்தின்மேல் அரவும்.

(3) பாம்பு.
(4) புலித்தோல் - புலித்தோல் மேல் அரவக் கச்சு.
(5) மரவுரி.
(6) துகில் - பட்டு.

அரையில் அசைத்த கீள் கோவணத்தைப் புலித்தோல் சூழ்ந்திருக்கும்; அதன்மேல் அரவு கட்டப்பட்டுளது. பெருமானுக்குப் பட்டுத் துகில் கொண்ட வேடமும் உண்டு; அரையில் கட்டப்பட்டுள்ள அரவு ஒற்றைப் படம் கொண்டது; செங்கண் கொண்டது; வெண்ணிறத்தது; மணி நாகம் அது; விஷம் வாய்ந்தது; செருக்கு (ஆங்கார) வாயினது; பெருமானுடைய அரை நாணும் படப் பாம்பே; மரவுரியும் அவர் அரையில் அணிவர்.

## 3. சிவபிரான் கழுத்தில் அணிவன [64]

"மார்பில் அணிவன" என்னும் தலைப்பு 59-8 பார்க்க.

## 4. சிவபிரான் காதில் அணிவன [65]

குண்டலம், குழை, தோடு: இவை தம்முள், பிரான் அணிந்துள்ள குழை - கனகக்(பொன்)குழை, சங்கக் குழை, மகரக் குழை, வெண்குழை—என விளக்கப்பட்டுளது. குழை பிரானுடைய ஒரு காதில் விளங்கும்; மற்றொரு காதில் தோடு பொலியும்; அது சுருள் வெண்தோடு; குழை தழுவு காதில் கோளரவமும் விளங்கும்.

## 5. சிவபிரான் காலில் அணிவன [66]

கழலும், சிலம்பும்:—பலிக்குப் போகும்போது கழலும் சிலம்பும் ஒலிக்கப் பெருமான் போவார்; அவர் ஆடும் பொழுது கழல் ஒலி செய்யும்.

## 6. சிவபிரான் கையில் அணிவன [67]

பெருமானுடைய திருக்கரங்களில் விளங்குவன:—எரி, கட்டங்கம் (மழுவகை), கபாலம் (தலை ஓடு வெண்டலை),

சூலம், தமருகம் (உடுக்கை), பாசு, பாம்பு, மழு, மான், வீணை.

இவை தம்முள் :—

எரி அகல், தமருகம், கரிய பாம்பு—இவை பெருமான் ஆடும் பொழுது அவர் திருக்கரத்தில் விளங்கும். ஆவர் ஏந்தியுள்ள—

(1) எரி

அவியாத எரி ;

(2) தலைஓடு (கபாலம்)

பல் இல்லாத தலைஒடு: செத்தவர்தம் தலைஓடு; நரி உமிழ்ந்திட்ட எச்சில் வெள்ளைப் படுதலை ; பருந்து தீண்டுவது ;

(3) சூலம்

மூன்று இலைகொண்டது; வேகமாய் ஒளி வீசுவது; கூர்மை உள்ளது.

(4) பாம்பு

இது ஐந்து படம்கொண்டது; கருநிறத்தது; பொறிகள் (புள்ளிகள்) கொண்டது ; செங்கண் கொண்டது; பலிக்கு வரும்போது, 'பெருமானே! கையிற் பாம்பு வேண்டாம்; கடித்தால் விஷம் ஏறும்' என்று அஞ்சி வேண்டுவர் மாதர்கள்.

(5) மழு

வெண்ணிறத்தது, திண்ணியது, கூர்மையான முனையை உடையது, வளைந்துள்ளது, கொடியது, தெய்வக் கனல் கொண்டது, பெருமானுடைய வலது கையிற் பொலிவது.

(6) மான்

இது கலைமான் கன்று; சிறியமான்; பெருமானுடைய இடது கையில் திகழ்வது.

(7) வீணை

அதிசயமான வீணை ; இதை அழகாக ஏந்துவர் பெருமான்.

## 7. சிவபிரான் தோளில் அணிவன [68]

(1) அரவம் [தலைப்பு 59 (1) பார்க்க]

(2) களேபரம் (எலும்பு)

பிரமன் தலையை அறுத்து, அந்தக் கபாலம் நிறையத் திருமாலின் ரத்தத்தை ஏற்றுத், தமது தோள்மீது(கங்காளம்) எலும்பு மாலையைச் சுமந்த மாவிரதத்தர் பெருமான்.

## 8. சிவபிரான் மார்பில் அணிவன [69]

ஆமை ஓடு, எலும்பு, பன்றியின் கொம்பு, பஞ்சவடி (மயிர்க் கயிறு), பூணூல்; இவை தம்முள் :—

அவர் பூண்டுள்ள (1) ஆமை

இள ஆமை, எழில் ஆமை - எனப்பட்டுளது; அது அவர் மார்பில் விளங்கும். 'ஆமைத் தாலியார்'—என விளக்கப்பட்டுளது.

(2) எலும்பு

ஆமை ஓட்டுடனும், பன்றியின் கொம்புடனும் பிரானுடைய மார்பில் திகழும்.

(3) பன்றியின் எயிறு—கொம்பு

ஏனம் கொம்பு, ஏனத்து எயிறு, ஏனத்தின் வெண் மருப்பு என்று கூறப்பட்டுளது. இது பிரானுடைய மார்பில் விளங்கும். (ஏனம் - பன்றி); அந்த ஏனம் வல் ஏனம் (வலிய பன்றி) எனப்பட்டுளது.

(4) பஞ்சவடி

மாவிரதியர் அணியும் மயிர்க்கயிறு. பிரான் அணிந்துள்ளது நரை விரவிய (கலந்த) மயிர்.

(5) பூணூல்

இது வெண்ணூல்; பிரானுடைய சிவந்த மார்பில் வெண்ணிறத்த பூணூல் விளங்குவது ஒரு பவள மலையில் பளிங்கு ஒழுகுவது போலிருக்கும்.

## 9. சிவபிரான் சிரசிற் (சடையிற்) சூடுவன [70]

கங்கை, கொக்கிறகு, தலைமாலை, திங்கள், பாம்பு, மலர் வகை, மேகம்,

இவை தம்முள் :—

(1) கங்கை

ஆயிர முகத்தது; பிரானுடைய சடைமீது விளங்குவது, நறுமணத்தது, பிரான் கங்கையாளைத் தாரமாகக் கொண்டுள்ளார்.

(2) தலைமாலை

சிரிதலைமாலை—என விளக்கப்பட்டுளது.

(3) திங்கள்

இந்து, பிறை, மதி, நிலா, திங்கள் - என்னும் பெயர்களாற் குறிக்கப்பட்டுளது.

பெருமான் சூடியுள்ள திங்களானது இளந்திங்கள், குளிர்தரு திங்கள், வெண் திங்கள், ஏடுவான் இளந்திங்கள் எனப்பட்டுளது.

கங்கா நதியில் மலர்கின்ற மலர் நிலவு என்றும், வெண்ணிலா, அந்தி வெண்பிறை என்றும், இளவெண்பிறை என்றும், குருமாப்பிறை, சோதி இளம்பிறை, நல்ல துண்டப் பிறை, பிள்ளை வெண்பிறை, பிறைக்கண்ணி, பைதல் வெண் பிறை (பைதல் - இளமை கொண்டது), மூளைப்பிறை, வளராத பிறை, வான் இளம்பிறை, குறையாமதி, கோணல் மாமதி, தண்ணார்மதி, தவழும்மதி, தழல்மதி, தூமதி, நிலவெண்மதி, பாகமாமதி, பிள்ளைமாமதி, போழு மதியம், மஞ்சுண்ட மாலைமதி, மதிப்பிதிர்க் கண்ணி, மூளைவளர் மதி, முற்றுமதி, வள்வாயமதி, வெண்மதியக் கண்ணி என்றும்— திங்கள் விவரிக்கப்பட்டுளது.

(4) பாம்பு

இது ஆடரவம், இளநாகம், ஊரும் அரவம், கோல அரவு, கோளரவு, தீவாய் அரவு, படங்கொள் நாகம், பொறிக்

கொள் அரவம், வரிதரு பாம்பு, வாளரா என விளக்கப் பட்டுளது.

பெருமானது சடையில் பிறையைப் பாம்பு தீண்டு கின்றது என்றும், பிறையும், அரவும் புனலும் அவர் சடை மீது விளங்கும் என்றும், ஐவாய் அரவினை மதியுடன் அவர் வைத்துள்ளார் என்றும்; கங்கைப்புனல், வளராத பிறை, வரி அரவு எல்லாம் ஒருங்கே அமைய வைத்துள்ளார் பெருமான் என்றும் விளக்கப்பட்டுள.

(5) மலர் வகையுள்

ஆத்தி, எருக்கு, கரந்தை, குரவு, கூவிளம், கொன்றை, பூளை, மத்தம், வன்னி—கூறப்பட்டுள.

இவை தம்முள் :—

எருக்கு - வெள்ளெருக்கு என்றும், கொன்றை - கடிமலர்க்கொன்றை (நறுமணமுள்ள கொன்றை) என்றும், காரூரும் கமழ் கொன்றை (கார்காலத்தில் - ஆவணி புரட்டாசிப் பருவம் மலர்வது), கொத்தார் கொன்றை, தார் நிலவு கொன்றை (சரக்கொன்றை), தீமலர்ந்த கொன்றை, பொன்மலர்க் கொன்றை, மதுவார் கொன்றை எனவும்; **மத்தம்**—வேரி மத்தம் (வேரி-வாசனை) என்றும் விவரிக்கப் பட்டுள.

(6) மாலைகளுள்

கூவிளமாலை, நாண்மலர் இண்டை கூறப்பட்டுள.

## 60. சிவபிரான்—அபிஷேகப் பொருள்கள் [71]

ஆன் ஐந்து, தயிர், தீ, தேன், நீர், நீறு, நெய், பால் இவை பிரானுக்கு உரிய அபிஷேகம் பொருள்கள். இவற்றுள் ஆன் ஐந்து (பால், தயிர், நெய், கோசலம், கோமயம்) இறைவ னுக்கு உகந்தன; இறைவன் ஆடும் மஞ்சனம் (ஊழித்) தீ; நீர்-தெளி நீராகவும், நெய்-நறுநெய் (வாசனையுள்ள நெய்) ஆகவும், பால் - மட்டப்பால் (அழகிய நல்ல பால்) ஆகவும், நீறு - வெண்ணீறாகவும் இருத்தல் வேண்டும். காமதேனு பால் சொரிந்து ஆட்டி உள்ளது.

## 61. சிவபிரான் அர்த்தநாரீசுரர் [72]

இமவான் மகளை - உமை நங்கையைப் புல்கித் தமது இடது பாகத்தில் பெருமான் மகிழ்ச்சியுடன் வைத்துள்ளார்; ஆதலால் அவர்க்கு ஒருபாகம் ஆண்பாகம், ஒருபாகம் பெண் பாகம்; (தேவிக்குரிய) சிலம்பும், (தமக்குரிய) கழலும் அவர் திருவடியில் ஒலிக்கும். (தேவிக்குரிய) தோடும், (தமக்குரிய) குழையும் அவர் காதில் விளங்கும்.

தேவி வெற்றிகரமான மாதவம் செய்தவள்; அதனுல் தேவியின் தவத்தை மதித்துத் தமது ஆகத்தில் தேவிக்கு ஓர் இடம் தந்தார் பெருமான். இங்ஙனம் ஒரு பால் தேவி விளங்கும் சிறந்த திருவுருவத்தை உடையவர் சிவ பெருமான்; அவர் மங்கை ஒருபாகம், மால் ஒருபாகம் ஆகவும் விளங்குவர்.

## 62. சிவபிரான் அறம் உரைத்தது [73]

பொழிலில் இருந்த அழகிய ஒரு கல்லால மரத்தின் நீழலில் நன்கு வீற்றிருந்து அருந்தவ முனிவர்களாம் நால்வர்க்கு நான்மறை நூல் உரையைப் பெருக உரைத்து, அறங்களின் தன்மையை விளக்கி அருள்புரிந்த அறவன் ஆவார் பெருமான். அந் நால்வருடன் இருந்து அறம் பகரக் கேட்டு நன்மை பெற்றவர்கள்:—மிக்க கவனத்துடன் கேட்ட கின்னர அந்தணர்கள், புலி, பாம்பு, சிங்கம், குற்றமிலாத மாதவர்களின் கூட்டம்.

## 63. சிவபிரான் ஆடல், பாடல் [74]

கொட்டு, ஆடல், பாடல் இவை மயமாய் நிற்பவர் பெருமான். இசைப்பாட்டு உருவத்தவர் அவர். அவர் காட்டில் ஆடுவர்; பாடுவர்; அவர் நீறணிந்து ஆடுவர், பாடுவர். தொண்டர்கள் பணிசெய்யப் பெருமான் ஆடிப் பாடி அவர்களுக்கு அருள் நல்குவர்.

## 64. சிவபிரான் ஆடை, உடை, போர்வை [75]

### தோல் முதலிய உடைவகை

சிவபிரான் தோலுடுத்தே திரிவர்; மான் தோலை உடுப்பார், புலித்தோலை மேலாடையாகத் தோள் மேலே அணிவார், யானையின் ஈரத்தோலைப் போர்த்து மகிழ்வார்; தம்மை எதிர்த்து வந்த சிங்கமும், நீள் புலியும் கொழுத்த மதயானையும் அலறிப் பிளிறப் பெரும் போர்புரிந்து அவைகளைப் பிளந்து அவைதம் ஈர உரிவையை அணிந்தார் இறைவர்; பட்டாடையும் அணிவார்; அரையிற் கீளும் கோவணமுமாக விளங்குவார்; அரையில் அணிந்துள்ள புலித்தோலின் மேலே கொடிய பாம்பைக் கச்சாகக் கட்டியுள்ளார்; பிரானுக்கு வெள்ளாடை விருப்பமில்லை; வேங்கையின் தோல்தான் விருப்பம்;

மான் தோலையும் ஆடையாக அணிவார், பல தலைகளை உடைய பாம்பை மாமணிக் கச்சாகக் கொண்டுள்ளார்.

## 65. சிவபிரான் இருவர்க்கும் அரியராய் நின்றது [76]

திருமாலும் பிரமனும் அட்ட புட்பங்கொண்டு அடி போற்றியும் சிவபிரானுடைய அடிமுடியைக் காணமுடியவில்லை. அவ்விருவராலும் அறிதற்கரிய சோதியாய்ப் பெரு நெருப்புருவாய், நெடியராய், நீண்டு நின்றார் சிவனார். அரி - பன்றி உரு எடுத்தும், அயன் -(அன்னப் பறவையின்) உரு எடுத்தும், பூமியைத் தோண்டியும் பறந்தும், எங்கும் தேடியும், என்ன பாடுபட்டும் காணமுடியாதபடி, இருவரும் அஞ்சி அயர்ந்து போம்படி, கீழ்மேல் உற நின்றார் சிவனார்.

சுடர் மண்டலம் மூன்றினும் அரியும் அயனும் தேடியும் அவர்களாற் காணமுடியாத பெருமை வாய்ந்தவர் பெருமான். சிந்தித்துத் தியானித்தும் அவர்களாற் காண முடியவில்லை; தம்மைக் கண்டார்க்கும் காண்பதற்கரிய கனல் உருவாய் நிமிர்ந்து நின்றார் பெருமான்:

**காணமுடியாமைக்குக் காரணம்**

அவ்விருவர் இடத்தும் விநயம் இல்லாத காரணத்தால் - 'நான்' என்னும் ஆணவம் இருந்த காரணத்தால் - அவர்கள் செருக்குடன் தேடிய காரணத்தால் - பெருமானைக் குறுகிப் பணிவுடன் சரண் அடையாத காரணத்தால் - அவர்களால் பெருமானைக் காணமுடியவில்லை.

## 66. சிவபிரான் உலா (விடைமீது) [77]

பூதப் படைசூழ, உமையொடும், கொன்றை மாலை சூடியவராய், மாணிக்க மலைபோல் விடைமீது பெருமான் உலா வருவார்; தொங்கவிட்ட சடைதாழ, திருக்கரத்தில் வீணை அழகுதர, வீதியில் விடைமீது ஏறி வருவார்.

## 67. சிவபிரான் உறைவிடம் [78]

(i) **அடியார் மனம்:** நினைந்து உருகுவார் உள்ளத்திலும், கருதிக் கசிவார் உச்சியிலும், நேர்வழியில் நிற்பார் மனத்திலும், தம்மைச் சிந்திப்பார் சிந்தையிலும், வந்திப்பார் மனத்திலும், நீதிநெறியில் நிற்பார் இடத்திலும், சரண் அடைந்தார் நெஞ்சகத்தும், பெருமான் உறைவார்; பொய்யா நாக்கொண்டு புகழ்வார்தம் மனத்துள்ளே மெய்யாக நின்று எரியும் விளக்கு அவர்.

(ii) அண்டங்களுக்கு அப்புறத்து உறைவார்.

(iii) ஆல நிழலில் அமர்ந்துள்ளார்.

(iv) உலகேழும் உடைய அவர்க்கு ஊர் ஆவது ஒற்றியூரும் ஆரூரும்; ஆனால், ஒற்றியூர் - ஒற்றி வைக்கப்பட்டது; ஆரூர் - ஆர் ஊரோ; ஆதலால் அவர்க்கென்று ஊர் ஒன்றும் இல்லை. வேறு இடம் இல்லாமையால் கங்கை குடியிருப்பது அவரது மெய்யகத்தே. பலிக்கே ஊர் ஊராகத் திரிகின்றார்.

(v) தமக்கெனக் கோயில்கள் பலவுள; (ஆயினும்), பேய்கள் வாழும் மயானமே அவர் இருக்கை; நரி கூச்சலிடும் நிறை நள்ளிருளில் பேய் புடைசூழ பெருங்காட்டகத்தே இருப்பர்.

(vi) அவர் வீற்றிருக்கும் தலங்கள் எனக் கூறப்பட்டவை:—அதிகை, ஆரூர், இடையாறு, ஊறல், ஒற்றியூர், கச்சி, கடவூர், கருப்பூர், கலயநல்லூர், கழிப்பாலை, கழுக்குன்றம், காழி, கேதாரம், கோடி, கோவலூர், சுழியல், சோபுரம், சோற்றுத்துறை, துருத்தி, நறையூர், நன்னிலம், நனிபள்ளி, நாகை, நாவலூர், நின்றியூர், பழனம், பனங்காட்டூர், புனவாயில், பூவணம், மறைக்காடு, வலம்புரம், வீழிமிழலை, வெண்பாக்கம், வேள்விக்குடி.

இவற்றுள்-அதிகை-பெருமானுக்கு என்றும் இருக்கை என்றும், ஆரூர் -(திருமூலட்டானம்) அவர் வாழ்பதி, அவர் விரும்பும் இடம் என்றும், திரு ஊறலில் நீங்காது இருப்பர் என்றும், ஒற்றியூர் அவரது ஊர் அன்று; ஆயினும் அவர் கருதும் இடம் ஒற்றியூர் என்றும், அவர் கருப்பூர் விருப்பன் என்றும், கலயநல்லூர் அவர் உமையவளோடும் மேவிய ஊர் என்றும், கழுக்குன்றம் அவர் முதலிடமாகக் கொண்ட பழைய ஊர் என்றும், காழி அவர் மதித்திருக்கும் இடம் என்றும், கொடியார் பல வேடர்கள் வாழ்கின்ற கோடி என்னும் தலத்தில் அன்புடன் கோயில் கொண்டுள்ளார் பெருமான் என்றும், திருச்சுழியல் என்னும் தலத்தில், தாம் பேரூரில் (மேலைச் சிதம்பரத்தில்) உகந்திருப்பதுபோல உகந்து இனிது உறைகின்றார் பெருமான் என்றும், சோபுரம், சுழியல், ஒற்றியூர், திருவூறல் என்னும் தலங்களை விட்டு நீங்கார் பெருமான் என்றும், நன்னிலத்துப் பெருங்கோயிலில் விருப்புடன் இருப்பர் என்றும், நாவலூர்தான் நாதனுக்கு ஊர் என்றும், திருப்பூவணம் பெருமான் மிக விருப்புடன் இருப்பாகக் கொண்ட ஊர் என்றும், திருவீழி மிழலை அவர் தேவியுடனே உறையும் திருப்பதி என்றும் - விளக்கங்கள் தரப்பெற்றுள்ளன.

(vii) ஞாயிறு முதலிய தேவர்கணங்களிடத்தும், நல்ல மலர்களிடத்தும், கொன்றை மலரிலும் வாசம் செய்வர் பெருமான்.

(viii) மலை உச்சியிலும் வானிலும் வாழ்வர்.

## 68. சிவபிரான் கொடி [79]

சிவபிரானது கொடி - விடைக்கொடி; அது வலிமை வாய்ந்த வெள்ளை எருதேற்றின் கொடி; குறுகிய கொம்புகளை உடைய இள ஏற்றின் கொடி; முக்காரம் (முழக்கம்) செய்யும் ஏற்றின் கொடி.

## 69. சிவபிரான் - சடை [80]

(1) சடை

அழகுள்ளது, ஒளி வீசுவது, குளிர்ந்திருப்பது; சிறியது, சுருண்டுள்ளது, தாழ்ந்து விளங்குவது, தேன், நெய் இவைகளால் முழுக்காட்டப்பெற்றது, தொகுதியாய்க் கட்டப்பட்டது, தொங்கவிடப்பட்டது, நறுமணம் உள்ளது, நிமிர்ந்திருப்பது, நிறைந்திருப்பது, நீண்டிருப்பது, நெருங்கி இருப்பது, படர்ந்துள்ளது, பனித்திவலை உதிர்வது, பிறை விளங்குவது, பின்னப்பட்டது, பூவுடன் தாழ்ந்து விளங்குவது; பெருமை வாய்ந்தது, முடியாகக் கட்டப்பட்டது, வளர்ந்துள்ளது, விரிந்துள்ளது.

(2) சடையின் கணக்கு

சடை எட்டு.

(3) சடையின் நிறம்

செந்நிறம், செம்பொன்னின் நிறம், தீயின் நிறம், பவள நிறம், மின்னின் ஒளி நிறம்.

(4) சடையின்மீது விளங்குவன

அரவு (பாம்பு), இண்டை மலர், கங்கை, குரவு, கூவின மாலை, கொன்றை மாலை, பிள்ளைப்பிறை, மத்தம், வெண்டலை.

## 70. சிவபிரான் சுடர், சோதி, ஒளி [81]

சிவபிரான் அமரர்க்கு அரிய சோதி, இருள் அறுத்தருளும் தூய சோதி, எண்டிசைக்கும் ஒருசுடர், கழலிற்

சிலம் பார்த்தசோதி, 'சுடர்ச்சோதி, சோதியிற்சோதி, தற்சோதி (சுயஞ்சோதி), தூண்டா விளக்கின் நற்சோதி, தேவர் தொழ நின்ற சுந்தரச் சோதி, தொண்டர் தமக்கு எளிய சோதி, தொல்வினை தீர்க்கின்றசோதி, நொந்தா (தூண்டாத) ஒண்சுடர், பரஞ்சுடர், பரஞ்சோதி, மாசறுசோதி, மாமணிச் சோதி, யார்க்கும் சொல்ல ஒண்ணுச் சோதி, ஒளி மூன்றும் ஆனவர்.

## 71. சிவபிரான் தன்மை, பெருமை, அருள் முதலிய [82]

☞ [ ] இக்குறிக்குள் உள்ள எண் ஒளி நெறியில் இத் தலைப்பிற்குரிய எண்.

1. அக்ரமங்கள் செய்வார் [82(1)] (அகப்பொருளில்);

சக்ரவாளத்து இளம் பேடைகளே! சேவல்களே! (எனது) வளைகள் நில்லாமையை ஆரூர்ப் பெருமானுக்கு உணர்த்த வல்லீர்களோ நீங்கள்.

### 2. அகரம் போல்வார் [82(2)]

அகர முதல் எழுத்துப்போல விளங்குகின்றார் பெருமான்.

### 3. அடையாளம் [82(3)]

தொங்கவிட்ட சடை தாழ்ந்து விளங்கும்; வீணை ஏந்தி *விடங்கக் கோலத்துடன் வீதியில் விடை ஏறி வருவார்; குட்டப் பேய்கள் தம்மைச்சூழ நடிப்பார், தூய மதியைச் சூடுவர்.

### 4. அணு [82(4)]

இறைவன் ஒரு தீ உருக்கொண்டு அணு ரூபமாய் இந்த உடலில் ஒடுங்கிப் புகுந்து பரந்துள்ளார்.

---

* விடங்கக் கோலம்—அழகிய சுயரூபக் கோலம்.

## 5. அந்தணர் - வேதியர் [82(5)]

பெருமான் விண் பணிந் தேத்தும் வேதியர்; தொண்டர்க்கு எளிய வேதியர்; நம்பினார்க்கு அருள்புரியும் அந்தணர்; வாயாடியாய், மறைஓதி, வேதியனாகி வந்தவர்.

## 6. அமுது [82(7)]

பெருமான் நெல்லிப் பழத்தின் அமுது; அடியார்கள் உள்ளத்தே ஊறும் அமுது; அடைந்தவர்க்கு அமுதாய்ப் பொதிந்து ஊறும் அமுது; உயிர்க்கெல்லாம் உரிய அமுது; தமது அகத்தே வேறு நினைவு இன்றி மெய்ம்மையுடன் பற்றுபவர்க்கு அமுது; குற்றமிலாத அமுது; தேன் அமுதின் தெளிவு.

## 7. அரசாட்சி [82(9)]

பெருமான் வானவர்க்கு அரசர்; மண்ணுலகும் விண்ணுலகும் அவர் ஆட்சியில் அடங்கியன.

## 8. அரண் [82(10)]

அஞ்சினார்க்குக் காவலாவார் பெருமான்.

## 9. அரியவர் [82(11)]

இறைவன் அமரர்க்கு அரியவன்; உள்கி நண்ணாதார்க்கும், திடவிய பத்தியின்றி ஐயுறவு உள்ளவர்க்கும் அரியவன், காணுதற்கு அரியவன், உள்ளான் என்று சான்று காட்டுதற்கும், நண்ணுதற்கும், பெறுதற்கும், நினைப்பதற்கும், மேவுதற்கும், அரியவன்; திருமாலும் பிரமனும் கூட அவனைக் காண்கிலார்; வானுளோராலும் அளப்பரிய வள்ளல் அவன்.

வஞ்சம் கொண்ட மனத்தினில் அவன் சேரான். அவன் யாராலும் அறிதற்கு அரியவன்.

## 10. அல்லல் அறுப்பார், இடர், கவலை, துயர், தீர்ப்பார் [82(12), (60)]

திருமால், பிரமன், முதலியோர் சிந்தனை செய்ய அவர்களுடைய தடுமாற்றத்தை இறைவர் அறுப்பார்; தம்மைத் துதிக்கும் அடியார்களின் துன்பத்தை ஒழிப்பார்; கஷ்டங்களையும் பிணிகளையும் களைவார்; கற்ற பெரும் புலவாணர்களின் துன்பத்தைப் பெரிதும் ஒழிப்பார்; காலையில் எழுந்து தொழுகின்ற அடியார்களின் கவலையைக் களைவார்; இடர்கள் வாராவண்ணம் காத்தருளுவார்; இடர்களை முதலில் வைப்பார், பின்னர்க் களைந்து அருளுவார்; இங்ஙனம் அல்லலை அவர் ஒழிப்பரேனும் உலகம் அவரைப் 'பேயனே' 'பித்தனே' என அழைக்கும்.

## 11. அழகர் [82(13)]

கற்றைச் சடைமீது கங்கையைத் தாங்கும் அழகர் இறைவர்; புலித்தோல்மீது ஆடு பாம்பை அரையிற் கட்டியுள்ள அழகர்; தூய திங்களைச் சூடியுள்ள அடையாளக்கார அழகர் அவர்.

## 12. அற்றவர்க் கருளல் [82(14)]

(யான், எனது என்னும் எண்ணம்) அற்றவர்களுக்கு அருள்புரிவார் இறைவர்.

## 13. அறம் [82(15)]

அறத்தின் இருப்பிடம் இறைவர்.

## 14. அறிதற்கு அரியர் [82(16)]

மறை வல்ல அந்தணர் இடைவிடாது பணிந்தும் அவரால் அறியப்படாத நிலையினர் இறைவர். தேவராலும், யாவராலும் அறியப்படாதவர் அவர். அவரை நினைந்து அழுத கண்ணினராய அடியவரால் அன்றிப் பிறரால் அறியப்படாதவர் அவர்.

## 15. அன்பு [82(17)]

தம்மை அடைந்தவர் மாட்டும், தம்மைத் தியானிப்பவர் மாட்டும் அன்பு பூண்டவர் இறைவர்.

## 16. ஆக்கல்—அழித்தல் [82(18)]

ஆக்குபவரும் இறைவரே; அழிப்பவரும் இறைவரே.

## 17. ஆண்—பெண்—அலி [82(19), (20)]

இறைவர் ஆணொடு பெண்ணும் உருவினர்; பிறத்தல் என்பது இல்லாமலே அவர் பெண், ஆண், அலியாகத் திகழ்வார்; எனினும் அவர் பெண்ணும் அல்லர், ஆணும் அல்லர்.

## 18. ஆதி, அந்தம் [82(21), (22)]

இறைவர் ஆதியும், அந்தமும் ஆனவர்; தோற்றம், ஈறு இவற்றுக்கு மூலபுருஷர்; முன்னமே முளைத்த இவர் முற்றும் பின்னராக விளங்குவார்; யாராலும் அளவு அறியாத ஆதியும் அந்தமும் கொண்டவர்.

## 19. ஆழி [82(24)]

கடல்போல அகன்று உயர்ந்தவர் இறைவர்.

## 20. இனியர் [82(32)]

எழு பிறப்பிலும் மனத்துக்கு இனியவர் இறைவர்; அவரைக் கண்டவர் அவரைக் காதலிப்பர், கற்ற கல்வியிலும் இனியர் அவர்; பெருமிதத்துடன் கண்ணை மூடிக் கொண்டு, சிந்தையில் திடத்துடன் தியானித்தால் அவரது இனிமை விளங்கும்; பண்ணிடைத் தமிழ்போலவும், பழத்தினிற் சுவைபோலவும் இனிமை தருவார்; அவர் பேச்சைப் பேசும்போதே பெரிதும் இனிமை தருவார்.

## 21. உரு [82(37)]

தீ உருக்கொண்டு, அணு அளவினராய், ஊனுடை உடலில் ஒடுங்கிப் புகுந்து பரந்துள்ளார் இறைவர்.

## 22. உள்ளவை [82(40)]

**பெருமானிடத்திற் காணக் கிடைக்கும் பொருள்களாவன :**

எருக்கு, கொன்றை, நாகம், பாரிடங்கள் (பூத வகையினர்), புலித்தோல், பூதங்கள், பேய்கள், முயலகன், வெண்டலை.

## 23. எல்லாம் ஆனவர் [82(45)]

மேகமாய் நின்று, ஊர்வனவும், நிற்பனவும் தாமாகி, ஊழிகளும் தாமாகிக், கடலாகி, ஐம்பூதங்களாய், விளங்குபவர் இறைவர். எல்லா இடங்களிலும், எல்லாப் பொழுதிலும், எல்லா உரைகளிலும் அவர் கலந்துள்ளார் ; எல்லாப் பொருள்களும் தாமே ஆனவர்.

## 24. எளியர்—அணியர் [82(52)]

அடியார்க்கும், எப்போதும் பணிபவர்க்கும், அகந்தை அற்றவர்க்கும், தம்மைக் காண விரும்புவோர்க்கும், தம்மை நினைத்துக் கண்ணீர் மல்குபவர்க்கும், சித்தம் தெளிந்தவர்க்கும், நல்லவர்க்கும் இறைவர் எளியர் ; சிந்திப்பவர்க்கு நெல்லிக்கனிபோலத் திகழ்வர்.

## 25. ஓசை, ஒலி [82(56)]

நாதம் மிகுந்த ஓசையாகவும், வண்டமிழ் வல்ல இசைவாணர்களின் ஏழ் இசை, ஏழ் நரம்பின் ஓசையாகவும் பெருமான் விளங்குவார்.

## 26. கண், கண்மணி [82(63), (64)]

ஏழுலகத்து உயிர்களுக்கும், காண விரும்புபவர்க்கும் இறைவன் கண்ணுவர் ; கண்மணிக்கு ஒப்பாவார்.

## 27. கருணை—அருள்பாலித்தல் [82(67)]

அருமையரின (தேவாரப்) புகழ்ப் பாக்களைச் சொன்ன (ஞானசம்பந்தருக்கு) அருள்புரிந்தவர் பெருமான் ; அவர் அருள்பெருகு கோலத்தார் ; அடியார்கள் சொன்னவா

றறிவார்; துன்புறும்போது அருள்பாலிப்பர்; ஆபத்து வேளை யில் உதவுவார்; பச்சிலை கொண்டு அன்புடன் ஏத்துபவர் தம் பிறவியை ஒழிப்பார்; அன்பு இல்லாவிட்டாலும் 'எம் பெருமான்' என்று எப்போதும் அழைப்போர்க்கு அருள் புரிவார்; அன்புகொண்டவர்கள் யாராயிருந்தாலும் அவர்க்கு அருள்புரிவார். இல்லை என்னாது யாவருக்கும் அருள் புரிவர்; தேவர்கள், இருடிகள், மன்னர்—என்னக் கணக்கி லாதவர்க்கு அவரவர் தம் விருப்பப்படியே அருள்தரும் புகலிடமாக விளங்குவார்; தம்மாட்டு நெஞ்சம் கலந்தவர்க்கு அருள்புரியும் கற்பக விருக்ஷம் அவர். கள்ள மொழிகளைப் பேசிக் குற்றங்களே செய்தாலும், அந்தக் குறைகளைக் குணமாகக் கொள்வார் அவர். காலையில் எழுந்து தம்மைத் தொழுபவர்களின் கவலைகளைக் களைவார்; தருமராஜாவின் தமர்கள் (ஆள்கள்) நம்மைச் செக்கில் இடும்போது அவர் களைத் தடுத்து நம்மை ஆட்கொள்வார்; தம்மை நினைக்கும் படியான நினைப்பை உதவுவார்; தம்மைத் தொழுபவர்களின் துயரைத் தீர்ப்பார்; நம்பினார்க்கு அருள்பாலிப்பார்; பழிக்கு ஆளாம்படி வந்த வார்த்தைகள், வரப்போகின்ற வார்த்தைகள் இவை வாராமே தவிர்த்து உதவிபுரிவார்; பக்தர்களுக்கு அருள்புரியும் பண்பினர் அவர்; அன்புடன் பலரை ஆட்கொள்பவர்; பிழையிற் படாவண்ணம் அருள் புரிபவர்; பிழைகளைப் பொறுப்பவர்; அடியார்தம் பீடை தீர உதவும் பேரருளாளர்; பொய்ம்மை மனத்துடன் தம்மைப் புகழ்ந்தாலும் அதையும் பொருளாக ஏற்றுக் கொள்பவர்; பொன்னையும் மெய்ப்பொருளையும் வழங்கு பவர்; போகத்தையும் திருவையும் (முத்திச் செல்வத்தையும்) கூட்டி வைப்பவர்; மாளா நாள் அளிப்பவர்; நரகத்தில் அழுந்தவிடாதவர்; மெய்ந்நெறியைக் காட்டுபவர்; தாமே வந்து நம்மொடு குலாவி வானுக்கு வழிகாட்டுபவர்; உயர் நெறியைக் காட்டுபவர்; நினைத்த வரங்களைத் தருபவர்; அவர் திருவடிகளை விரும்பி நினைக்க, வினைகளைச் சிதற வைப்பவர்; வினைக்கடலில் தத்தளிக்கும் உயிர்கள்மீது மிக இரங்கி, வீடுபேற்றின்பத்தைப் பாலிப்பவர்; "மழை யில்லை, பெருமானே! உனக்கு நிலம் தருவோம்; எங்களைக்

காத்தருளுக" என்று வேண்டினபோது, விடாமழையைத் தந்து, அதனுல் உண்டான சேதத்தைத் தவிர்க்க மீண்டும் பன்னிரு வேலி கொண்டவர்; மதியையும் பாம்பையும் (பகை தீர்த்து) ஒருசேர வைத்துள்ள கருணையாளர்; வினைக்கடலில் தடுமாறும் உயிர்மீது இரங்கி அருள்புரிந்து வீடுபேற்றின்ப ஆக்கநிலையைத் தருபவர்.

## 28. கொள்கை [82(83)]

கள்ள மொழிகளைப் பேசிக் குற்றமான செய்கைகளைச் செய்யினும் அவைதமைக் குணமெனக் கொள்ளும் கொள்கை கொண்டவர் பெருமான்; ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நாளைப்போவார், மூர்க்க நாயனுர், சாக்கிய நாயனுர், சிலந்தி, கண்ணப்பர்—ஆகிய இவர்கள் குற்றம் செய்யினும் அதைக் குணமாகக் கொண்ட கொள்கையினர். தேவிக்குத் தமது ஆகத்தில் ஒரு கூறு அளித்த கொள்கையாளர்.

## 29. சீலம் [82(89)]

தேவர்கள் தொழுதேத்தும் சீலம் பெரிதும் உடையவர் பெருமான்; எழுந்த விஷத்தைக் கண்டு, அஞ்சி ஓடின தேவர்களுக்கு அருள்புரிய, அந்த விஷத்தைத் தாம் உண்டு தமது கண்டத்தே அதை அடக்கிவைத்த பித்தர் என்று சொலத்தக்க சீலத்தினர்; பெருமானுடைய சீலமும் குணமும் சிந்தித்து வியக்கத் தக்கன.

## 30. செய்கை [82(93)]

பெருமானுடைய செய்கை எல்லாம் யார்க்கும் விளங்காதன; தக்கன் யாகத்தை அழித்துச் சூரியன் ஆதிய தேவர்களைத் தண்டித்த செய்கையை என்னென்பது! பெருமழையைத் தந்தும் அதைத் தவிர்த்தும் பன்னிரு வேலிகொண்ட திருவிளையாடலைப் புரிந்தனர் பெருமான்; வெறுக்கத்தக்க செய்கைகளைச் செய்து வினைக்கேடான பல செருக்குப் பேச்சுக்களைப் பேசித் திரிவார் அவர் (பலி வேண்டிச் செல்லும்போது.)

## 31. செல்வம் [82(94)]

பெருமான் நிறைசெல்வர்; வறுமை அறியாதவர்; இறந் தோரது வெண்டலையிற் பலிகொள்வதுதான் அவருடைய செல்வம், அவரே நமது செல்வம்.

## 32. சொல், பொருள், எழுத்து ஆவர் [82(98)]

எழுத்து, சொல், பொருள் எல்லாவற்றையும் முன் கண்டவர் பெருமான்; சொல்லுவார் சொல்லின் பொருள் அவர்; சொல்லும் பொருளுமாய் நிற்கும் நம்பி அவர்; சொற்பொருளை விளக்கும் சோதி அவர்; சொற்பொருள் அமைய நான்மறையை ஓதினவர்; திருவருளை உணர்ந்தவர் தம் சொற்பதங்களில் அமைந்தவர்.

## 33. தன்மை [82(104)]

அடியார்களின் குடும்பச் செல்வர் அவர், ஒப்பிலி, எழுத்துக்கு உயிர்போல்வார், பயிர்க்குப் புயல் (மேகம்) போல்வார்; இன்ன தன்மையன் என்று அறியக்கூடாதவர்; மகிழ்வார், கோபிப்பார், அடக்குவார், அடிப்பார், சமணர் பால் வசவுணும் தன்மையர்; திருமாலாலும், பிரமனாலும், தமது தன்மை அறியப்படாதவர்; நல்ல மலர்களில் நன்கு பரிமளிப்பவர்; நம்மிற் கலந்து நம்மை ஆளும் தன்மையர்; வஞ்சகர்க்கு வஞ்சகர்; முத்தின் தன்மை வாய்ந்தவர்; அதாவது விடுதலை (முத்தி) தருபவர்; நாகம் - நாண், மலை - வில், தீயும் திருமாலும்-அம்பு எனக்கொண்டு திரிபுரத்தை எரித்த தன்மையர்; சூரியனாதி பெரிய தேவர்களிடத்தும், கணங்களிடத்தும், செவ்விய மலர்களிடத்தும் செம்மையாய் நின்று விளங்குபவர்.

## 34. திரிதல் [82(108)]

தொண்டர்கள் பாட, விண்ணோர்கள் ஏத்தப், பெருமான் திரிவர்; தோல் உடுத்துத் திரிவர்; செத்தார் தம் எலும் பணிந்து எருதேறி மூவுலகும் திரிவர்; மோக வாகனராய்த் திரிவர்; திரிந்து மாதர்களிடையே பொய் வஞ்சகப் பேச்சுக் கள் பேசியும், இடக்கர்ப் பேச்சுப் பேசியும், வெறுப்பனவே

செய்தும், தமது விருப்பப்படியே திரிவார்; இங்ஙனம் பல ஊர்களில் திரிதலால் அவருடைய மலரன்ன சேவடி நோவுமே (என அஞ்சுகின்றார் சுந்தரர்).

## 35. தொழில் [82(117)]

தொழுபவர்தம் துயர்களைத் தீர்த்தல் பெருமானுடைய தொழில்.

## 36. நெறி [82(129)]

[தலைப்பு 185-ம் பார்க்க]

அடியார்கள் பற்றும் செந்நெறி அவர்; தோடு காதில் அணிந்துள்ள தூநெறி உடையார் அவர்; நல்ல நெறியைக் காட்டுவிப்பவர்; நினைப்பவர் தம் தியான நெறிப்பொருள் அவர்; வானோர் அறியாத நெறியினர்; வானோர் அறியாத பலபல நெறிகளை முறை முறையே சுந்தரருக்குக் காட்டினவர்.

## 37. நோய், பிணி களைவார் [82(130)

அங்கத்து உறுநோய் அடியார்களைப் பீடியாவண்ணம் காப்பவர்; உற்ற நோயை இம்மையிலேயே ஒழிப்பவர்; கஷ்டங்களைக் களைபவர்; நம் பிணிகளைக் களையும் அரு மருந்து அவர்; ஏழ்பிறப்புக்கும் அருமருந்து அவர்; தோன்றாத் துணைவராய் நின்று நம் பிணிகளைக் களைபவர்; ஆசைகொண்டதால் வரும் கொடிய நோயைக் களைபவர்.

## 38. நோய் தருவார் [82(131)]

உருவம் ஒய்ந்துபோம்படி நோயைத் தருபவரும் அவரே.

## 39. பரிசு [82(141)]

ஏறுகந்தேறும் பரிசினர்; பூதங்கள் சூழவரும் பரிசினர்; பாடி ஆடும் பரிசினர்; இளைத்த வெண்பிறை யோடு இவர் பாம்பை உடன்வைப்பது நன்றோ!

## 40. பாவநாசர் [82(148)]

*பாவங்கள் நாசமதாக வேண்டி நினைத்துத் தொழப் படும் ஒண்சுடர்; பத்தராய்ப் பாவிப்பவர் தம் பாவமும் வினையும் போக விடுபவர்.*

## 41. பித்தர், பேயர் [82(149)]

*ஆயன சொல்லிப் போற்றுபவருடைய துன்பங்களை அறுப்பரேனும், எம்பெருமானைப் **பித்தன், பேயன்** என்பர்; பித்தரைப் போன்ற பெற்றியர்; விஷத்தை உண்டு கண்டத்தே வைத்த பித்தர் அவர்.*

## 42. பிறப்பு அறுப்பர் [82(150)]

*பந்தித்த வல்வினையின் பற்று அறும்படி பிறவிக் கடற் பரப்பைத் தவிர்ப்பவர்.*

## 43. பிறப்பு, இறப்பு, மூப்பு இலாதவர் [82(151)]

*பெருமான் பிறப்பு, இறப்பு, மூப்பு இலாதவர்.*

## 44. புகழ்—பேர் [82(152)]

*பெருமான் எல்லையிலாப் புகழ் வாய்ந்தவர்; பழி சேர்தல் இலாத புகழார்; மதகரியை உரித்த பேர்(புகழ்) கொண்டவர்; அழிதல் இலாத புகழ் வாய்ந்தவர்.*

## 45. பொருள் [82(160)]

*உள்ளத்தின் உள்ளே நின்ற ஒண்பொருள் பெருமான்; ஞானப்பொருள் அவர்; உலகங்களுக் கெல்லாம் ஒப்பற்ற ஊராய்த் திகழும் திருவாரூரில் வாழும் ஒண்பொருள் அவர்; கலைக்கெலாம் பொருள்; ஞானசம்பந்தப் பெருமானுக்கு மெய்ப்பொருளாகத் திகழ்ந்து திருவீழிமிழலையில் வீற்றிருப் பவர்; பொய்யராம் சமணர்க்குப் (பொய்ப்) பொருளாகத் திகழ்பவர்; மெய்யர்க்கு மெய்ப்பொருள் அவர்; அடியார்க்குப் பொன்னும் மெய்ப்பொருளும் தருபவர்.*

## 46. மௌனயோக நிலையினர் [82(185)]

சூரனுடைய கொடுமைக்கு ஆற்றாது தேவர்கள் செய்த முறையீட்டுக்குப் பெருமான் முதலில் உரை ஒன்றும் பேசாது மௌன யோகநிலையில் இருந்தார்.

## 47. விளக்கு [82(196)]

ஞானவிளக்கு அவர்; தூண்டா விளக்கின் சோதி அவர்; தமது பொய்யா நா அதனால் புகழ்பவர்களின் மனத்தின் உள்ளே மெய்யாக நின்று எரியும் விளக்குப் போன்றவர் பெருமான்.

## 48. வினைதீர்ப்பர் [82(197)]

தம்மை அடைந்தவர்களுடைய வினைகளை அறுப்பார் பெருமான்; உலகில் உள்ளவர்களின் வினைகளை அவர் தீர்ப்பார்; தம்மைத் தியானித்துக்கொண்டே இருந்தும், கிடந்தும், நடந்தும் 'அண்ணல்' எனப் போற்றுபவர்களின் வினைகளைக் களைவார்; தாக்கும் வினைகளை விரைவில் நீக்குவார்; தொழுபவரின் பழைய வினைகளை விலக்குவார்; நம்மை ஆழ்த்தும் வினைகள் பலவற்றை ஒழிப்பார்; பக்தராய் நினைந்து பணிபவர்களின் பாவத்தையும் வினைகளையும் போக்குவார்; பந்திக்கும் வல்வினைகளின் பற்றை விலக்குவித்துப் பிறவிக் கடலினின்றும் நம்மை மீட்பார்; நாள் தோறும் பரவிப் பாடுபவர்களின் வினைப்பற்றை விலக்குவார், தம்மை வலம்செய்து பணிபவரின் வல்வினைகளை ஒழிப்பார்; திருவாஞ்சியத்துப் பெருமான் தமது அடியாரை ஊழ்வினை நலியவிடார்.

## 49. பிற

அம்பரம் (ஞானாகாசம்) ஆனவர் இறைவர் [82(6)] அமைவு ஆனவர் [82(8)]; எல்லாம் ஆய்ந்தவர் [82(23)]; ஆனைபோல மனத்துக்கு இனியவர் [82(25)]; இடர் இல்லாதவர் [82(26)]; எல்லா இடங்களிலும் எல்லாக் காலத்தும் கலந்துள்ளவர் [82(27)]; இணையில்லாதவர் [82(28)]; அருந்தவ முனிவர்க்கு ஆலின்கீழ் அறம் போதித்த இயல்

பினர் [82(29)]; இளைப்பு அறியாதவர் [82(31)]; நமது உடலில் நின்றே உணர்பவர் [82(33)]; உத்தமர் [82(35)]; பேசும் பேச்சிற் கலந்துள்ளவர் [82(38)]; உயிர்களின் மூச்சாய் விளங்குபவர் [82(36)]; உலகாய்த் திகழ்பவர், ஏழுலகையும் ஆள்பவர், உலகுக்குத் தந்தையாய்த் திகழ்பவர், மண்ணும் விண்ணும் ஆனவர், உலகங்களை அளித்தவர் [82(39)]; உறவு இல்லாதவர், ஆயினும் எவர்க்கும் எதற்கும் உறவு பூண்டவர் [82(41)]; ஊன், உடல், உயிர் ஆனவர் [82(42)]; ஊனம் இலாதவர் [82(43)]; ஊனத்தைத் தீர்க்க வல்லவர் [82(44)]; எங்கும் உள்ளவர் [82(45)]; மேலான மதிப்புக்கு உரியவர் [82(46)]; ஆண்—பெண், சேய்மை—அண்மை, தண்மை—வெம்மை, பகல்—இரவு, முன்—பின், மெய்—பொய், விருத்தர்—பாலர் என்பன போன்ற எதிர்மொழிகளில் இடம் பெறுபவர் [82(47)]; எதிரிலி [82(48)]; எய்ப்பினில் வைப்பு [82(49, 203)]; எல்லாம் அறிந்தவர் [82(50)]; எழுத்து, சொல், பொருள் எல்லாம் கண்டவர் [82(51)]; ஏறு போல்பவர் [82(53)]; அடியர் கூட்டத்துக்கு அவரைச் சார்ந்த குடியாகவும், தமக்கு இணை இலாதவராயும், தமக்குத் தாமே நிகர் எனும் தகைமை வாய்ந்தவராகவும், இருளில் விளங்கும் ஒளியாகவும், கண்மணிக்கு ஒப்பானவராகவும் திகழ்பவர். பயிரை வளர்க்கும் மேகம் போன்றும், பண்ணிற் பொலியும் தமிழ் போன்றும், பழத்தின் சுவைபோன்றும், பெண் யானை உகக்கும் ஆண் யானை போன்றும், மெய்ம்மையுடன் புகழ்பவர்களின் மனத்தினுட் சுடர்விட்டெரியும் விளக்குப் போன்றும் அவர் விளங்குகின்றார் [82(54), (55)]; ஓங்காரத்து உருவாகி விளங்குகின்றார் [82(58)]; பகல்—இரவாகத் திகழ்கின்றார் [82(59)]; கற்கண்டு, கரும்பின் தெளிபோல உள்ளார் [82(61), (69)]; கடலானர், கழியானார், கலன் ஆனார், அவர் குணக்கடல் [82(62)]; தம்மைக் காதலித்து ஆட்செய வல்லாரை ஆண்டு, கதி அளிப்பவர் [82(65)]; மூவர் உருவும் தமதாம் மூலமுதற் கரு [82(66)]; ஏழுலகையும் கண்ணுய்க் காக்கும் கருத்தினர் [82(68)]; பல்கலைப் பொருளவர், கற்ற கல்வியிலும் இனியர் [82(70)];

பிடிக்குக் களிறுபோல்பவர் [82(71)]; பலர்க்கும் ஆதரவு ஆவர் பெருமான் [82(72)]; கற்பகக் கடல் அவர் [82(73)]; காணாத கண்களைக் காண வைப்பர் [82(74)]; கிறி பேசுவர் [82(76)]; அடியார்க்குக் குடும்ப உறவினர்போலத் திகழ்வர் [82(77)]; எண்குணத்தினர், ஒப்பரிய குணத்தினர், குணக் கடல், குணக்குன்று, குணமிலி, குற்றமிலாக் குணத்தினர் [82(78)]; குருமூர்த்தி [82(79)]; குறிப்பிலாதவர் [82(81)]; ஞானக்கொழுந்து, தேவர்குலக் கொழுந்து [82(82)]; 'பராபரர்' என்று பலரும் விரும்பும் அரசு [82(84)]; செந்நெறியினின்றும் விலகாது திருவடித் தியானம் செய்யும் அடியார்களுக்குச் சித்தியும் முத்தியும் தருபவர் [82(86)]; சிவகதியாய் விளங்குபவர் [82(87)]; உயரிய சீர்க்கு உரியவர் என்று ஓதப்பட்டவர் [82(88)]; தாய், தந்தை ஆதிய சுற்றத்தினருக்குத் தம்பிரான் [82(90)]; நம் ஆசைகளையும், அருவினைச் சுற்றத்தையும் ஒழித்து உதவு பவர் [82(91)]; தேவ கணங்களிடத்தும், நல்ல மலர்க ளிடத்தும் நன்கு விளங்குபவர் [82(92)]; செவியும், நாக்கும், கண்ணும் அவரே [82(95)]; இராவணனை அடர்த்துப் பின்னர் அவனது இன்னிசையைக் கேட்டு வாளும் நாளும் கொடுத்த நிறைகுணத்தினர் [82(96)]; சைவம் விளங்கும் செவ்வுருவத்தினர் [82(97)]; ஞான விளக்கொளி [82(99)]; உலகின் தந்தை, தத்துவன் அவர் [82(100)]; பண்நிறைந்த இனிய தமிழாகப் பொலிபவர், பண்ணிடையே விளங்கும் தமிழ்போன்ற இனிமை வாய்ந்தவர் [82(101)]; தலைவர் [82(102)]; தவஞ்செய்வோரின் குறிப்பொருள் [82(103)]; தனியர் என்று இகழத்தக்கவர் அல்லர் [82(105)]; பல வகையான உயிர்களுக்கெல்லாம் தாமே தாயும் தந்தையு மாய் விளங்கும் தலைவர் [82(106)]; தியானப்பொருள் அவர் [82(107)]; பிரமனுக்கும் மாலுக்கும் சிந்தித்தும் தெரிவரிய பெரிய திரு அவர், அடியார்களுக்குப் போகமும் செல்வமும் கூடும்படி அருள்புரிபவர் [82(109)]; திருத்த லாகாதவர் [82(110)]; தீர்த்தர் [82(111)]; துணையாவர் [82(112)]; துறையாவர் [82(113)]; கண், வாய், மேனி எல்லாம் தூயவர் [82(114)]; அடியார்களுடைய

உள்ளத்தில் தேன்—அமுதா ஊறும் தேசர் (ஒளியினர்) [82(115)]; உள்ளத்தில் ஊறும் தேன்; அங்கத்தில் (உடலில்) ஊறும் அமுது; தித்திக்கும் தேன், தெளிதேன், இனிப்புள்ள கரும்பினின்றும் ஊறும் செழுந்தேன், தியானிப்பவர்தம் மனத்தில் ஊறும் தேன் [82(116)]; மறையவர் [82(118); தோத்திரங்களைப் பெறுபவர் [82(119)]; தம்மை நண்ணினர்க்கும், பற்றினர்க்கும், வரித்தினர்க்கும் நல்லர் [82(120)]; நமது செல்வப் பொருளாய் நன்மை தரும் பரமன் அவர் [82(121)]; உணரும் நா அவர், சீகாமரப் பண் (நாதநாமக்கிரியை) பாட நாவில் ஊறும் பெருமான் அவர் [82(122)]; உலகில் உள்ள எல்லா உயிர்க்கும் தலைவர் அவர் [82(123)]; என்றும் நிலைத்திருப்பவர் [82(124)]; ஊர்வன, நிற்பன, நடப்பன எல்லாம் அவர் [82(125)]; குறைவிலா நிறைவு அவர் [82(126)]; தூய மறைப்பொருளாம் நீதி அவர், நீதி நிறைந்தவரிடத்தில் நிற்பவர் [82(127)]; சிறந்த குணத்தினர் [82(128)]; பகலும் கங்குலும் ஆய் நிற்பவர் [82(132)]; ஞாலமெலாவற்றையும் படைத்தவர், மாய ஆக்கையை ஆக்குவிப்பவர் [82(133), (173)]; பலிதேர்ந்து உண்ணும் பண்புடையவர் [82(134)]; பந்தத்தையும் பந்த விடுதலையையும் உண்டுபண்ணுபவர் [82(136), (199)]; எவைக்கும் பயனாய் வினையின்பயனாய் விளங்குபவர் [82 (137), (198)]; பரமாய பரஞ்சுடர் [82(139)]; திருமாலும் பிரமனும் அடிமுடி காண்பரிய பருமை வாய்ந்தவர் [82 (142)]; அங்கை நெல்லியின் பழத்திடை அமுது, பழத்தினிற் சுவை, கற்றுள்ள நற்கனி [82(143)]; பற்றினர்க்குப் பற்றாவார், பற்று அற்றவர், பற்றினோடு (வினைச்) சுற்றத்தை ஒழிப்பவர் [82(144 - 146)]; பாடுவார் பசிதீர்ப்பவர், பாடல் பெற்றால் மகிழ்பவர், பெருவிடில் இகழ்வாரானால் இவரை விட்டால் பிரானார் வேறு எவரும் இலரோ! [82 (147)]; புண்ணியர் [82(153)], பயிர்க்குப் புயல் (மேகம்) போன்றவர் [82(154)]; ஐம்புலன்களையும் குமைத்து வென்றவர் [82(155)]; புனிதர் [82(156)]; உலகம் தொழும் உத்தமர், பெருமை வாய்ந்தவர், பிரமன்—திருமால்

இருவரும் நினைந்து இனிதேத்தப் பெற்ற பெருமையர் [82(157)]; மெய்யிலாதவர்க்குப் பொய்யர் [82(159)]; ஒப்பிலாத செம்பொன் [82(161)]; கடற்கரைக்'கோடி'யில் மோடி (காடுகாளைப்) போகம்கொண்டவர், போகத்தையும் திருவையும் அடியார்க்குக் கூட்டிவைப்பவர் [82(162)]; தெரிவரிய திருமணி, மாசிலாமணி [82(163)]; மனத்துள் மதியாய் விளங்குபவர் [82(164)]; ஆருயிர்க்கெல்லாம் அருமருந்து, தோன்றாத் துணைவராய் நின்று நம் பிணிகளைக் களையும் மலை மருந்து, வலஞ்செய்து வணங்குபவர்களுடைய வல்வினை தீர்க்கும் மருந்து, வழித்துணை மருந்து [82(165)]; நின்மல மூர்த்தி [82(166)]; அரும்பு, மலர், மலர்வாசம் அவர் [82(167)]; குணக்குன்று, தீதிலா மலை, பனிமால்வரை, கனகமால்வரை போல்பவர், வரைஏழு உடைய தலைவர் [82(168)]; அருமறை, ஆறங்கம் ஓதும் எல்லைப்பொருள், நான்மறைகளாயின சோதி [82(169)]; மனத்துளே ஞானாகாரமாய் இருப்பவர், மாயம் ஆய மனத்தை அழிப்பவர் [82(170), (173)]; மாணிக்கம் போல்பவர் [82(171)]; அன்புடையவர் [82(172)]; அஞ்ஞானத்தை நீக்கும் மெய்ப்பொருள் [82(174)]; மின்னின் உருவத்தினர், மின்னுய்த் தீ என நிற்பவர் [82(175)]; முத்தியைத் தரவல்ல உமைபங்கர் [82(176)]; முத்தின் தொத்து (திரள்) [82(177)]; முதலாய பிரான் [82(178)]; மூவரின் மிக்க மூர்த்தி, மூவரில் முதல்வர்; மூவர், இருவர், முதல்வர் எல்லாம் அவரே; மூவர் உருவும் தமது உருவாம் மூல முதற் கரு [82(179), (180)]; மெய்யர், மெய்யிலாதவர்க்குப் பொய்யர் [82(181)]; மழையாய்ப் பொழிபவர், மேக வாகனர் [82(182)]; மேலாய மேலார் [82(183)]; நடுநிலையினர் [82(184)]; வஞ்சகர்க்கு வஞ்சகர் [82(186)]; வயிரம் போன்ற அருமையர் [82(187)]; நிரம்ப வரம் தரும் பெருமான் [82(188); வறுமையாளர் அல்லர் [82(189)]; வானுக்கு உரியவர் [82(190)]; உள்ளம் கலந்த பின் விடுதற்கு அரியவர் [82(191)]; மாணிக்கம் முளைத்தெழுந்த வித்து [82(192)]; மதியாகவும், விதியாகவும் வருபவர், அவரே மேலைவிதி, விதி முதல் [82(193)];

விருத்தர் [82(194)]; விருப்பம் இலாதவர் [82(195)]; வெயிலாய் விளங்கிக் காற்றாக வீசுபவர் [82(200)]; வெள்ளடை (பராகாசப் பொருள்) அவர் [82(201)]; புதுமையர் [82(202)].

## 72. சிவபிரான் திருவுருவம் [83]

(1) அரை

*கச்சாக அரவு சூழ்ந்தது.*

(2) கண்

*அழல் கொண்டது; கண்ணின்மேல் ஒரு கண்; காமனைக் காய்ந்தது ஒரு கண்; செங்கண்; ஞானக்கண்; நெற்றியில் ஒற்றைக்கண்; பெரிய கண் மூன்று.*

(3) கண்டம்

*கறுத்த கண்டம்; இருள் நிறத்தது; விடம் கொண்டது; கருநீலமணி போன்றது; கருமேகம் போன்றது; நீல நிறத்தது.*

(4) கரம்

*(பிரம)கபாலம் ஏந்தியது; எரி ஏந்தியது; வேகமாய் வீசி ஆடுவது; யானையை உரித்தது; மலைவில்லை ஏந்தியது; மான், மழு ஏந்தியது; திரிபுரத்தை எரித்தது; முன்கையில் செங்கண் அரவம் ஆடும்; கரங்கள் எட்டு.*

(5) காது

*கனகக் குழை, சங்க வெண்குழை, மகரக்குழை, சுருள் வெண்தோடு, குண்டலம் திகழ்வது.*

(6) சென்னி

*அண்டமுகட்டைக் கடந்தது; அழகானது; சடை கொண்டது; பிறை சூடியது; மலர் மணப்பது; திங்கள், கொன்றை, கங்கை விளங்குவது.*

**(7) திருவடி**

கழல் பூண்டது; அழகியது; பூண்டருளுவது; எரியில் மலர்ந்த பொற்றாமரை மலர் போன்றது; செம்பவளம் போன்றது; காலனைக் கோபித்தது; கேடிலாதது; வெற்றி கொண்டது; நிருத்தம் செய்வது; மடித்தாடுவது; திருமாலும் பிரமனும் தியானிப்பது; திருவடியே சிவலோகம்; பிரானது திருவடியே தமக்குத் "திரு, மெய்ப் பொருள், செல்வம்" என்கின்றார் சுந்தரர்.

**(8) திருவுருவம்**

பிரானது திருவுருவம் அழகு வாய்ந்தது; ஓங்கார வடிவினது; குன்றி (குண்டுமணி) போன்றது; செம்பவளம் போன்றது; செம்பொன் போன்றது; மாணிக்க மலை போன்றது; தீப்போன்றது; மின் ஒத்தது; செவ்வானத்து இளஞாயிறு போன்றது; சைவம் விளங்கும் செம்மையது; திருமாலின் உருவமும், பிரமனது உருவமும் கலந்தது; தேவி உடன் விளங்கும் (அர்த்தநாரீச உருவச்) சிறப்பினது; பல உருவங்களும் தமது உருவமே ஆக விளங்குவது.

**(9) தோள்**

மற்போருக்கு உரிய திண்டோள்கள்; எட்டுத் தோள்கள்: மலைபோல்வன.

**(10) தோற்றம்**

(உரித்துத் துண்டமாக்கப்பட்ட) யானை உரி, புலியுரியும், மார்பில் விளங்கும் திருநீறும், உமை சேர் (கொங்கைச்) சுவடும் விளங்கும் தோற்றம் பிரானது தோற்றம்.

**(11) நா**

வேதம் பிறந்த நா.

**(12 நுதல்**

ஒற்றைத் தனிக் கண்ணுடன், திருநீற்றுடன் விளங்குவது.

(13) மார்பு

இழை கொண்ட வெண்ணூல் புரளுவது; பன்றியின் பெரிய எயிறு, ஆமை (ஓடு), திருநீறு, எலும்பு இவை தமைத் தாங்கி விளங்குவது; தீ அன்ன ஒளியுடன் கூடியது; தொளைபட்ட எலும்பு மாலையுடன் கொன்றைமாலை, யானைத் தோல் இவைதமை அணிந்தது; பவளமலை போல விளங்குவது; நரைமயிர் கலந்த மயிர்ப்பூணூல் அணிந் துள்ளது; உமைசேர் (கொங்கைச்) சுவடு பொலிவது.

(14) முடி

(கங்கை) ஆறு விளங்குவது; பிறை சூடியது; நறு மணம் கொண்டது.

(15) மெய்

மெய்யெலாம் திருநீறு பூசப்பட்டுப் பொலிவது. யானையின் ஈர உரியைப் போர்த்தது.

(16) மேனி

அந்திவானம் போன்றது; செந்நிறத்தது; தீயின் நிறத்தது; பவள நிறத்தது; தாமரையின் தன்மை கொண்டது; வெள்ளைத் திருநீறு விளங்குவது; பெண்பாகம் பூண்டது; பொன்போற் பொலிவது; முருக்கமலர் போன்ற செந்நிறம் திகழ்வது.

(17) வடிவு

முடிமேல் மதியும் அரவும் ஒன்றுகூடித் தங்கும் வடிவு; (ஆயினும்) வடிவே இலாதவர் பெருமான்.

(18) வாய்

தூயது.

(19) விரல்

அரக்கன் (ராவணனை) மலைக்கீழ் நசுங்க அடர்த்தத் ஒரு திருமெல்விரல்.

## 73. சிவபிரான் - நஞ்சுண்டது [84]

அழகிய பெரிய மலையை மத்தாக நாட்டி, அந்த மத்தை விஷப்பாம்பாம் கயிற்றுற் சுற்றி, வானவரும், தானவரும் ஒன்றுகூடிக் கடைந்தனர். அங்ஙனம் கடையக், கரிய, பெரிய, காளகூட விஷம் எழுந்தது; அதைக் கண்ட தேவர்கள் இரிந்து ஓடினர்; பெருமானிடம் சரண் புகுந்தனர்; திருமாலும், பிரமனும், இந்திரனும் மந்திரம் ஓதிப் பெருமானை வணங்கினர். தேவர்களாம் வஞ்சகர்கள் தங்களை அந்த எரிவிஷம் அடாதிருக்கவேண்டி 'நீ உண்க' எனப் பெருமானை அடிபரவி வேண்டினர். அந்த நஞ்சு உலகையே அழிக்கும் எனத் தெரிந்து, யாவரும் உய்ய, அதை அமுதாகத், தடை ஒன்றும் கூறுது உண்டனர் 'பேதைப் பெருமான்'. தேவி அஞ்சினள்; பெருமான் அந்த நஞ்சைத் தமது கண்டத்தே நிறுத்தி வைத்தனர்; கண்டம் கறுத்தது; ஏனே அங்ஙனம் கண்டத்தில் விஷத்தை நிறுத்தினர். விஷத்தை உண்டும் பெருமான் இறவாது என்றும் இருக்கின்றனர்; அங்ஙனம் தாம் நஞ்சை உண்டு தேவர்களுக்கு அமுதை ஈந்து அருள்புரிந்தார் பெருமான்.

நீர் உண்ட விஷத்தின் கொடுமை உம்மை உமது இடத்தில் (கயிலையில்) இருக்க ஒட்டாத காரணத்தாலோ, பெருமானே! நீர் இங்கே கடற்கரை நாகையில் (நாக பட்டினத்தில்) வந்து அமர்ந்துள்ளீர்—என்று பெருமானுடன் அசதி ஆடுகின்றார் சுந்தரர்.

பெருமான் உண்ட நஞ்சு—"எரியும் நஞ்சம், எழுகடல் நஞ்சு, கருநஞ்சு, காளகூடம், நீலமால் விடம், பெரிய நஞ்சு, மொய்த்தெழுந்த வேலைவிடம்'' என விளக்கப்பட்டுளது.

## 74. சிவபிரான் நடம் [85]

கூத்தன், கூத்துடையான், நட்டம் ஆடி, நடமாடி எனச் சிவபிரான் குறிக்கப்பட்டுள்ளார். அவரது கால் நிருத்தஞ் செய் கால்; அவரது திருக்கரத்தில் தமருகம், எரி அகல், கரிய பாம்பு உள.

அவர் அண்டத்தின் அப்புறத்தும் ஆடுவர்; இரவில், நள்ளிருளில் ஆடுவர்; இடுகாட்டில், புறங்காட்டில், சுடலையில் (சுடுகாட்டில்) ஆடுவர்; எரிதலைப்பேய் புடைசூழ ஆடுவர்; காடு அரங்காக, கைகள் எட்டுடனே, லயம் (சுருதி), சதி (தாள ஒத்து) பிழைபடாதவண்ணம் ஆடுவர்; அவியா அனல் ஏந்தி இரவில் நரி ஊளையிடும் புறங்காட்டில் ஆடுவர்; சூழ்முடைய எட்டுத் தோள்களை வீசி ஆடுவர்; எரிகொண்டு ஆடுவர்; எலும்பு மாலையும், எருக்கு மாலையும் அணிந்து ஆடுவர்; காலில் உள்ள கழல் ஒலிக்கக், குழை அசையச், சடை தாழச், சடை எட்டும் சுழல, திருமாலும், பிரமனும் அறியா வகையில் ஆடுவர்; தம்மைக் காதலுடன் கருதும் தொண்டர்கள் ஏவல் செய்ய, துள்ளிப்பாட, ஆடுவர்; நீறணிந்து ஆடுவர்; பாடி ஆடுவர்; புலித்தோல் உடைமேல் பாம்பு ஒன்றைக் கச்சாகக் கட்டி நின்று இடுகாட்டில் ஆடுவர்; தேவி காணத், தேவி மகிழத், தேவி உடன் ஆட, மயானத்தில் பூதங்கள் தம்மைச் சூழ ஆடுவர்; பிறையும், கங்கையும் சூடி, உலகேத்தப், பூதங்கள் பாடப், பறை முழக்க, நள்ளிருளில் நட்டம் ஆடுவர்; துட்டரான பேய்கள் சூழப், பேய்க்கணம் பாட, பிணம் இடுகாட்டில் அப் பேய்களோடும், நள்ளிருளில் ஆடுவர்; தக்கை (பறை வகை), தண்ணுமை (மத்தளம்), தாளம், வீணை, தகுணிச்சம் (ஒருவகைப் பறை), கிணை (உடுக்கை), சல்லரி (கைத் தாளம்), கொக்கரை (ஒருவகை வாத்தியம்), குடமுழவு (முழவு வகை) இவைகளின் இசைகூடப் பாடி ஆடுவர்; பறையும் குழலும் பாடலுக்கு ஒக்க ஒலிக்க, முதுகாட்டில் ஆடுவர்; திரிபுராதிகள் மூவரில் ஒருவன் மணிமுழா முழக்கக், கரிகாட்டில் தேவி கண்டு மகிழ ஆடுவர்; கொதித்த கோபத்துடன் வந்த காளியின் கோபம் தணிய ஆடினர்.

2. பிரான் ஆடும் ஆடல்களில் புயங்க நடம், கொடுகொட்டி ஆடல், பாண்டரங்க நடம் கூறப்பட்டுள.

3. பிரான் ஆடல்புரிந்த தலங்கள்: ஆரூர், தில்லை அம்பலம், திருப்பனையூர், மேலைத்தில்லை (மேலை-மேற்குச் சிதம்பரம்) எனப்படும் பேரூர்.

4. வீரச்செயல் ஒன்று செய்தபின் ஆடும் ஆடல்களுள் - காமனை எரித்தபின் ஆடிய ஆடல் கூறப்பட்டுளது.

5. பிரானது நடம் பஞ்சகிருத்தியப் பொருளுடன் கூடியது; அவர் திருவுருவத்தில் ஐந்தெழுத்தின் (பஞ்சாட்சரத்தின்) பொருள் அமைந்துளது.

## 75. சிவபிரான் நாமமும், நாம விசேடமும் [86, 87]

நம்பி ஆரூரரின் திருப்பதிகங்களிற் போந்துள்ள சிவபிரானுடைய திருநாமங்களின் இலக்கம் பின்வருமாறு :

### 1. பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் திருநாமங்கள் [321]

[**உதாரணம்:** அட்டமூர்த்தி; ஆதி; இறை; உம்பர் பிரான்; ஊனமிலி; எம்மான்; ஐயன்; ஒருவன்; கடவுள், குற்றமில்லி; சிட்டன்; தத்துவன்; தம்பிரான்; நாதன்; பரன்; முத்தன்; வள்ளல்.]

### 2. சிறப்பாகச் சிவபிரானையே குறிக்கும் திருநாமங்கள் [392]

| | |
|---|---|
| அவருடைய அங்கங்களைக் குறிப்பன | 63 |
| அவர் அணிவனவற்றுற் போந்தன | 39 |
| அவருடைய சடையைக் குறிப்பன | 42 |
| அவருடைய தேவியைக் குறிப்பன | 27 |
| அவருடைய விடை வாகனத்தைக் குறிப்பன. | 38 |
| ஆடல், உடை, உறைவிடம், படை, முதலியன | 183 |
| | 392 |

**உதாரணம் :**

(அங்கம்) கண்மேலோர் கண்ணன், முக்கண்ணினன், நீலகண்டர், மணிமிடற்றன்.

(அணிவன) குழைகொள்காதன், கங்காளன், விடநாகன்;

(சடை) பவளச் சடையான், பின்சடைப் பிஞ்ஞகன்;
(தேவி) ஏழைபாகன், பெண்பாதி;
(விடைவாகனம்) ஏறமர்வான், பைங்கண் ஏற்றன்;
(ஆடல்) ஆடவல்லார், கூத்தன்;
(உடை) அடுபுலி ஆடையன்;
(உறைவிடம்) ஆரூரன், ஆலங்காடன்;
(படை) சூலப்படையன், மழுவாளன்.

ஆகத் திருநாமங்கள் பொதுவும், சிறப்பும் 321+392=713.

## 3. இறைவனை விளிக்கும் சொற்களும், சொற்றொடர்களும் [602]

| | | |
|---|---|---|
| (i) | சிறியன | 192 |
| (ii) | பெரியன | 334 |
| (iii) | தலங்களைப் பற்றியவை | 76 |
| | | 602 |

[**உதாரணம்:** (i) அங்கணா; அடிகளோ; ஐயனே; சிவனே; புலனே; புண்ணியா.

(ii) அருமறைப் பொருளே; கங்கைச் சடையீர்; கையார் ஆடரவா; சாமவேதம் ஓதீ; திப்பிய மூர்த்தீ; தேவர் சிங்கமே; புரிபுன் சடையீரே; விட மிடற்றனே.

(iii) அண்ணாமலையானே; கச்சூராய்; காளத்தியாய்; குற்றாலா; பைஞ்ஞீலியீர்; வெண்காடனீரே.

## 4. நாம விசேடம்

உலகோர் மகிழ்ந்துகூறித் தொழ எம்பெருமான் பேரும் ஓராயிரம் உடையார்; பெருமானின் திருநாமங்களைத்

தவருமல் கற்பவர் நற்கதி அடைவர்; ஆதலால், அத் திருநாமங்களைக் கூறி அவரை ஏத்துதல் நமது கடமை யாகும்; அங்ஙனம் இறைவன் திருநாமங்களை அன்புடன் பரவி, வழிபட்டு, அவரது திறத்தை நினைந்துருகிப் பேரன் புடன் அவரது அடியிணையைச் சிந்திப்பர் நம்பியாரூரர்.

## 76. சிவபிரான்—நிறம் [88]

சிவபெருமானுடைய நிறம்—செக்கர்வான், செம் பவளம், (செம்)பொன், மாணிக்கம் — இவைகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. தேவியின் திருநிறமும் இவர் நிறத்துடன் கலந்துள்ளது.

## 77. சிவபிரான்—படை [89]

### சிவபிரானுக்கு உரிய—சிவபிரான் சம்பந்தப்பட்ட—படைகள்

ஆழி, கட்டங்கம் (மழுவகை), சூலம், தண்டு, பாசுபதம், மழு.

இவற்றுள்,

(1) ஆழி

சலந்தரனை இருபிளவாக்கிய சுடராழி; பண்ணற்கு அரிய ஆழி; பொருதற்கு உற்ற சக்தியைக் கொண்டது.

(2) சூலம்

ஒளிவீசுவது; இரும்பால் ஆயது; மூ இலைய வேலாக விளங்குவது; கூர்மை கொண்டது; படைகளுள் தலையாயது; கொல்ல வல்லது.

(3) பாசுபதம்

இது அருச்சுனனுக்குப் பெருமான் அளித்தது.

(4) மழு

இலைபோன்றது; எரிவீசுவது; கூர் முனையது; கொடுமை வாய்ந்தது; திண்ணியது; தெய்வக் கனல் கொண்டது; வெண்ணிறத்தது; வெல்ல வல்லது; பொங்கி எழும் ஒளி வாய்ந்தது.

(5) வில்

பெருமான் மெல்கிய (லேசான)வில் தொழிலான். (எத்தகைய) வில்லையும் லேசாக எடுத்து உபயோகிக்க வல்லவன்.

## 78. சிவபிரான்—பராக்கிரமம்—சிவசரிதம் [90]

(1) ஆரம் பூண்டது

உறையூர்ச் சோழன் காவிரியாற்றில் நழுவவிட்ட ஆரத்தை, அவன் வேண்டுகோளுக்கு இணங்கி, - திருமஞ்சனக் குட நீரில் அதை வரச்செய்து முழுக்காட்டின போது அது தம் மீது விழும்படி ஏற்றனர் திருஆனைக்கா அண்ணல்.

(2) கங்கையைச் சூடினர்

பகீரதன் வேண்ட ஆர்த்து வந்த கங்கையைச் சடை ஒன்றிலே தங்கச் செய்தார் பெருமான்.

(3) கரியுரி, சிங்க உரி, புலி உரி போர்த்தது

தவத்தினர் செய்த வேள்வியில் எழுந்த சிங்கமும், புலியும், யானையும் அலறப் போர்புரிந்து பிளந்து அவற்றின் தோல்களைப் புனைந்தனர் இறைவர்.

(4) திருமாலுக்குச் சக்கரம் அளித்தது

சலந்தரனைப் பிளந்த சக்கரத்தைப் பெறத் திருமால் ஆயிரம் பூக்கொண்டு பூசித்தனர்; ஒரு பூ குறையத் தமது கண்ணையே இடந்து இட்டுப் பூசித்தனர். அங்ஙனம் பூசித்த திருமாலுக்கு அந்தச் சக்கரத்தை இறைவன் அளித்தனர்.

(5) தொண்டைமானுக்கு அருளியது

தான் ஏறிவந்த யானை முல்லைக்கொடியிற் சிக்கிக் கொண்டு நடக்கமுடியாததை அறிந்த தொண்டைமான் அந்தக் கொடியை வாளால் வெட்ட, அங்கு ரத்தம் பரவக் கண்டு, அச்சம் உற்று வருந்தி, அந்த வாளால் தன்னையே வெட்டிக்கொள்ள முயன்றபோது, இறைவன் வெளிப் பட்டுத் தொண்டைமானுக்கு அருள்புரிந்தார். (அந்த வெட்டு அவர் திருமுடியில் ஒரு மணிபோல விளங்குகின்றது; தமது நந்தியைத் தொண்டைமானுக்கு உதவிசெய்ய அனுப்பி அவன் போரில் வெல்லும்படி அருளினர் பெருமான்.)

(6) நரசிங்கத்தை அடக்கியது

இரணியனைச் சங்கரித்து அகங்காரம் பூண்ட நரசிங்கத்தை அட்டனர் பெருமான். (அந்தச் சிங்க உரியைப் போர்த்தனர்.)

## 79. சிவபிரான் பலி ஏற்பது; சிவபிரான் உணவு [91]

### 1. உணவு [91(1)]

**சிறப்பாக**

தூயதான நெய்கொண்டு வட்டவடிவான (ஓம) குண்டத்தில் எரிவளர்த்து ஒம்பி மறை பயின்றவர்கள் அட்ட (சமைத்த) உணவை உண்பர் பெருமான்.

பொதுவாக

ஊரிடு பிச்சையல்லால் உண்பதற்கு அவருக்கு வேறு உணவு இல்லை.

### 2. பலிக்குச் செல்லும் கோலம் [91(2)]

படைகள் ஏந்திப், பூதங்கள் தம் பாதங்களைப் போற்றிப் பாட, மாதும் தாமும் பலிவேண்டிக், கழலும் சிலம்பும் ஒலிக்கச் செல்வர்; கோவண உடையுடன், சடைகள்

தாழ, ஆடிப்பாடி, விடை ஏறிச் செல்வர்; ஆடி அசைந்து அடியாரும் தாமுமாகச் செல்வர்; ஊர் ஊராகச் செல்வர்; நல்ல உச்சிப்போதில், மூளியான வெண்டலையைப்—பிரம கபாலத்தைக்—கையில் ஏந்தித், தொண்டர்கள் பாட, விண்ணோர்கள் ஏத்தக், கணங்கள் சூழப், பலவகையான கூத்துடன் தெருவிலும், சந்திகளிலும், மனைகள்தோறும், மனைவாயில் தோறும் செல்வர்; பலிவேண்டிப் பகலெலாம் திரிவர்; எத்திசையும் திரிவர்; விடங்கராகத் திரிவர்; பண் சீகாமரம் (ராகம் - நாதநாமக்கிரியை) பாடிச் செல்வர்; அரையிற் கச்சாகப் பாம்பணிந்தும், முன்கையிற் பாம்பு ஒன்றைப் பிடித்தும் செல்வர்; யானைத் தோலைப் போர்த்துப், பொல்லாத வேடம் பூண்டு, எல்லாரும் காண, இச்சகம் பேசிச் செல்வர்.

## 3.(i) மடவாரிடம் பலிதேர்தல்

மடவார் இடும் பலியைப் பெற, விடங்க வேடம் (அழகிய நக்க உருவம்) பூண்டு, தந்திரமான, இனிய, வஞ்சக வார்த்தைகளைப் பேசி, ஆடியும், பாடியும், செல்வர்; பலியிடும்போது, பலியுடன் மாதர்களில் மேலாடையும் நழுவி விழும்.

## (ii) மடவார் பெருமானைக் கேட்கும் கேள்விகள் முதலிய [91(3)]

பெருமானே! நீர் ஆறு தாங்கிய சடையரோ! நும் மேனி அந்திவானத்தின் நிறத்ததோ! யானைத்தோல் போர்த்துள்ளீரே! எலும்பையும், ஆமையின் ஓட்டையும் பூண்டுள்ளீரே! நீர் பாம்பாட்டவும் வல்லீரோ! ஆடல், பாடல் வல்லீரோ! பாம்புதான் உமது ஆரமோ! நும் ஊர் காடு, நும் கையில் ஓடு, இங்ஙனம் இருந்தால் உம்மைக் காதலிப்பவர் உம்மிடம் பெறுவது யாது! உமது கையில் ஒரு பாம்பு, அரையில் ஒரு பாம்பு, கழுத்தில் ஒரு பாம்பு, மெய்யெலாம் திருநீறு, வேதம் ஓதுவீர்; கீதம் பாடுவீர், இங்ஙனம் மெதுவாக நக்கராக ஐயம் ஏற்க வருகின்றீர்!

இஃதென்ன கூத்து; மடவார்களின் வளைகளைக் கவர்தல்தானே உமது தொழில்; இராக்காலத்தே எங்கள் வீடுதேடி இடம் அறிந்து நடந்து வரவும் வல்லீரோ நீர்; நீர் ஏறிவரும் ஏறு முக்காரம் செய்கின்றது; உம்மிடம் உள்ள பாம்பு மூச்சுவிட்டுச் சீறுகின்றது; பலிக்கு நீர் வரும்போது இனிப் பாம்புடன் வரவேண்டாம்; பாம்புடன் வந்தால் நாங்கள் உமக்குப் பலி இடமாட்டோம்; பக்கத்தில் ஒரு தேவியுடன் வந்துள்ளீர்; ஆதலால் உமக்குப் பிச்சை யிடோம்; நீர் நடமின்; எங்கும் அலையாதீர்; ஓர் இடத்திற் பிச்சை கொள்ளும்; நீர் பித்தர்! சுடலையிற் பேயுடன் ஆடுதலை விட்டொழியும்; தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, தகுணிச்சம், கிணை, சல்லரி, கொக்கரை, குடமுழவு, இத்தனை வாத்தியங்களுடன் இசைபாடி ஆடுகின்றீரே; செந்தமிழ்த் *திறம் அறிந்தவல்லவர்தாமோ நீர்!

## 4. பலி சம்பந்தமாகப் பிரானிடம் கேட்கும் ஐய வினாக்கள் முதலிய [91(4)]

1. பெருமானே! அடியாரும் நீரும் இல்லம் தோறும் பாடிப் பெறுகின்ற பொருள் எல்லாம் உமையாளுக்குச் சேர்ப்பதற்குத்தானே!

2. உமது காதலி ஊர்கள்தோறும் அறம்செய்ய நீர் ஏன் பலிவேண்டி மனைவாயில்தோறும் நிற்கின்றீர்!

3. இழிந்த நாய்கள் குலைக்கும் இழிந்த மடவாரின் மனைவாயிலில் நீர் பலிவேண்டி நிற்பதும் ஒரு வாழ்க்கையோ!

4. ஊர் ஊராய் இங்ஙனம் திரிந்தால் மலரன்ன சேவடி நோவாதோ!

5. அந்திப் போதின்பின் அடியாரும் நீரும் சந்திகள் தோறும், வீடுகள்தோறும் பலிக்குச் செல்வது தக்கதா!

6. எத்திசையும் திரிந்து பலி ஏற்றால் பிறர் என்ன சொல்லமாட்டார்கள்; பக்தியுடன் இடுவாரிடம் மாத்திரம் இனிப் பலிகொள்மின்.

---

* திறம் - மேன்மை, கற்பு, ஒழுக்கம், கோட்பாடு.

7. மூளி வெண்டலையில் நீர் பலிகொள்வதை அடியார்கள் கண்டால் அவர்கள் உள்ளம் உருகுமே! அவர்கள் கவலைப்படுவார்களே!

8. உம்மைக் காதலித்துக் களித்துப் பிதற்றி, பலரிட்டுப் போற்றி உமக்கு வேண்டிய பணியைச் செய்யும் அடியார்கள் காத்திருக்க, நீர் பிச்சைகொள்வது அழகாமா! ஆகாது!

9. வெண்டலையைக் கையில் ஏந்தி மடவாரிடம் பிச்சை ஏற்பது தக்கதன்று.

10. செத்தவர் தலையிற் பலிகொள்வதுதான் உமது செல்வமென்று தெரிந்தால் உமக்கு நாங்கள் ஆட்படோம்.

11. உலகெலாம் உய்யவேண்டி உமது மனையாள் அமைத்த காஞ்சிக் காமக்கோட்டம் உளதே; நீர் ஏன் போய் ஊர்ப்பிச்சை கொள்கின்றீர்!

12. ஒருபால் தொண்டர்கள் பாட, ஒருபால் விண்ணோர்கள் ஏத்த, நீர் பலிக்குச் செல்கின்றீர்; இது பான்மையா! நீதியா!

13. பல் ஒடிந்த படுதலையுடன் பகலெலாம் திரிந்து பலி ஏற்கும் வாழ்க்கையை ஒழிக்கமாட்டீரா!

14. இச்சக வார்த்தைகளைப் பேசிப் பலிகொள்ளும் வாழ்க்கையை ஒழிமின் நீர்.

15. நீர் ஏன் பலிகொள்கின்றீர் என்று விண்ணப்பம் செய்த (சம்பந்தர், நாவுக்கரையருக்கு) மெய்ப்பொருளாக விளங்கித் (திருவீழிமிழலையில் [காசு] தந்தீர்).

16, வெண்டலை ஓடு ஏந்தி ஊரெலாம் திரிந்து என் செய்வீர்? ஓரிடத்திலே இனிப் பலிகொள்ளும்.

## 80. சிவபிரான்—பாம்பாட்டுதல் [92]

பெருமான் - படங்கொண்ட பாம்பை ஆட்டித் திரிவர்; ஒரு நாகத்தைப் பிடித்தாட்டிப் பூண்பர்; பாம்பாட்ட வல்லவர் அவர்; பல பாம்புபற்றி ஆட்டிக்கொண்டு உண்பர்.

## 81. சிவபிரான்—மாலைகள் [93]

எருக்கு, கரந்தை, கூவிளம், கொன்றை, மத்தம்-இவை சிவபிரான் அணியும் மாலைகளாகக் கூறப்பட்டுள. இவை யன்றிச் சொன்மாலை - வாக்கு மாலை, பாம்புமாலை, மதியக் கண்ணி - கூறப்பட்டுள.

## 82 சிவபிரான்—வண்ணம் [94]

சிவபிரானுடைய வண்ணம் - அணிவண்ணம், அழல் வண்ணம், செம்பொனார் தீ வண்ணம், செந்தீ வண்ணம், பல்பல வண்ணம், பவளவண்ணம், மணிவண்ணம், மாணிக்க வண்ணம்—என்று குறிக்கப்பட்டுளது.

## 83. சிவபிரான்—வாகனம் [95(1)]

ஆன், இடவம், எருது, ஏறு, கோ, சே, பசு, பெற்றம், விடை—என்னும் சொற்களால் சிவபிரானது வாகனம்—விடை—குறிக்கப்பட்டுளது;* மேகமும் அவர்க்கு வாகனமாயிருந்தது.

எருதேறு, ஓவணமேல் எருது, செங்கண் வெள்ளைச் செழுங்கோட் டெருது, மூரிஎருது, அடல்ஏறு, ஒற்றைஏறு, கூழைஏறு, கொல்லேறு, கொல்லைச் சில்லை வெள்ளேறு, செங்கண்ஏறு, திமில்ஏறு, நரைஏறு, பட்டிஏறு, புகரேறு, பைங்கண்ஏறு, போரேறு, மழலைஏறு, வடமாடு மால்விடைஏறு, வெள்ளேறு, சிலைக்கும் கொலைச் சே, உழுவார்க்கு அரியவிடை, காய்சினமால் விடை, கொடுமால்விடை, செண்டாடும் விடை, தொல்லை நரைவிடை, பாயும்விடை, பொருவிடை, மழவிடை, மால்விடை, மூசிடு மால்விடை, வேதமால் விடை — என்றெல்லாம் விளக்கப்பட்டுளது. அதனால் பிரானது விடை பிரணவ ரூபத்தது, வலிமை

---

* திருமால் மேகமாய்ப் பரமனைச் சுமந்தார் "மாலோய்! ஆயிர ஆண்டு மேக உருக்கொடு தாங்கினை எம்மை"—காஞ்சிப் புராணம் —புண்ணியகோடி 3, 4.

வாய்ந்தது, குட்டையானது, பாய்ந்து செல்வது, வெள்ளை நிறத்தது, செங்கண்ணது, கயிறு பூட்டப் பட்டது, திமில் (முரிப்பு) உடையது, செழுமையான கொம்புகளை உடையது, கோபத்தொடு கூடியது, போர்க்கு ஒருப்பட்டு நிற்பது, கடுமை வாய்ந்தது—என்பது பெறப்படுகின்றது.

மாலும், வேதமும் சிவபிராற்கு 'விடை'யாகும். அவர் எந்நாளும் உகந்து ஏறுவது விடையே. அதுவும் ஒற்றை ஏறு, நரைஏறு (வெள்ளை ஏறு), புகர் (அழகு)ஏறு, பட்டி (தனித்துலவும்) ஏறு, புரை...வெள்ஏறு (மேன்மை வாய்ந்த வெள்ளேறு), மழலைஏறு (இளஏறு)-என்றும், உழுபவர்க்குக் கிட்டாதது, ஆடல்புரிய வல்லது என்றும் விளக்கம் காண்கின்றோம்.

### 2. விடைமேல் வருகோலம் [95(2)]

பெருமான் பாயும் விடைமேல் ஏறிப், பலிதேர்ந்து உண்பார்; எலும்பணிந்து ஏறேறுவர்; பூதப்படைகள் சூழக், கொன்றைமாலை அணிந்து, பிறைசூடி, தேவியுடன் மகிழ்ந்து விடைமேல் வருவார்; பொரு விடைமேல் ஏறி மூவுலகும் திரிவார்.

## 84. சிவபிரான் விரும்புவன, உகந்தன [96]

சிவபிரானுக்கு விருப்பம் - மகிழ்ச்சி - தருவன எனக் கூறப்பட்டவை :—

(i) அங்கைத் தீ, அடியார் அடிமை, ஆறங்கம், ஆனைந்து, தெளிநீர், தேன், தயிர், நெய், பால் ஆகிய அபிஷேகப் பொருள்கள், ஆமைஓடு, ஆறெழுத்து, இசை, உமையாள், உலகு, எரியாடுதல், ஏறு, ஏனமருப்பு, கங்கை, காடு (சுடுகாடு), கொன்றை, சம்பந்தர் அப்பர் பாடல்கள், சாமவேதம், தமிழ், திசைகள், தென்னாடு, நஞ்சுஊண், நீறு, பண், பலி, பாம்பு, பிறைமாலை, புகழ்த்துணை நாயனார், புலித்தோல், (மலர்ப்)பூசை, மழு, மறை, மான், யானைஉரி, யோகநிலை, வாத்தியங்கள், (காமனை அட்டது, கூற்றை

உதைத்தது, சூரியனைத் தண்டித்தது, நரசிங்கத்தை அடக்கியது - ஆகிய) வீரச் செயல்கள், வெண்டலை.

(ii) தலங்களுள் சிவபிரான் விரும்புவனவாகக் கூறப் பட்டவை:—

ஆக்கூர், இடையாறு, ஒற்றியூர், கருப்பூர், கழிப்பாலை, (சீ)காழி, குடமூக்கு (கும்பகோணம்), கோத்திட்டை, கோவலூர், சோற்றுத்துறை, துறையூர், நன்னிலம், நடூர், பாண்டிக் கொடுமுடி, பேரூர், மண்ணிப் படிக்கரை.

## 85. சிவபிரான்—வேடங்கள் [97]

அகந்தோறும் பலிவேண்டி மெய்வேடம் தரித்தவர்; அயனும் மாலும் நண்ணல் அரிய வேடத்தர்; ஐயம் வேண்டி விடங்கவேடம் (நக்கவேடம்) கொண்டவர், காட்டில் இரவில் நடமாடும் வேடத்தர்; கோவண வேடத்தர்; பொல்லாத வேடத்தர்; மௌன யோக வேடத்தர்; வேடனாய் வந்து தமக்கு (சுந்தரருக்கு) உதவின வேடத்தர்; வேடனாய் (விசயன் பொருட்டு, பன்றிப்பின் சென்ற மாயவேடத்தர்- சிவபிரான்.

## 86. சிவபிரானை வைதல் [98]

ஆரூர்ப்பெருமான் அக்ரமங்கள் செய்பவர்; அவர் ஒரு வாயாடி.

## 86.ஏ. சிவனும் அடியாரும்

'அடியாரும் சிவனும்' என்னும் தலைப்பு 5 பார்க்க.

## 87. சிவனும் அண்டங்களும் [99]

பெருமான் அண்ட வாணர், அண்ட முதல்வர் அண்டமதாயவர், அண்டம் உடையவர்.

## 88. சிவனும் ஆகமமும் [100]

தேவர்களுக்கு ஆகம நூல் மொழிந்தவர் பெருமான்; ஆகமம் வல்ல சீலர்களுக்கு அவர் திருவருள் பாலிப்பர்.

## 89. சிவனும் இசையும் [101]

**சிவபிரான்:**—ஏழிசை அவர், இசைப்பயன் அவர்; பண்நிறைந்த தமிழ் அவர், வண்டமிழ் வல்லவர்கள் பாடும் ஏழிசை, ஏழ் நரம்பின் ஓசை அவர்;

அவர் பண்ணிடைத் தமிழை நிகர்ப்பவர்; பண்ணில் விளங்குபவராய்ப் பாட்டுமாகி நிற்கின்றார் அவர்; காமரம் (பண் - சீகாமரம் - நாதநாமக்கிரியை) என்னும் இசையைப் பாடுபவர்களின் நாவில் ஊறுபவர்; குற்றமிலாத அடியார்கள் கூறும் இசையைப் பரிசாகக் கொள்பவர்; பாட்டினுள் இசையாகி நிற்பவர்; வேதமும் கீதமும் ஓதுபவர்; ராவணன் தனது கை நரம்பால் வேத கீதங்களைப் பாடும்படி வைத்தவர்; அவனுடைய பத்திப் பாடலின் இன்னிசையைக் கேட்டு அவனுக்கு நாளும், வாளும், பேரும் கொடுத்தவர்; தமிழோடு இசைகேட்கும் ஆசையால் (திருவீழிமிழலையில் - அப்பர்-சம்பந்தருக்குத்) தினந்தோறும் காசு அளித்தவர்.

பயன்தரவல்ல பண்கொண்ட பாடலைப் பாடி இறைவனை நண்ணுதல் எங்ஙனம் என்று வருந்துகின்றார் சுந்தரர்.

## 90. சிவனும் இந்திரனும் [102]

இந்திராதி தேவர்களுக்குப் பெருமான் சிவபிரான்; இந்திரன், திருமால், பிரமன்-இவர்களாற் காணமுடியாதவர் சிவனார்; திருமால், பிரமன், இந்திரன் குற்றேவல் செய்ய அவர் திரிபுரத்தைத் தீக்கு இரையாக்கினர். இந்திரனுடைய வழிபாட்டுக்கு மகிழ்ந்து வானநாட்டின் ஆட்சியை அவனுக்கு அளித்தார். திருமால், பிரமன் இந்திரன் இம் மூவரும் மந்திரங்கள் கூறி வணங்கக் கரிய விடத்தை

உண்டனர்; இந்திரனுடைய தோளை (தக்கன் யாகத்தில்) முறித்தார். திருமுதுகுன்றத்தில், (விருத்தாசலத்தில்) இறைவனை இந்திரன் (பூசித்து) வணங்கினன்; அருள் பெற்றான்.

கூடலை யாற்றாருக்குப் போகும் வழியைக் காட்டத், திருமால், பிரமன், இந்திரனாதி தேவர்கள் சூழ, இறைவன் சுந்தரரின் எதிரே வழியில் வந்தார். இந்திரன், திருமால், பிரமன் முதலிய எல்லாத் தேவர்களும் சுந்தரரை எதிர் கொண்டு (கயிலைக்கு) அழைத்துச் செல்ல வெள்ளை யானையை இறைவன் அனுப்புவித்தார்.

## 91. சிவனும் இருவரும் [103]

['இருவர்க்கும் அரியர்' என்னும் தலைப்பு 65 பார்க்க]

அயனும் திருமாலும் அறிதற் கரிய சோதியர் சிவ பெருமான்; அவர்கள் இருவருடைய உருவங்களும் கலந்த திருவுருவினர் பெருமான்; அவர்கள் இருவர்க்கும் பிரான் அவர்; அவர்களால் காண முடியாதவர்; அவர்களொடு சேர்ந்தும், தனித்தும் அந்தரத்தே அவர் செல்வர். நாள்தோறும் பெருமானைத் திருவீழிமிழலையில் அவர்கள் ஏத்துவர்: திருக்கழுக்குன்றத்தில் மலரிட்டுப் பூசிப்பர்.

## 92. சிவனும் உடைமையும் [104]

உடைமை ஒன்றும் இல்லாதவரோ அல்லது உடைமை உடையவரோ, அல்லது மிக தருமவானோ பெருமான்,

## 93. சிவனும் உயிர்களும் [105]

பெருமான் எல்லா உயிர்க்கும் உரியவர்; எல்லா உயிர்க்கும் அவர் ஒளி, கண், சேமநிதி, தலைவர்; தந்தை, தாய், மருந்து-ஆவர். உயிர்களிடம் அமுதாக ஊறுவர்: கொடிய வினைக்கடலில் தடுமாறும் உயிர்களிடம் மிக இரக்கம் பூண்டு வீடுபேறு உதவுவர்.

## 94. சிவனும் உலகும் [106]

சிவபிரான் உலகமெலாம் ஈன்றவர்; உலகமெலாம் உடையவர்; உலகானவர்; உலகுக்குத் தந்தை; உலகங்களை உகப்பர்.

## 95. சிவனும் ஊரும் [107]

சிவபெருமானுக்கு ஊர் காடு. தமக்கென்று ஊர் ஒன்றும் அவருக்கு இல்லை; ஆயினும் உலகை அவர் உகப்பர்; ஆரூரில் வாழ்வர்; ஒற்றியூரோ-அவருக்கு உரிமை இல்லை; ஒற்றியூர்-ஒற்றிவைக்கப்பட்ட காரணத்தாலோ, ஆரூர்-யாருடைய ஊரோ என்று நினைத்தோ அவ்வூர்களைவிட்டு நீங்கிக், கோடி என்னும் தலத்தில் தனியாய் இருக்கின்றார்; பெருமானுடைய ஊர் ஒற்றிவைக்கப்பட்ட ஊர், வேறு ஊர் அவருக்கு இருப்பதாக நாம் அறியோம்.

## 96. சிவனும் ஐம்பூதமும் [108]

நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் என்னும் ஐம்பூதங்களாய் விளங்கி நிற்கின்றார் இறைவர்.

## 97. சிவனும் கங்கையும் [109]

கங்கையின் மணவாளர் பெருமான்; பகீரதன் வேண்ட ஆர்த்து வந்த கங்கையைத் தமது சடையில் ஒளித்து வைத்துள்ளார் பெருமான்; பார்வதி ஒரு பாகத்தில் இருப்பதால், வேறு இடம் இல்லாமல், கங்கையும் பெருமானது ஆகத்திலேயே இருந்தனள்.

## 98. சிவனும் கடலும் [109 ஏ - 44 (8)]

கடலை உடையவர் பெருமான். அவர் கருணைக்கடல், அற்புதக் கடல்.

## 99. சிவனும் கணங்களும் [110]

பெருமானைக் கணங்கள் இறைஞ்சும்; தேவர் கணம் தொழும்; கணங்களுக்கு நாதர் பெருமான்; பேய்க்கணங்கள் பெருமானைச் சூழும்; அவை பாடல் செய்யப் பெருமான் ஆடுவர்.

## 100. சிவனும் கொன்றையும் [111]

நறுமணம் வீசுவதும், தேன் நிறைந்ததுமான கொன்றை மலர் சிவபிராற்கு உரியது.

## 101. சிவனும் சித்தரும் [112]

சித்தர் வணங்கிய தலம் திருநின்றியூர். பல பத்தர் சித்தர்களுக்கு இறைவர் அருள் செய்துள்ளார்.

## 102. சிவனும் ஞாயிறும் [113]

சிவன் ஞாயிறாகி நிற்கின்றார்; சூரியனிடம் செம்மையாய் நின்றுள்ளார். அவர் திருமேனி செக்கர் வானத்து இளஞாயிற்றை நிகர்க்கும். சூரியன் திருமுதுகுன்றில் (விருத்தாசலத்தில்) சிவபெருமானைப் போற்றி வணங்கினான். சூரியனும் சந்திரனும் சிவபிரானது திருவடியை அர்ச்சித்துள்ளார்கள். சூரியனுடைய பல்லை உகுத்துள்ளார் (விழச் செய்துள்ளார்) சிவனார்.

## 103. சிவனும் தமிழும் [114]

தண்டமிழ்நூற் புலவர்க்குத் தலைவர் சிவபெருமான். அவரைத் "தமிழான்" என்று அன்பர்கள் பாவிப்பார்கள். பண் நிறைந்த தமிழ்ப் பரமாய் விளங்குவார் பெருமான். "செந்தமிழ்த் திறம் வல்லவரோ நீர்?" என அவர்மீது மையல் கொண்ட ஒரு நங்கை அவரை வினவுகின்றாள்.

## 104. சிவனும் தவத்தினரும் [115]

மெய்த்தவம் பூண்டவர்க்குக் கட்டுப்பட்டவர் இறைவர்.

## 105. சிவனும் திங்களும் [116]

மதியின் கலை சிதையத் திருவிரலால் தேய்த்து அருள் காட்டினர் சிவபெருமான். சிவபிராற்குக் குறுகிய மாலையாகும் திங்கள். மதியமாய் நிற்கின்றார் பெருமானார். பிறையன்றி வேறொன்றும் கிடைக்க இல்லையோ எம் பெருமானுக்குச் சூடுவதற்கு.

## 106. சிவனும் திருநீறும் [117]

சிவபெருமான் சாந்தமென வெண்ணீற்றைப் பூசுவர். சுடலைப் பொடி நீறன்றிச் சிவபிரானுக்குப் பூசுதற்குச் சாந்தம் வேறில்லையோ? தேவியும் தாமுமாக மார்பிற் சிவபிரான் பொடி அணிவார்; அவர் திருமேனி முழுதும் வெள்ளை நீறு; அவர் நெற்றியில் திருநீறு; அவர் மார்பில் திருநீறு; அவரது பவளம் அன்ன திருமேனியில் முத்தன்ன (வெண்)ணீறு விளங்கும்.

திருநீறு நிறைந்த மேனியராய்ச் சிவபெருமானை நினைப்பவர் தம் உள்ளத்தில் சிவபிரான் நிறைந்து தோன்றுவார்.

## 107. சிவனும் தேவர்களும் [118]

அமரர் தொழும் நாயகன் சிவபிரான்; அவர் அமரர் நம்பி; அமரர்க்கு அரிய சோதி; அமரர்க்கு அமுதீந்த அருளாளர்; தேவர்கள் தம் சூளாமணி; கோடி தேவர்கள், எண்ணாயிரம் கோடி தேவர்கள், அளவிறந்த பல தேவர்கள் அவரை வழிபட்டு ஏத்துவர். செம்பொன்னும் மணியும் தூவிச் சிவபிரானை இரவிலும் போற்றுவர்; பாடி ஆடித் தொழுவர்; எங்கள் தந்தை, எங்கள் பிரான், எங்கள் சரணன் (தூதர், புகலிடம்), எங்கள் தம்பிரான், எங்கள் மாமணி, எங்கள் பொன், என்றெல்லாம் போற்றிப் பிதற்றி

வழிபடுவர். எங்கள் நா உன்னைப் பாடுதலன்றி வேறு எதை யும் நவிலாது எனக் கூறித் துதித்துத் தொழுவர். எங்கள் துணை நீ என்று நாள்தோறும் தொழுது ஏத்துவர்.

திருமால், பிரமன், இந்திரன், தேவர், நாகர், தானவர் — ஆக யாவர்க்கும் பெருமான் சிவபிரான். 'பெருமானே! எங்குற்றாய்' என்று வானோர் அவரைத் தேடி (வட) திருமுல்லை வாயிலை அடைவர்.

திரிபுரம் எரித்தபோது சிவபிரான் தேவர்கள் பொருட்டுத் தேர்மிசை நின்றார்.

## 108. சிவனும் தேவியும் [119]

பெருமான் உமாதேவியின் கணவர்; தேவியை விட்டுப் பிரியார்; தேவியுடன் மாணிக்க மலைபோல விடையின் மேல் வருவார்; சுந்தரர் போகும் வழியில், தமது தேவி யொடும் அவர் எதிரில் வந்து கூடலை யாற்றூருக்குப் போகும் வழியைக் காட்டிய ஓர் அதிசய நிகழ்ச்சியை நிகழ்த்தினர். தேவி விளையாட்டாகத் தனது வளைக் கரத்தால் மகிழ்ச்சி யுடன் பெருமானுடைய கண்களை மூட, எங்கும் பேரிருள் சூழ்ந்தது; அந்த இருள் விலக வேண்டித் தமது நெற்றியில் ஒரு கண்ணைப் படைத்து ஒளி பரப்பி மகிழ்ந்தார் பெருமான்; விஜயனுடைய (அருச்சுனனுடைய) தவத்தை அழித்துப் போர்புரியக், காட்டில் வேடனாய், ஒரு பன்றி யின் பின் தானும் தேவியுமாய் மகிழ்ந்து சென்று அவனுக்கு அம்பறுத்தூணி அளித்தனர் பெருமான். தேவியின் தவக் குறிப்பை உணர்ந்து சென்று அவளது குணத்தின் சிறப்பை நன்கறிந்து, அவள் விரும்பின வரங்களைக் கொடுத்து அவளை மணந்துகொண்டனர். அந்தத் தேவி கச்சிமூதூரில் உலகு உய்ய வேண்டி அமைத்த (அறச்சாலை) காம கோட்டம் இருக்கப், பெருமான் ஏன் ஊரிடும் பிச்சையை விரும்புகின்றார்? தம்முடைய காதலி ஊர்கள்தோறும் அறம் செய்யப், பெருமான் ஏனோ பலி வேண்டி இல்லங் களின் வாசல்தோறும் நிற்கின்றார்.

தேனி பாங்கும் கிளியும் பயில்வாள். அவள் சேந்தன் (முருகவேளின்) தாய்.

## 109. சிவனும் தேவியும் கங்கையும் [120]

பெருமானே! கூடிய மலைமங்கை பார்ப்பதியை நீ பிரியாமல் கங்கையைச் சூடினையே! (இது நன்றோ என்றபடி); மலைமங்கையை ஒருபுறம் வைத்துக் கங்கையை யும் ஒளித்து வைத்திருக்கும் பரிசுத்தமூர்த்தி நீ! உன் கங்கையாள் வாய்திறந்து பேசுவதில்லை; உன் தேவி—பார்வதி சரியாய் ஆள்வதில்லை; ஆதலால் உங்களுக்கு நாங்கள் ஆளாய்ப் பணிசெய்ய மாட்டோம்.

## 110. சிவனும் தேவியும் திருமாலும் [121]

சிவபிரான் மங்கை (பார்வதியை) ஒரு பாகத்திலும் திருமாலை ஒரு பாகத்திலும் உடையவர்.

## 111. சிவனும் நாகரும் [122]

நாகர்க்கும் பெருமான்—சிவபிரான்.

## 112. சிவனும் நாடும் [123]

மலைநாடனாகிய மாண்பினை உடையவர் பெருமான்; வான நாடரும் அவர். கடல் சூழ்ந்துள்ள நாட்டினை உடையவர் அவர்.

## 113. சிவனும் நாளும் [124]

சிவபிராற்கு ஆதிரை நாள் உகந்தது.

## 114. சிவனும் பாட்டும் [125]

பெருமான் பாட்டகத்தே இசையாகி நிற்கின்றார்; அவர் பண்ணில் விளங்குபவராய்ப் பாட்டாகவும் திகழ்

இன்றூர். பாடல் பெறுதலில் அவர்க்கு மகிழ்ச்சி; பெறுவிடிற் பராமுகமாயிருப்பார்; பலரும் அவரைப் பாடிப் பரவுவர்; பாடுவாரின் பசியைத் தீர்ப்பார் பெருமான்; தம்மைப் பரவி நாள்தோறும் பாடுவார்களுடைய வினைப் பற்றை அறுத்தெறிவார்; அரக்கன் ராவணனுடைய ஆற்றலை அழித்து அவன் பாடிய பாட்டுக்கு அன்று இரங்கி அருளின வென்றியாளர் பெருமான்.

## 115. சிவனும் பிரமனும் [126]

பிரமற்கும் பெருமான் சிவபிரான்; பிரமனாகவும் விளங்குவர் சிவபிரான்; சிவபிரானைப் பிரமன் மந்திரத்தால் வழிபாடு செய்து போற்றி வணங்குவன்; சுந்தரர் போகும் வழியிற் சிவபிரான் பிரமனாதியர் சூழ எதிர் சென்றனர்; பிரமனுடைய தலையே உண்கலனாக ஏந்திப் பெருமான் பலிக்குத் திரிவர்.

## 116. சிவனும் புகழும் [127]

எம்பெருமான் என்று எப்போதும் புகழப்பட்ட பெருமான் சிவன்; பழிசேர்தல் இல்லாத புகழான் அவர்; பொய்யாக அவரைப் புகழ்வார் கூறும் புகழுரையையும் அவர் புகழாகக் கொள்வார். (திரிபுரத்) தலைவர் மூவரும் அவருடைய திருவடியிற் சரண்புக அம் மூவரும் பொன்னுலகம் ஆளும்படியான புகழ் கொண்டு திருவருள் பாலித்தனர் பெருமான்.

## 117. சிவனும் பூதமும் [128]

தாம் ஆட்கொண்ட பல பூதங்கள் பாட நள்ளிருளில் நட்டம் ஆடுவர் பெருமான். அப்போது குள்ளப் பூதங்கள் பறை முழக்கும். பக்தியுடன் பூதங்கள் 'தென்னாத் தெனாத் தெத்தெனா' என்று இசை பாடி யாட இடுபிச்சைக்காக உச்சிப்போதில் இல்லங்கள் தோறும் பெருமான் திரிவர். 'பூதப் படைகள் சூழ விடையின்மேல் பெருமான்

தேவியுடன் மகிழ்ந்து வருவார்; பெருமான் பூதநாதர்; சுந்தராருக்குக் கூடலையாற்றூருக்குப் போகும் வழியைக் காட்ட வந்தபோது பூதப்படை சூழவந்தார் பெருமான்.

## 118. சிவனும் பெரியோர்களும் [129]

(தமது புகழைக்)கற்ற பெரும் புலவர்களின் துன்பங்களைப் பெரிதும் அறுத்து உதவுவர் பெருமான். வஞ்சம் என்பது சற்றும் இல்லாத மனத்தவரைப் பெருமான் மறவார்.

## 119. சிவனும் பேயும் [130]

பேய்கள் வாழும் மயானத்தில், பிணமிடுகாட்டில், சுடலையில், நிறையிருளில், எரிதலைப் பேய்கள் புடைசூழ ஆடல் புரிவார் பெருமான்; குழிவிழிகளையும், அகன்ற வாயையும் உடைய பேய்கள் மகிழ்ந்து உடன் ஆட, மேலைச் சிதம்பரமாம் பேரூரில் பெருமான் ஆடலை விரும்பி ஆடுவர்; அவருடன் ஆடும் பேய்கள் தெள்ளறிவு கொண்ட துஷ்டப் பேய்கள்; புலால் வாயன; அப் பேய்க்கணம் சூழ்ந்து பாடல்கள் பாடப், பெருமான் நள்ளிருளில் நட்டம் ஆடுவர். பெருமானைப் பேய்கள் மொய்த்து நிற்பதால் அவருக்கு ஆட்செய அஞ்சுகின்றேன் என்கின்றார் சுந்தரர். எப்போதும் பேய்கள் தம்மைச் சூழ்ந்து நிற்க விரும்புவர் பெருமான்; சுந்தரருக்குக் கூடலையாற்றூருக்குப் போகும் வழியைக் காட்டப் பெருமான்வந்தபோது கூடப் பேய்க்கணம் தம்மைச் சூழ வந்தார் அவர்.

## 120. சிவனும் மலையும் [131]

பெருமான் மாணிக்க மலைபோல வருவார்; மலையின் உச்சியில் இருப்பார்; பொன்மலை போல்வார்; ஏழு மலைகளுக்கும் உரிமையாளர் அவர்; தீதிலா மலை அவர்; மலையாய் விளங்குபவர்;

## 121. சிவனும் மறையவரும் [132]

அங்கம் வல்ல அந்தணர்கள் தொழுதேத்தும் தலம் **திருக்கேதீச்சரம்**. கிழக்கே சலம் இடும் அந்தணர்கள் தொழுதேத்தும் தலம் **திருக்கேதாரம்**. நாள்தோறும் சந்திநேரத்தில் பெருமானுக்குப் பூமாலை சிறப்பாக அணிவித்துப் பூசித்துப் போற்றுவர். திருவீழிமிழலையிற் பற்றுடன் வாசம் செய்து நான்மறை ஓதும் நாவினராம் அந்தணர்கள், பண்பு நிறைந்த புண்ணிய நான்மறையோர், **நன்னிலத்துப் பெருங்கோயிலிற்** பல காலும் நண்புடன் பயின்றேத்திப் பெருமானை வணங்குவர்; விட்டு விலகாத வல்வினைகள் விலகி ஒழிய, மறைகளைப் பாடியாடிச் சதா குற்றேவல் செய்யும் அந்தணர்கள் நீங்காத தலம் **கருப்பறியலூர்**. **கடவூர் மயானத்தில்** மறையோர் இறைவனை ஏத்திப் பணிவார்.

அங்கமும் நான்மறையும் வல்ல அந்தணர்கள் பெருமானை அடிபோற்றி வணங்குவர்; அங்ஙனம் நீங்குதலின்றி அடி பணிந்தும் அவர்களுக்கு அறிதற்கு அரியவர் இறைவர். பூசுரர்களாம் அந்தணர்களின் வழிபாட்டில் விளங்குவர் பெருமான். தூய நெய் கொண்டு வட்டமான குண்டத்தில் எரிவளர்த்து ஓம்பி மறைபயிலும் அந்தணர்கள் சமைத்து நிவேதிக்கும் உணவை உண்பர் பெருமான். [இங்ஙனம் வேறு உணவுக்கு வழி இல்லாதவர் இவர் என்று தெரிந்திருந்தால் இவர்க்கு நாம் ஆட்பட்டிருக்க மாட்டோம் என்கின்றார் சுந்தரர்]. வேத வேள்வியர் வணங்கும் பெருமான் சிவபிரான்; வேதியரும், விண்ணவரும் மண்ணவரும் தொழுகின்ற நற்சோதி அவர்.

## 122. சிவனும் மறையும் (வேதமும்) அங்கமும் [133]

மறை ஒரு நான்கும் ஆனவர் பெருமான். மறை நான்கினையும் ஆறு அங்கங்களையும் ஓதினவர்; அவைகளுக்கு எல்லைப் பொருளாய் நிற்பவர், பொருளாய் விளங்குபவர்; நான்மறைகளின் பொருளை உரை பெருக-

உரைத்தவர்; நான்மறைகளைப் பாடவல்லவர், அவையன்றிப், பிற வற்றையும் பாடாதவர், மறை அங்கம் வல்லவர், மறை நான்கையும் அங்கங்களையும் விரித்தவர்; சித்தர்கள் தம்மைச் சூழ வேதங்களை ஓதித் திரிவர் பிரான்; வேதங்கள் நான்கையும் விரித்து, விரித்த வேதத்தை ஓதவல்லவர் அவர்; சாம வேதத்தில் மிக்க பிரியம் கொண்டவர்; சாம வேதம் ஓதுவர்; வேதத்தைக் கீதத்துடன் ஓதுவர்; வேதங்களின் உட்பொருள் அவர்; வேதங்களுக்கு (சுருதிகளுக்கு) எட்டாதவர்; ராவணனை வேத கீதங்களைப் பாடும்படி செய்தவர்; திரிபுர சம்மார காலத்தில் வேதங்களைத் தம்முடைய தேர்க்குதிரைகளாகக் கொண்டவர்; பெருமான் வேத கீதர், வேதநாவர், வேத முதல்வர், வேத விடையர்; பெருமான் ஒரு வேதியர். அடியார்கள் ருக் வேதத்தை (இருக்கை) ஓதி, மலர் தூவிப், பெருமானைப் பூசிப்பர்; வேதவேதியர் - வேத நீதியர், வேதவேள்வியர் பெருமானை ஓதிப் போற்றி வணங்குவர்.

## 122-ஏ. சிவனும் முநிவரும் [134]

[தலைப்பு 216 பார்க்க]

## 123. சிவனும் யோகமும் [135]

சிவபிரானுடைய யோகநிலையை அழிக்கச் சென்றான் ஐங்கணைவேள் (மன்மதன்).

## 124. சிவனும் வெண்மையும் [136]

சிவனிடத்தில் உள்ள வெண்மைநிறப் பொருள்கள் :— வெண்தலை, வெண்ணீறு, வெண்குழை, வெண்தோடு, வெண் கோவணம், வெண்ணிலா, வெண்புரிநூல், வெண்மழு, வெள்ளெருக்கு, வெள்ளேறு.

## 125. சுடலை, சுடுகாடு, இடுகாடு [137]

ஆரிருட்காடு, இடுகாடு, ஈமப் புறங்காடு; கட்டக்காடு, கரிகாடு, சுடலை, சுடுகாடு, நரிபுரிகாடு, நரியாருஞ் சுடலை, பிணம் படுகாடு, புறங்காடு, மயானம், முதுகாடு என்பன சுடலையைக் குறிக்க ஆளப்பட்டுள சொற்கள்.

## 126. சுந்தரர் அருளிய திருப்பாட்டைக் குறிக்கும் சொற்றொடர்கள் [138]

அடிநாய் உரை, அருந்தமிழ்கள், அலங்கல் நன்மாலை, இசைக்கிளவி பத்து, இறையார் பாடல், ஊரன் பிதற்று, ஏழிசையின்தமிழ், ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்து, ஒளிதிகழ்மாலை, குறையாத் தமிழ்பத்து, சந்தமிகு தண்டமிழ் மாலை, சீரூர் செந்தமிழ்கள், சூழிசை யின் கரும்பின் சுவை, ஏழிசையின் தமிழ், செஞ்சொற் றமிழ் மாலைகள் பத்து, சொன் மாலைகள், தண்டமிழ் மலர் பத்து, தமிழ் வழுவா மாலை, நற்றமிழின் மிகுமாலை, பங்கமில் பாடல், பண் பயிலும் பத்து, பலங்கிளர் தமிழ், பன்னலங்கள் நன்மாலை, பாவணத் தமிழ், பாவின் தமிழ், பேசின பேச்சு, பொய்யாத் தமிழ், மாலை பத்து, வண்டமிழ்கள், விலையார் மாலை.

## 127. சுந்தரர் அருளிய தேவாரத்தை ஓதுவோர், கற்போர், கேட்போரைக் குறிப்பன [139]

1. ஆரூரன் அருந்தமிழ் ஐந்தினோடைந்து அழகால் உரைப்பார்களும் கேட்பவரும்.

2. ஆரூரன் சந்தம் இசையொடும் வல்லார்.

3. ஆரூரன் பத்தும் பத்திசெய்து பாட வல்லவர்கள்.

4. ஊரன் சொல் பொய்யொன்றும் இன்றிப் புலம்புவார்.

5. ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும் உள்ளத்தால் உகந்தேத்த வல்லார்.

6. குடியாகப் பாடிநின்றாட வல்லார்.

7. தமிழ்மாலை செம்மாந்திருந்து திருவாய் திறப்பார்.

8. பாடல் தங் கையால் தொழுது தம் நாவின்மேற் கொள்வார்.

9. பாடல் பத்து உன்னி இன்னிசை பாடுவார்.

10. மடியாது கற்று இவை ஏத்த வல்லார்.

11. மாலைகள் அஞ்சினோடஞ்சும் சிந்தையுள்ளுருகிச் செப்ப வல்லவர்.

12. மாலை பத்தும் தெரித்த வண்ணம் மொழிய வல்லார்.

13. வஞ்சியாது உரை செய்ய வல்லவர்.

14. வன்றொண்டன் செஞ்சொற் கேட்டுகப்பார்.

இவையே சுந்தரர் திருப்பாட்டை ஓதுபவர், கேட்பவர் இலக்கணமாம் என்க. ஓதவேண்டிய, கேட்கவேண்டிய முறையைத் தலைப்பு 166-ல் காண்க.

## 128. சுந்தரர் இறைவனிடம் அசதி ஆடல் [140]

[அசதி ஆடல் மிக்குள்ள பதிகங்கள் 2, 5, 14, 18, 32, 36, 43, 44, 46, 49, 95]

### (i) உமக்கு ஆட்செய அஞ்சுகின்றோம் என்றது [*2]

இறைவா! உமது தோலாடையின்மேல் சுற்றிக் கட்டியுள்ளதும் பாம்பு; கையிற் கொண்டதும் பாம்பு; உமது கையில் உள்ள பாம்புக்கு ஐந்து படம் இருக்கின்றதே; அதைப் போகும்படி விடாதீர்; உடுப்பதற்கு உடையும்,

* பதிக எண்.

உண்பதற்குச் சோறும் தந்து உம்மால் ஆளமுடியவில்லை; உடலில் உறுநோயைக் களைந்தும் ஆளமுடியவில்லை; ஆனால் ஆள்களை ஆளவல்லவர் தாம் நீர்—இக்காரணங்களால் உமக்கு ஆட்செய அஞ்சுகின்றோம்.

(ii) ஓணகாந்தன் தளியுளாருடன் அசதி ஆடல் [5*]

ஓணகாந்தன் தளியுளீரே!

கங்கையாளோ வாய் திறவாள், கணபதியோ வயிறுதாரி, வேலவனோ குமரன் பிள்ளை, தேவி இவர்களைக் கோலால் அதட்டி ஆள்வதில்லை.

எமக்குத் தெரிந்த தெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தினாலும் வாயைத் திறந்து, உண்டு, இல்லை என்று நீர் சொல்வதில்லை; நீர் எம்மை ஆள்வான் இருந்து என்ன பயன்: பலிதிரிந்து ஐயம் ஏற்கும் தொழிலையும் ஒழிக்க மாட்டீர்.

தொண்டர்கள் கூடிக்கூடி ஆடிப்பாடி அழுது அழுது அன்பு செய்தாலும், அவர்களுக்கு இன்பம் தரவேண்டும் என்பதை நீர் உணர்வதில்லை. உம்மைத் தேடித்தேடி நான் திரிந்து அலுப்புற்றாலும் என்னை நீர் கவனிப்பதில்லை; விட்டு ஓடிப்போவதும் இல்லை, ஒரு பற்றுத் தருவதும் இல்லை.

கச்சிக் காமக் கோட்டம் (எல்லாம் தருவதற்கிருந்தும்) நீர் போய் ஊர்ப்பிச்சை கொள்வது என்ன காரணம்?

மெய்சொல்லி ஆளமாட்டீர்; பின்னர் ஒன்று தருவதும் இல்லை, எம்மை ஆட்கொண்டீரே ஒழிய எதுவும் உமக்கு வேண்டியதும் இல்லை; எதுவும் எமக்குத் தருவதும் இல்லை, எதுவும் நீர் சொல்வதும் இல்லை; உம்மையன்றி வேறு யார் (உதவுபவர்) உளர்!

உம்மீது அன்பு வைத்து உமது திருவடிக்குப் பணி செய்யும் தொண்டர் உம்மிடமிருந்து பெறுவதற்கு உம்மிடம் என்ன இருக்கின்றது! உமது ஆரமோ பாம்பு; நீர்

* பதிக எண்.

...ழ்வதோ ஆர் ஊரோ! (ஆரூர்); ஒற்றியூர் (ஒற்றி வைத்து வி...டியார்ல்) அது உமது ஊர் அன்று, உமது ஊரோ ...(ு); ...டையோ தோல்.

## (iii) இவரலா தில்லையோ பிரானுர் என்று ஏசாமல் ஏசினது [*14]

பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்—பித்தர்போலிருந்து ...மை வேண்டாராயிருந்தால் என்ன! உடனே அருள் புரிந்து பின்னை ஆகட்டும் என்று இவரிருந்தால்தான் என்ன! (பதிகம்பாடி அப் பதிகத்தைப்) பெற்றபோது மகிழ்ந்து, பதிகம் பாடாவிட்டால் இகழ்வது இவர் தன்மையாய் இருந்தால் என்ன! பலரையும் ஆட்கொண்டு, பின்னர் இரங்கி ஒரு பேச்சும் பேசாதிருப்பாரானுல் தான் என்ன! எது சொல்லிக்கேட்டாலும் உடனே பிரிந்து ஓடிப்போவதே இவர் தன்மையாயிருந்தால் என்ன! நம்மவர்—பிறர், நன்றிது—தீது என இவர் விளக்காவிடில் என்ன! வெண்ணீறு தவிர வேறென்றும் பூசா விரதத்தினராய் இவர் இருந்தால் என்ன! மெய்யர்போல் நடித்து இவர் பொய் சொல்வதாயிருந்தால்தான் என்ன! இவர் பிணம் படு காட்டில் ஆடுபவராயிருந்தால் என்ன! யாது சொன்னுலும் பிழைத்ததைப் பொறுத்து ஒன்றும் தாராவிடில்தான் என்ன! கட்டுப்படுத்தி ஆட்கொண்டு (அல்லது பிறவிப்பிணி நீங்க ஆண்டு) நான் செய்வதற்கு ஒரு தொண்டும் ஈந்திலராகில் தான் என்ன! பெருமையாகப் பேசிச் செய்வதெல்லாம் சிறுமையதாயிருந்தால்தான் என்ன, நான் பேசின பேச்சை இவர் பொறுக்காவிட்டால்தான் என்ன—இங்ஙனம் இவர் எத்துணைத் திருவருள் புரியாதிருந்தாலும்—பிரானுர் இவரலா தில்லையோ!

## (iv) இவர்க்கு ஆட்படோம் என்றது [*18]

பெருமான் அரையிற் கட்டுவதும் பாம்பு, ஆரமாக அணிவதும் பாம்பு என்று தெரிந்திருந்தாலும், பாம்பாட்டிச்

பதிக எண்.

சீவனம் செய்பவர் இவர் என்று தெரிந்திருந்தாலும், வேதியர் செய்யும் வேள்வியில் அவி உண்பவர் இவர் எனத் தெரிந்திருந்தாலும், மான்தோலை உடுத்துப், புலித்தோலைத் தோளில் இட்டு, யானைத் தோலைப் போர்ப்பவர் இவர் என்று தெரிந்திருந்தாலும், குறப்பெண்ணைத் தம்மகனுக்கு மணவாட்டியாகக் கொண்ட ஊக்கமுள்ள தரும சீலர் இவர் என்பது தெரிந்திருந்தாலும், செத்தவர் தலையிற் பலி ஏற்பது தான் இவருடைய செல்வமும் தவத்தொழிலும் என்பது தெரிந்திருந்தாலும், நெஞ்சத்துள் இருக்கும் இவர் வானிலும் செல்வார் என்பது தெரிந்திருந்தாலும், இவர்க்குச் சொந்த ஊர் கிடையாது, ஒற்றிவைக்கப்பட்ட ஒற்றியூர் தான் ஊர் என்று தெரிந்திருந்தாலும், நாம் இவர்க்கு ஆட்பட்டிருக்கமாட்டோம்.

### (v) 'கோடி' என்னும் தலத்தில் இறைவன் தனியாய் இருப்பதைக் கண்டு வருந்தியது [*32]

கோடிக் குழகீர் !

கடற்காற்றே கொடிதாய்க் கரைமேல் அடிக்கின்றது; அயலில் குடியிருப்பார் யாரும் இல்லை; இருந்தால் குற்றமாகுமா! உமக்கு ஆர் துணையாக இங்கு இருந்தீர்; கொடியேன் கண்கள் உமது இந்த நிலையைக் காண என்ன பாபம் செய்தனவோ! ஊர் ஒற்றியூர் - ஒற்றி வைக்கப்பட்ட ஊர்- என்ற குறைபாட்டினலோ, ஆரூர்-ஆர் ஊரோ-என்ற ஐயப்பாட்டினலோ அவ்வூர்களை விட்டு அகன்று இங்கே வந்து விட்டீர்; எக்காரணத்தால் தனியே இக் 'கோடி'யில் வீற்றிருக்கின்றீர்! காடோ பிரமாதமாய் (பயங்கரமாய்) இருக்கின்றது; தேவி அஞ்சும்படி ஆந்தைகளும் கோட்டான்களும் மரப்பொந்திலே ஒன்றுகூடி ஒருபாற் சூழற, மிக்க பொல்லாதவரும் கொடியவருமான வேடர்கள் ஒருபாற் சார, இக் கோடியில் (தனியே) வீற்றிருக்கின்றீரே!

பலிகொள்ளும் இடத்திற் குடி ஒன்றும் இல்லை; வேடர்கள் பலர் கொடியவர்கள் கரையில் வாழ்கின்றார்கள்; இங்கே எப்படியோ அன்பாய்க் கோயில் கொண்டீரே.

---

* பதிக எண்.

முன்பு பரவையின் (கடலின்) வயிற்றிற் பிறந்த நஞ்சை உண்டு அபகாரம் செய்துவிட்டோமே—என எண்ணியோ, இப்போது "பரவை" எனப் பெயர் கொண்ட அவளுக்கு உபகாரம் செய்தீர்; செய்ததுடன் பரவை (கடல்) ஓரத்திலும் தனியாய் அக் கடலுக்குத் துணையாகக் கோயில் கொண்டீர்;

பாகத்தில் ஒரு தேவியைக் கொண்டீர்; வேறு பத்திரமான இடம் இல்லாத காரணத்தால் கங்கையாளும் உமது ஆகத்திலேயே ஓரிடம் கொண்டுள்ளாள்; நீரோ (காடுகாள்) வனதேவதையுடன் இந்தக் கோடியிற் கோயில் கொண்டுள்ளீர்.

தேவியையும் ஒருபாகத்தில் வைத்துக்கொண்டு, இரவே துணையாகத், தனியாய் இருக்கின்றீரே! (எனக்கு அச்சமாயும் வருத்தமாயும் இருக்கின்றது).

## (vi) அகப்பொருட்டுறையில் அசதியாடினது [*36]

பைஞ்ஞீலி ஆரணீய விடங்கரே!

நீர் சூடுவது கொன்றை; உம் ஊர் காடு; உமது கையில் ஓடு; நீர் அணிவது எலும்பு; இந்தக் கோலத்துடன் என்ன செய்யப்போகின்றீர்; உம்மீது காதல் கொள்பவர் உம்மிடத்திருந்து பெறக்கூடியது யாதுதான் உளது?

மாதர்களின் வளைகளைக் கவர்வதே உமது தொழில்; இரவிலும் இந்த (எனது) வீடுள்ள இடம் உமக்குத் தெரியுமே; இங்கே நீர் நடந்து வரவும் கூடுமே.

கையில் ஒரு பாம்பு; அரையிற் கட்டியுள்ளது ஒரு பாம்பு; கழுத்தில் ஒரு பாம்பு; இவை ஒருபுறம் தாழ்ந்து தொங்கத், தேகம் எங்கும் நீர் திருநீற்றைப் பூசியுள்ளீர்;

வேதத்தை ஓதுகின்றீர்; பக்குவமாக, சிங்கார கோலத்துடன் நின்று எமது ஊர் பைஞ்ஞீலி என்கின்றீர். நீர் ஐயம் ஏற்பதின் காரணம்தான் ஏதோ! சொல்லியருளும்.

* பதிக எண்.

நீர் சுடுகாட்டில் பேயுடன் ஆடும் வழக்கத்தை விட்டொழிமின்; நீர் ஒரு பித்தரா என்னே!

தமிழ்ப் பண்பாடு தெரிந்தவர் தாமே நீர்; அங்ஙனமிருக்கச், செங்கண் பாம்பு ஒன்று முன்கையில் ஆட, எதிரில் வந்து நிற்கின்றீரே! ஏன் இப்படிச் செய்கின்றீர்? உமக்குப் பலி (ஐயம்) நாங்கள் கொடுக்கவும் மாட்டோம்; கொண்டு வந்து இடவும் முடியாது. பக்கத்தில் ஒரு பெண்ணோடு வந்து நிற்கின்றீரே; ஆதலால் நாங்கள் பலி கொண்டு வந்து இடமாட்டோம். நீர் நடமின்; இங்கு நில்லாதீர்.

## (vii) திருமுதுகுன்றப் பெருமானுடன் அசதியாடல் [*43]

முதுகுன்றரே!

அந்திப் பொழுதில் திரிந்து அடியாரும் நீருமாய் வீடுகள் தோறும், சந்திகள் தோறும் பலிக்குச் செல்வது தக்க காரியமா!

அடியாரும் நீருமாய் ஆடி அசைந்து வீடுகள் தோறும் பாடிச் சம்பாதித்த பொருள் எல்லாம் யாருக்காக, உமையாளுக்குத் தானே!

ஒரு மங்கையோடு இடுகாட்டில் நின்று நீர் பிரமாதமாய் ஆடல் செய்வது நன்றா!

அலுப்பு என்பதே அறியாதவரே! இப்பிறப்பில் உம்மை ஏத்துவார்க்கு இப்போதே அருள்புரியாமல் மறுபிறப்பில் அருள் செய்வதன் காரணம்தான் யாதோ!

ஏன் திசை திசையாய்த் திரிந்து பலி ஏற்கின்றீர்; இதைக் கண்டால் பிறர் என்ன சொல்வார்; இனிப், பக்தியுடன் பலி இடுவாரிடம் மாத்திரம் பலி கொள்ளுங்கள்.

பலிகொள்ள ஊர் ஊராகப் பல ஊர் திரிந்தால் உமது மலரன்ன சேவடி நோவாதோ! உம்முடைய காதலி (தேவி) ஊர்கள் தோறும் அறம் செய்ய, நீர் பலியிடுமின் என்று வீடுதோறும் நிற்பது அழகா! இஃது என்ன கூத்து!

---

* பதிக எண்.

நாய் குழைத்து நிற்கச் சென்று, வீட்டு வாசல்களிற் பலி கொள்ளப் போகின்றீரே; இது உமது வாழ்க்கைக்கு அழகா! இதுவும் ஒரு வாழ்க்கையா!

தொண்டர்கள் உம் புகழைப் பாடுகின்றார்கள்; தேவர்கள் உம்மை ஏத்துகின்றார்கள்; நீரோ திரிந்து திரிந்து வீடுகள் தோறும் பலிக்குச் செல்கின்றீர்! இது பான்மையா! (பண்பா)! மனம் நைந்து உம்மை விரும்பி வேண்டுவோர்க்கு நாளை ஆகட்டும் என்று நீர் சும்மா இருந்தால் அவர்கள் இறந்தபின் நீர் என்ன செய்யக் கிடக்கின்றது.

## (viii) ஏசி அசதி ஆடல் (44*)

1. இமவான் மகள் ஒருத்திக்குத்தான் எம்பிரானுடைய திருமேனியிற் கூறு(பாகம்) கிடைத்தது போலும். வேறு ஒருவருக்கும் அவரது திருமேனியிற் பங்கு உண்டு என்று கூறுதற்கு இல்லை போலும்!

2. தேவியின் கருணைத் திருவுள்ளம் - புனித மனம்- அஞ்சித் தடுமாற, மதயானையின் தோல்தானு எம்பிரானுக்கு அகப்பட்டது போர்ப்பதற்கு! வேறு ஆடை ஒன்றும் கிடைக்கவில்லையா!

3. அங்கையிற் கொள்வதற்கு எரியன்றி வேறு ஒன்றும் கிடைக்க இல்லையா!

4. கையிற் பிடிப்பதற்கு பாம்பன்றி வேறொன்றும் கிடைக்க இல்லையா! அது கடித்தால் விஷம் ஏறிவிடுமே என்று அஞ்சுகின்றேன்.

5. சுடலை நீறுதானு பூசும் சந்தனமாக எம்பிரானுக்குக் கிடைத்தது!

6. சுடலைக் குறுங்காடு புதர்க்காடுதானு ஆடுதற்கு அரங்கமாக எம்பிரானுக்குக் கிடைத்தது!

7. முல்லை நிலத்துக் கேவலம் வெள்ளை மாடு தானு எம்பிரானுக்கு ஏறிச் செலுத்தக் கிடைத்தது! வேறு ஒன்றும் கிடைக்கவில்லையா!

* பதிக எண்.

8. பாடுதற்கு மறை (வேதம்) அன்றி வேறு ஒன்றும் கிடைக்கவில்லையா!

9. இளம்பிறை யன்றிச் சூடுவதற்கு வேறு ஒன்றும் கிடைக்கவில்லையா எம்பிரானுக்கு!

10. தெரிந்ததைக் கூறித் தம்மைப் போற்றி நின்றவர்களின் துன்பத்தை எம்பிரான் களைந்தபோதிலும். அவரைப் பேயன், பித்தன் என்பார்கள் உலகோர்!

## (ix) நாகைக்காரோணத்துப் பெருமானோடு அசதி ஆடல் (*46)

நாகைக்காரோணத்தில் வீற்றிருக்கும் பெருமானே!

1. தேவியுடன் எருதேறிப் பூதங்கள் இசைபாட இடு பிச்சை வாங்குவதற்காக, நடு உச்சிப் பொழுதின் கொடுமையில், பல வீடுகளிற் புகுந்து திரிகின்றீர்; எனக்குப் பட்டாடைகளும் சந்தனுதிகளும் கிடைக்கும்படி செய்யாது சும்மா நீர் இருப்பது என்ன வஞ்சனை! கடல் விஷத்தை உண்ட மயக்கம் ஓரிடத்தில் இருக்க ஒட்டாமல் உமது புத்தியைக் கலக்குகின்றது போலும்.

2. செத்தவர்தம் எலும்புகளை அணிந்து, மாட்டின் மீது ஏறித் திரிவீர்; உம்மிடத்தில் உள்ள செல்வப் பொருள்களை மறைத்து வைத்துக்கொண்டீர்; என்னைக் கவனித்து ஒருநாள் கூட இரக்கம் கொள்ளமாட்டீர்.

3. உம்முடைய படர் சடைகளையும் பாம்புகளையும் காட்டி என்னை வெருட்டி வேஷம் போட்டால் நான் எப்படி உம்மை அணுக முடியும்! அதனால் பலகாலும் அலைகின்றேன்.

4. இள ஆமையைப் பூண்டு, விடை ஏறிப் பொல்லாத வேஷங்களைப் பூண்டு எல்லாரும் காணும்படி இச்சக (முகஸ்துதி) வார்த்தைகளைப் பேசிப் படுதலையிற் பலி கொள்ளும் வழக்கத்தை நீர் விடமாட்டீர் போலும்.

---

* பதிக எண்.

5. மண்ணுலகு, விண்ணுலகு எல்லாம் உம்மதே ஆட்சி; தேவி, குழந்தை முருகன் இவர்களை நான் நாடேன்; பெருவயிற்றுக் கணபதிக்கு விஷயம் ஒன்றும் தெரியாது; ஆகையால், நீர் சும்மா இருப்பது நீதியோ; சொல்லுவீராக. என்னுடைய சுக நிலைக்கு வேண்டியவற்றை நீர் தாரீரே யாகில் உமது திருமேனி வருந்தும்படி உம்மைப் பிடித்து வருத்துவேன்; அதனால் பின்பு என்னை இரக்கமில்லாதவன், கொடியன் என்று சொல்லாதீர்.

6. நீர் நீதிமான்; மாநிதியம் (வேண்டிய பொருள்) தருவேன் என்று, தரவல்லவர் போல என்னை ஆண்டீர். தந்திரமாய்ப் பேசிக் கீழ்வேளூருக்குப் போய்ப் புக்கிருந்தீர்; உமது தந்திரத்துக்கு நான் ஆளாவேனோ, நீர் சொன்னது சத்திய மொழியாயிருந்தால் பொற் சுரிகை, பொற்பூ, பட்டிகை, கறி, நெய்சோறு எல்லாம் எனக்கு வேண்டும்;

7. ஒரு வார்த்தையும் பேசாது சும்மா இருக்கின்றீர். என்னை வாழ்விப்பன் எனக் கூறி ஆண்டீரே; நான் உமது வழியடியேன் அன்றோ! நீர் மிக்க செல்வம் உள்ளவர், வறுமையாளர் அன்று; திருவாரூர்த் திருக்குளத்தில் எடுத்த நிதியில் (12,000 பொன்னில்) மூன்றில் ஒரு பாகம் இப்போது எனக்கு வேண்டும். நீர் தராவிட்டால் ஒரு போதும் உம்மை அடி எடுத்து வைத்துப் போகவிடேன்.

8. செருக்குடன் பேசும் மொழிகளைப் பேசித்திரிந்து, வெறுக்கும்படியான செயல்களைச் செய்து வீண் பேச்சுப் பல பேசி உமது இஷ்டப்படி திரிகின்றீர்.

9. *மாதர்களை நீர் மயல் செய்தல் (மயக்குதல்) தவச் செயலா! அல்லது தகுதியான செயலா! (காதலா!)

*10. வீண் பேச்சுக்கள் பேசி மடவார்தம் கைவளை களை நீர் கொண்டால், இமவான் மகள் உமது செய்கையைப் பொறுத்திருப்பாளா! சொல்லும்.

* அகப்பொருட்டுறையது.

11. துன்பத்தையும் இன்பத்தையும் கலந்து அநுபவிக்கச் செய்தீர். ஜீவனத்துக்கு வழியை நான் உம்மைக் கேட்டால் நீர்போய் ஒளித்துக்கொள்கின்றீர்.

12. சடை தாழவும், அழகாக வீணை ஏந்தியும், வீதியில், விடைவாகனத்தில் வருவீர், பயனற்ற அடிமையை மகிழ்ந்தீர்.

(x) திருமுருகன் பூண்டியில் எதற்காக இருந்தீர் எம்பெருமானே என்றது (*49)

1. எம்பெருமானே! வேடுவர் வழிபறிக்கும் இடம் திருமுருகன் பூண்டி. இத்தகைய இடத்தில் ஏன் தேவி யொடும் இருந்தீர்.

2. ஊர் இடு பிச்சை கொள்வதன்றி உண்பதற்கு வேறு வழி தெரியாதவர் நீர்; தேவியுடன் (வேடர்கள் ஆறலைக்கும் இடமாகிய இந்தத்) திருமுருகன் பூண்டியில் குடி இருந்து உலவும் தீரம் உடையவராயிருந்தால் ஏன் (வேடுபறி சமயத்தில் எனக்கு உதவாது) இருந்தீர்.

3. முசுக்கள் (கருங்குரங்குகள்) போன்ற பல வேடர்கள் வாழும் முருகன் பூண்டியிற் கீழ்மை அழியப் (பெருமையாக) நீர் பிச்சை ஏற்றுக்கொண்டு எதற்காக இருக்கின்றீர்.

4. நீர் மூடவர் அல்லீர்! வேறு தடையும் இலாதவர் தாமே! ஏறிப் போவதற்கும் இடபம் (ஏறு) இருக்கின்றதே; பின்பு ஏன் (இந்த ஆபத்தான) முருகன் பூண்டியில் இருக்கின்றீர்.

5. இட்ட பிச்சை உண்பவர்தாமே நீர். பின் ஏன் இந்த (ஆபத்தான இடமாகிய) திருமுருகன் பூண்டியில் இருக்கின்றீர். (வேறு எங்கேனும்போய்ப் பிச்சை ஏற்கலாமே).

6. முருகன் பூண்டியாம் இவ்வூரின் எல்லையை (வழிப்பறிகாரர்களிடமிருந்து) காப்பது என்பது இல்லையானல், நீர் ஏன் இங்கு வாசம் செய்கின்றீர்!

* பதிக எண்.

7. இங்கே வருவோர்களை வேடுவர் மோதி அடித்து, ஆடைகளைப் பறிக்கின்றார்கள். இப்படிப்பட்ட இடத்தில், என்ன காரணமாக, என்ன காவலுடன், நீர் இருக்கின்றீர்.

8. (ஆறலைத்து ஆடையைப் பறிப்போர்களாகிய) முரட்டு வேடர்கள்கூடி வாழ்கின்ற இந்த முருகன் பூண்டியை விட்டு (வேறு பத்திரமான இடத்துக்குப்போக) உம்முடைய எருதின் கால் ஒடிந்துபோகவில்லையே, நன்றாய்த்தானே இருக்கின்றது; பின்னை ஏன் இந்த (ஆபத்தான) ஊரில் வசிக்கின்றீர்.

## (xi) திருவாரூர்ப் பெருமானே ! எனது (பிறிதொரு) கண்ணையும் தாராவிட்டால் நீர்தான் வாழ்ந்துபோம் என்றது [*95]

1. திருவாரூரீர்—ஆளாயிருக்கின்ற அடியார்கள் தங்கள் துயரத்தை எடுத்துச் சொன்னால் நீர் சும்மா இருக்கின்றீர்; நான்உமக்கு முழுஅடிமை; என்னை நீர் விற்கவும் விற்கலாம்; ஏனெனில் நான் உமக்கு ஒற்றிவைக்கப்பட்டவன் அன்று. நான் ஒரு குற்றமும் செய்ததில்லை; அப்படியிருக்க என் கண்ணை ஏன் குருடாக்கினீர்; உமக்குத்தான் அதனால் பழி ஏற்படும்; நீர் மற்றைக் கண்ணையும் தராவிட்டால் நீர் தாம் வாழ்ந்துபோம்.

2. என்றும் ஒழுக்கம் தவறாது பாடும் அடியார்கள் கண் தெரியாது குன்றிலே முட்டிக் குழியிலே விழுந்தால் நீர் தாம் வாழ்ந்துபோம்.

3. அன்புடைய அடியார்கள் தம்முடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லி முறையிட்டால் அவர்களைத் துன்புறுத்தி மறுபிறப்புக்கு ஆளாக்குவதானால் நீரே வாழ்ந்து சுகமாயிரும்.

4. உமது திருப்புகழை அழகாகப் பாடும் அடியார் தமது கண் தெரியாமல் உம்மிடம் வந்து “எம்பெருமானே

* பதிக எண்.

முறையோ" என்று பணிந்தால், வறுமையால் மெலிந்து வாடினால், நீர் சும்மா இருக்கின்றீர்—நீர்தாம் வாழ்ந்திரும்.

5. மாயமான இப் பிறவியைக் காட்டினீர், உம்மை மறவாத மனத்தையும் தந்து கண்ணைப் பிடுங்கிக்கொள்வதாயிருந்தால் நீர் தாம் வாழ்ந்துபோம்.

6. நல்ல குலத்திற் பிறந்தோம்; உம்மை இகழாது ஏத்துகின்றோம். பாடும் பக்தர்கள் நாங்கள்; நாங்கள் வழி தெரியாமல் துன்புற்றால் உமக்குத்தாமே பழி; நீர்தாம் சுகமாய் வாழ்ந்திரும்.

7. இருந்தும், நின்றும், கிடந்தும் உம்மை இகழாது புகழ்கின்றோம்; அத்தகைய நாங்கள் வருந்தி வந்து உம்மிடம் ஒரு வார்த்தை முறையிடும்படி நீர் வைத்தால் நீர்தாம் வாழ்ந்துபோம்.

8. உலகில் உள்ள ஊரெலாம் அறிய என் கண்ணைக் கொண்டீர்; அதனால் நீர்தாம் பழிபட்டீர்; வாழ்ந்துபோம் நீரே.

9. நீர் என்னைக் கருதி ஆட்கொண்டபடியால், நான் காய் வேண்டினாலும் நீர் கனியன்றோ கொடுக்கவேண்டும்; பேயொடு நட்புக்கொண்டாலும் அதனின்றும் பிரிதல் வருத்தம் தரும் என்பார்களே! நீர் என்ன செய்தாலும் நான் உம்மைவிட்டுப் பிரியேன்.

10. நாய்போலத் திரிந்து, உமக்கு ஆட்பட்டவர் உம்மிடம் வந்து முறையிட்டால் நீர் வாய் திறவாது இருக்கின்றீர்! நீர்தாம் சுகமாய் வாழ்ந்திரும்.

பிற

1. உம்மீது அன்பு வைத்து, மகிழ்ச்சியுடன் உம்மைப் பலவாறு பிதற்றிப் போற்றி மலரிட்டுப் பூசித்து உம்மை ஏத்தும் அடியார் காத்திருக்க, நீர் பிச்சை எடுப்பது அழகா!

2 அடியார்கள் உம்மிடம் வேண்டுதற்குக் கூச்சப்பட்டு இருந்தாலும், கூச்சமின்றி வேண்டினாலும், அவர்

களுடைய குறிப்பறிந்து அருள்கின்றீரில்லை; உம்மொடு பிணங்கி இருந்தாலும் உமது தன்மையை உணர முடியவில்லை.

3. நீர் திரிந்து திரிந்து ஏற்கும் பலிக்காக வெண்டலையைக் கையில் ஏந்தி நிற்க அதில் மாதர்கள் பலிபெய்யக் கொள்வது தக்கதன்று.

4. நான் என்ன சொல்லுதற்குளது! நீர் உமை நங்கையை அணைந்து இடது பாகத்தில் வைத்ததற்கு யாரேனும் கலகம் செய்தவர் உளரோ (ஒருவரும் இல்லை என்றபடி).

5. நீர் காட்டில் ஆடல் வைத்துக்கொண்டால் உம்மை நான் பரவுவது எங்ஙனம்?

6. பிறையுடன் (அதற்குப் பகையான) பாம்பை அதனருகே நீர் வைப்பது பண்பா!

7. மாதர் நல்லார் வருந்தும் நிலை உமக்குத் தெரிந்தது தான்.

## 129. சுந்தரர்—இறைவனிடம் கேட்கும் வேண்டுகோள்களும், செய்யும் முறையீடுகளும் [141]

### (i) பொதுவான வேண்டுகோள்கள்

பெருமானே! எனை அஞ்சலென்றருள்; ஆர் எனக்கு உறவு உனையன்றி; என்னைக் குறிக்கொண்டருளுக; உனது ஆளாக உன்னை வந்தடைந்துள்ளேன் அடியேன்; நீ என்னை ஏன்றருளுக; ஊனமாயின தீர்த்தருளுக; மறவாது உன்னைப் பாடப் பணித்தருளுக; நான் உய்யும்படியான வழியைச் சொல்லியருளுக; மானார் வலையிற் படாமல் உய்யும் வழியை உரைத்தருளுக; தவநெறியைத் தந்தருள்; உனது திருவருளைத் தந்தருள்; தரிசனத்தைச் சிறிதேனும் தந்தருள்; திருவடியைக் காட்டியருள்; பிறவாமை வேண்டுகின்றேன். நரகம் புகாமை வேண்டுகின்றேன்; நம்ன்தமர்

நலியாமை வேண்டுகின்றேன்; நோய்பிணி வாராமை வேண்டுகின்றேன் ; பிறந்தார், நடந்தார், உடுத்தார், இறந்தார் என்னும் பேச்சுடைய உலகச் சூழலினின்றும் உய்யும் வழியைப் போதித்தருளுக ; மணக்கோலமே பிணக்கோலமாம் வாழ்வு இது. பொன், முத்தம், ஆடை, ஆபரணம், பூணாரம், பட்டு, பொற்பூ, பொற்சுரிகை, காசு, பட்டிகை, கஸ்தூரி, கந்தம், சாந்து, மணிவயிரக்கோவை, கறி, நெய் விரவு சோறு, உடல் விருத்தி, காற்றுப்போல வேகமாய்ச் செல்லவல்ல குதிரை இவை எலாம் வேண்டும். திருவீழிமிழலையில் சம்பந்தருக்கும் நாவுக்கரையருக்கும் காசு அருளிச்செய்தீர்; எனக்கும் அவ்வாறு அருளுக ; பரவித் தொழுவார் பெறும் பண்டத்தை எனக்கும் அருளுக.

சண்டி, கண்ணப்பன் இவர்க்கெலாம் அருள்புரிந்து ஏற்றம் தந்தீர். அருச்சுனன், பகீரதன், பல பக்தர் சித்தர்களுக்கு அவர்கள் வேண்டியதைத் தந்தருளியுள்ளீர். அடியேற்கும் அவ்வாறு அருளவேண்டும்.

ஐம்பொறிகளையும் வென்று உன் திருவடியைப் பெறும் பாக்கியத்தைத் தந்தருளுக.

### (ii) வரலாற்றுச் சம்பந்தமான வேண்டுகோள்கள்

1. குண்டையூரில் நெல்லுப் பெற்றேன் ; அது திருவாரூருக்கு வந்துசேர ஆள் வேண்டும். உதவி அருளுக, பெருமானே !

2. **கண்ணிழந்த நிலையில் கேட்ட வேண்டுகோள்கள் :** பரஞ்சுடரே ! இரவும் பகலும் உனது பணி செய்வேன்; உனது திருப்புகழை விருப்புடன் பாடிப் பரவுவேன்; அடியேன் படுதுயர் களையாய் ; உற்றநோய், உறுபிணி தீர்த்தருளுக ; ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கையை ஒழித்து நீ அருள்புரிவாயாக; என் கண்ணுக்கு ஊற்ற ஒரு மருந்து கூறுக. என்னுடைய கண்ணொளியை மறைப்பித்ததுதான் நீதி என்றால், தக்க ஊன்றுகோலாவது கொடுத்தருளுக.

## (iii) முறையீடுகள்

1. திருமால், இந்திரன், அக்கினி, யமன், வருணன், வாயு, சூரியன், சந்திரன், வானவர், இயக்கர், கின்னரர், வசுக்கள், ஐராவதம், காமதேனு, மார்க்கண்டேயர், மாதவர், பகீரதன், பரசுராமன், அருச்சுனன், தானவர், திரிபுரத் தலைவர் மூவர், ராவணன், சண்டேசர், கண்ணப்பர், திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சாக்கிய நாயனார், கணம்புல்லர், மூர்க்க நாயனார், திருநாளைப்போவார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், சிங்கம், புலி, வானரம், நாகம், சிலந்தி—இவர்கள் எல்லாம் உன்னை ஓரொரு வழியில் வழிபட அவர்களுக்கு நீ அருள் புரிந்துள்ளாய். அவ்வருளைக் கண்டு நானும் உன்னை ஆதரித்து வழிபடுகின்றேன்; அருள் புரிதி.

2. இந்த மானுடப்பிறவி வாழ்வு எனக்கு வேண்டாம்; ரத்தம், இறைச்சிக் குப்பை, மலக்குகை, மாயக்கூரை ஆகிய இவ்வுடலும், வாழ்வும் நான் வேண்டேன்.

3. வாயில் வந்ததெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தினாலும் வாயைத் திறந்து, உண்டு, இல்லை என்று ஒரு வார்த்தை சொல்லமாட்டீர்; இப்படி இருந்தால் எம்மை ஆள்வது எப்படியோ அறிகிலேம்.

4. என்னைக் குருடாக்கி விட்டாயே; வீட்டில் நான் ஒன்று சொன்னால், பெண்டுகள் 'ஏ! குருடா! எங்களை அழையாதே, போ' என்றால், என்னால் அவ் வசையைப் பொறுக்கமுடியாது, முகத்திற் கண் இழந்து நான் எங்ஙனம் வாழ்வேன்.

5. ஐவரும் (ஐம்பொறிகளும்) என்னை ஆட்ட ஆடி அழுந்துகின்றேன். எனக்கு உய்யும் வழியை ஓதி அருள்வீராக.

6. மாதர் வலையிற்பட்டு மதிமயங்கி அறிவிழந்தேன், நெறி மறந்தேன், உன்னை மறந்தேன்.

7. பெருமானே! உன்னை நினைவாரை நினைத்தருளுக.

## 130. சுந்தரர் கண்டுதொழ விரும்பியவை [142]

சிவபிரான் சூடியுள்ள கொன்றை மாலை, கொக்கிறகு, மத்தமலர், இளம்பிறை, அரவு, அவருடைய சடைகள், எண் தோள்கள், நீலகண்டம், அவர் திருக்கரத்தில் ஏந்தியுள்ள எரி, மழு, அவரது விடை வாகனம், அவரைத் தொழுது வணங்கும் தொண்டர் குழு, அவரது பாகத்தில் விளங்கும் தேவி, அவர் தில்லையில் ஆடும் திருக்கூத்து முதலியவற்றைக் கண்டு தொழுவது என்று கொலோ—எனக் கவலுகின்றார் சுந்தரர்.

## 131. சுந்தரர் தம்மைத்தாமே இழித்துக் கூறும் சொற்கள் [143]

அடிநாய், அறிவில்லேன், இழுதையேன், ஏழையேன், கட்டனேன், கண்ணறையன், கொடும்பாடன், சழக்கனேன், செடியன், தீயன், நாய், நொய்யேன், பாவியேன், *பெட்டன், பேதையேன், பொய்யடியேன், மதியில்லா ஏழையேன், மூடனேன், மூர்க்கனேன்—என்பனவும் இவை போல்வன பிறவும்.

## 132. சுந்தரர் தமது குறைகளை எடுத்துக் கூறுதலும், வாழ்க்கை நிலையாமையைக் குறித்து அஞ்சுதலும் [144]

அரனே எனச் சொல்லமாட்டாத அறிவிலி நான்; நமன் வருகையை நினைந்து அஞ்சுபவன்; வஞ்சனை மனத்தன், செல்வப் பொருளின்மீது மிக ஆசை கொண்டவன். உற்றபோதல்லால் உறுதிப் பொருளை உணராதவன்; ஊனைப் பெருக்கி உன்னை† நினையாதிருப்பவன், ஐம்புலன்களும் என் வசப்படாதன; அவைகளுக்கு அடிமைப்பட்டவன்; கொடுமைகள் செய்பவன்; இரப்போர்க்கு ஈயாதவன்;

---

* பெட்டன் - பொய்யன், ஆசைப்படுபவன்.

† உன்னை - என்பது இறைவனை.

கண்டதை எல்லாம் யாமுறுங் கொடியன்; கல்லினும் வலிய மனத்தினன்; உன் புகழைக் கல்லாமல் வேறு பலவற்றைக் கற்றவன்; கள்ளமே பேசிக் குற்றம் செய்பவன்; குற்றத்தையும், செற்றத்தையும் விடமுடியாதவன், உன்னைச் சார்ந்தவரொடு சாராதவன்; சுந்தர வேடத்தைப் பூண்டு துரிசுகளை (குற்றங்களைச்) செய்பவன்; நன்னெறியைக் காணாதவன்; நெறி ஒன்றும் அறியாதவன்; உம்மைப் பயிலாதவன்; உம்மைப் பணியும் வழியை அறியாதவன்; நான் பாவி, பல பாவங்கள் செய்தவன்; மனத்தாற் பிழையுடையவன்; பயனிலாப் பேச்சே பேசுபவன்; பொய்யன்; மடவாரால் வந்த வினையின் வசப்பட்டவன்; மந்திரம் ஒன்றும் அறியாதவன்; மனைவாழ்க்கையை மகிழ்ந்தவன்; மிண்டர்க்கு மிண்டு பேசுபவன்; உன் சேவடியைச் சிந்தியாத மூர்க்கனாய்க் காலம் கழித்தவன்; ஆசைகளையும் கோபத்தையும் விட முடியாதவன், என் இஷ்டப்படி திரிபவன்.

## 133. சுந்தரர்—தமது நெஞ்சொடு கிளத்தல் [145]

திருப்புறம்பயம் என்னும் தலத்தைக் காணுமுன்னே நெஞ்சினுற் றெழுந்து பாடின பதிகம் 'அங்கமோதி' எனத் துவக்கும் பதிகம் (35):

"புறம்பயம் போற்றச் சேரும் உள்ளம் மிக்கெழ மெய்ப்பதிகம் பாடிச் செல்கின்றார்"—பெரியபுரா. ஏயர்-95.

(1) நெஞ்சமே!

நம்முடைய பாவத்தைத் தீர்க்கும் சிற்றம்பலத்தெம் பெருமானை நாம் அடைந்துள்ளோம்; ஆதலினால் நமக்கு எத்தாலும் குறைவில்லை. கவலைப்படாதெழு; புறம்பயம் தொழப் போவோம்; கள்ளத்தனத்துடன் நீ செய்த தீய பாவங்கள் தொலையும்படி தெளிவுடன் புறப்படு, புறம்பயம் தொழப் போவோம்; உலகெலாம் ஆளினும், படைகளை ஆளினும் அந்தச் செல்வமும், பெருமையும் தேரையின் வால்போலத் தேய்ந்தொழியும்; ஆதலால் இறைவனைப்

புறம்பயத்திற் றொழப் போவோம், வா; உனது ஊர், உனது சுற்றம், நீ பெற்ற மக்கள், உனைச் சார்ந்த பெண்டிர், உன் நிதி, உன் வாழ்க்கை இவைமீதில் உள்ள உன் நினைப்பை ஒழிப்பாயாக. நரையும் திரையும் வந்தபின்பு அறம் புரியலாம் என்பது முடியாத காரியம். முன்பு செய்தவினை இம்மையில் வந்து தாக்கும், ஆதலால் நீ புறம்பயம் தொழத் தயங்காது செல்க. மற்றொருவரை நான் பற்றுகக்கொண்டேனில்லை. ஆதலால் மறவாமல் எழு; புறம்பயம் தொழுவோம். இம்மையிலேயே நம் மலமெலாம் அறும், வல்வினை சேராது; தீய செயல்களை நீ ஒழிப்பாயாக.

(2) மனமே!

நீ வாடியிருந்து அழுது என் செய்யப்போகிறாய்; வினையை நொந்து என்ன பயன்! யாவரும் போற்றும் உத்தமனை உணர்வாயாக; திருத்தினைநகர்ச் சிவக்கொழுந்தைத் தியானிப்பாயாக. சிவன்பால் நல்லன செய்வாயாக; அவரது தூக்கிய திருவடியைப் போற்றுக. நமன்தமர் நம்மைச் செக்கிலிடும்போது அவர் தடுத்தாட்கொள்வார்.

(3) உள்ளமே!

ஆடித் திரியாதே! ஊன்மிசை வைத்த பற்றினை ஒழிப்பாயாக.

## 134. சுந்தரர் வரலாறு [146]

வரலாறு நிரம்ப உள்ள பதிகம் 100

### 1, சுந்தரர் தமது பழைய நிலையைக் கூறுதல்: மண்ணுலகில் தோற்றம்

*சிவபிரான்தான் முன்பு என்னைப் படைத்தார். †நான் 'அணுக்கத் தொண்டு' அவர்க்குச் செய்தவன். நான்

* சிவபிரான் கண்ணாடியிற் பார்த்துத் தம்மைப் படைத்தழைத்தது.

† சிவபிரானுக்குக் கவரி வீசும் தொண்டு. "சுந்தரனை துணைக் கவரி வீசக் கொண்டார்"—அப்பர், 6-96-5.

அவர்க்கு உரியவன்; கல்லால் நிழற்கீழ் அவரைக் கண்டேன்; (கமலினி, அநிந்திதை காரணமாகக்) கட்டனேன் பிறந்தேன்; அவர்களுடைய கண் வலைப்பட்டு வருந்தி வினைக்கு ஆளானேன்; இனிப் பெருமானைக் கூடுவதெப்படி என்று வருந்திய என்மீது கவனம் வைத்து என்னை ஆண்டு கொண்டு 'வருந்தாதே நீ' என்றார் பிரானார். வாழ்க்கை நிலைத்தல் இல்லாத இம் மண்ணுலகில் என்னை நரனாக வகுத்தார். ஐம்பொறிகளின் வாயிலை அவித்துப் பெருமானுடைய திருவடியைச் சேரும் வழியை வேண்டுகின்றேன்.

## 2. சுந்தரருடைய ஊர், குலம் முதலிய

சுந்தரருடைய ஊர் நாவலூர்; அருமையான (சிவ) அந்தணர் குலத்தவர்; தந்தை சடையனார்; தாயார் இசை ஞானியார்; திருவாரூர்ச் சிவபிரானது பேரை (ஆரூரன் என்னும் பேரை)க் கொண்டவர்; அழகர்; நல்ல தேகக்கட்டு கொண்டவர்; நான்மறை, அங்கம் ஓதிய நாவர்; சீலம் உடையவர்; நீதி வழுவாதவர்; சங்கிலியாரை மணஞ்செய்து பின்னர்க் கண்ணிழந்த காலத்திற் சிறு வயதினர்தான்.

## 3. சிவபிரான் தம்மை ஆட்கொண்ட விதம்

பிரானார் மறையோதும் வாயினராய், வாயாடும் விருத்த வேதியராய் வந்தார். தாமே சிருஷ்டி செய்த அற்புதகரமான, பழமையான, ஓர் ஓலையைக் காட்டினார். "இவன் எனது அடிமை" என்று சபதம் செய்து உலகெலாம் அறிய வென்றார். இங்ஙனம் வென்று என்னை ஆட்கொண்டு உச்சிப் போதில் திருவெண்ணெய் நல்லூர் திருக்கோயிலில் மறைந்தருளினார்; தமக்கு மிக வேண்டியவன் என்று என்னை ஆட்கொண்டு மகிழ்ந்தார். இவ்வுலக மாயையிற் பட்டிருந்த என்னை, முன் நான் செய்திருந்த வல்வினையின் தாக்குதலை ஒழித்துப், பெருமான் என்னை வலிய ஆட்கொண்டார். எனக்குத் தாயும் தந்தையுமாகிச், சாதல், பிறத்தலைத் தவிர்த்துத், தமது பொன்னடிக்கே என்னைப் பொருந்த வைத்த கருணையாளர் இறைவர். வேறு எவரையும்

பணியாத வழிகாட்டி என்னை நேசத்தினால் தமது ஆளாகக் கொண்டார் இறைவர்.

### 4. பெருமானே! உனக்கு ஆளாய் விட்டேன் என்றது

(1) அத்தா! உமக்கு ஆளாய் விட்டேன்! இனி அல்லேன் எனச் சொல்லமுடியாது; நான் ஆட்பட்டது பொய்யன்று; பெருமானே; உமக்குக் குற்றேவல் செய்வேன்; உமது ஆணையால் உமக்கு அடிமை ஆயினேன்; இந்த இடர்ப் பிறவியிற் பிறந்து அயர்ந்த என்னை ஆண்ட அருமருந்து நீர்; நீர் என் மனத்தில் வந்து இடங்கொண்டு விட்டீர்; இனி எக்காரணத்தாலும் உம்மை நான் மறவேன்; "பெருமானே! உம்மை நான் எங்ஙனம் வந்து இனிக் கூடுவேன்" என்று நான்—கயிலையில் கூறின வார்த்தையைக் குறிவைத்து—இங்கே (இவ்வுலகில்) நீர் வந்து என்னை ஆண்டு 'நீ வீணாக வருந்தாதே' என்று எனக்கு ஆறுதலைத் தந்தீர். இந்த வீணையும் உகந்தீர்; உன்னை வாழ்விப்பேன் என்று கூறி உமக்கு வழியடிமையாம் என்னை ஆண்டீர்.

(2) என்னுடைய அறியாமையை அறிந்து, எனது கல்மனத்தைக் கசிவித்துத், திருவடி தரிசனத்தைத் தந்து, எனது துயரினை ஒழித்தவர் பெருமான். பொய் வழியிற் சென்று திரிந்த என்னை அங்ஙனம் போய் இடர்ப்படாமல் மெய்யாகவே வந்து என்னை ஆட்கொண்டார்.

### 5. 'வன்றொண்டன்' எனப் பேர்பெற்றது

பெருமான் அடியேனை ஆட்கொண்ட தினத்திற் சபையார்கள் முன்பு நான் வன்மையான (கடிய) பேச்சுக்கள் பேசின காரணத்தால் "வன்றொண்டன்" என எனக்குப் பேர் தந்து வாழ்வளித்தார்.

### 6. *தல யாத்திரை விசேடங்கள்

1. துறையூர்[13]: இத்தலத்துப் பதிகத்தில், 'தலைவா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே' எனப் பாடினர்.

---

* அவ்வத் தலப்பெயர்களின் அருகில் உள்ள எண் பதிக எண்.

2. திருஅதிகை [38]: 'பெருமானே! தம்மானை (தமது தலைவனை) அறியாத ஜாதியார் உளரோ; *நீ என்று அறியாமல் உன்னை மதியாது பேசிவிட்டேன்; உனது திருவடியை என் முடிமீது வைக்க மாட்டாயா—என்னும் கவலையுடன் ஆசையுடன் வாழ்கின்றவன் நாயேன். அங்ஙனம் இருக்க, உன்னை அணு அளவும் இகழ்ந்து பேசுவனோ நான் (பேசேன்—என்றபடி).

3. சீகாழி [58]: இங்கு ஆண்டவனுடைய தரிசனத்தைப் பெற்றார் சுந்தரர்.

4. திருவாரூர் [73]: இத் தலத்தில் தொண்டர்கள் தம்மை எதிர்கொண்டு அழைத்தபோது, அவர்களை நோக்கி, "ஆரூர்ப் பெருமான் எம்மையும் ஆள்வரோ" என்று பெருமானைக் கேட்டுச் சொல்லுங்கள்"—என வரும் ஒரு பதிகத்தை விண்ணப்பிக்கின்றார் சுந்தரர். இத் தலத்திற் பெருமான் "பரவை"யைச் சுந்தரருக்கு மணஞ்செய்வித்து ஆண்டுகொண்டார்; இத் தலத்தில்தான் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"—எனத் தொடங்கும் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தைச் [39] சுந்தரர் பாடியருளினார். திருத்தொண்டத் தொகை பாடின காலத்துக்கு முன்னரே சுந்தரர் தமது தந்தையை இழந்தார் என்பது அப்பதிகத்தில் 'அரனடியே அடைந்திட்ட சடையன்' என வருவதால் தெரிகின்றது.

5. திருக்கோலிலி [20]: பெருமானே! குண்டையூரில் நான் நெல் பெற்றேன்; என் மீது இரக்கம் வைத்து அடியேனுக்கு அந் நெல் (திருவாரூர் வந்து சேரும்படி ஆள்களைத் தந்தருளுக. பரவை படும் வருத்தம் உனக்கு நன்கு தெரியுமே; அவள் வாடி வருந்தா வழிக்கு நெல்லைக் கொண்டு

* திருஅதிகைக்கு அடுத்த சித்தவட மடத்தில் சுந்தரர் துயிலும்போது இறைவர் சுந்தரர் தலைமீது தமது திருவடியை அடிக்கடி வைக்க, 'நீர் யார் ஐயா சும்மா மிதிக்கிறீர்' என்ன, 'என்னை அறிந்திலையோ?' என்று கூறி இறைவர் மறைந்த வரலாறு இது.

வந்து சேர்ப்பதற்கு ஆள் இல்லாத குறையை ஆள் தந்து தீர்த்தருளுக.

6. திருநாட்டியத்தான் குடி [15]: கோட்புலி நாயனாரின் (மகள்) அழகிய "சிங்கடிக்குத் தந்தை நிலையில் உள்ளவன் நான்" எனக் குறித்துள்ளார் சுந்தரர் இத் தலத்துப் பதிகத்தில்.

7. வலிவலம் [67]: இங்கு ஆண்டவனுடைய தரிசனத்தைப் பெற்றார் சுந்தரர்.

8 திருப்புகலூர் [34]: இத் தலத்துப் பதிகத்தில்—புலவர்களை நோக்கிப் "புலவீர்காள்! திருப்புகலூர்ப் பெருமானைப் பாடுங்கள், இப் பிறவிலேயே உங்களுக்கு உணவும் உடையும் அவர் தருவார்" என்று போதிக்கின்றார் சுந்தரர் (தாம் இறைவனைப் பாடிப் பொன்பெற்ற காரணத்தால். இப் பதிகத்தில் (கோட்புலியாரின் மகள்) 'வனப்பகையின் அப்பன் என்னும் நிலையில் உள்ளவன் நான்'—என விளக்குகின்றார்.

9. திருப்பனையூர் [87]: இத் தலத்தில் இறைவனுடைய திருக்கூத்துத் தரிசனத்தைப் பெற்றார் சுந்தரர்.

10. திருப்பாச்சிலாச்சிராமம் [14]: இத் தலத்தில் பொன்பெறாத காரணத்தால் உள்ளம் புழுங்கி அழுங்கி "இவரலா தில்லையோ பிரானார்" என்று ஏசினது போலப் பாடியுள்ளார்: 'அடியார்களுக்கு எப்படி எல்லாம் உதவ வேண்டும் என்பது பாச்சிலாச்சிராமத்துப் பெருமானுக்குத் தெரியவில்லை. பித்தர் போல இருந்து அடியார்களை விரும்புகின்றார் இல்லை; விண்ணப்பித்தபோது உதவாமல் பின்னை அருள் செய்வோம் என்று வாளா இருக்கின்றார்; யாது சொல்லி விண்ணப்பித்தாலும் பாடலைப் பெற்றபோது மகிழ்கின்றார், பெறாவிடில் இகழ்ந்து புறக்கணிக்கின்றார்; பலரையும் ஆட்கொள்கின்றாரே ஒழிய அன்பாக ஒரு பேச்சும் பேசுகின்றாரில்லை; ஒரு பொருளும் தருகின்றாரில்லை; எது சொன்னாலும், விரைவில் நழுவிப்போய் விடுகின்றார், மெய் பேசுபவர்போல் இருக்கின்றார், ஆனால் பொய்யே செய்கையிற்

காட்டுகின்றார்; செய்த பிழைகளைப் பொறுத்து ஏதேனும் சொல்லார் என்பதே காணோம்; தமக்குக் கட்டுப்படும்படி ஆள்கின்றாரே ஒழியத் தொண்டினை ஏற்று அருள்புரிகின்றா ரில்லை, வேண்டியதை அருளாது ஆட்கொண்ட, பெருமை களைப் பேசிச் சிறுமைகளைச் செய்கின்றார். இங்ஙனம் பிரானை நான் பேசின பேச்சுக்கள் உண்மையில் ஏசினவும் அல்ல, இகழ்ந்தனவும் அல்ல; இவ் வுண்மை தெரிந்து நான் பேசின பேச்சை இவர் பொறுத்திலராகில் இவரலாது இல்லையோ பிரானார்' என்றெல்லாம் பாடியுள்ளார்.

11. **நாகைக்காரோணம்** [46—முதலிய]: **பொன்னும் பொருளும் கேட்டதும், பெற்றதும்**: [வேண்டுகோள் என்னும் தலைப்பு 129-(i) பார்க்க.] 'பெருமானே! கந்தம், ஆடை, ஆபரணம், நிதியம் எனக்கு நீர் கொடுத்தருள வேண்டும். *எல்லாம் தருகின்றேன் என்று பிரமாணம் நீர்செய்துள்ளீர். பாநிதியம் தருவேன் என்று கூறி ஆட்கொண்டீர்; எனக்கு எப்போது பொற்கட்டி தருவீர்''—என வேண்டுவார். பொன் கிட்டிய பின்னர், பொன்னைத் தந்து என்னைப் போகத்திற் புணர்த்த நன்மையினார் பெருமானார்; நான் வேறொருவரைப் பணியாவண்ணம் தமக்கே ஆளாக்கிப் பொன்னும் ஆடையும் தருவார்; பொன்னும் மெய்ப் பொருளும் தருவார்; போகமும் திருவும் புணர்ப்பிப்பார்— என்றெல்லாம் போற்றுவார்.

12. **திருஆறை மேற்றளி** [35]: இத்தலத்தைத் தரிசித்த பின்னர் திரு இன்னம்பரைத் தரிசித்துத் திருப் புறம்பயம் தொழச் சென்றார்.

13. (i) **திருக்கூடலையாற்றூருக்குப் போம் வழியை இறைவர் காட்டியது** [85]: திருக்கூடலையாற்றூருக்குப் போம் வழியை வேதியர் உருக்கொடு இறைவர் தேவி

* "வேள்வியில் அன்று நீ கொண்ட கோலம் என்றும் புலர்ந்து நின் வேட்கை தீர வாழி மண்மேல் விளையாடுவாய்'' என்றருளார் கேட்க (வாக்கு) எழுந்ததன்றே.
—பெரிய புரா. தடுத்தாட். 127.

யொடும் போந்து காட்டிய ஆடல் அதிசயத்தை அறியாது போனேனே—எனச் சுந்தரர் வியக்கின்றார்.

(ii) தேவியுடன் பெருமான் வந்ததைப் பாடல்தோறும் குறிக்கின்றாராதலின், இறைவன் அந்தணர் உருக்கொடு எதிர் வந்து வழிகாட்டினபோது, தேவி 'அந்தணி' (பார்ப்பனி)யாக உடன் வந்தனள் போலும்.

(iii) வடிவுடை மழு ஏந்தி, மதகரி உரிபோர்த்து, வெண் புரி நூலொடு, விண்ணவர் மண்ணவர் தொழப், பூதப்படையுடன், வித்தக வீணையொடு, மதியம், அரவம் சடைமேல் விளங்க, வானவர், இந்திரன், மால், அயன் உடன்வரச், சோதி உருவொடு விடையது ஏறி—என வருவன எல்லாம் மறையவராய்த் தாம் வந்து வழிகாட்டி மறைந்த பின் இறைவர் சுந்தரருக்கு அளித்த காட்சியின் விவரம் போலும்.

14. பின்னர், தில்லையைத் [90] தரிசித்தபோது 'மீகொங்கில் அணிகாஞ்சி வாய்ப் பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே' எனப் பாடிப் பேரூர்த் தலத்தின் பெருமையைத் (தில்லைவாழ் அந்தணர்க்கு)ச் சுந்தரர் விளக்கினர் என்று பேரூர்ப் புராணம் தெரிவிக்கின்றது.

15. கானாட்டு முள்ளூர் [40]: இங்கும் சுந்தரருக்கு இறைவனது தரிசனம் கிடைத்தது.

16. **திருமுதுகுன்றத்திற் பெருமான் தந்த பொன்னை அங்கு ஆற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்த ஆடல் [25]:** அத்தனே! அந்தணனே, அரசே, கூத்தனே! நீர் எனக்குத் திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலத்தில்) செம்பொன்னைத் தேவர்கள் சாட்சியாய் நிற்கத் தந்தருளினீர்; அந்தப் பொன் முடிச்சை, இதோ வாடி நிற்கும் பரவை மகிழ, என் கலக்கம், வருத்தம் தீர, இப்போது (இந்த திருக்குளத்தில் தேடும் எனக்குத்) தந்தருளுக;—எனப் பாடி வேண்டினர். (கிடைக்கப் பெற்றார்).

17. **திருக்கோலக்கா [62]:** இத் தலத்திலும் சுந்தரருக்கு இறைவன் காட்சி தந்தருளினார்.

18. திருக்குருகாவூரிற் பொதி சோறு பெற்றுப் பசி தீர்ந்தது [29]: பெருமானே! நீ பாடுவார் பசி தீர்ப்பவன்; பாவிகளை ஆவி போதலைத் தவிர்த்து என்னை ஆட்கொண்டாய்; அடிமை பசியால் வருந்துகின்றேனே—என இரக்கம் கொண்டு தரிக்கலாற்றாது (பொதி சோறுடன்) வந்தனை; இம்மையே எல்லாம் உதவ வழிகோலுவை என்பதனை நான் அறிந்திலேன்; என் பசிப் பிணியின் வெப்பத்தைத் தணித்து என்னை ஆட்கொண்டனை.

19. திருக்கச்சூரைத் தரிசிக்க விரும்பியதும் அவ்வூரில் இறைவன் பலி ஏற்றுத் தந்ததும் [41]: திருக்கச்சூர் ஆலக் கோயிற் பெருமானை நினைத்துத் தியானிக்கும் மனத்தினனாய் இருந்தேன்; 'பெருமானே! விரிந்தகன்ற வாயை உடைய வெண்டலையில் நீ பலி கொள்வதைக் கண்டால் அடியார்கள் கவலைப்படமாட்டார்களா! (இன்றும் என்பொருட்டு நீ பலி ஏற்கும்படி ஆயிற்றே—என வருந்துகின்றேன்)'; உன்னை அன்புடன் மலரிட்டு ஏத்தி உனக்கு ஆவன செய்யக் காத்திருக்கும் அடியார்கள் இருக்க, நீ ஐயம் ஏற்பது அழகோ!"

20. ஓணகாந்தன் தளியில் பொன் வேண்டிப் பாடினது [5]: "பெருமானே! கையிற் பொருளே இல்லை; உன் திருவடியைத் தொழுது உய்யும் வழி தவிர வேறு வழி இல்லை; ஆதலால் உய்யும் ஒரு வழியை அருள்புரிவீராக. உம்மைத் தேடித் தேடித் திரிந்து அயர்வுற்றாலும் நீர் என்னைக் கவனிப்பதில்லை; என்னை விட்டு ஓடிப்போகவும் மாட்டீர்; எனக்கு ஒரு பற்றுத் தரவும் மாட்டீர்; உண்மையைக் கூறி ஆளமாட்டீர்; வருங்காலத்துக்கு உதவும்படி ஒன்றும் தருவதில்லை. என்னை ஆண்டீரே, என்னிடத்திலிருந்து நீர் ஒன்றும் விரும்புவதும் இல்லை. எனக்கு ஏதாவும் கொடுப்பதும் இல்லை; எதுவும் உபதேசிப்பதும் இல்லை; பெருமானே! உமக்குத்தான் சொல்லுகின்றேன் இந்நேரம்!"

21. திருஒற்றியூரைச் சார்ந்ததும் சங்கிலியாரை மணந்ததும் [45-4]: திருஒற்றியூரைச் சேர்ந்தேன். அங்கே

பெருமான் எளியேனைப் பொருட்படுத்தி சங்கிலியாரை யான் சேர எனக்குத் திருமணம் செய்வித்தார்.

22. (i) **திருவாரூரை விட்டுப் பிரிந்திருக்க முடியாமை** [51]: *அறிவிலியாகிய நான் என் ஆரூர் இறைவனை எவ்வாறு பிரிந்திருப்பேன்; எத்தனை நாள் பிரிந்திருப்பேன்; சங்கிலியோடு என்னைச் சேர்ப்பித்த பெருமானை எங்கு அழிந்துபோக, என்ன செய்ய, நான் பிரிந்திருப்பது; என் பக்தி நிலையையும் அடிமை நிலையையும் கைவிடும்படி செய்கின்ற இப் பிறவிநோயின் தன்மையை உணர்கின்றேன். நான் திருவாரூருக்குப் போகத்தான் போவேன்; போய்ப், பெருமானைத் தொழுவேன். பரவையைத் தந்து என்னை ஆண்டவர் ஆயிற்றே எம்பெருமான்.*

(ii) **திருவாரூரில் சுந்தரருக்கு இருந்த பக்தி:** *நான் நித்தம் நினைந்து உள்ளம் ஏத்தித் தொழுவது ஆரூர்ப் பெருமானுடைய அம்பொற் கழலையே.*

23. **கண்ணிழந்து நோயுற்ற நிலையில் முறையீடு** [54 முதலிய]: *'பெருமானே! பாலில் பிழுக்கை விழுந்திருந்தால் அதை எடுத்துப் போட்டு விட்டுப் பாலை உபயோகிப்பர்; அதுபோல, வழுக்கி விழுந்தாலும் உன் பெயரை மறவாது சொல்லும் என்னிடம் குற்றம் இருந்தாலும் அதைப் புறக்கணித்து என் கண்ணுக்கு ஒரு மருந்து உரைத்தருளுக. உன்னிடமன்றி வேறு யாரிடம் என் கஷ்டத்தை எடுத்துரைப்பேன். கண்ணில்லாததாலும், உடம்பில் வந்த நோயினாலும், கருத்தழிந்து உனக்கே நான் பாரமானேன்; உன்னைத் தவிர எனக்கு யார் உறவு; ஒரு பிழை பொறுத்தால் அதனால் உனக்கு என்ன இழிவு! உனக்கு ஆளாகப் பிறந்தேன்; நான் காதல்கொண்ட சங்கிலி காரணமாக நான் பொய்யனாய் விட்டாலும் உன் திருவடிப் பற்றில் நான் பிழை செய்ததில்லை; இங்ஙனம் உன் திருவடிக்கே ஒன்றுபட்ட என்னை என்ன என்ன கூத்தாட்டி வைக்கின்றாய் பெருமானே! நீ கூடின பார்வதியை நினையாது கங்கையையும் சூடினாயே! ஆதலால் என்மாட்டு உள்ள குற்றம் உன்னிடத்திலும் உண்டு என்று நானும் சொல்லக்கூடுமே.*

நாம் படைத்ததால் நமக்குச் சுற்றம் (வேண்டியவன்) இவன் என்னும் கணக்கு ஒன்று மாத்திரம் அன்று; யாரா யிருந்தாலும் அன்புள்ளவரா யிருந்தால் நம்மாட்டு அன் புள்ளவரே நமக்குக் கணக்கு என்று நீ கொண்டு, அவர் எதிரில் நீ தோன்றி, அவருக்கு அருள் செய்கின்றாய்; அருள் பெற்ற அந்த பாக்கியத்தால் அவர் உன்னைப் புகழ, நீ அவரைக் கடுஞ்சொல் ஒன்றும் சொல்லாமல் பொறுத் தருளுகின்றாய்! இது உன் தன்மை. (உன் கருணை அப்படி யிருக்க மூன்று கண்ணை உடைய நீ என் கண்ணைப் பிடுங்கிக் கொண்டாயே? இதுதான் நீதிக் கணக்கு வழக்கு என்றால், எனக்கு ஆவதோர் ஊன்றுகோல் ஒன்றைத்) தந்தருள்.

கண்ணிழந்த நிலையில் தேடி வந்து உனது திருமுல்லை வாயில் என்னும் தலத்தை அடைந்து உன்னைப் பரவு கின்றேன்; நான் படும் துயரத்தை நீக்கி அருள்புரிவாயாக. உன் அருளைப் பெற்றிருந்த நான் இப்போது அந்த அருளைப் பெறவில்லையே. கண்ணை இழக்கும்படியான அத்துணைப் பெரும் பிழை நான் செய்ததை அறியேன். அடியோடு என்னை நீ இங்ஙனம் முற்றும் கோபித்தால் அடியேன் என்ன செய்யக் கிடக்கின்றது. பெருமானே! நீ எனக்கு *மகத்திற் புக்க சனியானாய். ஏ! மனமே! நீ வாடியிருந்து என் செய்வது! யான் அடைந்த வினைப்பயனுக்கு அஞ்சி வருந்திப் பெருமானுடன் நீ ஊடுவதால் என்ன பயன்! இனி, ஆகக் கூடியது ஏதேனும் உண்டோ! (ஒன்றுமில்லை— என்றபடி). உடம்பிலே உற்ற நோயால் நான் மயங்கு கின்றேன்; வேறு தேவரை நினைந்து, பெருமானே! உன்னை மறப்பேன் என்பது கிடையாது; என் மனம் இழுத்துச் செல்கின்ற வழியில் இனி வாழ மாட்டேன். எனக்கு உற்ற இந்த வல்வினை (முன்னர் நான்) மாதர்களின் (கமலினி அநிந்திதையின்) கண் வலையிற் பட்டதால் வந்தது என

* மகம் — சிங்கராசிக்கு உரியது. சனி தனக்குப் பகை யாகிய சிங்க ராசியிற் புகின் உலகுக்குப் பெருந் தீங்கு விளை விப்பான். மக நக்ஷத்திரத்திற் பிறந்தவனுக்குச் சனி திசையில் மரணம் ஏற்பாதென்று 'நக்ஷத்திர பலம்' என்னும் சோதிட நூல் கூறுகின்றது.

அறிந்து அஞ்சுகின்றேன்; பெருமானே! உனது சீலம், குணம் இவற்றின் தூய்மையை நான் உணராததால் இந்தக் கஷ்டநிலையை நான் அடைந்தேன். இங்ஙனம் கண் இழந்து வேதனைப் படுவது உயிருடனே நரகத்திற்படும் வேதனையாயிருக்கின்றது. எனக்கு உள்ள குறைகளை நீக்கி ஒற்றியூர்ப் பெருமானே! அருள்புரிக. (திருவாரூர்க்குப் போவதற்கு நான் மேற்கொண்ட) வழிப் பயணத்தை நிறுத்தாது போகவே முயல்கின்றேன். நீ என்னை இப்போது புறக்கணிப்பதுபோல உன்னைப் புறக்கணிக்கும் குணம் என்னிடம் இல்லை; (உன்னைத் தியானிப்பதை விடேன் என்றபடி).

24. (வட) திருமுல்லைவாயிலில் [69]: படுதுயர் களையாய் என வேண்டினர்.

கண் இழந்த காரணம் [69-3]: சங்கிலியாரின் விஷயத்தில் நான் பொய்யனாய் நேர்ந்த காரணத்தால் பெருமானே! நீ என் கண்ணைப் பறித்தாய்.

25. திருவெண்பாக்கத்தில் முறையிடும் ஊன்றுகோல் பெற்றதும் [89]: பெருமானே! நான் செய்யும் பிழைகளை நீ பொறுத்தருளுவாய் என்ற நம்பிக்கையுடன் தானே நான் பிழை செய்தேன். உனக்குப் பழிவரும் என்பதையும் நீ நினையாது என் கண்ணை மறைப்பித்தாய். 'நீ போய் மகிழ மரத்தின் கீழ் இரு' என்று நான் உனக்குச் சொன்ன ரகசியத்தை எனக்குத் தெரியாமல் நீ (சங்கிலியிடம்)போய்ச் 'சபதத்தை மகிழ மரத்தின் கீழ்ச் செய்யச் சொல்' என்று சாமர்த்தியமாய்ச் சொல்லிவிட்டாய். சங்கிலியை எனக்குத் தந்து அவளாற் கிடைக்கக்கூடிய சுகத்தை எல்லாம் எனக்குத் தந்தாய்; இங்ஙனம் எல்லாம் திருவிளையாடல் செய்த நீ இப்போது உனக்கு ஆகாத பகைவனைக் கண்டது போல என் முறையீட்டைப் பொருட்படுத்தாமல்—'தேவியுடன் நீ இங்கு (திருவெண்பாக்கத்துக் திருக்கோயிலில்) உள்ளாயோ' என்று நான் உரிமைப்பெருமையுடன் (எனது இரண்டு பக்கத்திலும் அடியார்கள் நெருங்கித் தொழுதேத்தி நிற்கக்) கேட்டபோது "நாம் உள்ளோம் இங்கு; நீர் போம்"

என்று கூறிவிட்டாய்; இது நீதியோ — சரணம் எம்பெருமானே! — என்றெல்லாம் நான் பெருமானிடம் முறையிட்டேன்; ஆனால் அவர் அப்போது "இவன் நம்மீது அன்புடையவன்; நமது அடியான் இவன்' என்பதையும் பாராது ஊன்றுகோல் ஒன்றைத் தந்து 'நீர் போம்' என்று என்னை வெருட்டி விட்டார்.

• 26. காஞ்சியில் ஒரு கண் பெற்றது—அல்லல் ஒருவாறு தீர்ப்பெற்றது [61]—ஆண்டவன் அருளை வியந்தது: அல்லல் தீர்த்து அருள்புரிய வல்ல பெருமானை, உற்றவர்க் குதவும் பெருமானைக், கம்பன் எம்மானைக் கள்ளக் *கம்பனை, எங்கள் பிரானை, நண்ணினார்க்கு என்றும் நல்லவனை, *நல்ல கம்பனை, வினைப்பற்று அறுப்பவனைப், பற்றினார்க்குப் பற்றாவானைக், கற்றவரால் பரவப்படுவானைப் *பெரிய கம்பனைக் காண அடியேன் கண்பார்வையைப் பெற்றேன்.

27. ஒரு கண்பார்வை பெற்ற ஆரூரர் திருவாரூரை நினைந்து பாடியது [83]:

ஒரு கண்பார்வை கிடைத்தவுடன் கச்சியை விட்டுப் புறப்பட்ட சுந்தரர்— "பழைய வல்வினை என்னை மூடாமுன், எஞ்சி நின்ற வினையின் கொடுமை நீங்க, அறியாமையால் நான் தவறாக நினைத்த குறைகள் எல்லாம் ஒழிய, என் குற்றங்கள் எல்லாம் அற்று ஒழிய, என் ஆருயிர்க்கு முன்னமுதாம் எந்தை பிரானை, ஏழுலகாளியை, என் பொன்னை, என் மணியை, என்று நான் திருவாரூர் எல்லையை மிதித்துத், திருவாரூர் புக்குப், பெருமானைத் தேவியுடன் கண்குளிரக் காண அடைவேன்—என்கின்றார்.

28. நெல்வாயில் அரத்துறை [3-3]: இந்தத் தலத்தை அவர் ஒரு கண்ணிலராய்த் தரிசித்தார்.

29. திரு ஆவடுதுறையைத் தரிசித்தபோது (ஒரு)கண் இல்லாத வேதனையையும் நோய் நீங்காத்துயரையும் எடுத்துரைத்

* பெரிய கம்பன்—காமட்சி பூசித்தது; நல்ல கம்பன்—உருத்திரர் பூசித்தது; கள்ளக் கம்பன்—திருமால் பூசித்தது.

**தார்** [70] :—பெருமானே! உடம்பை வாட்டும் நோயினாலும் கண்ணிலாத கொடுமையாலும் மயக்கம் உற்றுக் கருத்தழி கின்றேன். எனது ஒரு பிழையைப் பொறுத்தருளுவதால் உனக்கு என்ன இழிவு உண்டாகும்! அஞ்சாதே என்று ஒரு வார்த்தையாவது சொல்லி அருளுக; உன்னைத் தவிர வேறு யார் எனக்கு உறவு!

30. **திருத்துருத்தியில் வினை, பிணி, நோய் நீங்கப் பெற்றது** [74]: திருத்துருத்தி—வேள்விக்குடிப் பெருமானே! மறுபிறப்பு என்னும் நோயை இப் பிறப்பிலேயே நீ நீக்கிவிட்டாய்; என்னை அடைந்திருந்த கெட்ட - இழிவான- நோயையும் இத்தினமே நீக்கிவிட்டாய். என்னைத் தொடர்ந்து பிடித்த பிணியைத் தொலைத்தருளினாய்; என் மேலை நோய், பழவினை, அருவினை யாவும் உனதருளால் தொலைந்தன; இத்துணைக் கருணைகாட்டிய எம்பெருமானே! உன்னை நான் எங்ஙனம் மறப்பேன்; (மறக்கமுடியாது என்றபடி).

31. **ஆரூர்ப் பரவையுண் மண்டளியில் மற்றைக் கண்ணையும் தந்தருள் என்று வேண்டினது** [96]: பரவையுண் மண்டளிப் பெருமானே! உன்னையே புகழ்ந்துகொண்டு இருக்கின்ற என்னை 'அஞ்சல்' என்று சொல்லி அருளுக. என் கண்ணைக் கொண்டாயே! அது காணும்படி செய்ய லாகாதா! நா தவறாமல் உன்னையே நல்லன பேசுபவர் கதி இதுதானா! ஐம்புலன்களின் ஆட்சியில் நான் அகப்பட்டிருந்தபோதிலும் என் வாக்கை உனக்கே சமர்ப்பித்து உன்னை என் மனத்திற் கட்டிவைத்துள்ளேன்; நெஞ்சகத்தே உன்னையே நினைவாரை நீ 'அஞ்சேல்' என்றுகூறி அருளுக.

32. **ஆரூர்ப் பெருமானை இரு கண்ணாலும் கண்டு மகிழ்தற் கில்லையே என்னும் வருத்தத்தால் தமது காதலைக் காட்டக் கைக்கிளைப் பதிகம் தலைவனிடம் தூதுவிடுமுறையிற் பாடினது** [37]: அன்னப் பெடைகாள்! கிள்ளைகாள்! குயில்காள்! குருகுகாள்! கொண்டல்காள்! சக்ரவாளப்பேடைகாள்! நாரைகாள், பூவைகாள், வண்டுகாள்! என்பொருட்டு நீங்கள் ஆரூர்ப் பெருமானிடம் சென்று—நான் அவரைப் பணிய விரும்பு

வதையும் பாடிப்போற்ற விரும்புவதையும், அவரை நினைத்து உருகுவதையும், நான் அவரை மறவாமையையும், எனக்கு கவலைகள் நில்லாமையையும், எனக்கு உறக்கம் வராமையையும், என் மனம் வேறுபடாது அவர்க்கே ஒருமைப்பட்டு இருப்பதையும், என் ஆடை சோர்வதையும், என் கொங்கை பீர் கொள்வதையும், காமத்தீ கனன்று எரிவதையும், அதனால் எனது உடல் இளைப்பதையும், வேறு பற்று, வேறு கவலை எனக்கு இல்லாமையையும்—நான் வாழுமாறு, அப்பெருமானுக்கு எடுத்துக் கூறவல்லீர்களோ நீங்கள்? அவரையே நான் பரவி நாடுவதையும், பாடி நாடுவதையும் சொல்லி, நான் அவரைப் பாட, அவரைப் பணிய, அவருடன் கூட, அவருடன் ஊட, வழிகாண, விரும்புகின்றேன் என் பதையும் அவருக்கு உணர்த்த வல்லீர்களோ நீங்கள்?

33. மற்றைக் கண் பார்வையையும் பெறவேண்டித் திருவாரூர் மூலட்டானத்துப் பெருமானை நிந்தாஸ்துதியாகப் (புகழாப் புகழ்ச்சியாகப்) பாடினதும் (கண் பெற்றதும்) [95]: திருவாரூரிற் கோயில்கொண்டிருப்பவரே! மீட்சி என்பதே இல்லாத வகையில் உமக்கே அடிமை பூண்டவராய்ப், பிறர் தயவை நாடாதவராய், வெந்து தவிக்கின்ற மனத்துடன் அடியார்கள் வந்து தமது துயரத்தை உம்மிடம் சொல்லும் போது, நீர் ஒன்றும் கூறாது சும்மா இருக்கின்றீர்! நீரே வாழ்ந்துபோம் (ஐயா)

இருந்தும், நின்றும், கிடந்தும் உம்மை இகழாது ஏத்தும் அடியார்கள் வருந்தி வந்து உம்மிடம் தங்கள் துயரத்தைச் சொல்லும்படி வைக்கின்றீர்! நீரே வாழ்ந்திரும் (ஐயா.)

நல்ல குலத்திற் பிறந்தோம்; உம்மை இகழாது ஏத்துவோம்; பாடும் பக்தர்களாம் நாங்கள்-பார்வையை யிழந்து வழி காணாது வேதனைப்படுவதால் உமக்கு வரும் பழியை நீர் உணர்கின்றிலீர்; நீரே வாழ்ந்திரும் ஐயா!

என்றும் தடையிலாது பாடும் அடியார்கள் தமது கண் தெரியாமல் குன்றிலே முட்டிக் குழியிலே விழுவதானால் நீரே வாழ்ந்திரும் ஐயா.

பலவிதச் சந்தங்களை அமைத்து உம்மைப் பாடும் அடியார் தமது கண் காணாது உம்முன் வந்து, "எம்பெருமானே முறையோ' என்னும்படி நீர் வைக்கின்றீர்; நீரே வாழ்ந்திரும் ஐயா.

பொருளின்றி மெலிந்து தமது கண்காணாது மனத்தால் வாடி அடியார்கள் இருப்பதானால் நீரே வாழ்ந்திரும் ஐயா.

உலகெலாம் அறிய என் கண்பார்வையைக் கொண்டீர்; அதனால் நீர் தாம் பழிகொண்டீர்; நீரே வாழ்ந்திரும்.

பேயுடன் ஆன கூட்டுறவாய் இருந்தாலும் பிரிவு என்பது துன்பம் தருவதாகும்—என்பர் உலகோர்.

கருதி ஆட்கொள்ளப்பட்டவர்கள் காய் வேண்டினாலும் கனிதனைக் கொடுப்பதன்றோ நல்லமுறை; அங்ஙனம் இருக்க நாய்போல் உமக்கு ஆட்பட்டவர்க்கு நீர் வாய்திறந்து ஒன்றும் சொல்லுகின்றீரில்லை, நீரே வாழ்ந்திரும் ஐயா!

மாயப் பிறவியைக் காட்டினீர்; உம்மை மறவாத மனத்தைத் தந்தீர்; ஆனால் கண்பார்வையைப் பிடுங்கி விட்டீர்; வாழ்ந்திரும் நீரே.

அடியேன் உமக்கு ஒற்றிவைக்கப்படவில்லை; என்மீது உமக்கு முழு உரிமை உண்டு; ஆதலால் அவனை நீர் விற்றுக் கொள்ளலாம்; விருப்பத்துடன் உமக்கு ஆட்பட்டேன்; ஒரு குற்றமும் நான் செய்யவில்லை; என் பார்வையைப் பறித்தீர்; என்னைக் குருடன் ஆக்கினீர்; இதனால் நீர் தாம் பழிபட்டீர், எனது மற்றைக் கண்பார்வையை தரமாட்டீர் என்றால் நீரே வாழ்ந்திரும்.

34. **இறைவன் தனக்குத் தூதனும் தோழனுமாம் என்றது** [68-8]: அடியேனுக்கு எளியவராய்க் கிடைத்த தூதர் எம்பெருமானார்; என்னை யாளும் தோழர் அவர், யான் செய்யும் குற்றங்களைப் பொருட்படுத்தாது பொறுத்து உடன்பட்டவர் அவர்; அன்பினால் என்னை ஆண்டு கொண்டவர் அவர்.

35. **பரவையார், சங்கிலியார் இருவருக்கும் தமக்கும் பற்றுய பெருமான் இறைவன் [46-11] :** பண்போலும் இனிய மொழிகளைப் பேசும் பரவைக்கும், சங்கிலிக்கும், எனக்கும் பற்ருய பெருமான் சிவபிரான்.

36. **ஏயர்கோன் கலிக்காம நாயனுருக்கு உற்றநோயைத் தவிர்த்தவர் பெருமான் [55-2, 3]** பெருமானே! வயலில் நீர் இல்லை ; மழை தருக, பன்னிருவேலி நிலம் தருவேன் என்ருர் ஏயர்கோன் ; இறைவர் பெருமழையைத் தந்து பெருவெள்ளத்தை உண்டு பண்ணினுர் ; வெள்ளம் குறைய வேண்டி மீண்டும் பன்னிரு வேலி இறைவனுக்குத் தந்தனர் ஏயர்கோன் ; அந்த ஏயர்கோனுக்கு உற்ற கொடிய பிணியைத் தவிர்த்தனர் பெருமானுர் (சுந்தரருடன் அவர் நட்புப் பூணுமாறு).

37. **மூவேந்நர் முன்பு திருப்பரங்குன்றத்திற் பதிகம் பாடினது [2-11]:** "அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதும்" என்று (சேர சோழ பாண்டியர்) என்னும் முடிவேந்தர் மூவர் முன்னிலையிற் பதிகம் ஒன்று திருப்பரங்குன்றத்திற் பாடினர் சுந்தரர்.

38. **கானப்பேர் (காளையார் கோயில்) காளையை (இறைவனை)த் தரிசிக்க விரும்பியது [84] :** கானப்பேர் உறை*காளையைக் கண் குளிரக் கண்டு தொழப்பெறுவது என்று கொலோ! என்னை (ஒரு பொருளாக) மதித்து நான் உய்யும் வண்ணம் எனக்கு அருளினர் பெருமான். கானப் பேர் உறை காளையின் திருவடியைத் தொண்டர்கள் தொழும் காட்சியையும், பெருமானது ஒரு பாகத்தில் தேவி பொலியும் தோற்றத்தையும், செந்தாமரையன்ன அவரது திருமேனிப் பொலிவையும், நீலகண்டம் — எண்டோள் இவைகளின் எழிலையும், நறுஞ்சடைமேற் சோதி இளம்

---

* திருச்சுழியலில் இருந்த சுந்தரரின் கனவில் காளையாம் திருவடிவுடன், செங்கையிற் பொற் செண்டும், திருமுடியிற் சுழியமுடன் பெருமான் தோன்றி 'கானப்பேர் யாம் இருப்பது' என்று கூறி மறைந்தார்.

பிறையின் வண்ணத்தையும் நான் என்று கண்டு தொழப் பெறுவேன்.

39. **திருவையாற்றிற் காவிரி வெள்ளத்தைக் கடக்க முடியாத நிலையிற் பாடியது [77-9]:** *பெருமானே! கொடிய பசியை உடையவன் ஒருவனைப்போல அதிதீவிர ஆசையுடன் ஐயாற்றைக் கண்டேன்; ஆனால் உன் சன்னிதானத்தை அடைந்து உன்னைக் காணமுடியாதபடி காவிரியின் வெள்ளம் தடுக்கின்றது. காவிரியின் பெருக்கு எதிர்த்து நீந்த முடியாத நிலையில் உள்ளது.*

40. **சேரமானுடன் சுந்தரர் கொடுங்கோளூரில் இருந்த போது திருவாரூர்ப் பெருமானுடைய நினைவு வர, அப்போது பாடினது [59-11]:** *ஆரூர்ப் பெருமானை என்னால் மறக்க முடியாது. அவர் காரணமாக, அவர் எனக்குத் தந்த 'பரவை' காரணமாக, உலகத்திற் சிறந்த ஊராகிய திருவாரூரை என்னால் மறக்கமுடியாது.*

41. **திருமுருகன் பூண்டியில் வேடுபறி [49]:** *பெருமானே! இந்தத் திருமுருகன் பூண்டி வடுகவேடுவர் (தெலுங்கர்) வாழும் இடம். அவர்கள் வளைந்த வில்லைக் காட்டி வெருட்டுபவர். நட்பு கலவாத முரட்டுப் பேச்சினர்; திடீரென வந்து கற்களை வீசி மோதிக் குத்தி வழிபறிப்பவர்; ஆடையைப் பறிப்பவர்; பசுக்களைக் கொன்று தின்பவர்; பாவ புண்ணியத்தை அறியாதவர்; கொலை செய்பவர்; கந்தை ஆடை அணிபவர்; அதிலே உடைவாளைச் செருகி வைத்துள்ளவர்கள். விரிதலையர்; கருங்குரங்கு போல்பவர்; முடை நாற்றத்தினர்; வன்கணர்.*

*இத்தகையினர் வாழும் இந்த ஆபத்தான இடத்தில் பெருமானே! நீர் ஏன் உம் தேவியுடன் இருக்கின்றீர்! நீர் முடவரல்லீர், உமது வாகனமாம் ஏற்றின் கால் ஒடிந்து போகவில்லை; ஊர்ப் பிச்சை எடுத்துண்ணும் நீர் இந்த ஊரில் ஏன் தங்குகின்றீர்; ஊரில் எல்லைப் புறத்தைக் காப்பது இல்லையானால் உமக்கு இந்த ஊரில் என்னவேலை! இங்கிருப்பதன் காரணம்தான் என்ன? என்ன காவல்*

புரிகின்றீர் இங்கு நீர்!—என்றெல்லாம் வினவி ஒரு பதிகத்தைப் பாடினர் சுந்தரர்.

42. வேடனாக வந்து இறைவன் உதவினது [57-6]: *செங்கண் வேடனாக வந்து எனக்கு உதவினார் பிரானார்.

43. முதலை உண்ட பாலனை அழைத்துத் தந்தது [92]: திருப்புக்கொளியூரில் வீற்றிருக்கும் பெருமானே! இந்தத் திருப்புக்கொளியூரிற் குளத்திலே இறங்கிக் குளித்த பிராமணரியப் பிள்ளைக்கு ஏன் இந்த மாயமான நிகழ்ச்சி உற்றது. வழிச்செல்வோருடன் கூடிவந்த பிள்ளை 'அருட்சனம்.' என்னும் பெயருடையான் இங்ஙனம் மறைதல் அழகோ! (அழகன்று என்றபடி); இந்தக் குளக்கரையிலே அந்த முதலை தானுண்ட பிள்ளையைக் கொண்டுவந்து கக்கும்படி காலனிடத்தில் நீ சொல்லுக. உன் திருவருளின் பெருமையைக் காணாதவரும் (இன்று பிள்ளை உயிர்பெற்றெழுந்த நிகழ்ச்சியால்) காணும்படி அருள்புரிந்த வல்லாளன் நீ. நான் உனக்கு ஆட்பட்டது குற்றமாகாதபடி உன் திருவருளை இன்று இனிது பாலித்தருளினை.

44. திருஅஞ்சைக் களத்தீசர் முன்பு மனைவாழ்க்கையை வெறுத்தேன் என்பது [4-8]: அஞ்சைக் களத் தப்பனே! நான் இந்த இல்லற வாழ்க்கையை வெறுக்கின்றேன் (இவ்வாழ்க்கை போதும் போதும் என்றபடி.)

45. (i) சுந்தரர் கயிலையைச் சார்ந்ததும், சார்ந்த போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளும்—சுந்தரர் கூற்று [100]: 'பெருமான் தான் என்னை முன்பு படைத்தனர் (கண்ணுடியினின்றும் படைத்து வரவழைத்தார்; மண்ணுலகில் நரனாகப் படைத்தார்.) நான் இந்த ஊன் உடலை வெறுத்து இறைவனைத் தியானித்திருந்தேன். அப்போது இறைவர் என்னைப் பொருட்படுத்தித், தேவர்கள் என்னை வலஞ்செய்து எதிர்கொண்டு அழைத்துச் செல்வதற்கு,

* குடியவூருக்கு அருகே காட்டுவழியிற் சுந்தரர் செல்லும்போது இறைவர் வேடராக எழுந்தருளி அவருக்கு வழிகாட்டினர் என்பது வரலாறு.

நான் ஏறிச் செல்வதற்கு, வெள்ளையானையை அனுப்பினர். இறைவன் திருவருளால் (உடல்) பசுகரணங்கள் வேறாகி, (உயிர்) பதிமயமாய் வேறுபட்டு விளங்கலாயிற்று. இம் மண்ணுலகில் மந்திரம் ஒன்றும் அறியாதவனாய், மனை வாழ்க்கையில் ஈடுபட்டு, அலங்கார வேடங்களுடன் பொழுது போக்கிக், குற்றம் புரிந்த தொண்டனாகிய என்னைத் தேவ லோகத்து யானைமீதேறி வரும்படி அருள்புரிந்தார் இறைவர்; அத்தகைய பெருமைக்கு உரியவனா நான்? மண் ணுலக வாழ்வை விரும்பி, மடவாரை இச்சித்த வினைப்பயனை ஆழ அனுபவித்த என்னை அம் மயக்கினின்றும் விடுவித் தார். தேவர்கள் என்னைச் சூழ்ந்து வர நான் ஏறிவருதற்கு ஆனையை அனுப்பினர் கருணாநிதியாகிய கயிலைப்பிரானார். இந்த அற்புத நிகழ்ச்சியால், மண்ணுலகிற் பிறந்தவர்கள் இறைவனை வாழ்த்தினால் பொன்னுலகம் பெறுதல் திண்ணம் என்னும் உண்மையை நான் கண்கூடாகக் கண்டுகொண் டேன்; முன்பு, இறைவா! நீ யானையை அட்டு உரித்தது மறக்கருணை; இன்று எனக்கு ஏறுதற்கு யானையைத் தந்தது அறக் கருணை; தேவர்கள் விருப்பத்துடன் கண்டு களிக்க 'இறத்தல்' என்பதனை ஒழித்து என் உடலை வெள்ளை யானை மீது காட்டுவித்தாய். அழியா உடலோடு செல்லும் இந்த அற்புதத்தைக் கண்டு விண்ணும் மண்ணும் அற்புத அதிர்ச்சி பெற்றன. நான் யானைமீது மலைகளின் வழியே செல்லும்போது (கடல் அரசன்) வருணன் மலர்தூவி என்னை வணங்கினான். ஹரஹர என்னும் ஒலியும், ஆகமங் கள் அறிந்தோர்களின் தோத்திரங்கள் கலந்த வேத ஒலியும் விண்ணெலாம் பரந்து விரிய, யானையை அனுப்பி நான் மண்ணுலகினின்றும் விடுபட்டு உய்ய வழிகாட்டினார் இறைவர்; இந்திரன், திருமால், பிரமன், அழகு மிக்க தேவர் கூட்டம் என்னை எதிர்கொண்டு அழைக்க, மத்த யானையை அருள்புரிந்தார் இறைவர்; இக் காட்சியைக் கண்ட மந்திர மாமுனிவர் (உபமன்யு முனிவர் ஆதியோர்) யானைமீதுவரும் இவன் யார் என்று இறைவரைக் கேட்க, இறைவர் "இவன் நமக்கு வேண்டியவன், ஆரூரன்" என்று விடை கூறினர். நான் வருணனை நோக்கி (கடலரசே!)

வருணா! நான் பாடிய இந்த இனிய பதிகத்தை நீ (பூமியில்) திருஅஞ்சைக் களத்துச் சிவபிரானது சந்நிதியிற் சேர்ப்பிப் பாயாக—எனவரும் விளக்கங்களைக் காண்கின்றோம்.

(ii) **சுந்தரரைக் கயிலைக்குக் கொண்டு சென்ற யானையின் வர்ணனை:** சுந்தரரைக் கயிலைக்குக் கொண்டு சென்ற யானை தேவலோகத்து யானை; அழகு வாய்ந்த யானை; பழையானை; வெள்ளை யானை; சிறப்புவாய்ந்த (சிரேஷ்டமான) யானை.

(iii) **ஏன் ஆனையை அனுப்பினர் இறைவர்:** முன்பு யானையை உரித்த பகைமைத் தீ தம்மிடம் இப்போது இல்லை என்று காட்டுதற்கோ இப்போது நான் வருவதற்கு ஆனையை அனுப்பித் தமது திருவருளைக் காட்டினர்.

**46. சுந்தரர் வரலாற்றைப் பற்றிய பிற விஷயங்கள்—சுந்தரர் கூற்று.**

1. பிரானே! உன் திருவடியை நினைத்தேன். நினைத்தவுடன் எனது உடலிடம் கொண்டாய் நீ; எனது சிரம், கண், வாய், செவி, மூக்கு, காயம் எல்லாம் ஆனார் இறைவர்; என் தீவினை ஒழிந்தது.

2. நான் எங்கே போனாலும் அங்கே என் மனத்தில் வந்து வைகுவர் பெருமானார்.

3. எங்கிருந்து நான் பிரானை நினைத்தாலும் அவர் அங்கே வந்து உடன்நின்று அருளுவார்.

4. பிரானை நினைத்து எங்கே போனாலும்—கொங்கு நாட்டிற் கூட—ஆடையைப் பறித்து ஆறலைப்பார் இல்லை.

5. அப்பா! அம்மா! என்று நான் சொல்வதில்லை; உற்றார், சுற்றம் இவர்களை விட்டொழிந்தேன். இறைவனே! பிரானே! நீயே எல்லாம்; என்றிருந்தேன்.

6. இறைவனே எனக்குத் தந்தை, பாட்டன், முப்பாட்டன் எல்லாம்; தந்தையும் தாயும் எனக்கு எள்ளளவும்

சார்வாகத் (துணையாக) இருந்ததில்லை. இறைவனைத் தவிர எனக்குத் துணையாவார் வேறு யாரும் இல்லை.

7. சம்பந்தர், அப்பர் (பாடிய) தேவாரத்தை அடிக்கடி பாடி ஏத்த இறைவன் மகிழ்வார்.

8. ஆரூர்ப் பெருமானுடைய பேரைச் சிரமீது வைத்து மகிழும் அருந்தமிழ் புலவன் யான்.

9. பல நலம் பொருந்திய தமிழால், ஏழிசை பொருந்திய இனிய தமிழால், இறைவனுடைய திருப்புகழை விருப்பத்துடன் பாடுவேன்.

10. பெருமான் அடிக்கடி என்னைத் திருத்தி என் சிந்தையில் இடம் கொள்கின்றார்.

11. இறைவர் என் பிழையைப் பொறுப்பார்; என் பேச்சைக் கேட்டுக் கோபித்துக் கொள்ளார்; என் குற்றங்களைப் பொறுப்பார்; பழிச்சொல், பிழைகள் வராதபடி காத்தருளுகின்றார். அருவினை, பழவினை, செய்வினை, இவை என்னைப் பீடியாதபடி அருள்புரிகின்றார். எனக்கு உற்ற வெப்பு, பிணி இவைகளைத் தீர்த்து என்னை ஆட் கொண்டார்.

12. பெருமானுடைய திருக்கோயில்கள் பலவற்றைத் தரிசித்துப் போற்றிசெய்து பதிகம் பாடியுள்ளேன். அங்ஙனம் பாடி என் வினைப்பற்றை ஒழித்தேன்.

13. கடம்பூர், காழி, கானாட்டு முள்ளூர், கோலக்கா, நாட்டியத்தான்குடி, வலிவலம் என்னும் தலங்களில் இறைவன் காட்சிதரப் பெற்றேன். நாட்டியத்தான் குடியில் அரவாபரணராய் அச்சம் தரும்படியான கோலத்துடன் தரிசனம் தந்தார்.

14. என் மனத்தில் இறைவன் வீற்றிருப்பதால் நான் அவரை எப்படி மறக்கக் கூடும். என் பிறவியின் வேரறுத்த கரும்பு அவர். நான் எங்கே போனாலும் அங்கே வந்து என் மனத்தில் என்றும் தங்குவார்; இறத்தல்,

பிறத்தல் என்னும் இரண்டையும் தவிர்த்து என்னை ஆண்டுள்ளார்; * தம்மை நினைக்கும்படியான பாக்கியத்தை எனக்குத் தந்தருளியுள்ளார்; என் குறைகளை அறிந்து குறை தீர முன்வந்து அருளுவார்; இனிப் பிறவாத பெருமையைப் பெற்றேன்; இத்தகைய பெரும் பேற்றை வேறு யார் பெறக் கூடும்! அவரை மறவாத வரத்தைப் பெற்றுள்ளேன். முத்தி, ஞானம், வானவரும் அறியாத பலபல நெறி—இவை யெலாம் எனக்குப் பெருமான் காட்டியருளினர்; நான் *செய்யவேண்டிய தொண்டினையும் காட்டியருளினர்; எனக்குப் பெருமை தந்தனர்.

15. பெருமானைக் கனவினிற் கண்டேன்; விழித்து எங்கும் காணமாட்டாது தயங்கினேன், கழுமல வளநகரிற் காணப்பெற்றேன்.

16. அன்பர்கள் என்னைச் சூழ்ந்திருக்க, அடியார்கள் என்னை விரும்பித் தொழப், பிற மக்களும் என்னைப் பரவ, இங்ஙனம் நாடெல்லாம் என்னைப் புகழும்படியான பாக்கியத்தை அடைந்துள்ளேன்.

## 135. சுந்தரருடைய பக்திநிலை, மனநிலை, அவர் தம்மைப் பற்றிக் கூறுவன; அவர் பெற்ற பேறுகள் [147]

(இறைவனைக்) 'கண்டு தொழப்பெறுவது என்று கொலோ'—என்று ஒருபதிகம் (84), (எந்தை பிரானை) "என்றுகொல் எய்துவதே" என்றொரு பதிகம்(83), 'அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' என்றொரு பதிகம் (73) 'ஆரூரானை மறக்கலுமாமே' என்றொரு பதிகம் (59) பாடியுள்ளார்; •இவைகளில் இருந்தே சுந்தரருடைய திவ்விய பக்தி நன்கு புலப்படும்.

(i) இறைவனே! (ஆரூர்ப்பெருமானே!) உன்னையல்லால் வேறொருவரை நான் அறியேன்; • அறிந்தேத்த

* தொண்டு: 'அர்ச்சனை பாட்டே, தமிழ் பாடுக' என்ற தூண்டு. பெரிய புராணம் - தடுத்தாட். - 70.

மாட்டேன். நினைக்க மாட்டேன்; உனது திருப்புகழைப் பலநாள் வாயினாற்கூறி மனத்தினால் நினைவேன்; 'உன்னைப் பாடுதலை ஒழியேன்; உனது அடியார் அடியாருக் கெல்லாம் தொண்டு பூண்டு ஒழுகுவேன்; உன்னைச் சித்தத்தில் எப்போதும் வைத்துள்ளேன்; எனது நா, எனது செவி, எனது கண் எல்லாம் நீயே; உன்னை நான் என்று கொல் எய்துவது! உன்னை மனத்தினால் அன்பு செய்து இன்பம் எய்தித் தமிழ்ப்பதிகம் பாடினேன்; நீ என்னை விரும்பா விட்டாலும் நான் உன்னை விரும்புவேன்; நான் உன்னை மறந்தாலும் எனது 'நா'—'நமச்சிவாயவே'—எனச் சொல்லிக் கொண்டேயிருக்கும்; நான் எங்கே போனாலும் உன்னை நினைப்பேனாயின், கொங்குநாட்டு வழிபறி வேடர்களும் என்னை அணுகி எனது உடையைப் பறிக்க மாட்டார்கள்; நீயே எனக்குத் தந்தை; தந்தையின் தந்தை; எனது பிரான்; எனது சிரத்தின்மேல் உள்ளாய் நீ; எழு பிறப்பிலும் நீயே எங்கள் தலைவன்; ஏழு பிறப்பிலும் உன்னை நான் மறக்கேன்; உன் அடிமை நான்; என்னவன் நீ; என்மனக் கருத்து நீ; என் அமுது நீ; என் புகலிடம் நீ, எனக்கு இனியவன் நீ; உன்னை ஏத்தாமல் நான் இருந்தறியேன்; எனக்கு நீயலது வேறு யார் துணை; உன்னை மறந்து நீங்கும் நாளினை என் உணர்வுபோய், உயிர்போய்ப் பாடைமேற் சுமக்கப்படும் நாளாகவே நான் கருதுவேன்; ஐம்பொறிகள் என்னை ஆண்டுத் தம்வழியிற் செலுத்திய போதிலும் நாவினாலும் வாயினாலும் உன்னையே நல்லன சொல்லித் துதிப்பேன்; ஆதலின் நீ அஞ்சாதே என்று எனக்கு அபயந் தந்தருள், பெருமானே! உன் அடியார் கூட்டத்தில் நானும் கலந்து இரவும் பகலும் கருத்துடன் உன்னைக் கைகூப்பித் தொழுவேன்; நீர் எம்மைக் கருதா விட்டாலும் நான் உமது திருவடியைப் பாடுதல் ஒழியேன்; காணாத கண்களையும் காட்டவல்ல கறைக்கண்டனே! நீ காட்டினால் இன்னும் காண்பேன்.

நீ சிலந்தியைச் சோழனாக்கிய தொடர்ச்சியைக் கண்டு அடியேன் புரண்டு வீழ்ந்து உன் பொன்மலர்ப் பாதத்தைப் போற்றி, போற்றி என்று அன்போடு பூசித்துப் புலம்புவேன்

(ii) சமன் தமர் என்னை நோவச் செய்தாலும் உன்னை ஒழிய வேறொரு துணைவரை அறியேன்; உனது பராக்ரமத்தை எனது நா தவறாமல் ஓதும்; உனது திருவடியை ஏத்த வேண்டியவர்கள் அங்ஙனம் ஏத்தாது இகழ்ந்தாலும், மறந்தாலும் அத்தகைய நாள்கள் கெட்ட நாளாகும் (அவர்களுக்கு) என்றே கருதுவேன்; நான் முன்புசெய்த பாக்கியத்தால், பரஞ்சோதீ! உனது நாமத்தைப் பயிலப் பெற்றேன்; பாடியும் ஆடியும் உன்னை அறிய அன்பு பூண்டேன்; ஆதலால் உன்னை நான் மறக்க முடியாது; பொய்ம்மை இன்றி என் உயிருட் புகுந்தாய் நீ; என்னை விட்டுப் போந்து அறியாய்; ஒழுக்கநெறி தவறினதால் (கயிலையில்) உன்னைவிட்டுப் பிரிந்தேன்; இனிப் பிரியேன்; வேறு தேவரை நினைந்து உன்னை மறவேன்; திருமால் கண்ணிடந்து பூசித்தவுடன் நீ அவருக்குச் சக்கரம் அருளின திறத்தைக் கண்டு நானும் என் வல்வினைக்கு அஞ்சி உன்னை அடைந்துளேன். திரிபுரம் எரித்த ஞான்று மூவர்க்கு நீ அருள் புரிந்தமை கண்டு உன்னை நான் அடைந்துளேன்; விஜயனுக்கு நீ வான்படை (பாசுபதாஸ்திரம்) கொடுத்ததை அறிந்து நானும் அன்புடன் உன் நாமங்களைப் பரவி வழிபடுகின்றேன்; உன் பெருமையை நினைந்து மனம் உருகி நிற்கின்றேன்; உன் திருவடிகளே புகலாக அடைந்துள்ளேன்; உன்னையல்லால் வேறொரு தெய்வத்தை விரும்பேன்; உன் மலர்ப்பாதத்தை நினைத்தேன்; என் வினைகளினின்றும் நீங்கினவன் ஆயினேன்; என் தலை, என் நா, என் நெஞ்சம் இவைகளை உனக்கே உரியதாக்கி வைத்தேன்.

(iii) எம்பெருமானுடைய திருநாமங்களைத் - திருப்புகழைப் பிதற்றிக்கொண்டே இருப்பேன் நான்; திருக்கானப்பேரில் உறையும் பெருமானை என் அல்லல்கெட, என் கண் குளிரக், காதலுடன் நான் என்று தொழுவேனோ! பிரான் காரணமாகவும், (அவர் எனக்கு அளித்த) காரிகை (பரவை) காரணமாகவும், நான் திரு ஆரூரை மறக்கமுடியாதவன்; எம்பெருமான் என் சென்னிமேல் உறைகின்றார். தம்மை நினைக்கும்படியான திருவருளைப் பெருமான் எனக்குத்

தந்துள்ளார்; எனக்கு அவர் தந்தையும் தாயுமாகிச், சாதல், பிறத்தலைத் தவிர்த்து என்னைவிட்டு நீங்காமல், தமது பொன்னடிக்கு என் மனத்தைப் பொருத்தி வைத்துள்ளார். என் சொற்கள் மீது கோபம் கொள்ளாமல் பெருமான் எனது உள்ளத்தில் வந்து குடியிருக்கின்றார்.

சிவபிரானைப் பணியச் சித்தம் வைத்த தொண்டர்களின் தொண்டன் நான்; அடியார்க்கு அடிமைத் தொழிலைத் தவறாது செய்யும் தொண்டன் நான்; நித்தநித்தம் பெருமானை நினைந்து மகிழ்பவன் நான், எம்பெருமான் தான் எனது செல்வம்; நீடூர்ப் பெருமானை நான் பணியாது விடேன்; எழுபிறப்பிலும் எம்பெருமானை மறவேன்; பெருமானை நான் வாயினாற் கூறுவேன். மனத்தினால் நினைவேன்; நினைக்கும்போது பெருமான் நமக்கு இனியர்.

## 136. சுந்தரரும் அடியார்களும் [148]

### (i) அடியார்களை விளித்து வினவுதல்

திருநாவலூரனாகிய நான் தீயனாகிலும் என் மனம் பெருமானையே சிந்திக்கும்; ஆதலால் நம் பிரான் என்னை ஆள்வரோ என்று அவரைக் கேட்டு எனக்குச் சொல்லுங்கள்.

### (ii) இறைவனுடைய அடையாளங்களைக் கூறி அடியார்களை வினவுதல்

நம் பெருமான் ஆனையின் உரியைப் போர்த்துள்ளனரோ! நாகத்தை அணிந்துள்ளனரோ! இல்லந்தோறும் சென்று ஐயம் கொளவரோ! ஆறு தாங்கிய சடையரோ! கரிகாடரோ! காடு அரங்காக ஆடல் புரிவரோ! குழைக் காதரோ! வெள்ளை நீறு அணிவரோ! ஏற்றுக் கொடியரோ! குன்றி (குண்டுமணி) போன்ற செம்மேனியரோ! திருக் கரத்திற் படுதலையையும் சூலத்தையும் ஏந்தியுள்ளனரோ! பிறைசூடி உள்ளீரோ! சமணர்களின் பழிப்புக்கு ஆளரோ! தம்மை வாழ்த்தும் அடியார்களுக்குத், தம்மைப் பற்றினார்க்கு, நல்லவரோ! தேன் அபிஷேகப் பிரியரோ, அரையில்

நாகத்தை நாணாகக் கட்டியுள்ளனரோ! விடை வாகனரோ! தம்மைப் பாடும் அடியார்களை உடையரோ! மலைமங்கையைப் பாகத்திற் கொண்டவரோ! வீணை வாசிப்பரோ!

### (iii) அடியார் பொருட்டு இறைவனிடம் முறையீடு

இறைவா! அடியார்மேல் பிணி, வினை, இவை சாராவாறு காத்தருளுக; அவர்கள் தங்கள் அல்லலை எடுத்துச்சொல்லி உன்னிடம் முறையிட்டால், அவரை வருத்தி மறுபிறப்பைத் தருதல் நல்லதா! வாய்திறவாது சும்மா இருத்தல்தான் நல்லதா! காலையில் எழுந்து தொழுபவர்களுடைய கவலையைக் களைந்தருளுக! உனக்குத் தொண்டு செய்பவர்களுடைய துக்கங்களைக களைந்தருளுக; அவர்களுடைய மயக்க ஆசைகளை நீக்கி அருளுக.

### (iv) சுந்தரருக்கு அடியார்களிடத்தில் இருந்த பக்தி

இறைவனுடைய சேவடியைச் சிந்திப்பவர், இரவும் பகலும் ஏத்துபவர், இறைவனை எங்கள் ஈசன் என்று பணிபவர்; இறைவனிடத்தில் கசிந்த அன்புள்ளவர்கள்— இவர்களே எம்மை ஆளுடையவர்கள், யான் பாடிய வண்டமிழ் மாலை வல்லவர் என்னை ஆளுடையார்; எழு பிறப்பும் அற்றவர்; அவரே என் தலைமேற் பயில்பவர்; நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆதிய அடியார்களுக்கு நான் அடியன், அடித்தொண்டன்; பெருமான் திருவடியையே பற்றாகக் கொண்டவருடைய அடிநாய் நான்; யார் மலர் தூவிக் கண்ணீர் அரும்ப இறைவன் முன்பு நிற்கின்றார்களோ அவர்களோடுதான் நான் அன்பு செய்வேன்.

பக்தர்களே! நாவலூரன், அடித்தொண்டன்—ஆகிய நான் பாடின அலங்கல் மாலையைப் பாடுமின்! ஏசின (புகழாப் புகழ்ச்சியைக்) குறித்துப் பேசுமின்!

## 137. சுந்தரரும் அடியார் அல்லாதாரும் [149]

பனங்காட்டூர் உறையும் எங்கள் பிரானை உணராதார் உணர்வு என்ன பயனுடைத்து? எதற்கும் பயனிலதாம்

என்க. அங்ஙனமே அவரைச் சாராதார் சார்வும், அவரை நினையாதார் நினைவும், அவரைப் பரவாதவர் பரவுதலும், அவரைப் பேசாதார் பேச்சும், அவருக்கு அடிமை செய்ய மனம் குழையாதவர் குழைவும், அடிமை செய்யப் பயிலாதவர் பயில்வும் பயனற்றனவாம்; அவரைத் தொழுகின்ற அடியார்கள் வான் ஆளப்பெறும் வார்த்தையைக் கேட்டும் அவரை மலரிட்டு வணங்காதவர்கள் அவர் நம்மை ஆள்கின்ற அன்பின் திறத்தை அறியாதவர்களாம். ஆதலால், வாருங்கள், அவர்க்கு ஆளாக வாருங்கள் என உலகர் பலர்முன்பு அவர்களை நான் (பரிவுடன்) அழைக்கின்றேன். சிவபக்தி எனும் வித்து இல்லாத நெஞ்சினரை விட்டு விலகிடுவேன், விலகிடுவேன்—என்கின்றார் சுந்தரர்.

## 138. சுந்தரரும் சிவனும் [150]

(i) வேதாரணியத்துக்கு அருகில் உள்ள 'கோடி' என்னும் கடற்கரைத் தலத்தில்—மக்கள் குடியிருப்பு இல்லாத இடத்தில்—பெருமான் தனியாகக் கோயில்கொண்டிருப்பதைச் கண்டு மிக வருந்திப் பாடுகின்றார் சுந்தரர்:

"பெருமானே! கடற்காற்று கடிதாய்க் கரைமேல் மோதுகின்றது; பக்கத்தில் குடியிருப்பார் யாரும் இல்லை; இருந்தால் குற்றம் ஆகுமா என்ன! உன்னை இங்ஙனம் தனியாகக் கொடியேன் கண்கள் காணுகின்றனவே! யார் துணையாக இங்கு இருக்கின்றாய்! சுற்றிலும் பெரிய காடு; தேவி அஞ்சும்படி மரப்பொந்தில் ஆந்தைகளும் கோட்டான்களும் குழறுகின்றன. இங்குள்ள வேடர்களோ மிகப் பொல்லாதவர்கள், தீயர்; போயும் போயும் இங்கே வந்து கோயில்கொண்டனையே; இக் கடற்கரையிற் பல கொடிய வேடர்கள் வாழ்கின்றார்கள். இரவுதான் உனக்குத் துணையோ! என்ன தைரியத்தால் நீ தனியாக இங்கு இருக்கின்றாய்? இருப்பதற்கு வேறு இடம் இல்லாததால், தேவியும் கங்கையாளும் உன் ஆகத்திலேயே இடம் பெற்று இருக்கின்றார்கள்; இங்கே காடுகாள் (மோடி) என்னும் வனதேவதைதான் இருக்கின்றாள்.

(ii) சிவபிரான் பலி ஏற்பதை நினைந்து சுந்தரர் வருந்துவது

பெருமானே! பலிக்காக ஊர் ஊராக இத்தனை ஊர் களில் நீ திரிகின்றாயே! உன் மலரன்ன சேவடி நோவாதோ! மூளியான வெண்டலையில் நீ பலிகொள்வதைக் கண்டால் உனது அடியார்கள் நெஞ்சம் உருகுவார்களே; நீ இத் தொழிலை முற்றிலும் விடமாட்டாயா! பாம்பைக் கச்சாகக் கட்டி, கழலும் சிலம்பும் ஒலிக்க, நீ உச்சிப்போதில் பலி வாங்க ஊர் ஊராகத் திரிவதைக் கண்டால் அடியார் மனம் உருகாரா! ஒருபால் தொண்டர்கள் பாடித் துதிக் கின்றார்கள் உன்னை, ஒருபால் தேவர்கள் ஏத்தி வணங்கு கின்றார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த நீ பலிக்குச் செல்வது பான்மையா!—என்றெல்லாம் கூறி வருந்து கின்றார் சுந்தரர்.

(iii) சிவபிரானிடத்துச் சுந்தரருக்கு இருந்த உரிமை

என்பொன், என் ஆனை, மனக்கினியான், எனக் கினியான், எந்தை தந்தை—எனக் கூறிக் கொண்டாடு கின்றார் இறைவனைச் சுந்தரர்.

(iv) சிவனுடைய கருணையும் அருட்டிறமும்

பெருமானே! இனிப் பிறவி வாராமே இம்மையே எனைத் திருத்தி ஆண்டனை; என்னை உகப்பாய், என்னை முனிவாய், என்னை அதட்டி அடக்குவாய், என்னை மோது விப்பாய், என்வினையை ஒழிப்பாய், ஆயினும் என்னைப் பொருட்படுத்தி என் பிழைகளைப் பொறுத்தாய். உனக்கே ஆளாகும்படி செய்வாய்; பிறர் எவரையும் பணிந்து வேண்டாமல், ஆடையும் பொன்னும் கொடுத்து உதவுவாய்.

## 139. (i) சுந்தரரும் பரவையாரும் சங்கிலியாரும் [151]

(i) இறைவா! எனக்கும், பரவைக்கும், சங்கிலிக்கும் பற்றாய பெருமான் நீ. பரவையை எனக்குத் தந்து ஆண்டனை; சங்கிலியோடென்னைச் சேர்த்து வைத்தாய்;

மான் போன்ற கண்ணியராம் கமலினி (பரவை), அநிந்திதை (சங்கிலி) என்பவர்தம் கண்வலைப்பட்டுத்தான் நான் வினைக்கு ஆளானேன்.

## (ii) சுந்தரரும் பரவையாரும்

1. யான் செய்த அபசாரங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டு பரவையை எனக்குத் தந்து என்னை ஆண்டருளினார் இறைவர்; பெருமானே! மாதர்களின் வருத்தத்தை நீ அறிவாய்; பரவை வருந்தா வண்ணம் நெல் அளித்தாய்; அது திருவாரூர் வந்துசேர வழிபுரிந்தருளுக; பரவை வாடுகின்றாள்; அவளது வருத்தம் தீர, என் கவலை தீரப், (பொன் முடிப்பைத்) தந்தருளுக; அவளுடைய பசி வருத்தத்தை நீ அறிவாய்; பரவை காரணமாக நான் திருவாரூரை மறக்க முடியாதவனாய் இருக்கின்றேன்.

பரவையிற் (கடலிற்) பிறந்த நஞ்சை முன்பு உண்டது பரவைக்கு (கடலுக்கு)ச் செய்ததோர் அபசாரம் என்று கருதியோ, பின்னர்ப் பரவை எனப் பெயர் கொண்ட இவளுக்கு உபகாரம் செய்தாய்.

## (iii) பரவையின் வர்ணனை

அல்குல்—பரக்கும் அரவல்குல்; பையாரும் அரவேரல்குல்.

இடை—மின் இடை; நுண்ணிடை.

இயல்—தக்க (பொருத்தமான) இயல்.

கண்—மாவடு போன்றது; வாள் போன்றது; மை நிறையப் பூசியது.

குழல்—பூ நிறைய அணிந்தது; மணம் வீசுவது.

கொங்கை—கொங்கை நல்லாள் பரவை.

மொழி—பண் மயத்தது.

விரல்—பந்து சேர் விரல்.

### (iv) சுந்தரரும் சங்கிலியாரும்

1. சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமான் இறைவர்; குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்த திருவொற்றியூரைச் சேர்ந்தேன்; சங்கிலியின் மென்தோள், தடமுலை சார்ந்தேன், சார்ந்தேன். அற்பனாகிய என்னைப் பொருட்படுத்தி இறைவன் சங்கிலியோடு என்னைச் சேர்ப்பித்தார்; மானின் இயல்கொண்ட சங்கிலியால் வரும் பயன்களெல்லாம் தோன்ற அருள் புரிந்தார்; அவள்பொருட்டு என் கண்ணை மறைப்பித்தார்; அவள்மேல் வைத்த காதல் காரணமாக இறைவற்கு ஆளாக இவ்வுலகிற் பிறந்தேன்; வினை இவ்வாறாக, நான் என்ன செய்யக் கிடக்கின்றது; என் வினையை என்னென்றெடுத்துரைப்பது!

### (v) சங்கிலியின் வர்ணனை

**இயல்**—மான் போன்றவள்.

**தோள்**—மென்தோள்.

**முலை**—தடமுலை.

**மொழி**—பண்மயத்த மொழிப் (பரவை) சங்கிலி.

## 140. சுந்தரரும் பார்வதியும் [152]

தேவியைத் தமது பாகத்தில் அன்புடன் வைத்துள்ளார் பெருமான்; தேவியின் திருவடியைப் பற்றி நான் நிரம்பப் பாடுவேன்; அங்ஙனம் பற்றித் திடபக்தியுடன் திருவருளை மிகத் தேடுவேன்; அந்த ஆனந்தத்தில் மிக ஆடுவேன்; இறைவன் திருவடியை (என் குற்றங்களை நீக்கி நான்கொண்ட குறிப்புடன்) நன்கு கூடுவேன். தேவியின் இளைய மகன் (முருகனையும்) நான் தெளிந்தறியேன்; (அவனை நான் நாடினேன் இல்லை); வயிறுதாரிப் பிள்ளையாம் கணபதியையும், குமரப் பிள்ளையாம் வேலனையும் கோல்கொண்டு தட்டித் தேவி ஆள்வதில்லை; பெருமானே! நீ வீணான பேச்சுக்களைப் பேசி மாதர்களின் வளைகளைக் கவர்ந்தால், மலையரையன் மகளான பார்வதி உன் செயலைக்கண்டு பொறுத்திருப்பாளோ! கூறுக.

## 141. சுந்தரரும் முருகவேளும் [153]

[தலைப்பு 218-ம் பார்க்க]

பிள்ளைக் குமரன் அங்கையில் வேல் ஏந்தியுள்ளவன்; தாருகாசுரனை அட்டவன்; தேவியின் இளைய பிள்ளையாம் (முருகனை) நான் தெளிந்தறியேன்; ஆகலால் முருகனை நான் நாடினேன் இல்லை; இம் முருகவேள் சிவபெருமானுடைய மகனாராயிருந்தும் குறவர் மகளை மணந்தார்.

## 142. சுந்தரரும் யோகமும் [154]

எனக்கு உற்றவராயிருந்த ஐம்புலச்சேட்டையை ஒழித்து உள்ளத்து உள்ளே உள்ள உண்மைப் பொருளை நான் நன்கு பற்றிப் பிடித்துள்ளேன். நாள்தோறும் (நிட்டை நிலையில்) இறைவனுடைய மலர்ப் பாதங்களை நன்கு தேடுவேன்; நாபிக்கு மேலே நால்விரல் இடத்தில் நாடி நாடிப் பார்ப்பேன்; அங்கே பரம்பொருளைச் சிக்கெனப் பிடித்து மிக மகிழ்வேன், கூத்தாடுவேன், ஆனந்தக் கூத்தாடுவேன்.

## 143. சுந்தரரும் வனப்பகையும் சிங்கடியும் [155]

வனப்பகை—சீர் நிறைந்த ஞானி; அவளுடைய அப்பன் நான்.

திருவாரூரைச் சித்தத்தில் வைத்துள்ள புகழைக் கொண்ட சிங்கடியின் தந்தை நான். வில் என வளைந்த நெற்றியையும், நிறைந்த அழகிய கூந்தலையும் உடையவள் சிங்கடி; அவள் உருவ லக்ஷணம் உள்ளவள்; மை பூசிய அகன்ற கண்களையும், மதுரமான பேச்சினையும், மென்மையையும் உடையவள்; நல்லவள்.

கிடைத்துள்ள நூறு பதிகங்களுள் சிங்கடியைப் பற்றி எட்டுப் பதிகங்களிலும், வனப்பகையைப் பற்றி ஒன்பது பதிகங்களிலும் சுந்தரர் குறித்துள்ளார்.

## 144. சுந்தரரைக் குறிக்கும் சொற்கள் [156]

ஆரூரன், இசைஞானி சிறுவன், ஊரன், சடையன் தன் காதலன், சிங்கடி தந்தை, திருநாவலூரன், திருவாரூரன், நம்பி, வன்றொண்டன், வனப்பகை யப்பன்—என்பனவும், இவை போல்வனவும் ஆன பெயர்கள் இவரால் தம்மைக் குறிக்க ஆளப்பட்டுள.

மேற்படி பெயர்கள் அல்லாமல் தம்மைக் குறிக்கக் கீழ்க் குறித்துள்ள சொற்றொடர்களும் காணக் கிடக்கின்றன :

அடித்தொண்டன், அடி நாயேன், அடியார், அடிநாய் ஊரன், அணுக்க வன்றொண்டன், அருங் குலத்து அருந் தமிழ் ஊரன், அல்லியந் தாமரைத்தார் ஆரூரன், ஆரூரன் பேர் முடிவைத்த மன்னு புலவன், இளங்கிளை ஆரூரன், சிறுதொண்டன், மன்னு தொல்புகழ் நாவலூரன்.

## 145. ஞாயிறு [158]

['சிவனும் ஞாயிறும் என்னும்' தலைப்பு 102-ம் பார்க்க]

அருக்கன், இரவி, கதிரோன், சவிதா, சுடரோன், ஞாயிறு, பகலோன், வெயில்—என்னும் பெயர்களால் சூரியன் கூறப்பட்டுள்ளான்.

## 146. ஞானம் - ஞானியர் [159]

கற்றிலேன் பல கலைகளை, ஞானங்களை என்கின்றார் சுந்தரர் ; அவர் பாடின பதிகத்தின் உண்மையைத் தத்துவ ஞானிகள் தடுமாற்றம் இன்றி உணர்வர்.

## 147. தமிழ் - தமிழ்ப்புலவர் [160]

அருந்தமிழ், இன்தமிழ், இன்னிசைத் தமிழ், ஏழிசை இன்தமிழ், ஒண்சீர் உறைதமிழ், ஒலிகொள் இன்னிசைத் தமிழ், குறையாத் தமிழ், சந்தம் மிகுதமிழ், சீரூர் தமிழ்,

செஞ்சொற்றமிழ், செந்தமிழ், தண்டமிழ், திணைகொள் செந்தமிழ், நலத்தமிழ், நற்றமிழ், பண்ணு ரின்றமிழ், பலங்கிளர் தமிழ், பன்னலந்தமிழ், பாவணத்தமிழ், பொய்யாத் தமிழ், வண்டமிழ்—என்றெல்லாம் 'தமிழ்' விளக்கப்பட்டுளது.

தண்டமிழ் நூற் புலவாணர், கலைமலிந்த தென்புலவர்— எனத் தமிழ்ப் புலவர்கள் குறிக்கப்பட்டுள்ளார்கள்.

பண்ணொடு பாடப்படும் தமிழ்ப் பாடலின் இசைக்கு ஒப்ப, முழவு வாத்தியம் ஒலிக்கப்படும்.

## 148. *தலங்கள் [161]

### 1. அஞ்சைக் களம் [4]

அழகிய பொழில் சூழ்ந்தது; கடற்கரை மேல் மகோதைக்கு அணித்தாயது.

### 2. அதிகை [38]

இத்தலம் மாநகர்—எனப்பட்டுளது; இறைவனுக்குப் பற்றுக்கோடாய (ஆசைக்கிடமாய) பெருமை வாய்ந்த தலம்.

### 3. அரிசிற்கரைப்புத்தூர் [9]

அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள அழகு நிறைந்த தலம்; அழகார் புத்தூர் என வழங்குவது; பொழில் நிறைந்தது; புகழ்த் துணை நாயனார் கைத்தொண்டு செய்து நித்தலும் படிக்காசு (இறைவன் அளிக்கப்) பெற்ற தலம்.

### 4. அவிநாசி [92]

இத்தலம் புக்கொளியூர் அவிநாசி எனப்படும். குரங்குகள் ஆடும் பொழில் சூழ்ந்த தலம்; காடுபோல உயர்ந்த சோலை சூழ்ந்த தலம்; பறவைகள் வாசம் செய்யும் சோலையைக் கொண்ட தலம்; ஆண் குரங்கு உண்பதற்காகப்

---

* அவ்வத் தலத்தில் பெயர்க்கு அருகில் [ ] இக்குறிக்குள் உள்ள எண் பதிக எண்.

பெண் குரங்கு பழங்களைத் தேடும் மலைப்புறத்தை உடைய தலம்; காலை, மாலை, சந்தி வேளைகளில் நீரும் பூவும் இட்டு வழிபடுவோர் புத்தியில் உறைவார் அவிநாசியப்பர்; 'புக்கொளியூர்க் குளத்திற்குளிக்க இறங்கி முதலை வாய்ப்பட்டு மறைந்த (பிரமசாரியப்) பிள்ளையை (இனி மோசம் செய்யாமல்) அந்த முதலையே கொண்டுவந்து குளக்கரையிற் கக்கும்படி, இறைவா! நீ காலனுக்குக் கட்டளை இடுக'—என்று சுந்தரர் பாடி வேண்டின தலம் இது.

## 5. ஆமாத்தூர் [45-6]

நம்மையும், ஆமாத்தூர் என்னும் தலத்தையும் ஆண்டனன் இறைவன்—என்கின்றார் சுந்தரர்.

## 6. ஆரூர் [8, 37, 51, 54, 73, 83, 95 முதலிய]

அழகிய, குளிர்ந்த, நறுமணத்த, செம்பவளநிறச் சோலையும் பொழிலும் சூழ்ந்த ஊர் திருவாரூர்; இங்குப் பொழிலில்—(1) அன்றிற் பறவைகள் தவறாது வந்து சேரும்; (2) பெண்பறவைக் கூட்டங்கள் வந்து அடையும்; (3) கமுகு, பல பழங்களுடன் நிறைந்து, பொலியும்; (4) சூரா மலர்கள் நறுமணம் வீசும்; (5) குயிலும் வண்டினங்களும் பாடும்; (6) பாம்புகள் ஆடும்; (7) செருந்தி செம்பொன் நிறமுள்ள மலர்களுடன் திகழும்; (8) மணநாறு புன்னையும், மாதவியும் அரும்பீன்று மலரும்; (9) பொய்கையில்—தாமரை மலரும்; அல்லி மலரில் வண்டுகள் இயங்கும்; (10) கிடங்கிற்– சேம்பு, செங்கழுநீர் திகழும்; (11) வயல்களில்—அன்னங்கள் வைகும்; தினைத்தாள் போன்ற கால்களை உடைய நாரைகள் சேரும்; (12) பறவைகள் பாயக், கரும்புகள் நெரிதர, அவற்றின் சாறு வயலருகே பாயும்; செந்நெல் விளையும்; செல்வம் பொலியும்.

திருவாரூர் சீரும் செல்வமும் நிறைந்த ஊர்; தென்றல் மணம் கமழும் ஊர்; மல்லிகைச் செடிகளும் மாடங்களும் நெருங்கிவிளங்கும் ஊர்; கனத்த பெரிய மதில்களைக் கொண்ட ஊர்; மாதர்கள் விரும்பி வாழும் ஊர்; பெரியவர்

களின் புகழ் விளங்கும் ஊர்; அருமறையும் ஆறங்கங்களும் ஓதப்படும் ஊர்; உலகங்களில் உள்ள ஊர்களில் ஒப்பற்ற ஊர் இது என்று உரைக்கத் தக்க ஊர்; தேவர்கள் வணங்கி ஏத்தும் பெருமான் (தியாகேசர்) வீற்றிருக்கும் ஊர்; ஆடும் தியாகரது ஊர்; இறைவன் விருப்புடன் அமர்ந்துள்ள ஊர்; அவர் திருமூலட்டானர், புற்றிடங்கொண்டவர் என்னும் திருநாமங்களுடன் விளங்குவர்; தேவர்கள் காணிக்கையாகப் பொன்னையும் மணியையும் தூவி 'நீயே துணை' என்று அவரை நித்தமும் வணங்குவர்; குமரன், திருமால், பிரமன் இவர்கள் கூடிய தேவர் கூட்டம் பெருமானை வணங்கித் தொழும்.

ஆரூர் - யாருடைய ஊரோ, நமது அன்று என்று எண்ணியோ - அவ்வூரை விட்டு அகன்று - 'கோடி' என்னும் இத் தனி இடத்தில் தனியாக வீற்றிருக்கின்றாய், பெருமானே நீ - என வேடிக்கையாக இறைவனை வினவுகின்றார் சுந்தரர். ஆரூரின் பெருமையை உணர்ந்து "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என ஓதுகின்றார் சுந்தரர்.

## 7. ஆரூர்ப் பரவையுண் மண்டளி [96]

கரந்தை, வன்னி, மத்தம், வில்வம் நிரம்பிய சீரை உடைய திருக்கோயில்.

## 8. ஆலங்காடு (பழையனூர்) [52]

பத்தரும், சித்தரும், பிற பலரும், பல சிறந்த மலர்கள் கொண்டும், பண்நிறைந்த இசையுடனும் இறைவனை ஏத்தி வணங்கும் தலம் - பழையனூர் ஆலங்காடு.

## 9. ஆவடுதுறை [12-10]

பொழில் சூழ்ந்த அழகிய தலம்; இறைவன் வீற்றிருக்கும் தலம்.

## 10. ஆனைக்கா [75]

அழகிய, குளிர்ந்த, நீர் நிறைந்த, நீர்பெருகி மோதும் - தலம் ஆனைக்கா; உலகோர் உய்ய "அப்பு ஸ்தலமாய்"

விளங்கும் தலம்; *திருமால் பேறுபெற்ற தலம்; உறையூர்ச் சோழன் காவிரி நீரில் நழுவவிட்ட ஆரத்தை, அவன் வேண்டியபடியே, திருமஞ்சனக் குடத்தில் அந்த ஆரம் வரவும் அபிஷேகத்தின்போது அந்த ஆரம் தம்மீது விழும் படியும், ஆணைக்கா அண்ணல் ஏற்றுக்கொண்ட வரலாறு விளங்கும் தலம்.

## 11. இடைமருதூர் [50-2, 60-10]

காவிரித் தென்கரையில் உள்ளது. 'மருதவானவர்' என்பவர் இறைவர்.

## 12. இடையாறு [31]

பெண்ணையாற்றுநீர் மோதும் தலம் இது. இத் தலத்தில் உள்ள 'மருது'—திருமருதந்துறை என்னும் திருக்கோயிலைக் கூறுபவர்களின் வினை எங்கேயோ ஓடிப்போம்; அவர்கள் உள்ளம் குளிர்வார்கள்.

## 13. இராமேசுரம் [12-7]

தென்னாட்டில் உள்ள தலம் இது.

## 14. எதிர்கொள்பாடி [7]

இறைவன் வீற்றிருக்கும் கோயிலைக் கொண்ட தலம் இது; பக்தர்களின் கருத்தை யீர்த்துப் பிணிக்கும் தலம் இது.

## 15. ஐயாறு [77]

அழகிய காவிரிக் கரையில் உள்ள திருக்கோயிலை உடைய தலம். அடியார்கள் தமது துயர் போகவேண்டி அங்கங்கே ஓடும் தமது சிந்தையை இழுத்து ஐயாற்றப்பனிடம் வைப்பர்.

* கும்பகர்ணனைக் கொன்ற ஹத்தி நீங்கின தலம்; விவரத்தைத் [illegible]றியூர் (தலைப்பு 161-ல்) காண்க.

## 16. ஒற்றியூர் [91 முதலிய]

கடற்கரைத் தலம். கப்பல்களும், மீன்பிடிக்கும் படகுகளும் கரையிடத்தே விளங்கும் தலம். பொழில் சூழ்ந்த தலம். புன்னை மலரும் நிலப்பாங்கில் உள்ள தலம்; படம்பக்கம் என்னும் வாத்தியம் கொட்டப்படும் தலம்; இறைவன் இருப்பிடம் இத்தலம்; ஒற்றி (சுவாதீன அடைமானம்) (mortgage with possession) வைக்கப்பட்ட தலம் ஒற்றியூர் என்ற குறையினலோ அல்லது யாது காரணத்தால் இறைவா! நீ இந்தக் 'கோடி' என்னும் தலத்தில் தனியே வீற்றிருக்கின்றாய் என வினவுகின்றார் சுந்தரர்.

## 17. கச்சி அனேகதங்காவதம் [10]

சிவபிரான் உறைகின்ற தலம்; பலகாலமாக வீடுபெற விரும்புபவர்கள் நினைக்கும் தலம்; சூரியன் இருளை ஒழிக்கின்ற தலம்; இத்தலத்தில் குயிற்பெடை தன் ஆணொடும் ஆடும்; மாதவி, மவ்வல் (முல்லை - வனமல்லிகை), குரா, வகுளம் (மகிழம்பூ), குருக்கத்தி, புன்னை, அல்லி இவற்றின் இடையே பெட்டை வண்டு உறங்கும்; கொடிகளின் இடையே குயில் கூவும்; படமுடைய பாம்புகள் ஆடிப் பயிலும்; மயில்கள் ஓசை செய்யும்; இத்தலத்தில் வினைப்பகை தீரும்; யமதூதர்கள் செய்யும் துயர் ஒழியும்; திரு விளங்கும்; பிறவி ஒழியும்; பெரியோர் பெருமை பொருந்த இங்கு உறைவர்; பந்தபாசம் அற்றவர் கைதொழுது இங்கு இறைவனை ஏத்துவர்.

இறைவனைத் தியானிக்கப் புகும் பக்தர்கள் தமது சித்தத்தை ஒரு நெறிப்படுத்தி இங்கு உறைவர்.

தாம் பாடிய இப் பதிகத்தைப் பாட வல்லவர்கள் இங்குக் கூடுவர் என்கின்றார் சுந்தரர்.

## 18. கச்சி (ஏகம்பம்) [61 முதலிய]

என்றும் ஒலி மிக்கிருப்பதால் 'கலிக் கச்சி' எனப்படும் இந்தத் தலம்; பல்லவன் ஆட்சித் தலம்; மாடங்களும், மதிலும் விளங்கும் தலம்; உமை நங்கை இறைவனை என்றும்

சத்தி வழிபடப் பெற்ற தலம். தேவி வழிபட்டபோது, இறைவன் வெள்ளத்தை ஏவி அச்சம் ஊட்டத், தேவி அஞ்சி ஓடி இறைவனைத் தழுவ, இறைவன் வெளிப்பட்டுத் தேவிக்கு அருளினார்; பெருமான் பெரிய கம்பன், நல்ல கம்பன் கள்ளக் கம்பன்—எனப்பட்டுள்ளார்; தேவி ஏலவார் குழலி எனப்பட்டுள்ளாள். தேவி இறைவனைப் பூசித்து உலகை உய்ய வைத்தாள்.

## 19. கச்சிமேற்றளி [21]

காஞ்சியில் முல்லைநிலப் பாங்கில் உள்ள தலம்; பெருமை வாய்ந்தது; கல் மதில் சூழ்ந்தது; அழகிய மாளிகைகளைக் கொண்டது; வயல்களில் தாமரை மலர்வது.

## 20. கச்சூர் [41]

அன்னம் மன்னும் வயல்களைக் கொண்டது; மணி மண்டபங்களும் புதிய மாடங்களும் விளங்க, ஒருபுடை பொழிலும் புனலும் விளங்க, மங்களம் நிறைந்து, வயல், தோட்டம், ஆலைகள் இவைகளுடன் பொலிவது கச்சூர்; அழகிய கச்சூரின் வடபக்கத்தில் உள்ளது அழகும் நிறைவும் கொண்ட ஆலக்கோயில்.

## 21 கஞ்சனூர் [12-8]

'வட கஞ்சனூர்' என்று குறிக்கப்பட்டுளது.

## 22. கடம்பந்துறை [12-4]

பெருமான் வீற்றிருக்கும் தலம் கடம்பந்துறை.

## 23. கடவூர் [28, 53]

கடவூர் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று; முல்லை நிலப்பாங்கில் உள்ளது. பொழில் சூழ்ந்த தலம். மாடங்கள் (மாளிகை வீடுகள்) நிறைந்த தலம். தொண்டர்கள் முழவு வாத்தியத்துடன் பாடல்களைப் பயிலும் தலம்; இத்தலத்திற் பெருமான் (காலனை அட்ட காரணத்தால்) 'காலகாலர்' எனக் குறிக்கப்பட்டுள்ளார்.

## 24. கடவூர் மயானம் [53]

மறையோர்கள் ஏத்தும் தலம்; இறைவன் திருப்பெயர் 'பெரிய பெருமான்.'

## 25. கடைமுடி [12-8]

சிவபிரான் உறையும் திருத் தலம்.

## 26. கயிலை [100]

அழகிய மலை; நீர் நிறைந்தது. ஊழிக் காலந்தோறும் மேம்பட்டு விளங்கும் பொன்மலை.

## 27. கருகாவூர் [47-4]

மேகங்கள் தவழும் பொழில்கள் சூழ்ந்த முல்லை நிலத்துத் தலம்.

## 28. கருப்பறியலூர் [30]

இத் தலத்துக் கோயில் "கொகுடிக் கோயில்". எனப்படும். இத் தலத்தில் நறுமணப் பூக்கள் மலரும்; குளத்தில் எருமை வந்து படியும்; கயல்மீனும், வாளைமீனும் குதி கொள்ளும்; சோலைகளிற் கண்டவர்தம் கண்குளிரும் படியான கமுகு, தேன் ஒழுகும் குலை நிறைந்த தென்னை, மா, வாழை, பொலிவுற்றன. நறுமணம் வீசும் பொழிற் சோலையில் கனிகள் பல உதிர்ந்தன; கொடிகளில் வண்டுகள் ஆணும் பெண்ணும் ஏறிப் பண் இசைத்தன; குயில்கள் பாட மயில்கள் ஆடின; குயில்கள் கூவின. மயில்கள் ஒலித்தன; கலை மலிந்த தமிழ்ப் புலவர்கள், கற்றோர் இவர் தம் இடர் தீர்க்கும் தலம் இத்தலம்; பண்ணுடன் இசைகள் பாடி ஆடி, அன்பர்கள் தரிசிக்கும் தலம்; தம் வினைகள் அற்று ஒழிய மறையோர்கள் பன்னாளும் பாடியாடிக் (குற்றேவல்) வழிபாடு செய்யும் தலம். பொய்யே இலாத வாய்மையாளராய் நாடோறும் தவறாமல் நீரில் மூழ்கிப், பூப் பறித்து, முப்போதும் இண்டை மாலை கட்டி, இறைவன் திருவடியிற் சூட்டியும், திருநீறு பூசிப் போற்றிப் பூசைசெய்தும், எரி ஓம்பியும், மறை வளர்க்கும் அந்தணர்கள் வாசம்

செய்யும் தலம்; பெருமான் 'கோல்வளைக்கை அம்மை' யாம் தேவியொடும் வீற்றிருக்கும் தலம்; பெருமானைச் சமணரும் சாக்கியரும் புறங்கூறி வந்தனர் (சுந்தரர் காலத்தில்).

## 29. கருவூர் [39-7]

பொழில் சூழ்ந்த தலம்.

## 30. கலயநல்லூர் [16]

அரிசிலாற்றின் தென்கரையில் உள்ளது; நறுமணப் பொழில் சூழ்ந்தது; பொழிலின் அரும்புகளின் அருகில் இளவண்டுகள் பண் பாட அழகிய மயில்கள் நடமாடும். கரும்புகளின் அருகில் உள்ள கருங்குவளைகள் கூம்பி நிற்கக், கழனிகளில் தாமரைகள் மலரும்; கன்றின் கூட்டங்கள் கரும்பின் முளைகளைக் கறிப்பதற்கு வழிகாட்டுகின்ற பசு இனங்கள் கழனிகளில் உள்ள நறுமணக் கழுநீர் மலர்களைக் கவர்ந்து உண்ணும்; எருமைகள் நீரிற் பாயக் கயல் மீன்கள் நெருங்கி ஒதுங்கும்; தாமரை மலரிற் களித்து நின்ற வண்டின் கூட்டங்கள் சிதறி ஓடும்; கரும்புன்னை மரங்கள் வெண்முத்துப் போன்ற அரும்புகளை ஈன்று, பொன்னிறப் பூக்களை மலர்வித்துப், பவளத்தின் அழகை எடுத்துக் காட்டும்; சோலைகளிற் குயில்கள் கூவ, அழகிய மயில்கள் ஆலிக்கும்; வண்டின் கூட்டங்கள் இசை பாடும்; பைங்கிளிகள் சொற்கொண்டு இறைவனைத் துதிக்கும்.

கலய நல்லூர் நீர் நிறைந்த தலம்; கயல்மீன்கள் குதித்தோடும் வயல்கள் சூழ்ந்த தலம்; கமுகின் பூம்பாளையில் உள்ள மதுவின் வாசனையிற் கலந்து மணம் கமழும் தென்றல் புகுந்து உலவு தலம்; கண்டவர்களின் மனத்தைக் கவரும் தலம்; குளிர்ந்த தாமரைப் பொய்கை சூழ்ந்துள்ள அழகிய தலம்; தாமரைப் பொய்கையில் மாதர்கள் குடைந்தாடும் தலம்; சொல்லும் பொருளும் உள்ள நான்மறை, தோத்திரம் ஆகிய இவைகளைச் சொல்லித் துதித்து இறைவனுடைய பெருமைகளைக் கற்பாரும் கேட்பாருமாய்க் கலை பயில்கின்ற அந்தணர்கள் வாழும் தலம்; மறையொலி,

பேரி ஒலி, முழவொலி, பிள்ளைகள் துள்ளி விளையாடும் ஒலி—இவை பெருகி உள்ள தலம்; மண்டபம், கோபுரம், மாளிகைகள், சூளிகைகள் (மேல் தளங்கள்) விளங்கும் தலம்; மறையொலியும் திருவிழா ஒலியும் நிறைந்துள்ள தெருக்களை உடைய தலம்; கலைகளை நன்கு அடையப் பெற்றுக் கலியை வாராது தடுக்கவல்ல அந்தணர்களின் ஓமப்புகை மேகக் கூட்டங்கள்போல மேலெழுந்து அழகு தரும் தலம்; காலையிலும் மாலையிலும் கடவுளின் அடி பணிந்து மனங்கசியும் அடியார்கள் பயிலும் தலம்.

இத்தலத்துக் கோயில் 'பெருங்கோயில்' எனப்படும். விசாலமான கோயில்; பிரமன் முன்பு வழிபடப், பரமன் மகிழ்ந்து அவற்கு அருளிய தலம்.

## 31. கழிப்பாலை* [23]

தாழை, நீர் முள்ளி சூழ்ந்த கடற்கரைத் தலம்; கடலைச் சார்ந்த கழனியிற் கரும்புகள் நிறைந்திருந்த தலம்; கழிகளுக்கு அருகே தெருக்கள் விளங்கின தலம்; கடற் செல்வம் பொலிந்த தலம்; பெருமான் மகிழும் தலம்; தொண்டு செய்யும் அடியார்களின் வினைகளைப் போக்கும் பெருமான் வீற்றிருக்கும் தலம்.

## 32. கழுக்குன்றம் [81]

காடும் மலையும் கொண்ட தலம்; குளிர்ந்த தலம்; இத் தலத்தில்—மலையினின்று இழியும் வெள்ளை அருவிகள் மணிகளையும் முத்துக்களையும் அடித்துக்கொண்டு இறங்கும்; மும்மதங்கொண்ட பெருங்கை ஆண்யானைகள் பெண்யானைகளுடனும், (யானைக்) கன்றுகளுடனும் சூழ்ந்து திரியும். வண்டினங்கள் (மலர்த்) தேன் உண்டு இன்னிசைபாடி இயங்கக், கானமயில்கள் உலவும் தலம்; அடர்மழை பெய்வதனால் நீண்டு உயர்ந்த மூங்கில்கள் முத்துக்களைச் சொரியும்; மூலைகள் உண்டு தழுவும் குட்டியொடு குரங்குகள் மலைச்

* இத் தலத்துத் திருக்கோயில் கடல் நீரால் கொள்ளப்பட்டு இப்போது ஆலயம் சிவபுரியில் உள்ளது.

சாரல்களிற் பாயும்; திருக்கழுக்குன்றப் பெருமான் விரும்பி நட்டமாடி அமர்ந்துள்ள தலம்; சந்தன மரங்கள் நறுமணம் வீசும் காடும் மலையும் உள்ள நிலப்பாங்கில் உள்ள தலம். நிலைத்த புத்தியுள்ள அடியார்களும், திருமாலும், பிரமனும் பூசை செய்து நித்தம் சொரியும் மலர்களின் மணம் வீசும் தலம்.

சுந்தரருடைய உபதேச மொழிகள்

கொலை ஆதிய பாவங்களும், வினைப்பயனும் நீங்குதற்கு அடிக்கடி போய்ப் போய்த் திருக்கழுக்குன்றத்தைத் தரிசியுங்கள்; நம் வினைகள், நாம் செய்த பிழைகள், நமது அறியாமை இவையெலாம் தீர்வதற்குத் திருக்கழுக்குன்றத்தை நித்தமும், இடைவிடாது, உண்மைப் பத்தியுடன் தொழுமின்கள்; யான் கருத்தழகுடன் பாடிய இத் திருக்கழுக்குன்றப் பதிகத்தைச் சொல்லித் தொழுகின்ற பக்தர்களை நீங்கள் தொழுமின்கள்.

## 33. கற்குடி [27]

நிறைபுனல் சூழ்ந்து அழகுடன் பொலிவது கற்குடி; நறுமணப் பொழிற்சோலை சூழ்ந்தது; கரும்புகள் நிறைந்த வயல் சூழ்ந்தது; இத்தலம் கலை நிரம்பிய மாதவர்கள் சேரும் தலம். திருவிழா பொலியுந் தலம்.

## 34. காழி [58]

கடற்பிரளயத்தில் மிதந்த தலம்; ஊனமில்லாத தலம்; கடல் ஓதம் படியும் தலம்; நீர்முள்ளி வளர்ந்துள்ள கழிக்கரையை உடைய தலம்; வயல்களில் கயல்மீன்களும், சேல்மீன்களும் விளையாடும் தலம்; கரும்பு, வாழை நிரம்பிய சோலை சூழ்ந்த வளநகர்; பெருஞ் செந்நெல் நெருங்கி வளர்ந்துள்ள கழனிகளை உடைய வளநகர்; புண்ணியர் இத் தலத்தைப் போற்றுவர்.

## 35. காளத்தி [26]

மேகம் தவழும் பொழில் சூழ்ந்தது; திரு விளங்குவது; வாயில்கள் நிறைந்த மாளிகைகளைக் கொண்டது; கண்ட

வர்கள் காதலிப்பது; நெறியில் நிற்கும் அடியார்கள் நினைந்து போற்றுவது; வானவர்கள் முடி தாழ்த்தி வணங்குவது.

## 36. கானப்பேர் [84]

வயல் சூழ்ந்தது; இங்கு இறைவன் "காளை" எனப் படும் திருநாமத்தவர்; (காளையீசுரர்).

## 37. காறைட்டுமுள்ளூர் [40]

கொள்ளிடத்தின் கரைமேல் உள்ள தலம்; நீர்த் துறையில் தாமரைமலர்கள்மீது ஏறி அன்னங்கள் விளையாடும்; அங்கு அருகில் உள்ள கழனிகளிற் கரும்புபோல உயர்ந்து பெருஞ் செந்நெல் நெருங்கிய விளைவுடன் பொலியும்; செந்நெல்களின் அருகே தழைத்த கரும்புகளில் அயலில் உள்ள அகழியில் அருகே தேன் மல்கும் கழனியும், தோட்டங்களும் விளங்கும்; கழனிகளிற் களை பிடுங்குவோர் குவளை மலர்களை வாருவர்; கழனிகளிற் கருமணிகள் போல நீலோற்பலம் மலரும்; எருமைகள் கழனிகளில் உள்ள செந்தாமரைகளை மேய்ந்து உண்ணும்; கழனிகளில் தேன் நிறைந்த கருங்குவளைகளைக் காணலாம்; கழனிகளில் ஒருபுறம் நாரைகளும் குருகுகளும் பாய்ந்து ஒலி செய்யும். ஒரு புறம் நீர்த்துறைகளில் கெண்டை மீனும் கயல் மீனும் துள்ளி விளையாடும்; கழனியிற் குவளை மலரிடத்தே வண்டுகள் பண் பாடும்.

சோலைகளிற் பனையும் தெங்கும் நிறைந்து பொலியும்; மாதர்களின் கண்போல விளங்கும் நீலமலர் மலர்ந்துள்ள அகழியின் அருகில் வாழை காடுபோல வளர்ந்து பொலியும்; சோலையில் உள்ள கமுகிடத்தும், இளந் தெங்கினிடத்தும் வெளிப்படும் தேனைப் பருகிக் காளை வண்டுகள் பாட, மயில் கூவும்; முள்ளுடன்கூடிய மடல்களை உடைய தாழைகள் மலர்ந்து நறுமணத்தைப் பரப்பும்; கொள்ளிட நதியில் மாதர்கள் குடைந்தாடுவார்; இருக்கு வேதம் சொல்லும் அந்தணர்கள் வேள்வி இயற்றி நாடெங்கும் நன்மை வழங்குவர்; திரு நிறைந்த செல்வத்தராய அந்தணர்கள் முத்தீ வளர்த்து ஓதுவர்.

## 38. குருகாவூர் [29]

இங்கு மல்லிகையும், பொய்கையில் அல்லியும், நீலமும் மலரும்; அழகிய அணி நடை மட அன்னங்கள் பொய்கையின் அருகே விளங்கின; வாவிகளிற் கயல்மீன்கள் பாயும்; குளத்திடையே மடைகள் தோறும் காவி, குவளை, தாமரை, கழுநீர் மலரும்; பொழில்களில் நல்ல கனிகள் நிறைந்திருந்தன; வயல்கள் விளங்கிய அழகிய தலம் இக்குருகாவூர்; இங்கு இறைவன் "வெள்ளடை நம்பி" என்னும் திருநாமத்துடன் விளங்குவர்.

## 39. குற்றாலம் [12-3]

திருநீறு விளங்கும் சிவபிரான் வீற்றிருக்கும் தலம்.

## 40. குறுக்கை [12-2]

குறுக்கை நாட்டில் இருந்த தலம் குறுக்கை.

## 41. கூடலையாற்றூர் [85]

வண்டறையும் மலர்ச் சோலைகள் சூழ்ந்த தலம்: கொடியணிந்த நெடிய மாடங்களைக் கொண்ட தலம்; தேவியொடும், மாலொடும், பிரமனுடனும், பேய்க் கணங்களுடனும், குறட் பூதப் படையொடும் கூடலையாற்றூருக்குத் தாம் போகும் வழியில் பெருமான் வீணை ஏந்தி, வெண்புரிநூல் பூண்டு ஓர் அழகிய திருக்கோலத்துடன் வந்த அதிசயத்தை, திருவிளையாடலை, யான் அறியேன் என வியப்புடன் கூறுகின்றார் சுந்தரர்.

## 42. கேதாரம் [78]

வாழைக்கனியைக் கிளி கீறி உண்ணும் தலம்; மதம் பிடித்த யானைகள் மணிகளை வாரி எறியக் கிண்ணென்ற ஒலி ஒலிக்கும் தலம்; ஒளி நிறைந்த பொற்சுனைகள் வயிரத்தைச் சொரியும் தலம். பிடிகள் (பெண் யானைகள்) முதிய மூங்கில்களை ஒடிக்கக் களிறுகள் (ஆண் யானைகள்) கூட்டமாய் நின்று சுனை நீர்களைத் தூவும் தலம். மயிற் பெடையும்; பெண்மானும் நிலத்தைக் கீண்ட மணிகள் சிந்தும் தலம்;

கிழக்கே சலம் இடும் (அந்தணர்கள்) தொழுகின்ற தலம்; ஒருக்காலர்கள் என்னும் தேவ சாதியர் இருக்கு மறை சொல்லி மலர் தூவி, இறைவன் நம்மை ஆள்வான் என்று களிற்றினமாய் நின்று சுனை நீர்களைத் தூவிச் செம்பொற் பொடி சிந்தி வணங்கும் தலம்; வேடிக்கைப் பேச்சுடன் நீரும் சோறும் தந்து அறம்புரிவோர் தொழுகின்ற தலம்; பண் நிறைந்த தமிழ்ப் பாடலின் இசைக்கு ஏற்பக் குழலும் முழவும் ஒலிக்கும் தலம்.

## 43. கேதீச்சரம் [80]

ஈழநாட்டில் (இலங்கையில்) மாதோட்டம் என்னும் நகரில் உள்ள கோயில் கேதீச்சரம்; கடற்கரைத் தலம் கேதீச்சரம்; கழி சூழ்ந்தது; பாலாவி என்னும் ஆற்றின் கரைமேல் உள்ளது; தெங்கம் பொழில் சூழ்ந்தது; மாம்பழங்கள் தொங்கும் பொழிலைக் கொண்டது; பொழிலில் வண்டு தேனை உண்டு யாழ் ஒலி எழுப்பும் தலம்; தேவியொடும் இறைவன் பொருந்தித் திடமாக வீற்றிருக்கும் தலம்; (ராகு)*கேது பூசித்த தலம்; †கண்டம் தழுதழுக்தல், நா அசைதல் முதலிய பத்து இலக்கணங்களை யும் உடைய அடியார்கள் தொழுகின்ற தலம்; தமது பாவம், தமக்குள்ள வினை இவைதமை அறுப்பவர்கள் பயிலும் தலம்.

## 44. கோடி [32]

கடற்கரையில் உள்ளது; நிறைவும் அழகும் கொண்ட குரவம் பொழில் சூழ்ந்தது; திருமறைக்காட்டுக்கு (வேதாரணியத்துக்குத்) தெற்கே உள்ளது; மிகக் கொடியவர்களான வேடர்கள் வாசம் செய்வது; ஒரு கோடிப்புறத்தில் இறைவன் தனியாய்க் கோயில்கொண்டிருப்பதைக் கண்டு சுந்தரர் பல வகையாக வருத்தப்படுகின்றார். பெருமானே! ஆரூர்—ஆர் ஊரோ என்று ஐயப்பட்டு அவ்வூரைவிட்டு அகன்றீரோ! ஒற்றியூர்—ஒற்றிவைக்கப்பட்ட ஊர் என்னும்

---

* ஒளிநெறியில் தலைப்பு 161-43-ல் விவரம் காண்க. † இந்நூல் பக்கம் 4—கீழ்க் குறிப்பைப் பார்க்க.

குறையைக் கண்டு அவ்வூரை விட்டுவிட்டீரோ! ஏன் குடிகள் யாரும் அயலில் இல்லாத இந்தக் கோடியில் தனியாகத் துர்க்காதேவியுடன் (மோடி — காடுகாளுடன்) போகம் கொண்டு கோயில்கொண்டுள்ளீர்! மரப் பொந்தில் ஆந்தையும் கோட்டானும் குழறுகின்றனவே! கடற்காற்று கடுமையாய் வீசுகின்றதே! நீர் போய்ப் பலி பெறுவதற்கு அயலில் குடிகள் இல்லையே; கொடிய வேடர்கள் வாழும் இடமாயிற்றே இது; இங்கே நீர் இரவே துணையாக ஏன் கோயில் கொள்ளவேண்டும். பயங்கரமான காட்டிடையே தேவி அஞ்சக் கோயில் கொண்டுள்ளீரே!

## 45. கோயில் (சிதம்பரம்) [90]

பெருமை வாய்ந்த இத்தலம் தில்லை, புலியூர் எனப்படும். தில்லைச் சிற்றம்பலத்தே பெருமான் ஆடல் கொண்டுள்ளார். தமருகமும், எரி யகலும், கரிய பாம்பும் திருக்கரத்தில் விளங்கப் பெருமான் ஆடுகின்றார். பேரூரில் (மேலைச் சிதம்பரத்தில்) ஆடும் பெருமான்தான் புலியூர்க் கூத்தப்பிரான்; இவரை முச்சந்திப் போதிலும் தவறாமல் வழிபாடு ஆற்றும் பெருமையாளர்களாம் அந்தணர்கள் மூவாயிரவர்; இவர்கள் பல்லவர்க்குத் திறை கொடாதவர்களைப் புறக்கணிக்கும் பெருமை வாய்ந்தவர்கள்.

## 46. கோலக்கா [62]

இது அழகுவாய்ந்த தலம்; நறுமணம் வீசும் பொழிலிற் குராமலரின் தேன் மணக்கும் தலம்; நீர் நிறைந்த செழுமிய கழனிகளைக் கொண்ட தலம்; குரங்கின் கூட்டங்கள் குதித்து விளையாடும் வயல்கள் சூழ்ந்த தலம்; விண்ணவரும் மண்ணவரும் போற்றும் தலம்; "அன்று வந்து என்னைத் தமக்கு ஆளாகும்படி ஓலை காட்டி, உலகோர் முன்னிலையில் வென்று, திருவெண்ணெய் நல்லூர் என்னும் தலத்தில் ஒளித்துக்கொண்ட பெருமானை-நான் கோலக்கா என்னும் இத்தலத்திற் கண்டுகொண்டேன்"—என்கின்றார் சுந்தரர்.

## 47. கோவலூர் [12-1]

சிவபிரான் வீற்றிருக்கும் தலம் கோவலூர்.

## 48. கோளிலி [20]

நீர் வளமுள்ள வயல்களைப் பெற்ற தலம்; கொல்லை களின் வளம்பெற்ற தலம்; செம்பொன் மாளிகைகள் சூழ்ந்த தலம்; பதினெண் கணங்களும் போற்றி வணங்கும் தலம். இத் தலத்தில் உள்ள கோயில் 'பெருங்கோயில் களில்' ஒன்று.

## 49. சாத்தமங்கை [39-4]

ஒலிக்கின்ற புனல் சூழ்ந்த தலம் இது.

## 50. சுழியல் [82]

இங்குள்ள தீர்த்தம் "கௌவைக் கடல்" எனப்படும். இது முத்துக்களைக் கரையிற் சேர்ப்பிக்கும். இத் தீர்த்தத் தில் மாதர்கள் குடைந்தாடுவர்; இறைவன் "திருமேனிப் பெருமான்" என்னும் திருநாமத்தவர். தெய்விகம் வாய்ந்த முனிவர்கள் தொழுதேத்திய தலம் இது; இத் தலத்துப் பொழிலில் தேன் உண்டு வண்டினங்கள் பாடும். இத் தலத்துப் பெருமானைத் தொழுபவர் உள்ளத்தின் பழுது நீங்கிப் புகழொடு வானத்து உயர்வர்; அரசராவர், திரு வுடன் விளங்குவர்; இத் தலத்தைப் பல்வகைய காரணங் களால் நினைவார் தமை நமன்தமர் நலியார்; நினைந்தேத்து பவர் பாசப் பிறப்பறுப்பவர்; திருச்சுழியலில் தொண்டு செய வல்லவர் துயரிலர்; இத் தலத்தை மலராலும் புகை யாலும் வழிபாடாற்றி நினைந்து ஏத்துபவர் புகழ்பெற்ற தவத்திற் சதுரர் ஆவர்; திருச்சுழியலைப் பேரூர் (மேலைச் சிதம்பரம்) எனப் பாவித்து இறைவர் இங்கு விருப்புடன் உறைவார்; திருச்சுழியற் பெருமானது திருநாமத்தைக் கற்பவர் நற்கதி அடைவர்; ஆதலால் அவரை ஏத்துதல் நமது கடமையாகும்; சுழியற் பெருமானுடைய திருவடியை உண்மையுடன் நினைத்தால் நமது வினை எளிதாகத் தீரும்.

## 51. சோற்றுத்துறை [94]

காவிரிக்கரைத் தலம்; குளிர்ந்த நீரையுண்டு எரி போலும் தளிர்களை ஈனும் மாம்பொழில் சூழ்ந்த தலம்; நீர் சூழ்ந்த தலம்; ஆத்தி முதலிய மலர்கள் தேன் சொட்டும் சோலைகளை உடைய தலம்; கூவும் மயிலும், ஆடல் வண்டு களும் நிறைந்த சோலையை உடைய தலம்; வண்டினங்கள் மலர்த் தாதுகளில் நெருங்கும் தலம்; மாதர்களின் இருப் பிடங்களில் அவர்கள் கூந்தலுக்கு ஊட்டும் புகை விண் அளாவும்; சிவபிரான் விருப்புடன் அமர்ந்திருக்கும் தலம்; இண்டை ஆதிய மாலைகளைப் புனைந்து இடையறாத அன்புடன் தொண்டர்கள் போற்றிப் பரவும் தலம்; செல்வத் தையும் சுற்றத்தாரையும் துறந்த பெரியோர் சாரும் தலம்; தலையால் வணங்கும் தவத்தோர் என்றும் நீங்காத தலம்; தொழுதவுடன் பழவினை தீரும் தலம்; 'செல்வச் சோற்றுத் துறை' எனப்பட்ட தலம்; அன்புடன் இலைகொண்டு பூசித்து ஏத்துபவர் இங் நிலையாத வாழ்வினின்றும் நீக்கம் பெறுவர்.

## 52. தலையாலங்காடு [12-2]

குளிர்ந்த தலம்.

## 53. தினைநகர் [64]

இமயம்போல உயரிய நல்ல செறிவுள்ள பொழில் சூழ்ந்த தலம்; செடிகள் காடாய் மலிந்துள்ள தலம்; செருந்தி பொன்மலரும் தலம்; வரால் மீன்கள் துள்ளி விளையாடும் (சேறுள்ள செந்நெல் வயல்களைக் கொண்ட) தலம்.

உலகோர் சென்று குலாவிப் பயின்று பரவி நின்று ஏத்தும் தலம்; மனமே! திருத்தினை நகருட் சிவக்கொழுந் தீசுரரை நீ தியானிப்பாயாக.

## 54. துருத்தி [12-7, 18-1, 74-1]

காவிரிக்கரைத் தலம்; சோழநாட்டுத் தலம்; இறைவ னுக்கு உறைவிடமான தலம்.

## 55. துறையூர் [13]

பூ நிறைந்த பொய்கைகள் சூழும் தலம்; பெண்ணை நதியின் வடகரையில் உள்ள தலம். செல்வம் நிறைந்த மாளிகைகள் சூழ்ந்து விளங்கும் தலம். மந்திகள் (பெண் குரங்குகள்) பல நடமாடும் தலம்.

கன்னிப் பெண்கள் (பாவையர்) ஆடும் தலம்; வாத்திய நிருத்த கீதங்களின் ஒலி எப்போதும் முழங்கும் தலம்; பக்தர்கள் பயின்றேத்திப் பரவும் தலம்; தாம் (சுந்தரர்) கையால் தொழுதேத்திய தலம்.

## 56. நள்ளாறு [68]

செறிவுற்ற சோலைகள் சூழ்ந்த தலம்; நறும்புகை நறுமணம் விரியும் தலம்; பண் சீகாமரம் (நாத நாமக்கிரியை) பாடுபவர்களின் நாவில் ஊறுவர் பெருமான்.

வெண்ணெய் நல்லூரில் அற்புதமான பழைய ஓலையைக் காட்டி அடியனாக என்னை ஆட்கொண்ட பெருமான் நள்ளாறர் என்று இத்தலத்துப் பதிகத்திற் சுந்தரர் தமது வரலாற்றைக் கூறுகின்றனர்.

## 57. நறையூர் [93]

நறையூர் நாட்டுப் பகுதியைச் சேர்ந்த தலம் இது; திங்கள் (நிலா) தவழும் வளமார் பொழிலில் தேன் நிறைந்துள்ள தலம்; சீர் உற்ற தலம்; செழுநீர் உள்ள தலம்; கழுநீர் மணக்கும் செழுநீரில் கயல்மீனும் சேல்மீனும் துள்ளி விளையாடும். பள்ளியெழுச்சி வேளையில் தேன்நிறை தாமரை மலரும்; அருவிகள் மணிகளையும் பொன்னையும் கொழிக்கும்.

மாதர்கள் நிறைந்து நிற்கும் தெருவில் தேர் ஓடும் தலம்; மாதர்கள் மடுநீரில் திளைத்து விளையாடி மகிழும் தலம்; மாதர்களின் முகம் தாமரை மலர்போல் விளங்கும்; செந்நெறியில் வழுவாது உயரிய ஒழுக்கம் வாய்ந்துள்ள பெரியோர்கள் நிறைந்து வாழும் தலம்; இசைப் பாட்டுக்கு

எடுத்துக் கூறலும், முழவும் திருவிழாக் காலங்களில் நெடுந் தூரம் ஒலிக்கும் தலம்; விரும்பும் மறையோர்கள் நிறைந்த சொற்பொருள் தெரிந்தவர்களாய் வாழும் தலம்; இத் தலத்துக் கோயில் "சித்தீச்சரம்" எனப்படும்.

## 58. நன்னிலம் [98]

இத் தலத்தில் பலன் நிரம்பத் தரும் பைம்பொழில்கள் மரங்களைத் தடவி நிற்கும்; மடைகளில் நிறைந்துள்ள வளமுள்ள தாமரைமலர்மீது அன்னங்கள் பொருந்தி நடை செய்யும்; கோங்கு, வேங்கை, மாதவி, சண்பகம் இவை குளிர்ந்து பொலிவுறும்; இங்குள்ள கோயில் 'பெருங் கோயில்' எனப்படும்; பெருமான் நலந்தரும் கோயில் இது;

யாவரும் நாடும் இக் கோயில் சோழர் வேந்தன் கோச்செங்கணன் செய்த கோயில்; இத் தலத்தில் இறைவன் விருப்பத்துடன் உறைகின்றார்; புண்ணிய நான்மறை அந்தணர் இறைவனை முறைப்படி போற்றிசைக்க வந்து சேர்ந்துள்ள தலம்; அவர்கள் பலகாலும் பக்தியுடன் வணங்கும் தலம்; நொச்சியின் பச்சிலையாலும் தெளிந்துள்ள நீராலும் தொழும் அடியார்கள் விரும்பும் தலம்; கூத்தப்பிரானே! உனது திருவடி போற்றி என்று அன்புடன் மொழிந்து, கூப்பிய கையொடு தோத்திரம் பல தெரிந்தவற்றைச் சொல்லும் அடியார்கள் நாடிவரும் தலம்; பூதேவி நாயகனும் திருமாலுக்கு அருள்புரிந்த பெருமான் வீற்றிருந்து நன்மை பாலிக்கும் தலம்; திருவிழாவில் நல்ல சைவர்களும், தவத்திற் சிறந்தோரும் நெருங்கி உறையும் தலம்.

## 59. நணிபள்ளி [97]

வியப்புக்கு உரிய பொழிலில் தேன்நிறை கொன்றையில் வண்டுகள் ஒலிசெய்யும்; செங்கயல்கள் வயல்களிற் பாயும்; ஆறங்கமும் நான்மறையும் கற்று வேள்விகளை எங்கும் இருந்து அந்தணர்கள் மூன்றெரி ஓம்பி ஆற்றுவர்; பெருமான் நண்ணி வீற்றிருக்கும் தலம்.

## 60. நாகேச்சரம் [99]

தெங்கு நிறைந்த பூம்பொழில் சூழ்ந்த தலம்; நறு மணம் தேடி அணைந்த வண்டுகள் ஒலிசெய்யக், குயிலும் மயிலும் நெருங்கும் பொழில் சூழ்ந்த தலம்; குல்லை (வெட்சி அல்லது துளசி), முல்லை இவை தம்மில் ஊடாடிப், பின்னர்க் குளிர்ந்த மாதவி—குருக்கத்தியின்மேல் வண்டுகள் வந்து சேரும் தலம். குருக்கத்தியின் பக்கத்தில் உள்ள சூரா பாம்பின் பற்களை நிகர்க்கும் அரும்புகளை ஈனச், செருந்தி செம்பொன் நிற மலர்களை மலர்விக்கும்; தாமரை மலர்மீது தேனை உண்டு வண்டுகள் பண்செய்யக், கயல் மீன்கள் திளைத்துக் குதிக்கும் தலம்; வெளிப்புறத்தில் உள்ள இளங்கமுகின் முதுபாளைகளில் உள்ள தேனொடு கலந்து தென்றல் புகுந்து உலவும் தலம்; மலர்ந்த மல்லிகை யிலும் சண்பகத்திலும் ஊடாடித் திரியும் வண்டுகள் பண் செய்யும் தலம்: அழகிய குவளையும் கழுநீரும் மலரும் வயல் சூழ்ந்த கிடங்கில் (அகழியில்) சேல்மீனும், வாளை மீனும் பாயும் தலம்; கயல் பாய்தரும் கழனிகளை உடைய தலம்: நீர் நிறைந்து குளிர்ச்சியுற்ற வயல்களைக் கொண்ட தலம்; மலைத்தலத்து மணியும், சந்தனமும், அகிலும் அருவி நீரால் உந்தப்பட்டு வரும் தலம்.

தொண்டு பல செய்து இறைவனை வணங்கும் தொழில் பூண்ட அடியார்கள் பரவிப் போற்றும் தலம்.

## 61. நாகை [46]

கடற்கரைத் தலம்; காரோணத் தலம்; செல்வநிறை நகர்; தோகை மயில் அனையவர்கள் நடமாடும் தலம்; காண்பதற்கு இனிமையான அழகிய மாடங்கள் நிறைந்த நெடுவீதிகள் பொலியும் தலம்.

'நாகைக் காரோணத்தில் வீற்றிருக்கும் பெருமானே! மறையோர் நிறைந்த திருவீழிமிழலையில் (சம்பந்தர் - அப்பருக்குக்) காசு கொடுத்து அருள்புரிந்தீர், இன்று எனக்கும் (காசு) அருளவேண்டும்' - என இத்தலத்தில் வேண்டு கின்றனர் சுந்தரர்.

## 62. நாட்டியத்தான்குடி [15-9, 10]

சோழநாட்டில் நிறைந்த பழம்புகழ் கொண்ட தலம் இது; நண்டுகள் விளையாடும் வயல்களையும் சோலைகளையும் கொண்டுள்ள தலம்.

## 63. நாவலூர் [17-11 முதலிய]

அழகிய ஊர்; சிறந்த ஊர்; குளிர்ந்த தேன் நிறைந்த பொழில் சூழ்ந்த ஊர்; வயல்நீரிற் கமலம் மலர்கின்ற ஊர்; மேலும் இவ்வூர் நிலைத்த பழம்புகழ் கொண்டது; எப்போதும் நல்ல விளைவைத் தரும் வயல்களைக்கொண்டது; வஞ்சிக்கொடிகள் வளர்ந்துள்ளது; பனை வளரும் விரிந்த பொழிலை உடையது; கடல்சூழ்ந்தது; அழகிய செல்வம் நிறைந்த மாடங்களை உடையது; பல ஊர்கள் சுற்றிலும் உள்ளது; முழவும் குழலும் ஒலிசெயும் தலம் இது; நல்ல பெரியார் பலர் வாழ்கின்ற தலம்; தேர் ஓடும் நெடு வீதிகளை உடைய தலம்; மாடங்கள் (உப்பரிகை) நிறைந்த தலம்; பெருமானுக்கு உரிய தலம்.

திருவெண்ணெய் நல்லூரிலே என்னை ஆளாகக் கொண்டவருடைய தலம்; நரசிங்க முனையரையர் அன்புடனே ஈசனுக்குத் தொண்டு செய்த தலம்.

## 64. நின்றியூர் [19, 65]

இத் தலத்தில் சிவபிரான் என்றும் மகிழ்ந்துறைவர்; திருமகள் வாசம் செய்யும் செல்வத் திருநின்றியூர் எனப் போற்றப்பட்டது இத்தலம்; திணை இலக்கணம் கொண்டுள்ள செந்தமிழைப் பைங்கிளிகள் தெரிந்து கூறும் தலம்; முத்தும் பொன்னும் தரும் தலம்; காவிரியாற்றினால் உந்தப்பட்டு வரும் பல மணிகளைச் சிறு பிள்ளைகளின் கூட்டம் விளையாடக் கருதித் தெருக்களிலும், திண்ணைகளிலும், முற்றத்திலும் பற்றி ஒன்றுசேர்க்கும் தலம்; பெட்டை மந்தியும், மான்கன்றும், கிளிப்பிள்ளையும் போன்ற மாதர்கள் மாடமாளிகைகளில் உலவும் தலம். செழும் புனலில் செங்கயல் பாயும் வயல்கள் பொலியும் தலம்.

சித்தர், வானவர், தானவர் வணங்கும் தலம்; தொண்டர்களின் வழிபாடு நீங்காத தலம்; நீதி வேதியர் களின் நிறை புகழ் நிலவு தலம்; திருமாலும் பிரமனும் இந்திரனும் மந்திரங்கள் ஓதி வணங்கும் தலம்; நின்றியூர் என்னும் பெயர்வைத்து 360 வேலி நிலத்தையும், மூந்நூறு வேதியரையும் பொன்மணிக் கலசங்களுடன் ஈந்து, தனது பக்தியைப் புலப்படுத்திய பரசிராமற்குச் சிவபிரான் தமது திருவடி தரிசனத்தைத் தந்த தலம். பெருமான் இங்குச் சீருடன் சிவகதி தருவாராய்த் திகழ்கின்றார்.

## 65. நீடூர் [56]

நீர் நிறைந்த வயல் சூழ்ந்தது. நீரிற் கெண்டைமீனும், வாளையும், வராலும் குதிகொள்ளும்; பைம்பொழிலிற் புன்னை, மாதவி, மல்லிகை மலர்தரும்; கரும்பு ஓங்கி வளரும்; குயில்கூவ அயலில் மயிலும் அன்னமும் ஆடும் தலம். 'செல்வ நீடூர்' எனப்பட்டுளது. இங்குப் பரமன் பாடி ஆடினர்; கோடி தேவர்கள் இக் கூத்தனைக் கும்பிட்டுப் பணிவர்; மண்ணவர் பரவித் தொழுவர். இத் தலதைப் பணியாமல் விடக்கூடாது.

## 66. நெல்வாயில் அரத்துறை [3]

நண்டுகள் விளையாடும் நீர் பரந்த வயல் சூழ்ந்த முல்லை நிலத்துத் தலம்; நிவா நதியின் கரையில் உள்ள தலம். நெடிய உயரிய சோலை சூழ்ந்த தலம்; நீலமலர் மலர்கின்ற பொய்கையில் அன்னங்கள் நிறைந்த தலம்; மயிலன்ன மாதர்கள் பயிலும் இடம்; அவர்கள் காணப் பெருமான் நடஞ்செய் தலம்; வானவர் வந்து பணிந்து போற்றும் தலம்.

## 67. பருப்பதம் [79]

சிவபெருமான் வீற்றிருக்கும் தலம்; செல்லுதற்கு வழி கஷ்டமான தலம். மான் இனங்களும் மயில் இனங் களும் ஒன்றுகூடிக் கலந்து, மேய்ந்து, சுனை நீரைப் பருகி, மரங்களில் உராய்ந்து, பொழில்களின் ஊடே சென்ற

புகுந்து, மாம்பொழிலின் நிழலில் துயில்கொள்ளும் மலை; மான் இனமும் மயிலும் பிற பல விலங்குகளும் தேன் உண்ணும் பொழிற் சோலை மிக்குள்ள மலை; ஆனையின் கூட்டம் பிரிந்து ஓடிப் பெண்யானைகளின் சூழலில் திரியத், தனித்து நின்ற பெண்யானை ஒன்று (பசியால்) முகம் வாடிட, அதை அறிந்து இரக்கம் கொண்ட வேடர்கள் இலையினால் தொன்னை தைத்துத் தேனை ஊற்றி அத்தேனைப் (பெண்) யானைக்கு ஊட்டும் மலை.

மலைச் சாரல், பொழிற் சாரல் இவைகளின் புறமே வரும் யானைக் கன்றின் கூட்டம் மலைப்பக்கங்களிற் பிடிகளை இடித்துப் பால் உண்ணப், பிடிகள் வேதனைப்பட்டுத் தமக்குரிய ஆண் யானைகளை அழைத்துப் பிளிற, அப் பிளிறுதலைக் கேட்ட ஆண்யானைகள் தத்தம் பெண் யானைகளைக் களிப்புடன் தேடிவரும் மலை.

(எனக்குச் சொந்தமாய் நீ இருக்க) வேறு ஆண் யானையுடன் நீ சென்றாய் என்று மதயானை நெருப்புச் சிந்த மிகமிகக் கோபித்து, முகம் சுளித்து, அவமதித்துப் பேச, அச்செயலைத் தரிக்கலாற்றாத பெண்யானை, அயலிற் கிடைத்த சாட்சியுடன் ஆண் யானையைத் தேற்றி (தெளிவு படுத்தித்) தன் கற்பினை நிலைநிறுத்தப் பிரமாணஞ் செய்யும் மலை; அம் மலையிற் பன்றிகளின் கூட்டம் பூமியைக் கிளைக்க, எரிபோல மணி சிதறத், தினைவிளையும் மலைச்சாரலிற் கரடிகள் திரியும்; யானைகள் ஆணும் பெண்ணும் தேன் உண்டு களித்துத் திரியும்.

மகளொருத்தி புனம் காவல் செய்யும்போது, கிளி வந்து கதிரைக் கொய்ய, இந்தக் கிளி என்னை மதிக்கவில்லையே என்று கூறிக், கவண் கல்லை எறியக், கிளி பறந்தோடும் மலை - சீபர்ப்பதமலை; அவள் கோபித்து 'ஆயோ' என்று கவண், கல்லை வீசப் பறந்து ஓடின கிளி ஒருபுறத்தே அமர்ந்து பாடிடும் மலை அது; "ஏ! கிளிகளே! நீங்கள் அப்போது வந்து (கதிர்களை) உண்ட பொழுது நான் சும்மா இருந்தேன், நீங்கள் எப்போதும் வந்து இம்மாதிரி

உண்டால், என்னைச் சேர்ந்தவர்கள் என்மீது கோபிப்பார்கள்; இங்ஙனம் வந்து உண்பதே இப்போது உங்களுக்குத் தொழிலாகிவிட்டது" என்றுகூறி அந்த மகள் கவண் கல்லை வீசும் மலை இது.

## 68. பழனம் [12-9]

சிவபிரான் காதலிக்கும் தலம் திருப்பழனம்.

## 69. பழையாறு [12-5]

கீழையூருக்குப் போகும் வழியில் உள்ளது பழையாறு.

## 70. பனங்காடு [86]

மேகம் படியும் மணிமாடங்களைக் கொண்ட ஊர் வன்பார்த்தான் பனங்காட்டூர்; மயில் நிறைந்த சோலைகளாற் சூழப்பட்ட ஊர்; மடையில் வாளைகள் பாயும் ஊர்; உலகினர் சேரும் இவ்வூரில் பறையும் சங்கும் எப்போதும் ஒலிக்கும்; புதுமலர் கொண்டு வழிபடும் அடியார்களின் இசைப் பாடல்கள் எப்போதும் ஒலிக்கும்;

பனங்காட்டூர்ச் சிவபிரானை உணராதார் உணர்வும், அறியாதார் அறிவும், சாராதார் சார்வும், நினையாதார் நினைவும், பரவாதவர் பரவுதலும், பேசாதார் பேச்சும், அவர்க்கு அடிமைசெய்யக் குழையாத மனக்குழைவும், பயிலாத பயில்வும்—எதற்கும் பயன்படாதனவாம்.

## 71. பனையூர் [87]

இத் தலத்தில் வளர்பொழிலிற் பாடல்வண்டுகள் ஒலி செய்யும்; பொழிலில் மாதவர்கள் தவம் செய்வர்; குரங்குகள் குதிகொள்ளத் தேன் உகும்; நீர்வயலிற் கெண்டை மீன்கள் பாயும்; எருமைகள் மேட்டினின்று நீர் நிலையிற் பாயச், சேல் மீன்களும் வாளைகளும் வயல்களிற் பாயும்; கழனிகளில் வாளை பாய, மலங்கு, கயல், வரால் என்னும் மீன் வகைகள் வயல்களிற் குதித்தோடும்; இத் தலத்தில் நறுமணம் கொண்ட செங்கழுநீர், நல்ல மல்லிகை, சண்பகம் மலரும்; மாதர்கள் நீரிற் குடைந்து ஆடக்,

குவளையும் தாமரையும் மலரும்; மரங்கள்மேல் மயில்கள் கூவக், குரங்குகள் புகுந்து பாயும்; மண்டபங்களிலும், மாட மாளிகைகளிலும் கோபுரங்களின்மேலும் குரங்குகள் பாயும்; முழவம் ஒலிக்க யாழ் முரலும்; இத்தலம் கமுக மரங்கள் சூழ்ந்த தலம்.

மாதர்கள் பயிலும் தலம்; காவிரி சூழும் சோழ நாட்டினர் பரவிப் பணிந்த கருணைக்கடலானவரும், தேவாரப் பா விரித்த புலவருமான ஞானசம்பந்தப் பெருமானுடைய பாடலைப் பெற்ற தலம்; பனையூர் அழகிய ஊர்; பனையூர்ப் பெருமான் அழகியர்; அவர் தோளும் ஆகமும் தோன்ற அரங்கில் நடம் ஆடுவார்; தொண்டர்கள் துள்ளிப் பாட நின்றாடுவார்; அவர் அங்கைத் தீ உகப்பார்; தொண்டர் களை ஆட்கொள்ளுவார். ஆனில் ஐந்து உகப்பார்; ஆறு சூட வல்லார், ஆடுமாறு வல்லார்.

## 72. பாச்சிலாச்சிராமம் [14,15-6]

பொன் விளையும் கழனிகளையும், புள்ளினங்கள் ஒலிக்கும் பொய்கைகளையும் உடைய தலம் இது; பாவையர்கள் ஆடும் தலம்; 'அன்னப் பொய்கை'யை உடைய தலம்.

(கொல்லி மழவன் என்னும் அரசனுடைய மகளின் முயலகன் என்னும் நோயைத் தீர்த்து) அவன் உள்ளத்தைக் குளிர்வித்தவர் இத் தலத்துப் பெருமான். அருமைப் புகழ் வாய்ந்த ஞானசம்பந்தப் பெருமானுக்கு அருள்பாலித்த தலம்.

## 73. பாண்டிக்கொடுமுடி [48]

கறையூரில் உள்ளது பாண்டிக்கொடுமுடி என்னும் திருக்கோயில்; காவிரியாற்றின் கரையில் உள்ளது; நெருங்கிய பொழில் சூழ்ந்தது; பொழில் சூழ்ந்து அழகுபெற நின்ற காவிரியாற்றில் மங்கையர் குடைந்தாடுவர்; காவிரியின் கரையில் உள்ள மரக்கொம்புகளின்மேற் குயில் கூவும், மயில் ஆடும்; கற்றவரும் நல்லவரும் தொழும் தலம் இது;

இறைவனுக்குப் பிரியமான தலம்; *நாரணனும் பிரமனும் தொழும் தலம்.

## 74. புகலூர் [34]

இத் தலத்தில் வயலில் தாமரை ஓங்கி வளரும்; மலர்த் தேன் மணக்கும்; பொய்கை நீரில் எருமைகள் பாயும்; எருதுகள் பூண்டு உழவு நடைபெறப், பறவைகள் ஒலிக்கும்; ஒன்று சேரும்; மரப் பொந்துகளில் ஆந்தைகள் இடைவிடாது பாடும்.

புலவர்களே! புகலூரைப் பாடுவீர்களாக! அமரர் உலகில் அரசு ஆளலாம், சிவலோகத்தை ஆளலாம், இப் பிறப்பிலேயே உணவும் உடையும் கிடைக்கும், இடர் கெடும், நோய்கள் வாரா, நரகத்தில் அழுந்தாது உய்யலாம், இதிற் சற்றேனும் ஐயமில்லை.

## 75. புறம்பயம் [35]

இத்தலம் 'செல்வப் புறம்பயம்' எனப்பட்டுளது. இங்குக் காவிரியின் கங்கைநீர் வயல்களை நிரப்பிப் பொன் விளையச் செய்யும்; வாளை மீன்கள் துள்ளிப் பாயும் வயல்களில் மலரும் தாமரைப் பூக்களின்மேல் நண்டுகள் துயிலும்; பொழில்களில் அன்னச் சேவலோடு ஊடிய பேடைகள் கூடிச் சேரும்; (கழிகளில்) நீர் நிலைகளில் புன்னையின் இளமரங்கள் மணம் வீசும்: புறம்பயம் தாமரை மலரும் பொய்கை உள்ள தலம்; இங்கு-மகிழ், மல்லிகை, செண்பகம் இவற்றின் புதிய மலர்கள் பகலிலும் இரவிலும் மலரும், சோலையில், மடைகளிற் கழுநீர் மலரும்; அருகில் (ஆலையிற்) கரும்பு ஆடும், பக்கங்களில் தேன் மணம் வீசும்.

நெஞ்சமே! கவலையை விட்டு எழு; புறம்பயம் என்னும் தலத்தைத் தொழுவதற்குப் போவோம்; நீ கள்ளத்தனமாய் முன்பு செய்த கொடும் தீமைகள், பாவங்கள் இவை ஒழிவதற்கு வேண்டித், தெளிவுடன் போவதற்கு எழுவாயாக; இப் பிறப்பில், உன் மலங்கள் எல்லாம் ஒழியும்; சிறிதும்

---

* திருமாலுக்கும், பிரமனுக்கும் இத் தலத்திற் கோயில் உளது. அதனால் இத் தலத்தைத் "திரிமூர்த்தித் தலம்" என்பர்

அஞ்சாதே—நடுங்காதே; மறுபிறப்பில் வினைகள் சாரா; பொய்யை ஒழி; முன்பு செய்தவினை இப் பிறப்பிலே வந்து தாக்கும்; ஆதலால், நீ கலங்காதெழுந்து புறம்பயம் தொழப் போவாயாக! அருமையான தொண்டுப் பாடல் களைப் பாடிக் குதித்துக் கூத்தாடித் தேவர்கள் தொழும் தலம் புறம்பயம்; சிவலோகனுடைய ஊர் புறம்பயம்.

## 76. புன்கூர் [55]

செழும் பொழில்களை உடைய தலம்; தாமரை மலரும் பொய்கை சூழ்ந்த தலம்; இங்கு வயலில் வாளைகள் பாய்ந்து குதிக்கும்.

## 77. புனவாயில் [50]

இத் தலம் "பழம்பதி" எனப்படும்; அழகிய புனம் (கொல்லை வயல்) சூழ்ந்த பதி; கற்குன்றும், (சிறு செடிப்) புதரும், வெட்டவெளியும், கடற்கழியும் சூழ இத்தலம் அழகாய்த் தோன்றும்; புதர்க்காட்டில் மேய்ந்த கருங்கோழி புற்றின்மேல் ஏறிக் கூகூ எனக் கூவி அழைக்கும்; கொள்ளி வாயையும் கூரிய பற்களையும் உடைய பன்றி தரையைக் கிளற, நெருப்பன்ன செம்மணிகள் வெளித் தோன்றும்; தரையில் உள்ள கள்ளிச்செடி வற்றப், புல்தீந்துபோய்க், கொடிய காடு இருப்பதற்கு இடம் தாராது சுடப், புள்ளி மான்களின் கூட்டங்கள் (எங்கெங்கோ)போய் ஒளிந்து கொள்ளும். (பாலை நிலத்திற்) பிறக்கும்—தோன்றிடும் - கள்ளிச் செடியின் நீண்ட கிளையில் ஆண்புறா ஏறித் தன் பெடையைக் கூப்பிடும் கொல்லை சூழ்ந்த தலம் புனவாயில்; குங்கும மரப் பொந்தில் ஆந்தைகளின் பாட்டு இடைவிடாது ஒலிக்கும். துடி வாத்தியத்தின் பேரொலி எப்போதும் கேட்கும்; •வாணிபம் செய்யும் வியாபாரிகளின் கூட்டத் துடன் கொலைவேடுவர்கள் செய்யும் போர் அடிக்கடி நிகழும் இத் தலத்தில் வேடுவர்களின் கணைக்கு அஞ்சிப் பேய்ப் மான்கூட்டங்கள் ஓடி ஒளிக்கும்.

பக்தர்களும், பாசம் அற்றவர்களும் பாடி நின்று ஆடும் பதி—புனவாயில். சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்பதி.

சிவனடியார்கள் எப்போதும் புக்குப் போற்றும் தலம்; தேசத்தில் உள்ள அடியார்கள் வந்து இருபோதும் வணங்குவர்.

மனமே! நீ மறவாது புனவாயிலை நித்தம் கருதுவாயாக; அங்ஙனம் நினைப்பேன் என்று என்னொடு சபதம் செய்வாயாக.

## 78. பூவணம் [11]

சீரொடு மிகப் பொலியும் தலம்; பண்ணிசையுடன் பலர் பாட இறைவன் மிக்க விருப்புடன் அமர்ந்துள்ள தலம்.

## 79. பைஞ்ஞீலி [36]

வயல்களில் அன்னங்கள் சேரும்; பக்கத்துச் சோலைகளிற் குயில்கள் பாடும்; பாடல் வண்டுகள் இசை எழுப்பும்; நீர் பாயும் அகழியில் தாமரை மலரும்; குருக்கத்தியும் புன்னையும் சோலையில் திகழும்; சோலைகளில் மலர்களின் நறுமணம் வீசும்; சந்தனம், வேங்கை, கோங்கு, அகில், சண்பகம் இவைகளை அடித்துக்கொண்டு வரும் நீர் சூழ்ந்த தலம் பைஞ்ஞீலி.

பத்தர்களும் சித்தர்களும் பாடியாடும் பதி; பாரெலாம் பணிந்து பெருமானைப் பரவும் பதி; நாள்தோறும் பாடிப் பரவுவார் வினைப்பற்றை ஒழிக்கும் பதி.

## 80. மண்ணிப் படிக்கரை [22]

பல்வகை உயிர்கள் வாழும் தெண்ணீரை உடைய தலம்; இறைவன் வீற்றிருக்கும் தலம்; இறைவனுடைய திருமுடியிலும், அடிமேலும் மலரிட்டுப் பரவித் தொண்டர்கள் தொழுது ஏத்தி ஆடும் தலம்.

## 81. மயிலை (மயிலாப்பூர்) [59-8]

கடலின் துறையிற் கிடக்கும் பவளம் ஒளிவீசி இருளை அகற்றும் பழைய தலம்.

## 82. மருகல் [12-1]

வாழை காய்க்கும் தலம்.

## 83. மழபாடி [24]

வண்டுகள் நிறைந்த பூம்பொழில் சூழ்ந்த தலம்; இறைவன் தேவியுடன் வீற்றிருக்கும் தலம்; சூரியனும் தேவ கணங்களும் நல்ல மலரிட்டு இறைவனைப் பூசிக்கும் தலம்.

## 84. மறைக்காடு (வேதாரணியம்) [71]

இத் தலத்தில் உயரமான பாய்மரங்களை உடைய பெரிய மரக்கலங்கள் வந்து சேரும்; மேகத்தை அளாவும் மலைபோல எழுந்து ஒலிக்கின்ற திரைகள் கரையில் மோதும். வளைந்த சங்குகளையும், சலஞ்சலம், வலம்புரி எனப்படும் சங்குகளையும், அரிய மணிகளையும், சுறாமீனையும் திரைகள் கொண்டு வந்து தள்ளும்; தென்னை, பனை இவைகளின் பழங்கள் விழும் மணல் நிலத்திற் சங்கு, இப்பி, வலம்புரி இவைகளைத் (திரைகள்) வீசிச் சேர்க்கும்; கடற்கரையில் உள்ள தகரம் (ஒருவகை மரம்), தாழைப் பொழில், ஞாழல் (புலிநகக் கொன்றைச்) செடிகள் இவைகளின் நிழலில் சங்கு முத்துக்கள், பவளக்கொடிகள், மகரமீன்கள், சுறா மீன்கள் திரைகளால் தள்ளப்பட்டு ஒதுக்கப்படும்; கடற் கழிகளின் அருகே நறுமணம் வீசும் தாழைகளின் மடலிடையில் வெண் குருகுப்பறவைகள் தங்கும்; தாழைப் பொழில்களின் ஊடே உள்ள சந்தில் இடைவெளியில் நிலவை நுழைத்துச் சென்று வாழைப் பழங்களை குட்டைக் குரங்குகள் உண்ணும்; பொழில்களில் வண்டுகள் விளையாடும்; மாதவிப் பந்தல் செடி, வெண் கடம்பு இவை சூழ்ந்து விளங்கும்; செந்நெல் விளையும் வயலிற் கயல்மீன்கள் பாய்தரும்.

நான்கு மறைகளையும், (ஆறு) அங்கங்களையும் விரித்த வரும், கங்கையைச் சடையில் முடித்தவருமான நம் பெருமானுடைய இருப்பிடம் உலகில் உள்ள ஊர்களின்

சிறந்ததும், நல்ல நீர்வளம் உள்ளதுமான மறைக்காடு என அறிந்தோம்.

## 85. முதுகுன்றம் (விருத்தாசலம்) [25, 43]

இது முத்திதரும் தலம்; முத்தாறு சூழ்தரு தலம்; மாடங்கள், மதில், கோபுரம், மண்டபம் இவைகளை மூடி மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த தலம்; இங்கு (1) மலையகத்தே களிற்றை (ஆண்யானையை) ஆளி (சிங்கம்) கொல்லக், குறத்திகளின் குடிலின் முன்புறத்தே பெண் யானை வருந்தி நிற்கும்; (2) மேகம் படியும் மலையிடையே மதயானையின் பேரொலியும், குகையில் வளரும் சிங்கத்தின் இடி ஓசையும் எப்போதும் கேட்கும்; (3) மணி முத்தாற்றின் வெள்ள நீரில் வளைக்கப்பட்டு வருந்திக் கரையேறின வலிய களிற்றின் முழக்கொலியும் எப்போதும் கேட்கும். (4) மலர்க் கொத்துக்கள் நெருங்கிய பொழில் சூழ்ந்த பெரிய மதில் மீதும் மாளிகையின் மீதும் நிலா தவழும்; (5) ஆண் குரங்கு உண்பதற்காகப் பெண் குரங்கு பழத்தை நாடி மலைப்புறத்தே சென்று, முதலில் முதுகுன்றப் பெருமானின் திருவடியைத் தொழுது நிற்கும்; (6) நாணற்புல்லின் இடையே சங்குகள் ஒலி செய்யும்; (7) நெய்யை மொண்டு தீ வளர்க்கும் வேள்வியின் ஒலி எப்போதும் ஒலிக்கும்.

திருமால், பிரமன், சூரியன், இந்திரன் இவர்கள் தலை வணங்கிப் போற்றப், பதினெண் கணங்களும் சூழ, முரசம் அதிர, முதுகுன்றத்தில் அமர்ந்துள்ளார் பெருமான்; பிறை சூடும் எம்பெருமானே! அருளுதி என்று தேவர்கள் முறைப்படி வந்து பெருமானை வணங்குவர்; (கூட்டத்தில் அடியார்கள்) முட்டிச் சென்று அடிதொழ நிற்கும் பெருமையர் முதுகுன்றத்து ஈசர். (ஆரூரராம்) தமக்குச் செம்பொனைத் தந்தருளி விளங்குகின்ற பெருமான் திருமுதுகுன்றத்து இறைவர். திருமுதுகுன்று (என்றும்) விளக்கம் பெற்றுள்ள தலம்.

வில்லும் அம்பும் ஏந்திய கொடியோர் இத் தலத்தின் எல்லைப்புறத்தைக் காத்து நின்றனர்.

## 86. முருகன் பூண்டி [49]

முல்லை மலரின் மொட்டு அலர்ந்து நறுமணம் வீசும் தலம்; மோந்தை (மொந்தை) எனப்படும் வாத்தியம் எப்போதும் முழங்கும் தலம்; தேவர்கள் முந்திச் சென்று தொழும் தலம்; இத்தலத்தின் அருகில் உள்ள வடுக வேடுவர் (தெலுங்கு பேசும் வேடுவர்) பகைமை காட்டும் மொழிகளைப் பேசியும், வில்லைக் காட்டி வெருட்டியும், கல்லினால் எறிந்தும், மோதி அடித்தும், குத்தியும், வழிப் போக்கர்களின் துணிமணிகளை நாடோறும் பறிப்பர்; பசுக்களைக் கொன்று தின்பர், பாவிகள், பாவம் இன்ன தென்றே தெரியாதவர்கள், உயிர்க்கொலை பல செய்பவர்கள், நைந்து கிழிந்த ஆடையில் வாளாயுதத்தை கட்டியிருப்பார்; விரிந்த தலைமயிரினர்; முசுக்கள் (கருங்குரங்குகள்) போல இருப்பார்; கெட்ட நாற்றம் கொண்டவர்; (மோறை) முரட்டுத் தன்மையர்.

வேடுபறிக்கு ஆளான சுந்தரர் இறைவனைச் சில கேள்விகளைக் கேட்கின்றார்:—

'எம்பெருமானே! (1) வில்லேந்திய வடுகவேடுவர் பொருந்தாத சொற்களைச் சொல்லி வழிப்போவாருடைய துணிமணிகளைக் கொள்ளை கொள்ளும் இந்த முருகன் பூண்டியில் நீர் ஏன் தேவியொடும் வீற்றிருந்தீர்; (2) ஊர் எல்லையைக் காப்பது என்பது ஒன்று இல்லையாகில், கல்லால் எறிந்திட்டு வெருட்டி ஆடையைப் பறிக்கும் வேடுவர்க்கிட மான இங்கு எதற்காக நீர் இருந்தீர்! (3) பசுக்களைக் கொன்று தின்று, உயிர்க்கொலை பல செய்து பாவச் செயல் இன்னதென்றே அறியாத பாவிகளாய் வழிப்போவாருடைய துணிமணிகளை நாள்தோறும் கொள்ளை கொள்ளும் குரங்குகள் போன்ற பல வேடர்கள் வாழ்கின்ற இத் தலத் தில், உமது பெருமை குலைய, நீர் ஏன் பிச்சை எடுத்துக் கொண்டு இங்கு இருந்தீர்! (4) கந்தைத் துணியை உடுத்து, வாள் ஒன்று அதிற்கட்டி, விரிதலையராய், வழிப்போவா ருடைய ஆடைகளை நாள்தோறும் கொள்ளையடிக்கும் முரட்டு வேடுவர் வாழ்கின்ற முருகன் பூண்டி என்னும் இத்

தலத்தில், உமது வாகனமாகிய எருதின் கால் ஒடியாது நன்றாயிருந்தால், நீர் அதன்மீது ஏறி இவ்வூரைவிட்டுப் போகாமல், எதற்காக இங்கு இருந்தீர்! (5) வெளியே செல்வதற்கு வேண்டிய சக்தி இருந்தால் நீர் எதற்காக இந்த ஊரில் இருந்தீர்! (6) பிச்சை எடுத்து உண்பதாகில் நீர் எதற்காக இந்த ஊரில் இருந்தீர்! (7) வழிப்போவாரை வேடுவர் மோதி ஆடையைப் பறித்துக் கொள்ளைகொள்ளும் இவ்வூரில் ஏது காரணம் கொண்டு, என்ன பாதுகாப்பை நம்பி, எதற்காக, நீர் இங்கு இருந்தீர்! (8) நீர் மூடவர் அல்லீர், உமக்கு இடர் ஏதும் கிடையாது, ஏறிப் போவதற்கு ஏறுவாகனம் உளது; அப்படி வசதிகள் இருந்தும் நீர் எதற்காக இந்தத் தலத்தில் தங்கி இருந்தீர்!'

## 87. (வடதிரு) முல்லைவாயில் [69]

நறுமணம் வீசும் செண்பகச் சோலை சூழ்ந்த தலம்; அடர்ந்த பொழில்களை உடைய தலம்; நிறைநீர் சூழ்ந்த தலம்; பாலாற்றின் வடகரையில் உள்ள தலம்; செந்நெற் கழனிகள் சூழ்ந்த தலம்; கழனிகளின் புது மணத்தை அநுபவித்து வண்டு இசைபாட, (அருகில்) தாமரைப் பீடத்தில் உறங்கும் நண்டுகள் எழுந்து உலவும் தலம்; செம்பொன் மாளிகைகளைக் கொண்ட செல்வ நகர்;

'எங்குற்றாய் இறைவா!' என்று தேடிய தேவர் வந்து சேரும் தலம்; நல்லவர் பரவும் தலம்; மாதர்களின் அரிய நடனங்கள் எப்போதும் நடைபெறும் தலம்.

சொல்லுதற்கு அரிய பெரும்புகழாளனும் தொண்டைமானுடைய களிற்றை இறைவன் முல்லைக் கொடியாற் கட்டிப் பின்பு அவன் எல்லையிலாத இன்பத்தைப் பெறும்படி வெளிப்பட்டு அவனுக்குத் திருவருள் பாலித்த தலம்.

தம்மை முன்பு வெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்ட சம்புவே என்று சுந்தரர் இத் தலத்துப் பெருமானைப் போற்றுகின்றார்.

## 88. வலஞ்சுழி [12-10]

இறைவனுடைய ஊர் வலஞ்சுழி.

## 89. வலம்புரம் [72]

கடலின் இடிகரை மணற் பாங்கில் உள்ள தலம்; கயல் மீன், அடர்ந்த நீண்ட பனைகள், அடும்பு (நெய்தல் நிலத்து ஒருவகைக் கொடி) இவை மருவிய கடற்கரை இடத்தருகில் வலம்புரி, சலஞ்சலம் எனப்படும் சங்கு வகைகள் ஒன்று சேர்ந்து அணையும் தலம்; மணிகளையும், முத்தையும், பவளத்தையும் மிகச் சுமக்கும் மணற்கரையை உடைய தலம்; கடற்கரையில் தெங்கின் பழமும் பனம்பழமும் விழும் தலம்; கப்பல்கள் பல வந்து நிற்கும் கடற்கரைத் தலம்; நெய்தல் நிலமக்கள் வாழும் தலம்; திரையும் வயலும் சூழ்ந்த பொழிலை உடைய தலம்; தேவர்கள் வந்து தங்கும் தலம்.

## 90. வலிவலம் [67]

கலியின் பலம் கெட வேத விதிப்படி (அந்தணர்) அழல் ஓம்பும் தலம்; தமக்கு மாத்து (பெருமை) தந்த பெருமான் என்று இறைவனைப் போற்றி செய்கின்றார் சுந்தரர்.

## 91. (திரு)வாஞ்சியம் [76]

அருவி பாயும் கழனியிற் குவளை மலரும் தலம்; குருவிமீன், கிளிமீன் இவைகளை மாதர்கள் ஒன்றுசேர்க்கும் தலம்; நீர்ப் பறவைகள் பிரிந்து ஓடும் நீர்நிலையில் பெரிய வரால் மீன்கள் குதிகொள்ளும் பொழிலை உடைய தலம்; கழனியில் தாழையும் நெய்தலும் மணம் வீசும் தலம்; வள்ளைக் கொடியின் வெண்மலரை வெண்ணிறத்து நீர்ப் பறவையாம் என மருண்டு அஞ்சி, சள்ளை எனப்படும் சிறு மீன்கள் வாளை மீனின் வாயில் துள்ளி விழும் நீர்நிலையை உடைய தலம்; செந்நெல் விளைந்து அசையும் கழனியை உடைய தலம்; வயல்களில் மலரும் பூத்தேனை உண்டு களி கொண்ட வண்டுகள் உள்ளங் குளிரப் பாடும் பாட்டொலி விண்ணிலும் கேட்கும் காட்சியைக்கொண்ட தலம்; குளக் கரையிலும் ஆலநிழற் கீழும் அழகிய குயில்கள் உறையும் தலம்; பசுக்கூட்டத்தில் இள எருதின் இடிகுரலைக் கேட்டு அஞ்சி, வாளைகள் வயல்களிற் பாய்ந்து ஓடக், கயல்மீன்கள்

தாமரை மலரிடையே ஒதுங்கும் தலம்; குட்டைக் குரங்குகள் தத்தமக்குக் கிடைத்த வாழைப்பழம், பலாப்பழம் இவைகளின் பங்கு சிறிதென்று குழறித், தாழை, வாழை இவைகளின் தண்டு கொண்டு ஒன்றோடொன்று போர் செய்து வீரம் காட்டும் தலம்; அழகாய் அமைந்த மாடங்களை (உப்பரிகைகளை) உடைய தலம்; தீர்த்த விசேடம் கொண்ட மலர்ப் பொய்கையை உடைய தலம்; நல்ல நீர்த் தடங்கள் நிரம்ப உள்ள தலம்.

திருவின் நாயகன் (திருமால்) பணிந்தேத்தும் தலம்.

சினத்தை ஒழித்த மனத்தவர் காணத்தக்க திருவாஞ்சியத்தடிகளின் குற்றமற்ற வெண்ணீற்றைப் பூசுதலானது நிலத்துள்ள ஒரு (பரம்)பொருளுடன் கூட்டி வைக்கும். தமது அடியார்களை ஊழ்வினை நலிய ஒட்டாது திருவாஞ்சியத்துப் பெருமான் காப்பர்; அப்பெருமானுடைய திருவடிகளை நினைப்பவர் வினையால் நலிவு இலர்.

## 92. வாளொளிபுற்றூர் [57]

மண்ணியாற்றின் கரையில் உள்ள தலம்; திண்ணிய யானை மருப்பும், கார் அகிலும், கவரிமான் மயிரும், ஆற்றில் வந்து இழியும் தலம்; மடைகளில் நீலோற்பலம் மலரும் தலம்; மலைக்கும்படியாகச் செந்நெல் (நிரம்ப) விளையும் வயல்களை உடைய தலம்; தெங்கின் பழம் விழ, எருமைகள் நெருங்கிச் சேற்றில் எங்கும் ஓட (உயரத்தினின்று ஓட) வாளைகள் பாய்ந்து ஓடும் வயல்களைக் கொண்ட தலம்; வளங்கொண்ட பொழிலை உடைய தலம்.

இறைவர் மாணிக்க வண்ணர்; திருமாலுக்கு அருள் பாலித்தவர்.

## 93. வீழிமிழலை [88]

அருமை வாய்ந்த அழகிய தலம்; செல்வம் நிறைந்த தலம்; ஆதித் தலம்; நீர் நிறைந்த தலம்; நெருங்கிய பொழிலில் தேன் துளி வீசும் தலம், செழுவிய, செல்வம்

நிறைந்த திண்ணிய மாடங்களை (வீடுகளைக்)கொண்ட தலம்; தேவர்கள் தொழுதேத்தத் தேவியுடன் இறைவன் உறையும் தலம்; மன அமைதிகொண்ட அந்தணர் நாடோறும் அந்தி சந்தியில் சிறப்பாக பூஜை செய்யும் தலம்; திடங் கொண்ட சிந்தையாளர்கள் 'நீலகண்டரே' என்று தியானித்துக் கலி வராது காக்கும் தலம்; நான்மறை தெரிந்த பெரியோர் சிறந்து ஏத்தி வாழும் தலம்; வேத வேதியர், வேத நீதியர் ஓதும் தலம்; நம்பினவர்க்கு அருள்புரியும் அந்தணர் செய்யும் மறைவேள்வியில் திருமகள் அனைய மடவார் நிற்கின்ற தலம்; (ஒழுக்கம்) நிறைந்த அந்தணர் நாள் தோறும் அன்புடன் பூசிப்பதைக் கண்டு இறைவன் இடங் கொண்ட தலம்; மடங்கல் பூண்ட விமானத்தையும், விண்ணி னின்று இழிச்சிய வானநாடு முழுமையையும் வீழிமிழலையி லேயே இறைவர் கொண்ட தலம்; சிவத் தியானம் செய்வோர் வாழும் தலம்; வான நாட்டரம்பையர் நாள் தோறும் வந்து நடனம் ஆடத், திருமாலும் பிரமனும் ஏத்தும் தலம்; வேதம் ஓதும் நாவினராம் மறையோர் சிறந்து போற்றும் தலம்.

'பாடி ஆடிப் போற்றிய பத்தர்களாம் அப்பர் சம்பந்தருக்கு, நீர் தமிழுடன் இசைகேட்கும் இச்சையால் அன்புப் பரிசாக அன்று நித்தம் காசு கொடுத்தீர்; இன்று எனக்கும் அங்ஙனம் அருள்புரிவீராக'—என இறைவனை வேண்டுகின்றார் சுந்தரர். *தூய நீர் எங்ஙனம் அமுதமாயிற்று என்று, இறைவனே! உம்மைக் கேட்க, நீர் சொல்லினீர்.

## 94. வெஞ்சமாக் கூடல் [42]

ஒரு சிற்றாற்றின் கீழ்க் கரையில் உள்ள தலம்; வரிசை யழகுடன் நிற்கும் கமுக மரங்களையும், நீண்ட தென்னை மரங்களையும், குறிய அடிப்பாகத்தை உடைய பலா மரங் களையும் கொண்டதாய், நறுமணம் கமழ்வதான பொழில் சூழ்ந்த தலம்; தழைத்துள்ள மாமரம், விளைந்த புன்னை, புன்னைக் கொன்றை, குருக்கத்தி ஆகிய இம் மரங்களின் மேல் குயில் எப்போதும் கூவும் தலம்; வளங்கொண்ட

* இவ் வரலாறு விளங்கவில்லை.

மதில், மாளிகை, கோபுரம், மணிமண்டபம் இவை மீது (மேகத்துள் விளங்கும்) மதி தோயும் தலம்; வயல் சூழ்ந்த தலம்; மருண்ட கலைமான் உலவும் தலம்; வேடர்கள் விரும்பும் தலம்; திருவிழா நடைபெறும் தெருக்களை உடைய தலம்; பண்ணொடுகூடிய பாடலுக்கு ஒக்க, முழவும், குழலும் ஒலிக்க, மாதர்களின் பாடலும் ஆடலும் சதா நடைபெறும் அந்த அழகிய உயர்ந்த அரங்கின்மீது மதி தோயும் தலம், மாதர்கள் பலர் வந்திறைஞ்சும் தலம்.

## 95. வெண்காடு [6]

கடல் சூழ்ந்த தலம்.

## 96. வெண்ணி [12-3]

வெண்ணிக் கூற்றம் என்னும் நாட்டுப் பகுதியைச் சார்ந்தது வெண்ணி என்னும் தலம்.

## 97. வெண்ணெய் நல்லூர் [1, 17 முதலிய]

சுந்தரர் தமது வரலாற்றைக் கூறுகின்றார் :—திரு வெண்ணெய் நல்லூர் என்னும் இத்தலத்தில், உலகோர் முன்னிலையில், விசித்திரமான பழைய ஓலைச்சீட்டைக் காட்டி அடியனாக என்னை ஆட்கொண்ட வெற்றி கொண்டு (திருக் கோயிலில்) ஒளித்துக்கொண்டார் பெருமான்.

☞ இந்த வரலாற்றைத் திருநாவலூர், திருக்கோலக்கா, திரு நள்ளாறு, வடதிருமுல்லைவாயில் என்னும் தலப்பதிகங்களிற் காணலாகும். [பதிக எண்கள் 17, 62, 68, 69]

## 98. வெண்பாக்கம் [89]

அழகிய பொழில் சூழ்ந்த தலம். சுந்தரர் தமது வரலாற்றைக் கூறுகின்றார் இத் தலத்துப் பதிகத்தில் (பதிக எண் 89) :—'என் கண்மணியை மறைப்பித்தாயே; நீ இக் கோயிலில் இருக்கின்றாயோ' என்று நான் கேட்கப், பெருமான் "உளோம், போகீர்" என்றார்; "பெருமானே! நீ போய் மகிழமரத்தின் கீழ் இரு" என்று நான் சொல்ல, எனக்குத் தெரிவிக்காமல், சபதம் மகிழமரத்தின் கீழ்

நடைபெற வேண்டியது என்று (சங்கிலியாருடன்) ஏற்பாடு செய்ய வல்லவனே! இக் கோயிலில் நீ உள்ளாயோ என்ன என்று நான் கேட்கப், பகைவன் ஒருவனைக் கண்டது போனார், பெருமான். "உளோம் போகீர்" என்று கூறி விட்டார். "வெண்கோயில் இதில் உள்ளாயோ" என நான் கேட்கப், பெருமான் ஊன்றுவதற்கு ஒரு கோலைத் தந்து 'உளோம் போகீர்' என்று சொல்லிவிட்டார்.

## 99. வேள்விக்குடி [74]

காவிரிக் கரைத் தலம், பெருமான் வீற்றிருக்கும் தலம், திருத்துருத்தி என்னும் தலத்துக்கு அருகில் உள்ள தலம், (அதனுடன் சேர்த்துப் பாடப்பட்டது).

## 100. வேளூர் [12-8]

வேளூர் நாட்டுப் பகுதியைச் சேர்ந்த தலம்.

## 149. தலங்கள்: ஆற்றங்கரையன [162]

(1) அரிசிலாற்றங் கரையில் அரிசிற்கரைப்புத்தூரும் கலய நல்லூரும்; (2) காஞ்சி நதிக்கரையிற் பேரூரும்; (3) காவிரிக் கரையில்—இடைமருதூர், ஐயாறு, சோற்றுத் துறை, துருத்தி, பாண்டிக்கொடுமுடி, வேள்விக்குடி என்னும் தலங்களும்; (4) குழகனாறு—என்னும் சிற்றாற்றங் கரையில் வெஞ்சமாக்கூடலும்; (5) கெடில நதிக் கரையில் திரு அதிகையும்; (6) கொள்ளிடக் கரையில் கானாட்டுமுள்ளூரும்; (7) நிவா நதிக்கரையில் நெல்வாயில் அரத்துறையும்; (8) பாலாவிக் கரையில் கேதீச்சரமும்; (9) பாலாற்றுக்கு வடபால் திருமுல்லைவாயிலும்; (10) பெண்ணை நதிக் கரையில் இடையாறு, துறையூர், வெண்ணெய் நல்லூர்—என்னும் தலங்களும்; (11) மண்ணியாற்றங் கரையில் வாளொளி புற்றூரும்; (12) முத்தாற்றங் கரையில்—திருமுதுகுன்றமும் (விருத்தாசலமும்)—இருப்பதாகக் கூறப்பட்டுள.

## 150. தலங்கள் : கடற்கரையன [163]

அஞ்சைக்களம், ஒற்றியூர், கழிப்பாலை, காழி, கேதீச்சரம், கோடி, நாகை, புனவாயில், மயிலை, வலம்புரம், வெண்காடு—என்னும் 11 தலங்கள் கடற்கரையன எனும் விளக்கம் உள்ளது.

1. **திருஒற்றியூர் :** கப்பல்களும் படகுகளும் காணக் கிடந்தன.

2. **கழிப்பாலை :** இங்குக் கடலைச் சார்ந்த கழனிகள் இருந்தன; கழிகள் மூலம் செல்வம் கிடைத்தது; கடற்கரை ஓரத்தில் பெரிய தெருவுகள் இருந்தன.

3. **காழி :** கடல்கொள மிதந்த நகர்; கழிகளும் தாழைகளும் ஊரைச் சூழ்ந்திருந்தன.

4. **கேதீச்சரம் :** இத்தலம் பாலாவி என்னும் ஆற்றங் கரையில் உள்ள கடற்கரைத் தலம்; கப்பல்கள் நிறைந் திருந்தன.

5. **கோடிக்கரை :** காற்று கடிதாக வீசும்; (மக்கட்) குடிகள் அருகில் இல்லாத ஊர்.

6. **திருப்புனவாயில் :** கடற் கானலில் உள்ள தலம்.

7. **மயிலாப்பூர் :** கடலின் துறையில் உயர்ந்த பவளங்கள் இருளகற்றும் சோதியனவாய்க் கிடைப்பன.

8. **வலம்புரம் :** கடற்கரையில் மணி, முத்தம், பவளம்—இவை அலைகளால் மிகவும் வீசப்பட்டு மணலிற் கலந்து கிடந்தன ; கடற்கரையில் வயல்களும் பொழிலும் இருந்தன ; வணிகர்கள் விரும்பி எதிர்பார்க்கும் பல கப்பல்கள் இங்கு வருவன ; வலம்புரி, சலஞ்சலம் கரையில் ஒதுக்கப்பட்டிருந்தன.

9. **வெண்காடு :** கடலுக்கு அருகில் உள்ள தலம்.

## 151. தலம்: சுவாமி பெயர்—தேவி பெயர் முதலியன [164]

சிற்சில பதிகங்களில் சுவாமியின் திருநாமமோ, தேவியின் திருநாமமோ, தீர்த்தத்தின் பெயரோ, தலவிருக்ஷம் இன்னதென்பதோ குறிப்பிக்கப்பட்டுள. உதாரணமாக—(பா) திருமுல்லைவாயிலில்-சுவாமி—மாசிலாமணீசுரர் என்பதும், தேவி—கொடியிடைநாயகி என்பதும்; திருச்சுழியலில்-தீர்த்தம் 'கௌவைக்கடல்' என்பதும்; திருப்புறம்பயத்தில்-தல விருக்ஷம் 'புன்னை' என்பதும் - விளக்கப்பட்டுள. இங்ஙனம் மற்றும் வருவன ஒளிநெறியிற் காணலாகும்.

## 152. தலமும் கோயிற் பெயரும் [165]

இடையாற்றில்—மருது, கச்சூரில்—ஆலக்கோயில், கடம்பூரில்—கரக்கோயில், கருப்பறியலூரில்—கொகுடிக்கோயில், கழுமலத்தில் தோணிபுரத்தில்--பெருங்கோயில், கோயிலில் (புலியூரில்--தில்லையில்) சிற்றம்பலம், கோளிலியில்-பெருங்கோயில், திருவாரூரில்—மூலட்டானம், நறையூரில்—சித்தீச்சுரம், நன்னிலத்தில் பெருங்கோயில், நெல்வாயிலில்—அரத்துறை, மாதோட்டத்தில்—கேதீச்சரம், வெண்ணெய் நல்லூரில்—அருட்டுறை, வெண்பாக்கத்தில்—வெண்கோயில்—கூறப்பட்டுள.

## 153. தலமும்—தலத்துக்கு ஏற்ற சுவாமி திருநாமங்களும் [166]

அவ்வத் தலத்துக்கு ஏற்ற வண்ணத்தில் கடவுளின் பெயர் குறிப்பிடப்பட்டுளது.

உதாரணமாக: அழுந்தூர் அரசு, ஆரூர் அம்மான், ஐயாற் றமுது, கோட்டூர்க்கொழுந்து, நள்ளாற்று நம்பி, புத்தூர்ப் புனிதன்—என வருவன கண்டு களிக்கற் பாலன.

## 154. நலவிசேடங்கள் [167]

நறையூரிலும், நாவலூரிலும் தேர்வீதி விளங்கினதும்; திருநாவலூரில் முழவு ஒலி செய்ததும்; திருஒற்றியூரில் (பங்குனி) உத்திரத் திருவிழா நடந்ததும், கற்குடித் திருவிழாவில் கலைவல்ல மாதவர்கள் கூடியதும், நறையூரில் விழாக் காலத்தே குழல், முழவு ஒலித்ததும், நன்னிலத்துத் திருவிழாவில் சைவர்களும் தவத்தவரும் நிறைந்திருந்ததும், வெஞ்சமாக் கூடலில் விழாக்கள் நிரம்ப நடந்த சேதியும், நாகபட்டினத்திலும் வட திருமுல்லைவாயிலிலும் மாதர்கள் நடனம் ஆடினதும், வெஞ்சமாக் கூடலில்—முழவும் குழலும் ஒலிக்க, மாதர்களின் ஆடல் பாடல் நீங்காதிருந்ததும் கூறப்பட்டுள.

## 155. தவம்—தவத்தினர் [168]

அடித்தவம், அருந்தவம், *செடித்தவம், மாதவம், மெய்த்தவம்—கூறப்பட்டுள. அடித்தவம் - இறைவன் திருவடிமாட்டுத் தவம், அல்லது அடிப்படையான தவம். இது தீவினையை ஒழிக்கும்

பொய்ந்நிறை மாந்தரொடு கூடித் தவஞ்செய்யலாகாது. பாவத்துக்கு இடம் தரும் தவத்தைச் செய்பவர்கள் வழியிற் செல்லலாகாது. மாசு இல்லாத உள்ளம் இல்லாமல், தவம் பூண்டும் அவம்பேசி, சடை முதலிய கட்டி வேடம் பூண்போர் பிறவிக் கடலை நீந்தமாட்டார்கள்.

தவம் செய்யும் போகரும் யோகரும் அதிகாலையில் காவிரியில் மூழ்குவர்.

கோயில் கட்டுவதும், சாலைகள் அமைப்பதும், இறைவனை உள்ளத்திற் பெற்ற சிந்தனையுடன் செய்யப்பட்டால்தான்—தவச் செயலாக நிறைவுறும்.

திருச்சுழியல் என்னும் தலத்தை நினைந்து ஏத்தினால் தவம் நிறையும்.

பார்வதிதேவி மிக அரிய தவத்தைச் செய்தனள்.

இறைவா! நீ மாதரை மையல் பூணும்படி செய்கின்றாய்!, இது என்ன மாதவமா? அல்லது தகுதியா!

* செடி - பாவம், தீமை.

## 156. தானியங்கள்—பயிர்கள் [169]

இலவங்கம், எள், ஏலம், ஏனல் (தினை), ஐவனம் (மலை நெல்), கத்தூரி, கறிமிளகு, செந்நெல், மஞ்சள்—கூறப் பட்டுள.

## 157. திங்கள் (சந்திரன்) [170]

சந்திரன், இளந்திங்கள், வெண்ணிலா, கோணியபிறை, கதிர்மதியம், தண்ணார் மதி, தழல் மதி, பனிவெண் மதி, வள்வாய மதி—என்றெல்லாம் திங்கள் குறிக்கப்பட்டுளது.

## 158. திருநீறு [173]

சுடுபொடி, திருநீறு, வெண்ணீறு, வெண்பொடி, வண்ண வெண்ணீறு, பால்வெண்ணீறு, முத்து நீறு, முழு நீறு, வெள்ளை நுண்பொடி—என்றெல்லாம் திருநீறு விளக்கப்பட்டுளது. சிவபிராற்குரிய மறுவிலாத வெண்ணீறு பூசினால் அழிவிலாத பேரின்பம் கிட்டும்.

## 159. திருமால் [174, 175]

(1)

1. திருமாலின் திருநாமங்கள்: அரி, ஆழியான், கண்ணன், கள்ளப் பிள்ளை, கோவலன், சிந்துரக்கண்ணன், செங்கண்மால், திருமால், தேசவேந்தன், நாரணன், நிற்பவன், மழையான், மாயன், மாலவன்.

2. திருமால் கடலிற் பாம்பணையிற் பள்ளிகொள்பவர்; மழையவர்; மன்மதனுடைய தந்தை; திருமகளின் கணவர்; நிலமகளின் கேள்வர்; ஸ்ரீதேவியின் நாயகர்; சிவந்த விசாலக் கண்ணினர்; நெடியவர்; கரிய நிறத்தவர்; உலகை உண்டு உமிழ்ந்தவர்; சங்கு, சக்கரம் ஏந்தியவர்; அரியவர்; தேசங் காக்கு வேந்தர் அவரே.

3. **கிருஷ்ணவதாரத்தில் :** யானையின் கொம்பைப் பறித்தவர், குதிரையின் வாயைக் கிழித்தவர், புள்ளின் வாயைக் கீண்டவர், மருத மரங்களின் ஊடு தவழ்ந்து சென்று அம் மரங்களை வீழ்த்தினவர், நப்பின்னையை மணந்தவர்.

4. **வாமனவதாரத்தில்:** மாணி (பிரமசாரி) உருவுடன் சென்று மண்ணை அளந்தவர்.

## (2) திருமாலும் சிவனும் [175]

1. சிவபிரான் திரிபுரத்தை எரித்தபோது :—

(1) திருமால் அம்பாக அமைந்தார் (2) திருமாலாம் விடைமீது பெருமான் திகழ்ந்தார். (3) திருமால் ஆதிய தேவர்கள் பெருமானுக்குக் குற்றேவல் செய்தார்கள்.

தேவர்களின் வேண்டுகோளின்படி பெருமான் திரிபுரத்தை எரித்தார்.

2. மங்கை பாகத்துடன் திருமாலையும் ஒரு பாகமாக உடையார் இறைவர்.

3. சலந்தரனைப் பிளந்த சக்கரத்தைப் பெறவேண்டித் திருமால் ஆயிரமலர் கொண்டு இறைவனைப் பூசித்தார். அப்பொழுது ஒரு பூ குறையத், திருமால் தமது கண்ணையே இடந்து மலராகச் சூட்டினர்; பெருமான் மகிழ்ந்து அந்தப் பண்ணுதற்கு அரியதான சக்கரத்தைத் திருமாலுக்கு அளித்தார்.

4. தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் தமது உயர் தவத்தை அழிக்கவந்த காமவேளை-அவன் தந்தையாம் திருமால் காண விழித்தெரித்தார் சிவபெருமான்.

5. திருமால், பிரமன் ஆதிய தேவர்கள் பெருமானைப் பூசித்து வணங்கினர் ; அவரது திருவருளைப் பெற்றனர் ; திருமாலும் பிரமனும் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), திருக்கழுக்குன்றம், திருவீழிமிழலை எனப்படும் தலங்களிற்

சிவபெருமானை மலர் கொண்டு நாள்தோறும் பூசித்துப் போற்றினர்.

6. திருமால், பிரமன், தானவர் ஆதியோர்க்குத் தலைவர் சிவபிரான்.

7. திருமாலாக விளங்குபவர் சிவபெருமானே; திருமாலுக்கு அரியர், பெரியர்—சிவபெருமான்; திருமாலால் அறிய ஒண்ணாதவர் அவர்.

8. கூடலையாற்றூருக்குப் போகும் வழியைச் சுந்தரருக்குச் சிவபெருமான் காட்டச் சென்றபோது, அவருடன் திருமால் ஆதியோர் உடன் போந்தனர்.

9. பிரமனது தலையை அறுத்து அந்தக் கபாலத்தில் திருமாலின் ரத்தத்தினை நிறைவித்துத், தமது தோள்மிசை எலும்பைச் சுமந்த மாவிரதத்த வேடத்தவர் பெருமான்.

10. திருமால், பிரமன், யான் எனது அற்றுத் தம்மைச் சிந்திப்பவர்—ஆகிய இவர்தம் தடுமாற்றத்தை அறுத்து உதவுவர் பெருமான்.

## 160. திருவிளையாடற் சரிதங்கள் [176]

(1) இரசவாதம் செய்த திருவிளையாடல், (2) சிவபிரான் தென்னவனை உலகாண்ட திருவிளையாடல், (மணஞ் செய்த திருவிளையாடல்), (3) செட்டியாய் வளையல் விற்ற திருவிளையாடல், மாணிக்கம் விற்ற திருவிளையாடல்), (4) பன்றி உரு எடுத்த திருவிளையாடல், (5) விருத்த குமார பாலரான திருவிளையாடல், (6) வெள்ளை யானையின் சாபம் தீர்த்த திருவிளையாடல், (7) வேதத்துக்குப் பொருள் அருளிச்செய்த திருவிளையாடல் — ஆகிய இவைகளைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

## 161. தீர்த்தங்கள் [177]

குருக்ஷேத்திரத்தில் உள்ள தீர்த்தத்திலும், கோதாவிரியிலும், குமரி தீர்த்தத்திலும் குளியுங்கள், உள்ளம் தெளி

யுங்கள். தவஞ்செய்யும் போகரும் யோகரும் அதிகாலையில் காவிரியில் மூழ்குவதற்குப் போவார்கள்.

## 162. தென்றல் [178]

கமுகின் பாளையில் உள்ள தேனின் மணம் கலந்த தென்றல் உலவுகின்ற தலங்கள் கலயநல்லூரும், திருநாகேச்சுரமும்; தென்றலின் மணம் கமழும் தலம் திருவாரூர்.

## 163. தேச சரித்திரம் [179]

1. பல்லவர் காஞ்சி மாநகரைத் தலைநகராகக்கொண்டு அரசு புரிந்தனர் (சுந்தரர் காலத்தில்); மண்ணுலகை அரசாண்ட உரிமையாற் (சிற்றரசர்களிடம்) திறை வாங்கினர். அங்ஙனம் திறை கொடாதவர்க்குத் தில்லைவாழ் அந்தணர்கள் அரசுக்கு உரிய மரியாதை செய்வதில்லை. 'நாயன்மார்' என்னும் தலைப்பு 178-ல் 'தில்லைவாழ் அந்தணர்' என்பவர்களைப் பற்றிய குறிப்பைப் பார்க்கவும்.

2. உமக்காட்செய்ய அஞ்சுதும் என்னும் பதிகத்தை [2 (11)] ஆரூரர் திருப்பரங்குன்றத்திற் பாடினபோது "முடியால் உலகாண்ட மூவேந்தரும்" உடனிருந்து கேட்டனர்.

## 164. தேவதைகள் [180]

### 1. காடுகாள் (மோடி)

கை நிறைய வளையல் அணிந்த 'மோடி' என்னும் 'வனத்துக் காளி'யுடன் போகங் கொண்டு சிவபிரான் (திருமறைக் காட்டுக்கு அருகில் உள்ள) 'கோடி' என்னும் கடற்கரைத் தலத்திற் கோயில் கொண்டுள்ளார்.

### 2. காளி

பொரவல்ல பலத்தையுடைய 'தாரகன்' என்னும் அசுரனைப் பொருது கொன்ற காளியை முன்பு படைத்த புனிதர் சிவபெருமான்.

## 165. தேவர் முதலானோர் [181]

அண்டர், அமரர், இமையவர், உம்பர், தேவர், வானவர், விண்ணவர்—எனத் தேவர் வகையினர் கூறப்பட்டுளர். அமரர் வேறு தேவர் வேறு; உம்பர் வேறு வானவர் வேறு; அமரர் வேறு வானவர் வேறு—என எண்ணும்படி பிரயோகங்கள் வந்துள்ளன; அமரர் விசும்பை ஆளுவர்; தேவர்கள் எழில், சீர் மிகுந்தவர்கள்; அளவிறந்த பல தேவர்கள், கோடி தேவர்கள், எண்ணாயிரம் கோடி தேவர்கள்; வானைக் காவல் பூண்டுள்ளவர்கள்—என்றெல்லாம் வருகின்றன. சிவபிரானை நஞ்சு உண்ண வைத்தபடியால் தேவர்கள் 'வஞ்சகர்கள்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

இயக்கர், கின்னரர்—எனும் வகையினரும் கூறப்பட்டுள்ளனர். காதைப் பொத்தி (உபதேசம் கேட்ட) கின்னரர் என வருகின்றது.

## 166. தேவாரம் ஓதும் முறை, கற்கும் முறை இவை சம்பந்தமான உபதேசம் [182]

பதிகம்—10 பாடல்களையும் ஓத வேண்டும்; கற்க வேண்டும், கேட்க வேண்டும்; இசையுடன் பாணியுடன் பாட வேண்டும்; அழகாய்ப் பாட வேண்டும்; உள்ளங் குளிர்ந்து, உள்ளமகிழ்ச்சியுடன், உள்ளுருகிப், பத்தியுடன் பாட வேண்டும்; நினைவு வைத்துப் பாட வேண்டும்; கற்றுப் பாட வேண்டும்; ஊர் ஊராகச் சென்று பாட வேண்டும்; விருப்புடன் பாட வேண்டும்; சிந்தித்துச் செம்மாந்திருந்து, (மிக்க களிப்புடன்) கையால் தொழுது, வாய் திறந்து (நாவாற்) பாடவேண்டும்; தெரிவித்த முறைப்படி பாட வேண்டும்; நித்தம் பாட வேண்டும்; குடிகுடியாகப் பாடி வர வேண்டும்; பாடி ஆடுதல் வேண்டும்; பெருங்குலத்தவராம் அடியாரொடு கூடிப் பாட வேண்டும்; பொய்யின்றி, மல மொழித்து அழுது, தொழுது, அடிவீழ்ந்து, வஞ்சனை நெஞ்ச மின்றிப் பாடவேண்டும்; சோம்பலின்றி மதிப்பு வைத்துப்

பாடவேண்டும்; பாடித் தொழுவாரைத் தொழவேண்டும். சொல்லியவே சொல்லி ஏத்த இறைவன் மகிழ்ச்சியுறுவர்;

## 167. தேவாரம் ஓதுவதால், கேட்பதால் வரும் பயன்—ஓதுதலின் சிறப்பு [183]

சுந்தரர் அருளிய தேவாரப் பதிகங்களைக் கற்று வல்லவ ரானோர் அமரலோகம் பெறுவர்; அமரலோகம் ஆள்வர்; வானகம் ஆள்வர்; வானுலகில் மிக்க இன்பத்துடன் இருப்பர்; வானவர்க்கும் தலைவராவர்; விண்ணுளோர் ஏத்த விண்ணரசு பெறுவர்; மூவுலகும் ஆள்வர்; அப் பதிகங்களைச் சொன்ன வர், கேட்டவர் என்ற இருதிறத்தார்க்கும், அவர்களுடைய உற்றார், உறவினர்க்கும் இரவிலேனும், பகலிலேனும் இடர் ஒன்றும் வாராது; அப்பதிகங்களைக் கேட்டு உகப்பவர் அழகியர்; தேவாரப் பதிகப் பாடல் பத்தையும் பத்தி செய்து, உள்ளுருகி, குடிகுடி வழியில், நித்தம் பாட வல்லவர்—அல்லல், இடர், இடும்பை, குற்றம், தடுமாற்றம், துயர், துன்பம், நரை, திரை, மூப்பு, நடலை, பாவம், (எழு) பிறப்பு, இறப்பு, வினைக்கட்டு—இவை ஒன்றும் இல்லாது விளங்கி நின்று சிவனடியைக் கூடுவர்; இன்ப வெள்ளத்துள் திளைப்பர்; நிலம் பெறுவர்; புகழ் பெறுவர், தவநெறி சேர்வர்; தவலோகத்து இருப்பர்; மண்டல நாயகராய் வாழ்வர்; உலகர்க்கு மேலோராவர், புண்ணியராய்ப் பொலிவர்; முத்தி பெறுவர்; விண்ணவரால் தொழப் பெறுவர்; சிவனுக்கு அன்பராவர்; சிவகதி நண்ணுவர்; சிவலோகம் எய்துவர், சிவனடி சேர்வர்; சிவனொடு கூடுவர்; பெருங்குலத்தவராம் அடியரொடு கூடிப் பதிகங்களைப் பிதற்றிப் பாடுதல் பெருமை தருவதாகும்; அத்தகைய பெரியோர்களே எம்மை ஆளுடையராவர்; அவர்களே எமது தலைமேற் பயில்வார்—என்கின்றார் சுந்தரர்: தாம் பாடிய திருக்கழுக்குன்றப் பதிகத்தை ஓதித் தொழுபவரைத் தொழுமின்கள் எனச் சுந்தரர் உபதேசிக்கின்றார்.

## 168. தேவாரம்—மனப்பாடம் செய்ய வேண்டிய பதிகங்களும், பாடல்களும் (ஒரு சில) [184]

(1) பதிகங்களின் முதற்குறிப்பு—பதிக எண்ணுடன்

22. 'முன்னவன்'—பழமண்ணிப் படிக்கரை.
39. திருத்தொண்டத் தொகை—"தில்லைவாழ்".
48. நமச்சிவாயப் பதிகம்—"மற்றுப்பற்".
59. 'பொன்னும்'—திருவாரூர்.
84. தொண்டரடித்—கானப்பேர்.

(2) பாடகல்ளின் முதற்குறிப்பு—பதிக எண், பாடல் எண்களுடன்

3-1. 'கல்வாய்'—நெல்வாயில் அரத்துறை.
13-1. மலையார்—திருத்துறையூர்.
16-1. குரும்பை—கலயநல்லூர்.
16-9. 'பொரும்பலம்'—கலயநல்லூர்.
19-8. 'எட்டுகந்தார்'—திருநின்றியூர்.
21-1. 'நொந்தா'—கச்சிமேற்றளி.
41-5. 'மேலை விதியே'—திருக்கச்சூர்.
42-5. துளை வெண்—வெஞ்சமாக்கூடல்.
62-8. 'நாளும்'—திருக்கோலக்கா.
64-1. 'நீறு தாங்கிய'—திருத்தினைநகர்.
78-1. வாழ்வாவது—திருக்கேதாரம்.

மேலும், பெரும்பயன் கூறியிருக்கும் காரணத்தால், 68-'செம்பொன்மேனி' எனத் துவக்கும் திருநள்ளாற்றுப் பதிகமும், இறைவனைக் குறித்தழைக்கும் 'விளி' நிரம்பியுள்ள காரணத்தால் 70 "கங்கைவார் சடையாய்" எனத் துவக்கும் திருஆவடுதுறைப் பதிகமும் மனப்பாடத்துக்கு உரியனவாம்.

## 169. தேன் [185]

1. (1) சீபர்ப்பதமலையில் (ஸ்ரீசைலத்தில்) நிறைந்துள்ள பொழிற்சோலைகளிற் கிரடியும், மான் இனங்களும்,

மயிலும், பிறவும் தேனை உண்ணும்; ஆண்யானையும் பெண் யானையும் தேன் உண்டு களித்துத் திரியும். தனிநின்ற பெண்யானைக்கு இரங்கி, வேடர்கள் இலைகொண்டு தொன்னை செய்து அதில் தேனைப் பிழிந்து அதற்கு அத் தேனை ஊட்டுவார்கள்.

(2) புறம்பயம் என்னும் தலத்தில் (ஆலையிற்) கரும்பு ஆடத், தேனின் மணம் எல்லாப் பக்கங்களிலும் வீசும்.

(3) கானாட்டுமுள்ளூர் என்னும் தலத்தில் கரும்பின் தேன் வெளிப்படும்.

(4) திருவீழிமிழலையில் பொழில்களில் தேன்துளிகள் வீசும்.

(5) திருச்சுழியலில் பொழில்களில் உள்ள தேனை விரும்பி (உண்டு) வண்டுகள் பண் மிழற்றும்.

(6) திருச்சோற்றுத்துறையில் சோலைகளில் தேன் துளிக்கும்.

(7) திருநறையூரில் தேன் நிறைந்த சோலைகள் உண்டு.

(8) திருக்கருப்பறியலூரில் வாழை மரங்களின் மீது வாழைக் கனிகள் தேனைச் சொரியும்.

2. தேன் உகும்படி குரங்குகள் குதிகொள்ளும். தாமரை மலர்மேல் தேனை உண்ட வண்டுகள் பண்கள் பாடும். பசிய கமுகிலும் இளந்தெங்கிலும் கிடைக்கும் கொழுத்த தேனைப் பருகிக் காளை வண்டுகள் பாடும்.

## 170. தொகை [186]

எண்களில்—

இரண்டில்—திருவடியும், இருவரும், (பிரமன்-திருமாலும்), பொழுதும், போதும்;

மூன்றில்—கண், சந்தி, சுடர், சூலத்து இலை, தீ, புரம் (அரண்,, எயில்; மதில், திரிபுராதிகள்), புரிநூல், போது;

மதம், மும்மை (திருநீறு, அக்கமணி, சடைமுடி), மூவர் (பிரமன், திருமால், ருத்ரன்), வேந்தரும் ;

நான்கில்—சரியை வகை, திசை, சனகாதி நால்வர், மறை-வேதமும் ;

ஐந்தில்—ஆனஞ்சு, எழுத்து, கணை, துட்டர், பதம், பிரமன் தலை, புலன், பூதம், பொறியும் ;

ஆறில்—அங்கம், எழுத்து, சமயம், வண்டின் காலும்;

ஏழில்—இசை, உலகு, கடல், நரம்பு, படி (தலைமுறை), பிறப்பு, மலையும் ;

எட்டில்—குணம், சடை, திசை, தோள், புட்பம், மூர்த்தியும் ;

பதினெட்டில்—கணங்களும் ;

தொண்ணூற்றாறில்—தத்துவங்களும் ;

பல—என்பதில்—ஆசை, கலை, அடியார், உயிர், தேவர், பண், பாவங்கள், ஊரும்—கூறப்பட்டுள்ளன.

## 171. தோத்திரம் [187]

இறைவனுடைய பெருமையைக் கற்பவரும் கேட்பவரும் (சொல்லும் பொருளும் நிரம்பப் பொருத்தமாயுள்ள) தோத்திரங்கள் பலவற்றைச் சொல்லித் துதிப்பர்.

## 172. நகர லக்ஷண உறுப்புக்கள் [188]

1. நகர லக்ஷண உறுப்புக்களாக—நடன அரங்கு, கடைத்தெரு, கொடி, கோபுரம், மண்டபம், மாடம், மாளிகை, சூளிகை, மதில், பொழில், மறை ஒலி, விழா ஒலி, குழலொலி, முழவொலி, யாழ் ஒலி, தேர் ஓடும் நெடுவீதி, காண்பதற்கு இனிய மாடமாளிகைகள் நிறைந்த வீதிகள்—கூறப்பட்டுள.

2. நடன அரங்கில் மடவார்கள் முழவொலி, குழலொலி இயம்பப் பாடுவர், ஆடுவர்.

3. மண்டபங்களைச் சுற்றிக் கடைகள் விளங்கும்.

4. மதில்கள் கற்களால் திண்ணியதாய்க் கட்டப்பட்டுக் கோபுரத்துடன் மிக உயர்ந்து திகழும்.

5. மாடங்களிற் கொடிகள் பறப்பனவாய்க், காணுதற்கு இனியனவாய்ச், செல்வம் புலப்படுவனவாய், புத்தம் புதியனவாய் விளங்கும்.

6. மாளிகைகள் இடம் அகன்றவையாய், செம்பொன் போலத் திகழ்வனவாய், மிக உயர்ந்தனவாய், மடவார்கள் உலவப் பெற்றனவாய், நிலாமுற்றங்களுடன் பெருமை வாய்ந்து விளங்கும்.

7. வீதிகள் திண்ணிய தேரோட அகன்றனவாய், நீளமுள்ளனவாய், மண்டபம், கோபுரம், மாளிகை, சூளிகை, மறை ஒலி, திருவிழா ஒலி கூடியனவாய்ப் பொலியும்.

8. (1) திருக்கச்சூர் என்னும் தலம்—அங்காடிகள் (கடைத் தெருவுகள்) சூழ்ந்த மணிமண்டபங்களும், புதிய உபரிகை உள்ள வீடுகளும், பொழிலும், நீர்வளமும் கொண்டதாய், இலக்குமி வாசஞ்செய்யும் வயல்களைப் பெற்றதாய் விளங்கும்.

(2) கலயநல்லூர் என்னும் தலம்—மண்டபமும், கோபுரமும், மாளிகையும், சூளிகையும் (நிலாமுற்றமும்), மறையொலி, திருவிழா ஒலி நிறைந்த வீதிகளும் கொண்டு, கண்டவர்களின் மனத்தைக் கவரும் அழகுடன் விளங்கும்.

(3) திருப்பனையூர் என்னும் தலம்—மண்டபம், மாடமாளிகை, கோபுரம், வளர்பொழில்—இவைகளுடன் விளங்கும்; ஊரெலாம் முழவம் அதிரும்; மாடமாளிகை, மண்டபம், கோபுரம்—இவைகளிற் பண் விளங்க யாழ் ஓசை கேட்கும்; குரங்குகள் பாய்ந்து புகும்.

(4) திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) — மாடமதில், அழகிய கோபுரம், மணிமண்டபம், மேகம் தவழும் சோலை இவைகளுடன் விளங்கும்.

(5) வெஞ்சமாக்கூடல் என்னும் தலம். வளமார்மதில், மாளிகை, கோபுரம், மணிமண்டபம் இவைகளுடன் பொலியும்; பாடல், முழவொலி, குழல் ஒலியுடன் மடவார்கள் அழகிய அரங்கத்தில் நடனம் ஆடுதல் நீங்காத தலம் இது.

## 173. நகைகள் [189]

கழல்; குண்டலம்; குழைகளுள்—கனகக்குழை, சங்கக் குழை, மகரக்குழை; சிலம்பு, தோடு, பட்டிகை, பொற்பூ, மணிவயிரக்கோவை, முத்தாரம், வளை வகையில்—கனவளை, கோல்வளை, வரிவளை, வெள்வளை—கூறப்பட்டுள.

## 174. நகைச்சுவை [190]

1. உழவர்களுக்குக் கிடைக்காத ஏறு—பெருமான் ஏறும் ஏறு.

2. உலகு உய்யவேண்டித் தேவி கச்சிமூதூரில் காம கோட்டத்தை வைத்து ஊர்கள்தோறும் அறஞ்செய, நீர் போய் ஊரிடு பிச்சைகொள்வது என்ன காரணம்!

3. உம்முடைய வாகனம் ஏற்றின் கால் முறிந்து போய் ஊனம் ஒன்றும் இல்லாதிருந்தால், பெருமானே! நீர் ஏன் கொடிய வேடர்கள் வாழும் இந்தத் திருமுருகன் பூண்டியில் இருக்கின்றீர்! தேவியும் நீரும் வேறிடத்துக்கு செல்லவல்ல மிடுக்கும் சக்தியும் உடையவர்களாய் இருந்தால் ஏன் இங்கு இருக்கின்றீர்.

## 175. நரகம் [191]

நமன்தமர் நரகத்தில் இடுவார்கள்; அதற்கு அஞ்சி நரகம் புகாமையைப் பெருமானிடம் வேண்டிக்கொள்வோ

மாக. கொடிய நரகத்தில் நாம் அழுந்தாவண்ணம் வேத முதல்வராம் பெருமான் நமக்கு மெய்ந்நெறியைக் காட்டுவார்.

## 176. நாகரிக நிலை [192]

[நகர லக்ஷண உறுப்புக்கள்—என்னும் தலைப்பு 172-ம் பார்க்க]

1. (1) (வட) திருமுல்லைவாயிலில் மடவார்களின் ஆடல் எப்போதும் நிகழ்ந்தது.

(2) வெஞ்சமாக்கூடலில் அழகிய அரங்கத்தில் முழவும் குழலும் ஒலிக்க மடவார்கள் நடனம் ஆடினர்.

(3) திருத்துறையூரில் ஆடலொலியும், பாடலொலியும், வாத்திய ஒலியும், சதா ஒலித்தன.

(4) திருநின்றியூரில் மயில், மான், கிளிப்பிள்ளை போன்ற பெண்கள் மாளிகைகள்தோறும் உலவி நின்றனர்.

2. திருப்புகலூரில் அதிகாலையில் எருது பூண்ட ஏர் கொண்டு உழுதனர்.

3. கடலில் கப்பல்கள் நிரம்ப இருந்தன.

4. புலவர்கள் எவ்வளவு முகஸ்துதி செய்தாலும் அவர்களுக்குப் பொருள் கொடுப்பவர் இல்லை. வள்ளலே, எங்கள் மைந்தனே! என்று வாழ்த்தினும், அவர்களுக்கு எள் அளவு, ஈ அளவுகூடக் கொடுப்பாரில்லை. படிப்பே இல்லாதவனைக் கற்று வல்லவன் நீ என்றாலும், நீ மன்மதனைப் போன்ற அழகன் என்றாலும், முற்றிய சிறப்புத் தன்மைகள் இல்லாதவனை நீ முற்றிய சிறப்புத் தன்மையன் என்றாலும் கொடுப்பாரில்லை. நீ நிரம்ப நில பலம் உடையவர், கற்றவன், நல்லவன், சுற்றத்தாரைப் புரப்பவன், விருந்து ஓம்புபவன் என்று பேசிப் புகழ்ந்தாலும் கொடுப்பாரில்லை. ஈகைக் குணமே இல்லாதவனை நீ பாரி போன்ற கொடையாளி என்று புகழ்ந்து கூறினும் கொடுப்பாரில்லை. பெண்களுக்கு ஒரு காமன் போன்றவன் நீ, அவ்வளவு அழகுடைய ஐயன் நீ.

அருட்கொடையில்—வீரத்தில்—வேல்முருகனே நீ—என்று புகழ்ந்தாலும் கொடுப்பாரில்லை. நரைத்து, மெய் தளர்ந்த கிழவனை நீ இளையன், மலை போன்ற தடந்தோளன் என்றாலும், பொல்லானை நல்லன் நீ என்றாலும், குலம் இலாத வனைக் குலவன் நீ என்றாலும் கொடுப்பாரில்லை. நோய்வாய்ப் பட்டவனை நீ தடந்தோளன் என்றாலும், அற்பனை நீ புலவர் களுக்குத் தாயன்றோ என்றாலும், வீரம் இலாதவனை நீ வீமன், விஜயன் என்று பாராட்டினாலும், மகாபாவியாம் விபாகனை நீ மகா சாது என்று புகழ்ந்து பாடினாலும் கொடுப்பாரில்லை; ஆதலால், புலவர்களே! எவ்விதமான புகழ்மொழிகளால் தம்மைக் கூறிச் சார்ந்தாலும் தொண்டரம் புலவர்களுக்கு உதவிப் பொருள் தராத பொய்யர்களைப் பாடாதீர்கள்; புகலூர்ப் பெருமானைப் பாடுங்கள்; அவரைப் பாடி ஏத்தினால்—இம்மையிலே உண்பதற்குச் சோறும், உடுப்பதற்கு உடையும் கிடைக்கும்; இடர்கள் கெட்டொழியும்; அம்மையிற் சிவலோகத்தை ஆண்டிருக்கலாம்; இதில் யாதோர் ஐயப்பாடும் இல்லை.

## 177. நாடு - நாட்டின் பகுதி [193]

இலங்கை, ஈழநாடு, எய்தமான், குறுக்கை நாடு, கொங்கு, கொண்டல் நாடு, சென்னி நாடு, சோணாடு, சோழநாடு, தென்னாடு, நறையூர் நாடு, நாங்கூர் நாடு, புரிசை நாடு, பொன்னூர் நாடு, மருகல் நாடு, மலைநாடு, மிழலைநாடு, மீகொங்கு, வானநாடு, விளத்தூர் நாடு, வெண்ணிக்கூற்றம், வெண்ணி நாடு, வேளார் நாடு—கூறப் பட்டுள.

## 178. நாயன்மார் [194]

சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையில் 9 தொகை அடியார்களும், 63 தனி அடியார்களும் கூறப் பட்டுளர். சுந்தரரது தேவாரத்திலே—தனி அடியார்களுள் வேறு விவரம் இல்லாது பேர் மாத்திரம் கூறப்பட்ட

அடியார் ஐவர். அவர்தாம் (1) *ஏனாதிநாதன், (2) கலிய நாயனார், (3) காரி நாயனார், (4) நேச நாயனார், (5) முருக நாயனார். மற்றைய 58 நாயன்மார்களைப் பற்றிக் கிடைக்கும் விவரங்கள் வருமாறு:—

1. **அதிபத்தர்:** இவர் ஊர் நாகை (நாகபட்டினம்).

2. **அப்பூதி:** ஒப்பற்ற சிறப்புடையவர், ஆதலால் 'ஒரு நம்பி' எனப் பெற்றார்.

3. **அமர்நீதி:** இவர் வணிகர். வணிகர் முல்லை மாலைக்கு உரியவர்.

4. **(அரிவாள்) தாயனார்:** அரிவாள் கொண்டு தம் ஊட்டியை அரியலுற்றவர். அதனால் (அரிவாள் தாய) அரிவாட்டாய நாயனார் ஆயினர்.

5. **ஆனாயர்:** இவர் ஊர் மங்கை (மங்கலம்); ஆயர் குலத்தினர்.

6. **இசைஞானி:** சுந்தரரின் தாயார்.

7. **இடங்கழி:** சிவனடியார்களுக்குத் திரு அமுது நிரம்பச் செய்வித்த பெருந்தகையாதலின் 'தார் நம்பி' எனப் பட்டார்.

8. **இயற்பகை:** 'இல்லை' என்ற சொல்லே இலாதவர்.

9. **இளையான்குடிமாறன்:** இவர் ஊர் இளையான்குடி.

10. **உருத்திரபசுபதி:** பசுபதி என்னும் இவர் ருத்ர ஜெபம் செய்துவந்த நியமத்தவர்.

11. **எறிபத்தர்:** அடியார்களுக்கு இடையூறு வராது காத்துவந்தவராதலின் 'வேல் நம்பி' எனப்பட்டார்.

---

* ஏனாதி-"பட்டப்பெயர், படைத்தலைவர், மறவன், நாவிதன், சாணாரில் ஒரு வகுப்பு" (Lexicon). இவர் ஈழக்குலச் சான்றார், ஏனாதிநாதனார், படை பயிற்றுத்தொழிலில் தலைமை சார்ந்தவர்— என்பன பெரிய புராணத்தால் விளங்குகின்றன.

12. ஏயர்கோன் கலிக்காமர்: ஏயர்குடியைச் சார்ந்தவர். மழைவேண்டி இறைவனுக்குப் பன்னிரண்டு வேலி நிலம் கொடுத்தவர்; வந்த பெருமழை நிற்கவேண்டிப் பின்னும் பன்னிரு வேலி இறைவனுக்குத் தந்தவர். இவருக்கு உற்ற கொடிய பிணியை இறைவன் நீக்குவித்தார்.

13. ஐயடிகள்: காடவர் (பல்லவர்) குலத்தினர்.

14. கண்ணப்பர்: இறைவனது திருவருளைப் பெற்றவர்; இவர் செய்த குற்றமான செய்கையையும் இறைவன் குணமாகக் கொண்டனர்; பதி உண்மையை உணர்ந்த மெய்ஞ்ஞானக் கலைவல்லவர். (இறைவனுக்காக) அம்பு கொண்டு தமது கண்ணைக் களைந்துகொண்டவர்.

15. கணநாதர்: இவர் ஊர் காழி.

16. கணம்புல்லர்: சிவபிரானது திருவடியையே தமக்குக் காப்பாகக் கொண்ட நம்பி இவர். இவர் குற்றம் செய்யினும் இறைவர் அதைக் குணமாகக் கொண்டார்.

17. கலிக்கம்பர்: (சிவனடியாரிடம் வைத்திருந்த மதிப்பால் மனைவியின்) கையைத் தடிந்தவர் இவர்.

18. கழற்சிங்கர்: அரசுபுரிந்த பல்லவர் இவர்.

18-ஏ. கழறிற்றறிவார்: 'சேரமான் பெருமாள்' (33) பார்க்க.

19. காரைக்கால் அம்மையார்: பேயுருவம் கொண்டாராதலின் 'பேயார்' எனப்பட்டார்.

20. குங்கிலியக் கலய நாயனர்: இவர் ஊர் கடவூர்.

21. குலச்சிறை: பெரிய சிவ பக்தராதலின் 'பெருநம்பி' எனப்பட்டார்.

22. கூற்றுவ நாயனர்: இவர் ஊர் களந்தை. பகைவர் பலரையும் வென்ற—(கூற்றன்ன) வீரத்தினர்.

23. கோச்செங்கட் சோழன்: தன் வாயிடை நூல் கொண்டு இறைவனுக்குச் சித்திரப் பந்தல் அமைத்த சிலந்தி

யின் திருப்பணிக்கு உகந்து அதை மறுபிறப்பிற் கோச் செங்கணன் என்னும் அரசனாகச் செய்தார் இறைவர். சிலந்தியின் குற்றத்தையும் குணமாகக் கருதினார் இறைவர். களிற்றுப் படை கொண்ட கோச்செங்கணன் கட்டிய கோயில் நன்னிலத்துப் பெருங்கோயில்; இச் சோழன் தென்னவனாய்ப் பாண்டி நாட்டையும் ஆண்டனன்.

24. **கோட்புலி:** பகை மன்னவர் கூட்டத்தை வென்ற வீரர் இவர். அதனால் 'வேல் நம்பி' எனப்பட்டார்.

25. **சடையர்:** சுந்தரருடைய தந்தையார். இவர் நல்லவர்; யாரிடத்தும் நண்பு பூண்டிருந்தவர்; திருத் தொண்டத் தொகையைச் சுந்தரர் பாடினதற்கு முன்னரே சிவபதம் அடைந்தவர்.

26. **சண்டேசுரர்:** மணலால் இலிங்கம் இயற்றி உண்மைப் பத்தியுடன் மலர்ப்பூசனை செய்தவர். அபிஷேகத் துக்கு வைத்திருந்த பாலைக் கோபத்துடன் காலினால் இடறிய தந்தையின் தாளை மழுவினால் துண்டித்தவர்; இவருக்கு இறைவர் தாம் அணியும் ஆடை, ஆபரணம், மாலை இவை களை அணியும் அமுத பதவியைத்—தேவர்களும் தொழும் படியான பெரும் பதவியைத்—தந்தனர். இவர் "தண்டி" எனவும் கூறப்பட்டுள்ளார். தம்மாட்டுத் தஞ்சம் கொண்ட இவரைத் தமக்குச் சமமான நிலையில் வைத்து மகிழ்ந்தார் இறைவர்.

27. **சந்தி நாயனார்:** இவர் ஊர் வரிஞ்சை.

28. **சாக்கிய நாயனார்:** சிவபிரானது திருவடியை மறவா மனத்தினராய்க் கல் எறிந்து பூசித்த நல்லவர் இவர். இவர் செய்த குற்றத்தையும் இறைவர் குணமாகக் கொண்டனர்.

29. **சிறப்புலி:** சிவனடியார்களுக்கு ஈதலிற் புகழ் பெற்ற வள்ளல் இவர்.

30. **சிறுத்தொண்டர்:** இவர் ஊர் (திருச்)செங் காட்டங்குடி.

81. சுந்தரமூர்த்தி நாயனார்: தனித் தலைப்பு 126-144 பார்க்க.

82. செருத்துணை: இவர் ஊர் தஞ்சை. (இது மருகல் நாட்டுத் தஞ்சை. தஞ்சாவூர் வேறு.)

83. சேரமான் பெருமாள்: மேகம்போன்ற கொடைத் திறத்தினர். தமது ஆட்சிக்கு உட்பட்டவர் கழறுவது (சொல்வது) இஃதென அறிய வல்லவர்.

84. சோமாசிமாறர்: இவர் ஊர் அம்பர்.

85. தண்டியடிகள்: இறைவன் திருவருளாற் கண் பார்வை வரப் பெற்றவர் தண்டியடிகள். புலால் உண்ணாத வரும், (தண்டி அடிகள்) கண்பெறக் கண்டவருமான சமணர்கள் தமது கழலடியில் வீழப்பெற்றவர் தண்டியடிகள். தண்டி அடிகளைப் போன்ற அடியார் கூட்டத்தை உடையவர் சிவபிரான்.

86. திருக்குறிப்புத்தொண்ட நாயனார்: சிவனடியார் களின் குறிப்பை அறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்தவர் இவர்.

87. திருஞானசம்பந்தர்: நல்லிசை, நற்றமிழ்—வல்ல வர்; இன்னிசையால் நாள்தோறும் தமிழைப் பரப்பினவர். சிவபிரானது திருவடியைத் தவிர வேறு எதையும் விரும்பாதவர்.

சீகாழித்தலத்தில் சிவனது திருவருளால் ஞானத்தைப் பெற்றவர். திருக்கோலக்கா என்னும் தலத்தில் உலகோர் காணத் தமது பாடலுக்கு இரங்கிய சிவபிரானிடமிருந்து தாளம் பெற்றவர். திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத் தில் சிவபிரானது திருவருளைப் பெற்றுக், கொல்லி மழவன் என்பான் தலைவனின் பெண்ணின் நோயைத் தீர்த்தவர். சோர்வு நிறைந்த அடியவர்கள் பசியால் வருந்தாதிருக்கச் சிறந்த மறையோர் வாழும் திருவீழிமிழலை என்னும் தலத்திற், பாடி ஆடின சம்பந்தருக்கும் அப்பருக்கும் சிவபிரான் நாள்தோறும் காசு பரிசாக அருளினர். தமிழோடு

இசையைக் கேட்கும் ஆசையாலன்றோ அங்ஙனம் நித்தலும் அவர்களுக்குக் காசு அளித்தார் பெருமானார். சம்பந்தப் பெருமான் சோழநாட்டினர் பரவின கருணையங்கடல்; பாவிரி புலவர்; திருப்பனையூரைத் தரிசித்துப் பதிகம் பாடினவர்; சம்பந்தரும் அப்பரும் பாடிய திருப்பதிகங் களை அடியார்கள் மீண்டும் மீண்டும் சொல்லியவே சொல்லிப் பாடித் துதிக்கச் சிவபிரான் மகிழ்வர். சம்பந்தர், கணம் புல்லர் ஆதியோர் குற்றம் செய்தாலும் பெருமான் அதைக் குணமாகக் கருதினர்; (திருவலஞ்சுழிப் பதிகத்தில்) 'சிவபெருமானே! நீர் பலி ஏற்கும் காரணம்தான் யாதோ கூறுமின்' என விண்ணப்பம் செய்த சம்பந்தரால் மெய்ப் பொருளாகக் கொண்டாடப் பெற்றவர் சிவபெருமான். தம் பதிகங்களிற் சம்பந்தரையும் நாவுக்கரசரையும் ஒருங்கு சேர்த்தே பேசியுள்ளார் சுந்தரர்.

38. **திருநாவுக்கரசு:** இவர் 4900 பதிகம் பாடினவர், சிவநெறி செம்மையையே செம்மையாகக் கொண்டவர்; இவரும் சம்பந்தரும் பாடியாடிப் பரமனைப் பரவத், தமிழ் கேட்கும் இச்சையால், பரமன் இவர் இருவருக்கும் அடியார்கள் பசியால் வருந்தாதிருக்க மறையோர் நிறைந்து வாழும் திருவீழிமிழலையில் நித்தம் படிக்காசு அருளினர். இவர் பாடிய பாடல்களையும் சம்பந்தப் பெருமான் அருளிய பாடல்களையும் அடியார்கள் சொல்லியவே சொல்லி இறைவனை ஏத்த இறைவன் மகிழ்வார். இவர் குற்றம் செய்யினும் அதைக் குணமாகக் கருதினர் சிவபிரான்.

39. **திருநாளைப்போவார்:** செவ்விய மனத்துடன் தில்லைக்கு 'நாளைக்குப் போவேன்' என்றிருந்தவர்; இவர் குற்றம் செய்யினும் அதைக் குணமாகக் கருதும் கொள்கையினர் சிவபெருமான்.

40. **திருநீலகண்டர்:** இவர் குயவர்.

41. **திருநீலகண்டயாழ்ப்பாணர்:** இவர் பாணர்.

42. **திருநீலநக்கர்:** இவர் ஊர் சாத்தமங்கை.

43. திருமூலர்: இவரை 'நம்பிரான்' எனப் போற்றுகின்றனர் சுந்தரர்.

44. நமிநந்தி அடிகள்: இவரை 'அருநம்பி' எனச் சுந்தரர் போற்றுகின்றார்.

45. நரசிங்கமுனையரையர்: இவர் சிவனை அன்புடன் வழிபட்டு வந்த ஊர் திருநாவலூர். 'மெய்யடியான்' எனச் சுந்தரரால் போற்றப்பட்டவர்.

46. நெடுமாறன்: நன்னேக்குடன் திருநெல்வேலியை வென்ற நிலைபெற்ற சீராளர் இவர்; திருநீறு விளங்கும் திருமேனியர்; இவரது சென்னியின் மிசையார் சிவபிரான்.

47. புகழ்ச்சோழர்: கருவூரிற் சிவன்தாளை அடைந்தவர்.

48. புகழ்த்துணை: சிவபிரானது திருவடிக்கே தமது சிந்தையை வைத்து அடிமை பூண்ட அந்தணர் இவர்.

ஒருமுறை அரிசிலாற்று நீர்கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் சிவபிரானுக்கு இவர் அபிஷேகம் செய்தபொழுது, மிக்க (பசித்) தளர்ச்சியினால் குடத்தைச் சிவன் முடிமீது நழுவவிட்டு நடுங்கினர். இறைவன் அவர் தொண்டுக்கு இரங்கி அவர் கையிற் புகும்படி நித்தம் படிக்காசு உதவி அருளி வந்தனர்.

49. பூசலார்: மறையவர்; இவர் ஊர் திருநின்றவூர் (தின்னனூர்).

50. பெருமிழலைக் குறும்பர்: பெருமிழலை என்னும் ஊரினர். குறும்பர்—இவரது மரபைக் குறிக்கும்போலும்.

51. மங்கையர்க்கரசியார்: வளை அணிந்த சுமங்கலி.

52. மானக்கஞ்சாறர்: கஞ்சாறு இவர் ஊர்; வள்ளல் இவர்.

53. முனையடுவார்: இவருடைய வீரத்தைக் கருதி 'வேல் நம்பி' எனப் போற்றப்பட்டுள்ளார்.

54. **மூர்க்க நாயனார்:** சூதாட்டம் நன்கு பயின்றவர். சூதாட்டத்தில் சொற்சூது செய்தாரைத் தமது கைவாளால் குத்தினவர். அதனால் 'மூர்க்கர்' எனவும் 'சூதன்' எனவும் பெயர் பெற்றனர். இவர் செய்த குற்றத்தையும் குணமாகக் கொண்ட கொள்கையர் சிவபிரான்.

55. **மூர்த்தி நாயனார்:** விபூதி, ருத்ராக்ஷம், சடைமுடி இம் மூன்றையும் தரித்து உலகை ஆண்டவர் இவர்.

56. **மெய்ப்பொருள் நாயனார்:** சிவ வேடத்துக்கு முதன்மை தரும் தமது கொள்கையில் வென்றவர் இவர்.

57. **வாயிலார்:** இவர் ஊர் கடற்கரைத் தலமாம் மயிலை (மயிலாப்பூர்).

58. **விறன்மிண்டர்:** இவர் ஊர் குன்றையூர் (செங்குன்றூர்).

## 2. நாயன்மார்களைப்பற்றிய விவரக்குறிப்பு

(1) 63 நாயன்மார்களுள் ஊர் சொல்லப்பட்டவர் 18 பேர்; அவர்தாம்—அதிபத்தர், ஆனாயர், இளையான் குடிமாறர், கணநாதர், குங்கிலியக் கலய நாயனார், கூற்றுவ நாயனார், சத்தி நாயனார், சிறுத்தொண்டர், சுந்தரர், செருத்துணை நாயனார், சோமாசிமாறர், நீலநக்கர், புகழ்ச் சோழர், பூசலார், பெருமிழலைக் குறும்பர், மானக் கஞ்சாறர், வாயிலார், விறன்மிண்டர்.

(2) குலம், மரபு, குடி-குறிக்கப்பட்டவர் பன்னிருவர்; அவர்தாம்—அமர்நீதி, ஆனாயர், ஏயர்கோன் கலிக்காமர், ஐயடிகள், கழற் சிங்கர், கோச்செங்கணார், சோமாசி மாறர், திருநீலகண்டர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நெடுமாறர், பூசலார், பெருமிழலைக் குறும்பர்.

(3) 'நம்பி' எனச் சிறப்பிக்கப்பட்டவர் ஒன்பதுபேர்; அவர்தாம்—அப்பூதி, இடங்கழி, எறிபத்தர், கண்ணப்பர், கணம்புல்லர், குலச்சிறை, கோட்புலி, நமிநந்தி, முனையடுவார்.

(4) 'பிரான்' எனப் போற்றப்பட்டவர் இருவர்—சம்பந்தரும், திருமூலரும்.

(5) பெண்பாலர் மூவர்—காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியார்.

(6) பெற்றோர் குறிக்கப்பட்ட நாயனார் சுந்தரர் ஒருவரே.

(7) வரலாற்றுச் குறிப்புத் தரப்பட்டவர், குறிக்கப் பட்டவர் 28 பேர். அவர்தாம்—இயற்பகை, உருத்திரபசுபதி, எறிபத்தர், கண்ணப்பர், கலிக்கம்பர், கழறிற்றறிவார் (சேரமான் பெருமாள்), காரைக்கால் அம்மையார், கூற்றுவர், கோச்செங்கட்சோழர், கோட்புலி, சண்டேசுரர், சம்பந்தர், சாக்கியர், சிறப்புலி, சோமாசி மாறர், தண்டியடிகள், தாயர் (அரிவாட்டாயர்), திருக்குறிப்புத் தொண்டர், திருநாவுக்கரசர், நரசிங்க முனையர், நாளைப்போவார், நெடுமாறன், புகழ்த்துணை, மானக்கஞ்சாறர், முனையடுவார், மூர்க்க நாயனார், மூர்த்தி நாயனார், மெய்ப்பொருள் நாயனார்.

## 3. தொகை அடியார் ஒன்பதின்மர்

(1) தில்லைவாழ் அந்தணர்: இவர்கள் பல்லவ அரசர்களுக்குத் திறை கொடாத சிற்றரசர்களுக்குத் (தில்லைக் கோயில் வழிபாட்டுக்கு உரிய) மாலை முதலிய மரியாதைச் சிறப்புக்களைச் செய்யாது மறுத்து வந்த பெருமையர்கள். காலை, உச்சி, மாலை மூன்று பொழுதிலும் பூஜை செய்து வரும் மூவாயிரவர் இவர்கள். இவர்களுக்குத் தலைவராம் மூர்த்தி சிவபெருமான் (நடராஜ மூர்த்தி) என்பர்.

(2) பொய்யடிமையில்லாத புலவர் (சங்கத்தார் எனப் படுவார்); மாணிக்கவாசகரோ—என்னும் ஓர் ஐயப்பாடும் உளது.

(3) பத்தராய்ப் பணிவார்கள் (4) பரமனையே பாடுவார் (5) சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர் (6) திருவாரூர்ப் பிறந்தார்கள் (7) முப்போதும் இறைவனது

திருமேனி தீண்டும் உரிமை உடைய ஆதிசைவர்கள் (8) முழுநீறு பூசிய முனிவர்கள் (9) (காலத்தாலும் இடத்தாலும்) அப்பாற்பட்ட அடியார்கள்.

## 179. நிலம் - நிலப்பகுதி [195]

1. திருப்புனவாயில்: என்னும் தலம் கற்குன்றும், கடுவெளியும், கானலும் உள்ள இடத்தில் உள்ளது; கள்ளிச் செடியும் வற்றிப் புல் தீந்துபோன அந்தக் கானத்தில், புள்ளிமான்கள் இருக்கமுடியாமல் ஓடி ஒளிக்கும்.

2. கருகாவூர்: என்னும் தலம் பொழில் சூழ்ந்த முல்லை நிலத்தில் உள்ளது.

3. திருக்கழுக்குன்றம்: காடும், மலையும் உள்ள குறிஞ்சி நிலத்தில் உள்ளது: அங்கே குட்டியொடு முசுக்கள் (குரங்குகள்) பாய்ந்து திரியும்.

4. திருக்கடவூர்: முல்லை நிலத்தில் உள்ளது.

5. புறவில் (முல்லை நிலத்தில்) புன்னை மலரும்.

## 180. நீதி [196]

கொலை செய்த கொடுமையால் வந்துநின்ற பாவமும் வினைகளும் நீங்கவேண்டித் திருக்கழுக்குன்றத்தை அடிக்கடி சென்று தொழுவீர்களாக.

நல்ல நினைப்பு இல்லாமல் உயிர்களைக் கொல்ல நினைப்பன ஆதிய குற்றம் ஒழியவேண்டித் திருவாரூரை என்று அடைவேன்!

## 181. நீதிமொழிகள்—பழமொழிகள் [197]

பழமொழிகள்

இன்பம் உண்டேல் துன்பம் உண்டு; குங்குமம் சுமந்த கழுதை; தோற்றம் உண்டேல் மரணம் உண்டு; பஞ்சி

யிடப் புட்டில் சீறுமோ; பிழுக்கை வாரியும் பால் கொள்வர்; சூரியனைக்கண்ட பனிபோல; பேயோடேனும் பிரிவு இன்னாது; பொற்குன்றம் சேர்ந்த காக்கை பொன்னும்; *மகத்திற் புக்கதோர் சனி; முன்பு செய்த வினை இம்மையில் வந்து மூடும்; வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் - என்பன போன்ற - என்னும் கருத்தை உடைய-பழமொழிகள் உள்ளன.

**நீதிமொழிகள்—உண்மைகள்**

உற்ற போதல்லால் உறுதியை உணரேன்; உறங்கி விழித்தால் ஒக்கும் பிறவி; ஒருநெல்வால் ஊன்ற வருந்தும் உடம்பு இது; ஓடுபுனற் கரையை நிகர்க்கும் இளமை; செத்த போதில் (துணை) ஆரும் இல்லை; தாழாது அறஞ் செய்யவேண்டும்; பெரியாரொடு நட்பு இனிது; மணக் கோலமே பிணக்கோலமாம் பிறவி இது; என்பன போன்ற உண்மை மொழிகள் உள.

## 182. நீர்நிலைகள் (பொய்கை, குளம் முதலிய) [198]

ஆறு, ஏரி, கயம், கிடங்கு, குளம், கோட்டகம் (ஆழ்ந்த நீர்நிலை) சுனை, தடம், பழனம் (பொய்கை), பொய்கை, மடு, மடை, வாவி - இவை நீர்நிலைகளைக் குறிப்பனவாய் ஆளப் பட்டுள்ளன.

கிடங்கில் :—கிடங்கில் உள்ள கிளி மீன், குருவி மீன் எனப்படும் மீனினங்களைக் குருகுகள் நாடும்; வரால்மீன் குதிகொள்ளும்; சேலும் வாளைகளும் பாயும்; சேம்பு, செங்கழுநீர், நீலமலர் விளங்கும்; வயல்கள் சூழ்ந்திருக்கும்.

குளங்களில் :—காவி, குவளை, செங்கழுநீர், தாமரை மலரும்.

பழனம் :—(பொய்கை) மாதர்கள் குடைந்தாடப் பழனத்தில் (பொய்கையில்), தாமரையும் குவளையும்

* பக்கம் 119 கீழ்க்குறிப்பைப் பார்க்க.

மலரும். எருமைகள் பாய்வதால், சேல் மீன்களும் வாளை களும் பாய்ந்து ஓடும்.

பொய்கையில் :—தாமரையும், நீலமும், மலரும்; அன்னங்கள் வீற்றிருக்கும்; கயல், வாளை குதிகொள்ளும்; நறுமணம் வீசும்; புள்ளினங்கள் ஒலிசெய்யும்; எருமைகள் பாயும்.

மடைகளில் :—கழுநீர், காவி, குவளை, நீலம் மலரும், வாளைகள் பாயும்.

வாவிகளில் :—மேதி (எருமை) பாயும்; கயல் பாயும்.

## 183. நூல் [199]

ஆகம நூல், தமிழ் நூல், மறை நூல் கூறப்பட்டுள.

## 184. நெஞ்சம் - மனம் - சித்தம் - உள்ளம் [200]

1. உள்ளம்: உள்ளமே: ஊனுடம்பின்மீது ஆசை வைத்துத் திரியாதே; கடவுளையே உணர்ந்து நினைக்க வேண்டும்; உகந்து உருகி ஏத்தவேண்டும்.

2. சித்தம்: பரமனைப் பணியும் சித்தம் வைத்த தொண்டர்க்குத் தொண்டன் தாம்—என்கின்றார் சுந்தரர்.

3. சிந்தை: அன்பு வைத்து அடிவீழும் சிந்தை கொண்ட அடியாரை யமதூதர் செக்கிலிட வந்தால் அவர் களைத் தடுத்து ஆட்கொள்வார் பெருமானார். எப்போதும் தம்மை நினைக்கின்ற சிந்தையில் சிவனார் திகழ்வர்.

4. நெஞ்சம்: பிரானை நெஞ்சில் நினையாதவர் நினைவு என்ன பயனுடைத்து? வஞ்சமுள்ள நெஞ்சை இறைவன் அணுகமாட்டார். நெஞ்சம் வாழ்வையே விரும்புகின்றது.

5. மனம்: தேவியின் பெரிய மனமும் தடுமாறவேண்டி இறைவர் கரி உரியைப் போர்த்துள்ளார். சமணர் கரிய மனத்தவர். மனம் கல்லை நிகர்க்கும்; கல்லினும் வலிது.

எப்போதும் மனத்தில் நனிபள்ளி என்னும் தலத்தை நினைப்போமாக. நல்ல அடியவர்களுடைய மனத்தில் சேமநிதிபோலத் திகழ்வர் பிரானார். பத்தர்களுடைய மனத்தில் சிறிதளவேனும் பற்றற்று நிற்கமாட்டார் பெருமானார். மனத்தாலும் நினைப்பரியவர். இறைவர்; வஞ்சம் கொண்டவருடைய மனத்தில் இறைவர் சேர மாட்டார்; அணுகமாட்டார். வஞ்சம் அற்ற மனத்தாரை இறைவர் மறக்கமாட்டார். தம்மை வந்திப்பவருடைய மனத்தில் அவர் வீற்றிருப்பார்; மனமே! அவரை நீ மறவேல், நீ சலனம் இன்றி உறுதியாய் இருப்பாயாக.

## 185. நெறி [201]

[தலைப்பு 71 (36) - பக்கம் 58 பார்க்க]

இறைவர் பிறவா நெறியார்; நல்லதான நெறியை, மெய்ந்நெறியை அடியவர்க்கு அவர் காட்டுவர். மெய்யடியார்களின் கூட்டுறவு கொண்ட புண்ணியர்க்கு வழுவா நெறியைக் காட்டுவர்; வானோரும் அறியாத பலபல நெறிகளை முறைப்படி காட்டிக் கற்பிப்பர்.

நெறியில் நின்று அடியார்கள் இறைவனை நினைப்பர். "நான் ஒன்றும் அறியேன், நெறி காணவுமாட்டேன்; இறைவா! தவநெறியைத் தா என உன்னை வேண்டிக்கொள்வேன்"—என்கின்றார் சுந்தரர்.

## 186. நோய் - பிணி [202]

[தலைப்பு 71 (37) - பக்கம் 58 பார்க்கவும்]

அங்கத்துறுநோய், அம்மைநோய் (இனிவரும் பிறப்பு) இழித்தநோய், செடிகொள் நோய் (செடி-பாவம்), நெஞ்சில் நோய், மேலைநோய்—என நோய்களும், அருகற் பிணி (அருகுதல் - அணைதல், கிட்டுதல்), இரும்பிணி (பெரிய பிணிகள்), உடம்பு அடும்பிணி, கடும்பிணி, தாங்கூர்பிணி, (மேலே எழும் பிணி) எனப் பிணிகளும் கூறப்பட்டுள. பிணி உருவமாக வினைகள் வந்து நலிவு செய்யும்.

## 187. பஞ்சம் - மழையின்மை [203]

ஏயர்கோன் (கலிக்காம) நாயனர் காலத்தில் (அதாவது சுந்தரர் காலத்தில்) மழையே இல்லாமல் வயலுக்கு நீர் இல்லாதுபோகவே 'பெருமானே! மழை தருக; பன்னிரு வேலி நிலம் தருவேன்' என ஏயர்கோன் திருப்புன்கூர் ஈசனை வேண்டிக்கொண்டார். மழை நிரம்பப் பெய்து பெருவெள்ளம் உண்டாக, அதைத் தவிர்க்கவேண்டி அவர் பின்னும் பன்னிரண்டு வேலி பெருமானுக்குத் தந்தனர்; அத்தகைய கருணையாளர் இறைவர்.

## 188. படைகள் [204]

[‘சிவபிரான் கையில் அணிவன’ என்னும் தலைப்பு 59-6; பக்கம் 40 பார்க்க]

அம்பு (கணை, பகழி, வாளி), ஆவநாழி (அம்புக்கூடு), ஆழி (சக்கரம்), சிலை(வில்), சுரிகை (உடைவாள்), சூலம், தண்டாயுதம், பத்திரம் (சிறுவாள்), பரசு (மழு-கோடாலி), வலயம், வேல் முதலிய படைகள் கூறப்பட்டுள.

## 189. பதிகப் பாகுபாடு [205]

[சுந்தரருடைய 100 பதிகங்களின் பாகுபாடு (இயற்றமிழ்வழி)]

(1) **4 சீரில் வருவன 21**: அவைதாம்:—

பதிக எண்:—1, 11, 13, 29, 32, 37, 51, 71, 72, 78, 79, 80, 82, 83, 85, 86, 89, 91, 93, 94, 96.

(2) **5 சீரில் வருவன 9**: அவைதாம்:—

பதிக எண்:—12, *17, *18, *19, 43, 44, 45, 50, *97.

---

* பதிகங்கள் 17, 18, 19, 97, 98, 99 கட்டளைக் கலித்துறையில் அமைவன. 99 ஈற்றடி 'நாகேச்சரத்தரனே'—எனப் பாடம் கொள்க.

(3) **6 சீரில் வருவன 11:** *அவைதாம்:—*

*பதிக எண்:*—7, 8, 30, 47, 52, 53, 75, 76, 77, 90, 95.

(4) **7 சீரில் வருவன 10:** *அவைதாம்:—*

*பதிக எண்:*—10, 14, 15, 33, 34, 35, 36, 41, 48, 69.

(5) **8 சீரில் வருவன 23:** *அவைதாம்:—*

*பதிக எண்:*—16, 38, 39, 40, 46, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 70, 74, 84.

(6) **இசைத்தமிழ் வகையன 12:**

*பதிக எண்:*—20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 31, 87, 88.

(7) **4 சீராகவும் 8 சீராகவும் வருவது 1:** *அதுதான்:—*

*பதிக எண்:*—6.

(8) **6 சீராகவும் 8 சீராகவும் வருவன 4:** *அவைதாம்:—*

*பதிக எண்:*—2, 3, 4, 42.

(9) **4 சீராகவும் 7 சீராகவும் 8 சீராகவும் வருவது 1:** *அதுதான்:—*

*பதிக எண்:*—5.

(10) **5 சீராகவும் இசைக்கு உரியனவாகவும் வருவன 5:** *அவைதாம்:—*

*பதிக எண்:*—81, 92, 98, 99, 100.

(11) **6 சீராகவும் இசைக்கு உரியனவாகவும் வருவன 3:** *அவைதாம்:—பதிக எண்:*—9, 49, 73.

**ஆகப் பதிகங்கள்:**—21 + 9 + 11 + 10 + 23 + 12 + 1 + 4 + 1 + 5 + 3 = 100.

## 190. பதிகப் பாகுபாடு [206]

(நாடுகளின்படி)

| | நாடு | பாடல் பெற்ற தலம் | மொத்தப் பதிகம் |
|---|---|---|---|
| 1. | ஈழநாடு | 1 | 1 |
| 2. | கொங்குநாடு | 4 | 4 |
| 3. | சோழநாடு | 48 | 57 |
| 4. | தொண்டைநாடு | 12 | 13 |
| 5. | நடுநாடு | 10 | 12 |
| 6. | பாண்டிநாடு | 5 | 5 |
| 7. | மலைநாடு | 1 | 1 |
| 8. | வடநாடு | 3 | 3 |
| | | 84 | 96 |
| | பொதுப் பதிகங்கள் | | 4 |
| | | | 100 |

## 191. பதிகப் பாகுபாடு—பண் வகையில் [207]

சுந்தரர் அருளிய பதிகங்கள் 17 வகைப் பண்களில் உள்ளன; பண் தக்கேசியில்தான் அதிகப் பாடல்கள் (17); பண் நட்டராகத்தில் (14); பண் இந்தளத்தில் (12); பண் கொல்லிக் கௌவாணத்தில் (9), பண் கொல்லி, பண் பழம் பஞ்சுரம் இவைகளில் ஒவ்வொன்றிலும் (7), பண் காந்தாரம், பண் நட்டபாடை, பண் பஞ்சமம் இவைகளில் ஒவ்வொன்றிலும் (5), பண் குறிஞ்சி, பண் சீகாமரம், பண் தக்கராகம், ஒவ்வொன்றிலும் (4), பண் புறநீர்மையில் (3), பண் காந்தார பஞ்சமம், பண் கௌசிகம், பண் செந்துருத்தி பண் பியந்தைக் காந்தாரம் ஒவ்வொன்றிலும், 1. ஆகப் பண்கள் (17); பதிகங்கள் 100.

## 192. பதிக விசேடங்கள் [209]

ஆரூரர் (சுந்தரர்) அருளிய பதிங்களுள்-அகப்பொருட் பதிகங்கள், அசதியாடும், பதிகங்கள், அடுக்குச்சொல்

நிறைந்த பதிகம்; உபதேசப் பதிகங்கள்; ஏசின பதிகங்கள்; சித்த நிலைத் திருப்பதிகம்; தலவர்ணனைப் பதிகங்கள்; இறைவனைக் குறியாமல் தலத்தையே பாடின பதிகம்; தவநெறி வேண்டும் பதிகம்; திருக்குறள் வந்துள்ள பதிகம்; திருத்தொண்டத் தொகைப் பதிகம்; திருநாட்டுத் தொகைப் பதிகம்; தேவார மூவர் பெயரும் வரும் பதிகம்; நம்பி என்ற திருப்பதிகம்; நமச்சிவாயப் பதிகம்; பழமொழிகள் வரும் பதிகம்; புகழாப் புகழ்ச்சிப் பதிகம்; புலவர்களுக்கு அறிவுரை கூறும் பதிகம், மூவேந்தர் முன்பு கூறிய பதிகம்; வரலாற்றுப் பதிகங்கள்; க்ஷேத்திரக் கோவைப் பதிகங்கள் —உள்ளன.

## 193. பவளம், பளிங்கு, பொன், மணி, மரகதம் மாணிக்கம், முத்து, வயிரம்

### 1. பவளம் [210]

பவளம்-செந்நிறத்தது; குளிர்ச்சியுள்ளது. சிவபிரான் பவள நிறத்தினர்; அவருடைய சடையும் பவள நிறத்தது; தேவியின், மாதர்களின், வாய் இதழ் பவள நிறத்தது. மயிலாப்பூர்க் கடற்கரையில் உள்ள செம்பவளம் இருளை ஒழிக்கும். புன்னையின் அரும்பு வெண்முத்துப்போல இருக்கும், மலர்-பொன் நிறத்தது, ஈற்றில் பவள நிறம் காட்டும். மணி, முத்தம், பவளம் இவை வலம்புரத்துக் கடற்கரையிற் காணக் கிடைக்கும்.

### 2. பளிங்கு

காவிரியில் அடிபட்டு வரும்.

### 3. பொன்

காவிரி நீர் பொன் தரும். கலசங்கள் பொன்னாற் செய்யப்பட்டன; ஈசனை அருமையாகப் பொன்னே, மணியே, முத்தே, பவளக் குன்றமே, மரகதமே, மாணிக்கமே—என்று கூறிப் பக்தர்கள் புகழ்வார்கள்.

### 4. மணி

பன்றிகள் பூமியைக் கிளைக்க மணிகள் நெருப்பென மேலெழும்; திருக்கழுக்குன்றத்தில் அருவிகள் மணி முத்துக்களை அடித்துக்கொண்டு வரும். திருக்கேதாரத்தில்—மயிலும், பெண்மான்களும் நிலத்தைக் கிளைக்க மணிகள் சிந்தும்; யானைகள் மணிகளை வாரி எறியக் கிண் என்ற ஒலி பிறக்கும். மலைகளில் மணி கிடைக்கும். அருமணி, இனமணி, கதிர் மாமணி, கருமணி, குடமணி (குடம் - திரட்சி), குருமணி, சூளாமணி, நன்மணி, பருமணி, பன்மணி, பொன்மணி, மாசிலாமணி, மாமணி—கூறப்பட்டுள்ளன.

### 5. முத்து

கரும்பு, சங்கு, (மத)யானையின் வெண்மருப்பு, மலை, மூங்கில்—இவைகளினின்றும் முத்து பிறக்கும்; மழையின் உதவியால் மிகப் பருத்து நீண்ட மூங்கில்கள் முத்துக்களைச் சொரியும் (திருக்கழுக்குன்றத்தில்); முத்துக்களை வீசித் தள்ளிக் கடல் முழங்கும்; புன்னை மரத்து அரும்புகள் வெண்முத்துக்களைப்போல விளங்கும்; பூணும் மாலையாக முத்துக்கள் கோக்கப்படும்; அலைகள் மோதித் தள்ளுவதால் வளர்ந்துள்ள சங்குகள் வாய் திறந்து முத்துக்களைச் சொரியும். திருக்கழுக்குன்றத்து மலைஅருவிகள் முத்துக்களை வாரிக்கொண்டு இழியும்.

## 194. பழக்க வழக்கங்கள் [211]

### 1. உயிர்போனால் உற்றார் உறவினர் அழுதல்

அன்பு வைத்துள்ள சுற்றத்தினரும் பிற அன்பர்களும் கண்டு அழும்படி உயிர் உடலை விட்டுப் பிரிந்துபோவது நிச்சயம்; ஆதலால் நமது வாழ்வு பேதை வாழ்வு.

### 2. காவிரி நீர்

தன்னிடை ஆடுவார்களின் பாவத்தைக் காவிரியாறு தீர்த்து உதவும்; ஆதலால் எல்லாத் திசைகளில் இருந்தும்

காவிரி நீர் ஆட மக்கள் வருவார்கள். போகம் வேண்டினோரும், யோகிகளும் அதிகாலையில் காவிரியில் மூழ்கி நீராடுவர்.

### 3. தலங்களில் பண்ணிசை பாடுவார்

திருப்பூவணம் என்னும் தலத்தில் பண்ணிசை பாட வல்லோர் பாடிப் பணிந்தனர்.

### 4. திறை கொடுத்தல்

உலகை ஆண்டு வந்த பல்லவர்க்குத் திறை செலுத்தாத சிற்றரசர்களுக்குச் சிறப்பு மரியாதைகளைச் செய்யாத தீரமுள்ள பெருமையாளர்கள் தில்லைவாழ் அந்தணர்கள்.

### 5. தேவாரம் ஓதும் முறை

சம்பந்தர், அப்பர் அருளிய தேவாரப் பாமாலைகளைச் சொல்லியவே சொல்லிச் சொல்லிப் பெருமானைத் துதித்து வந்தனர் அடியார்கள்; அத் துதிகளைக் கேட்டு மகிழ்ந்தனர் பெருமான்.

### 6. தொன்னைகளை வேடர்கள் இலைகொண்டு தைத்தல்

வேடர்கள் இலையால் தொன்னை செய்து அதிலே தேனைப் பிழிவார்கள்.

### 7. பிள்ளைகளின் விளையாட்டு

காவிரியில் அடித்து வரும் மணிகளைப் பிள்ளைகள் வயல்களிற் பொறுக்கித், தெருவிலும், திண்ணைகளிலும் முற்றங்களிலும் திரட்டிச் சேர்ப்பார்கள்.

### 8. மகளிர் புனம் காத்தல்

"கிளிகளே! அன்று வந்து (தினைக்) கதிர்களை உண்டீர்கள்; நான் உங்களை வெருட்டாமல் சும்மா இருந்தேன். நீங்கள் எப்போதும் இவ்வாறு வந்து உண்டால் என்னைச் சேர்ந்தவர்கள் என்னைக் கோபிக்கமாட்டார்களா! இதுவே தொழிலாக வருகின்றீர்களே" என்று கூறி ஓடிச்

சென்று அந்தக் கிளிகளைப் புனம்காக்கும் மகள் வெருட்டு வாள்; "என்னை மதியாமல் கதிர்களைக் கொய்கின்றீர்களே" என்று கூறி கவண் வீசி ஓட்டுவாள்; 'ஆயோ' என்று வெருட்டியும் போகாததைக் கண்டுக், கிளிகள் ஓடும்படி கைக்கவண் மணி வீசி எறிவாள்; கிளிகள் பயந்து பாடி ஓடும்; இக் காட்சி ஸ்ரீபர்ப்பத மலையில் (ஸ்ரீசைலத்தில்) நிகழ்வது.

### 9. மாதர்கள் ஆற்றில் குளித்தல்

கொள்ளிட நதியில் தத்தம் உடை அவிழக், கூந்தல் அவிழ, மகளிர் குடைந்தாடுவர்.

### 10. மாதர்களும் கிளியும் பந்தும்

மாதர்கள் கிளியுடன் பயில்வர்; பந்து விளையாடுவர்.

## 195. பழம், காய், பழவகைகள் [212]

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், நெல்லிக்கனி கூறப்பட்டுள. தெங்கின் பழமும் பனம்பழமும் கடற்கரையில் மணல்மேல் விழுந்து கிடக்கும்; பொழில்களில் மாங்கனிகள் தொங்கும்; மலைகளில் மாம்பழமும் வாழைப் பழமும் கிடைக்கும்; கிளிகள் வாழைப்பழத்தைக் கீறி உண்ணும். வாழைப் பழங்கள் தேனைச் சொரியும்; வாழைப் பழங்களைக் குரங்குகள் உண்ணும்; பலாச் சுளைகளில் தேன் சுவை மல்கும்; சோலைகளிற் பல கனிகள் நிறைந்து உதிரும்; கமுகில் பழுக்காய் கிடைக்கும்; இறைவன் நெல்லிக் கனியின் அமுதே என அழைக்கப்பட்டுளார்.

## 196. பாட்டு—பாடல் [213]

கடவுளைக் குறித்த பாடல்கள் (இறையார் பாடல், குறிகொள் பாடல், சீரேறு பாடல்கள்) எனக் குறிக்கப் பட்டுள. வண்டின் பாடல், ஆந்தைகளின் பாடல், புது வகைப் பாடல்கள், சம்பந்தப் பெருமானுடைய பாடல்—

முதலியனவும் கூறப்பட்டுள. பறையும் குழலும் பாடலுடன் ஒத்து ஒலி எழுப்பும். அடியார்கள் பாடல்கள் பாடித் திரிவார்கள். இறைவன் பாட்டகத்து இசையாகி நிற்கின்றான்.

## 197. பாடல் விசேடங்கள் [214]

அன்னம் விடு தூது, கிள்ளைவிடு தூது, குயில்விடு தூது, குருகுவிடு தூது, சக்கரவாளப்பறவை விடு தூது, நாரைவிடு தூது, பூவை விடு தூது, மேகம் விடு தூது, வண்டு விடு தூது, திருக்குறள் ஆண்டுள்ள பாடல், தேவாரம் பாடிய மூவர் பெயரும் வரும் பாடல், நீதிமொழி—பழமொழிகள் வரும் பாடல், வினவுரைப் பாடல்கள்—முதலிய சுந்தரர் தேவாரத்தில் வந்துள்ளன.

## 198. பார்வதி தேவி [215]

(i) தேவியைக் குறிக்கும் சொற்கள், சொற்றொடர்களுள்—

உமா, ஏழை, பார்ப்பதி, பாவை நல்லாள், மங்கை நங்கை, மலையரையன் பொற்பாவை, வெற்பரையன் மடப் பாவை—என்பன குறிக்கத்தக்கன.

### (ii) தேவியின் அங்க லட்சணங்கள்

(1) அடி

சீறடி, தளிர்போல் மெல்லியது. பஞ்சுக்கு ஒப்பானது.

(2) அல்குல்

அகன்றுள்ளது, அரவு போன்றது, துகில் அணிந்தது.

(3) இடை

நுண்ணியது; கொடி, துடி, பட அரவு, மின், வஞ்சிக் கொடி போன்றது.

(4) கண்

கரு நிறத்தது, நீண்டுள்ளது, அகன்றுள்ளது, குளிர்ச்சியுள்ளது, மை பூசி உள்ளது; காவி மலர், கெண்டை மீன், மாவடு, மான், வாள் இவை கண்களுக்கு உவமை கூறப்பட்டுள்ளன.

(5) கரம்

வளையல் பூண்டது.

(6) கூந்தல்

நறுமணம் உள்ளது, நீண்டுள்ளது, சுருண்டுள்ளது, வளைவு கொண்டது, குரா மலரணிந்தது, வண்டு நாடுவது, கருநிறத்தது.

(7) தோள்

பருமை கொண்டது, வேய் (மூங்கில்) ஒத்தது.

(8) நுதல்

பட்டம் அணிந்தது, பிறை போன்றது.

(9) பல்

இளமையும் கூர்மையும் விளங்குவது; முத்து, முல்லை போன்றது.

(10) முகம்

தாமரை போன்றது.

(11) முலை

நிகர் அற்றது, பருமை கொண்டது, கச்சு அணிந்தது, மணிவடம் ஆதிய பூண் அணிந்தது, நெருங்கியது, மென்மை கொண்டது, அழகியது, இளமை வாடாதது, அரும்பு, சூதாடுகருவி, தெங்கின் இளங்காய் (இளநீர்) போன்றது.

(12) மேனி

அழகுள்ளது, மின்னல் போல ஒளி பொருந்தியது.

(13) மொழி

தூயது, மென்மை வாய்ந்தது, பண் இசை கொண்டது, குழல், யாழ் ஒலி கொண்ட இனிமையது, பால்போல இனிமை பூண்டது.

(14) வாய்-வாயிதழ்

பவள நிறத்தது, இலவு, கொவ்வைக் கனி போன்றது.

(15) விரல்

பந்து பூண்பது.

(16) தேவியின் அணிகலன்கள்

சிலம்பு, பட்டம், பிறை (தலையணி வகை), வளை.

(17) தேவியின் புகழ்

தேவி எல்லையற்ற, அழிவிலாத, பரந்த புகழ் கொண்டவள்.

(18) தேவியின் மனம்

தேவி நிறை மனத்தினள், பெரிய மனத்தினள்.

## (iii) தேவியைப் பற்றிய சேதிகள்

(1) தேவி அஞ்சின சமயங்கள்

ராவணன் கயிலையை எடுத்தபோதும், பெருமான் நஞ்சை உண்டபோதும், அவர் யானையின் தோலை உரித்த போதும், (அந்த ஈரத் தோலைப்) போர்த்துக்கொண்ட போதும், கோடி என்னும் தலத்திற் பெருமானுடன் தனித்திருக்கும் போதும் தேவி அஞ்சினள்.

(2) தேவி அறம் வளர்த்தது

உலகை உய்விக்கக் காஞ்சியில் காமகோட்டம் என்னும் அறச்சாலையைத் தேவி அமைத்து ஊர்கள்தோறும் அறம் புரிகின்றாள்.

(3) தேவி ஊடி இருந்த நிலை

பெருமானுடன் ஊடல் தொலையாத வேளையில் ராவணன் கயிலையை எடுக்கத், தேவி அஞ்சி, தணியாத ஊடல் தணிந்து, (பெருமானை அணைந்தனள் என்ப).

(4) தேவி கச்சியிற் சிவபிரானைப் பூசித்தது

கச்சியில் தேவி பெருமானை ஆதரித்துப் பரவி வழிபட்டனள். தேவி வழிபட்ட பெருமான் *"பெரிய கம்பன்." தேவி வழிபாடு செய்யச் சென்று நிற்பதைக் கண்டு, பெருமான் வெள்ளத்தை ஏவி அவளை வெருட்டினர்; தேவி அஞ்சி ஓடிப் பெருமானைத் தழுவினள். பெருமான் வெளிப்பட்டு அவளுக்கு அருள்புரிந்தனர்.

(5) தேவி கோல் தட்டி ஆளாள்

வயிறுதாரிப் பிள்ளை கணபதியை அதிகமாக உண்ணுதே என்றும், சிறுபிள்ளை குமரனைக் கையில் வேல் வேண்டாம், கண்ணைக் குத்திவிடும் என்றும் அறிவுரை கூறிக் கோல் கொண்டு தட்டி அதட்டி அடக்கி ஆள்வதில்லை - தாயாகிய தேவி - (என ஓர் அறிஞர் பொருள் காண்கின்றனர்.)

(6) தேவி சிவபிரானது கண்ணை மூடினதும், உலகு இருண்டதும் நெற்றிக்கண் தோன்றிய வகை

தேவி விளையாட்டாக, மகிழ்ச்சியுடன், தனது கரத்தால் சிவபிரானுடைய கண்களை மூடினள். உடனே எல்லா உலகங்களிலும் இருள் சூழ்ந்தது; அதைக்கண்டு பெருமான் தமது நெற்றியில் ஒரு கண்ணை உண்டு பண்ணி அந்த இருளை அகற்றினர்.

(7) சிவபிரானை விட்டுப் பிரியாதவள்

தேவி சிவபிரானைவிட்டு ஒருபோதும் நீங்காதவள்.

(8) தேவி தவம் செய்தது

தேவி சிறந்த தவம் செய்தனள்; அத்தவத்தின் குறிப்பை உணர்ந்தும், தேவியின் குணத்தினை நன்கு

* பிரமன் பூசித்த லிங்கம்-வெள்ளக் கம்பன்; திருமால் பூசித்த லிங்கம்-கள்ளக் கம்பன்; உருத்திரன் பூசித்த லிங்கம்-நல்ல கம்பன்.

அறிந்தும், பெருமான் சென்று தேவி விரும்பின வரத்தைக் கொடுத்து அவளை மணந்தருளினர்.

(9) தேவியும் பந்தும் கிளியும்

தேவி பந்தும் கிளியும் பயில்வள்.

(10) தேவி பிறை சூடுவது

தேவி பிறை மாலை பூண்டவள்.

(11) தேவி முத்தி தருவது

முத்தி தரவல்லவள் தேவி.

(12) தேவி முருகவேளின் தாய்

குமரன் தாய் தேவி.

## 199. பிரமன் [216]

[தலைப்பு 115-சிவனும் பிரமனும் பார்க்க]

அந்தணன், அயன், செய்யான், நான்முகன், பிரமன், விதி—என்னும் சொற்கள் பிரமனைக் குறிக்க ஆளப்பட்டுள.

உயிரையும், உலகையும், ஊழியையும் படைத்தவன் பிரமன்; கலய நல்லூரிலும், கழுக்குன்றத்திலும் சிவபிரானைப் பூசித்து வழிபட்டவன்.

பிரமன் செவ்விய பொன்னிறத்தினன்; முப்புரிநூல் அணிந்தவன்; தாமரை மலர்மிசை வீற்றிருப்பவன்; வேத முதலான்.

## 200. பிறப்பு [218]

எழுபிறப்பு, மறுபிறப்பு கூறப்பட்டுள. பிறப்பு-'பாசப் பிறப்பு', 'மலம் தாங்கிய பிறப்பு', பிறவி-இடர்ப் பிறவி; அது 'உறங்கி விழித்தாற் போன்றது' என்று விளக்கப்பட்டுளது; பிறவிக்கடல், படுகடற் பிறப்பு—எனப் பிறப்பின் விரிவு விவரிக்கப்பட்டுளது; 'பிறவியை ஒழிக்கவேண்டும்', எம்

பெருமானே! பிறவாமையையே வேண்டுகின்றேன் நான்'— என்கின்றார் சுந்தரர்.

## 201. புகழ் [219]

அந்தமில் புகழ், அருமையாம் புகழ், அற்றமில் புகழ், எண்ணில் புகழ், எல்லையில் புகழ், சீர்கொண்ட புகழ், சொல்லரும் புகழ், திகழ் புகழ், திருப்புகழ், தொல் புகழ், நிறைபுகழ், பரந்த புகழ், பழிசேரில் புகழ், பாயின புகழ், வியன் புகழ், வீடிலாத புகழ்-என்றெல்லாம் புகழ் விவரிக்கப் பட்டுளது.

இவற்றுள் (1) பரமன் பழிசேர்(தல்) இல் புகழான், பாயின புகழான்; வீடிலாத வியன் புகழான்; (2) தேவி— அந்தமில் புகழாள், அற்றமில் புகழாள், எண்ணில் தொல் புகழாள், எல்லையில் புகழாள், பரந்த தொல் புகழாள்; (3) சம்பந்தர் அருமையாம் புகழார் (4) சிறப்புலி நாயனர் சீர்கொண்ட புகழார்; (5) தொண்டைமான் சொல்லரும் புகழான்.

## 202. பூதம் [220]

[சிவனும் பூதமும்-தலைப்பு 117 பார்க்க]

ஆளும் பூதங்கள், குறட்பாரிடங்கள், குறட்படை பரந்த பாரிடம்—எனப் பூதங்கள் ஓதப்பட்டுள.

## 203. பேய் [221]

[சிவனும் பேயும்-தலைப்பு 119-ம் பார்க்க]

பேய்கள் எரிதலையன; குழிந்த கண்ணின; பறை போன்ற கண்ணின; அகன்ற வாயன; புலால் வாயன; மயானத்தில் வாழ்வன; பிணம் இடு காட்டில் இருப்பன; துஷ்ட குணத்தை உடையன; தெள்ளறிவு கொண்டன; அங்கும் இங்கும் திரிவன; பேயுடன் பழகினும் பிரிதல் துன்பம் தரும்; (சமண் சாக்கியப் பேய்கள்—என்றும் கூறப்பட்டுளது).

## 204. பொருள்—பொருளழகு [222]

பொருள் என்னும் சொல்—செல்வம், மெய்ப்பொருள், மகன்—என்னும் பொருள்களில் ஆளப்பட்டுள.

பெருமான் தூர்த்தராம் திரிபுராதிகள்மேல் எய்த அம்பு ஒன்று, ஆப்தனும் அருச்சுனன்மேல் எய்த அம்பு பல—என்கின்றார் சுந்தரர்.

பாகன்—என்னும் சொல்—பங்கு கொடுத்தவன், கணவன், ஊர்தியை ஓட்டுபவன்—என்னும் மூன்று பொருளில் ஆளப்பட்டுளது.

## 205. பொழிலும் சோலையும் [223]

### 1. சோலைகள்

சோலைகளில்—தேன் ஒழுகும், நறுமணம் வீசும், வண்டு பண்பாடும், மயில் ஓசை செய்யும், மயில் ஆடும், குயில் பாடும், பறவைகள் சேரும், குரங்குகள் விளையாடும், அன்றில் அடையும், பறவைக் கூட்டங்கள் ஒன்று சேரும்.

சோலைகளில்—செண்பகம், செருந்தி முதலிய மலர்களும்; கமுகு, கரும்பு, தெங்கு, பனை, மா, வாழை முதலிய நீண்டு உயர்ந்த மரங்களும் நிறைந்திருக்கும். மேகம் தவழும்; ஆத்தி இராப்பொழுதில் தேன் துளிக்கும்.

### 2. பொழில்கள்

அழகுவாய்ந்தன; நறுமணம் உள்ளன; இருண்டிருப்பன; குளிர்ச்சியுள்ளன; குறை, குற்றம் இலாதன; மலை போல் உயர்ந்தன; மேகம் தவழ்வன; மதி பதிவன; செழுமை வாய்ந்தன; தேன் சொட்டுவன; பசுமை கொண்டன; வளப்பமுள்ள கனிகள் நிறைந்தன. விரிந்துள்ளன; நீண்டுள்ளன; பொழில்களில் தேன் உண்டு வண்டு பண் பாட மயில்கள் நடமாடும்; அன்னச் சேவலோடு பெண் அன்னங்கள் ஊடும், கூடும்; குயிலும் வண்டினங்களும் பாடப். பாம்புகள் அடும்.

**மரம்-செடி-கொடி-இவற்றுள்**—வாழை, மா, பலா, கமுகு, தெங்கு, பனை, தாழை, குரவம், மாதவி, புன்னை முதலிய காணலாகும்; புன்னை வெண்முத்தரும்பி, பொன் மலர்ந்து, பவள ஒளியின் அழகைக் காட்டும்; குரவம் நறுமணம் வீசும்; மாந்தளிர்கள் எரிநிறம் காட்டும்; கமுகின் ஒழுங்கு வரிசையும், தெங்கின் உயர்ந்த உருவமும், பலா மரங்களின் குறிய தாளும் காணக் கிடைக்கும்.

காவிரியின் கரைகளில் வளப்பமுள்ள பொழில்களைக் காணலாம். மா முதலிய பழங்கள் நிறைந்து பொலியும்; தாழை மொட்டலர்ந்து மணம் வீசும். பொழில்களின் அருகே வயல்கள் விளங்கும்; பொழில்களில் மாதவர்கள் தவம் செய்வர்.

## 206. மக்களைக் குறிப்பன [224]

### (i) இறைவனை வணங்காதார்

எங்கள் பிரானை அறியாதார், உணராதார், நினையாதார், பரவாதவர், குழைக்காதற் கடிமைக்கட் குழையாதார், சடையிற் கங்கை தரித்தானைச் சாராதார், பனங்காட்டூர் பயில்வானுக்கு அடிமைக்கட் பயிலாதார், பெண் ஆண் ஆய பிரானைப் பேசாதார், பெற்றொன்றேறும் பிரானைப் பேசாதார்—எனக் குறிக்கப்பட்டுளர்.

### (ii) நற்பண்புடைய மக்கள்

அருமையாம் புகழார், எத்திசையும் புகழ் மன்னி இருப்பவர்கள், கறுவிலா மனத்தார்கள், குணத்தினர், குலவன், கோணுதார், சாது, சுற்றம் நன்கினை பேணியே விருந்தோம்பு(வோர்), செம்மையாளர், திடங்கொள் சிந்தையினர், திருவினர், துறந்தார், நற்பதம் என்றுணர்வார், நீதி நிறைந்தவர், நீற்றுரு மேனியர், நெறியில் வழுவா நியமத்தவர்கள், புண்ணியர், பெருங்குலத்தவர், மதியுடையவர், முழுநீறு பூசிய முனிவர், மெய்த்தவத்தோர், மெய்யர், மேலையார், வஞ்சமற்ற மனத்தார், வள்ளல், விழுமிய தாய் புலவோர்க்கெலாம், வேத நீதியர்—எனக் குறிக்கப்பட்டுளர்.

## (iii) நற்பண்பு இலாத மக்கள்

ஆகமங்கள் அறியார், ஆறலைப்பார், ஈக்கும் ஈகிலன், கண்டகர், கண்ணறையன், கற்றிலாதான், குலமிலாதான், கூழை மாந்தர், கூறைகொண் டாறலைப்பார், கொடியார், கொடுக்கிலாதான், கொடும்பாடன், சங்கையவர், சழக்கர், செடிச்சிகள், தூர்த்தர், நலமிலாதான், நொய்ய மாந்தர், பஞ்ச நட்டன், பாவிகள், பொதியே சுமந்துழல்வீர், பொய்ம்மையாளர், மதி மாந்திய மாந்தர், மாசழக்கன், மிண்டர், மூற்றிலாதான், முனிபவர், மூர்க்கன், மெய்யிலாதார், வஞ்சங்கொண்டார், வஞ்சர், வழக்கில்லி, வேத வித்தல்லாதவர்கள்—எனக் குறிக்கப்பட்டுள்ளார்.

## (iv) கற்றோர், பெரியோர், தவசிகள்

ஆகமசீலர், ஓதுவார், கலைமலிந்த தென்புலவர், கலையார் மாதவர், கற்ற பெருப்புலவாணர், கற்றவர், கற்று நல்லன், கற்றோர், சந்தம இசையொடும் வல்லார், சித்தர், தண்டமிழ் நூற் புலவாணர், தத்துவ ஞானிகள், தமிழ்பாட வல்லார், தவத்தின் மிக்க நமர், தென்புலவர், பண்ணிசையார் மொழியார், புலவர், புலவாணர், பெரியோர், பெரும்புலவாணர், மறை நாவர், வேத வேதியர்—எனக் குறிக்கப்பட்டுள்ளார்.

## (v) பக்தியாளர், அடியார்

அடியார், அப்பாலும் அடிச்சார்ந்த அடியார், தோத்திரமும் பல சொல்லித் துதித்து இறைவன் திறத்தே கற்பாரும், கேட்பாரும்; நம்பினர், பத்தர், பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், முப்போதும் திருமேனி தீண்டுவார், மெய்யடியார்—எனக் குறிக்கப்பட்டுள்ளார்.

## (vi) உலகினர்

அகலிடத்தவர், உலகவர், குவலயத்தோர், பாருளார், பாரோர், மண்ணவர், மண்ணுளார்—எனக் கூறப்பட்டுளர்.

## 207. மந்திரம் [225]

ஆறெழுத்து மந்திரம் சிவபிரானுக்கு உகந்தது; அவர் மந்திரம் ஓதுவர் ; திருமால், பிரமன், இந்திரன் மந்திரம் ஓதி அவரை வணங்கி வேண்ட அவர் நஞ்சை உண்டனர்; மந்திரம் ஓதும் சிறந்த முனிவர்கள் கயிலையிற் சிவபெருமான் அருகில் இருந்தனர் ; மந்திரம் ஒன்றும் அறியாதவன் நான் என்கின்றார் சுந்தரர்.

சமண குருமார் ஆடையின்றி ஞமண ஞாஞண ஞாண ஞோணமென மந்திரம் ஓதினர்.

## 208. மரம், செடி, கொடி, மலர் முதலிய [226]

அகில் : மலையில் வளரும்; கரியது; மணம்கொண்டது.

அடுப்பு: பனை வளரும் மருங்கில் வளர்வது.

அல்லி: இது நீர்ப்பூ; இதன் இடையில் வண்டுகள் உறங்கும்.

ஆத்தி: இரவில் தேன் துளிக்கும்.

ஆல்: (கல்லால் - பார்க்க) குளக்கரையில் உள்ள ஆலின்கீழ்க் குயில்கள் பயிலும் - வசிக்கும்.

இலவு: மாதர்களின் வாய் இதழுக்கு ஒப்புக் கூறப் படுவது.

இலை: வழிபாட்டுக்கு அன்பர்கள் உபயோகிப்பார்கள்.

எருக்கு: வெள்ளெருக்கு இறைவன் சூடுவது.

ஏலம்: நறுமணம் உடையது, தேவியின் கூந்தல் "ஏலவார் குழல்" எனப்பட்டது.

ஏனல்: (தினை) மலைச்சாரலில் விளையும்.

கண்டல்: நீர் முள்ளி; இது கடற்கரை கழிக்கரையில் வளரும்.

**கதலி:** 'வாழை' பார்க்க.

**கமலம்:** 'தாமரை' - பார்க்க.

**கமுகு:** இதன் அழகிய பாளை நறுமணம் வீசும்; கமுகம் சோலை கண்குளிரும் காட்சியைத் தரும்; எப்பொழுதும் நீர்பாயக் கமுகு வளரும்; வரிசையாக வளரும்; கமுகு குலைகளைக் கொண்டது.

**கரந்தை:** மணம் உடையது, சிவபிரான் அணிவது.

**கரும்பு - கழை:** இனிப்பு உள்ளது; மன்மதன் வில்லாகக் கொண்டது; கன்னியரின் மொழிக்கு உவமை கூறப்பட்டது; கழனிகளில் வளரும்; குருகுபாயக் கொழுங் கரும்புகள் நெரிந்து சாறுதரும்; செந்நெல் வயல்களின் அருகே கரும்புகள் வளரும்; கரும்பில் முத்து பிறக்கும்; கரும்பின் தேன்போன்ற சாறு கருப்பஞ் சோலையில் மணம் வீசும்.

**கல்லால்:** (ஆல் - பார்க்க) இதன்கீழ் இறைவன் அறம் பகர்ந்தார்; மறை நான்கையும் பகர்ந்தார்.

**கழுநீர்:** நீர்ப்பூ; குளங்களிலும், மடைகளிலும் வளரும். இது மணம் வீசும்போது கயல் மீன், சேல்மீன் தாவிக் குதிக்கும்; செந்நிறத்தது செங்கழுநீர்.

**கழை:** கரும்பு - பார்க்க.

**கள்ளி:** சுடுகின்ற பாலை நிலத்தில் கள்ளி வற்றிப் போகும். கள்ளியின் கிளைக் கொம்புகளில் புறா ஈனும்; ஆண்புறா பெண்புறாவுடன் குலவும்.

**காவி:** நீர்ப்பூ; குளத்திலும் மடையிலும் வளரும்; இந்த மலரில் வண்டுகள் நிறைந்து பண் செய்யும்; தேவியின் கண்ணுக்கு உவமை கூறப்பட்டது.

**குரவு:** இதன் அரும்பு பாம்பின் பல்போல இருக்கும், குரவம் மணம் வீச, குயிலும் வண்டும் பாட, பாம்பு ஆடும். மாதர்களின் கூந்தலில் குராமலர் மணம் வீசும்; கோலக்கா,

கோடி என்னும் தலங்களிற் குரவம் பொழில் இருந்தது. குரவு சிவபிரான் அணிவது.

**குருக்கத்தி:** வெஞ்சமாக்கூடல் என்னும் தலத்தில் குருக்கத்தியின் மீது குயிலின் கூவல் எப்போதும் கேட்டது.

**குருந்து:** இதன் அரும்பு பாம்பின் பற்களை ஒக்கும்.

**குரும்பை:** மாதர்களின் கொங்கைக்கு உவமை கூறப் பட்டது.

**குவளை:** நீர்ப்பூ: கழனியில் கரும்பருகே மலரும்; குளங்களிலும் மடைகளிலும் மலரும்; தேன் நிறைந்த மலர்; மாதர்களின் கண்ணுக்கு உவமை கூறப்படும் மலர். மாதர்கள் பொய்கையிற் குடைந்தாடக் குவளை மலரும்.

**குன்றி:** (குண்டுமணி) சிவபிரான் நிறம் இதன் நிறத் துக்கு உவமை கூறப்பட்டது.

**கூவிளம்:** சிவபிரான் சூடுவது.

**கேதகை:** தாழை பார்க்க.

**கைதை:** ('தாழை' பார்க்க); கடற்கரை மலர். இதன் இடையிடையே வெண் குருகுகள் உலவும்.

**கொடி:** கொடிகளின் இடையிருந்து குயில் கூவும். தேவியின் இடைக்குக் 'கொடி' உவமை கூறப்பட்டது. கொடிகளில் ஏறி வண்டுகள் பண்செய்யும்; பவளம் கொடி யில் படரும்.

**கொன்றை:** (இதழி பார்க்க); நறுமணம் உடையது; கார்காலத்தில் மலர்வது; கொத்தாக மலர்வது; வண்டு—பண் எழுப்பி—மொய்ப்பது; மாலைபோலத் தொங்குவது; தீப்போல ஒளி வீசுவது; தூயது; பொன் நிறத்தது, தேன் நிறைந்தது; மழைக்கு அரும்பு விடுவது; சிவபிரான் அணிவது.

**கோங்கம்:** (கோங்கு) மணம் உடையது; தளிர் விடுவது.

சந்தனம்: மணம் வீசுவது, மலை நிலத்தில் வளர்வது.

சண்பகம்: வண்டு நாடுவது, புதிய பூ மலர்ந்து பகற்பொழுதில் நறுமணம் வீசுவது.

செருந்தி: செம்பொன்போல மலர்வது.

சேர்பு: செங்கழுநீருடன் கிடங்கில் (நீர் நிலையில்) வளரும்.

தாமரை: (அரவிந்தம், கமலம், பங்கயம், புண்டரீகம்). கண்கவரும் அழகைக் கொண்டது தாமரைப் பொய்கை. தாமரையில் அன்னம் வீற்றிருக்கும்; விளையாடும்; உறங்கும்; தாமரை இறைவன் திருவடிக்கு உவமை கூறப்பட்டது; மாதர்களின் முகத்துக்கு ஒப்பு கூறப்பட்டது; குளங்களிலும், மடைகளிலும் மலரும்; கயல்மீன்கள் அதை நெருங்கி நிறையும்; இது நறுமணத்துடன் பள்ளி எழுவது போலக் காலையில் மலரும்; தாமரையை எருமை மேயும்; திருமகள் வீற்றிருக்கும் மலர் - செந்தாமரை; பிரமன் வீற்றிருப்பதும் தாமரையே; தாமரைப் பூக்களின்மேல் வண்டுகள் பள்ளிகொள்ளும்; மகளிர் பொய்கையிற் குடைந்தாடக் குவளையும் தாமரையும் மலரும். செந்தாமரை திருமாலின் கண்களுக்கு உவமை கூறப்படும்; தாமரையின் மதுவை உண்டு வண்டுகள் பண்பாடும்; தாமரையின் தன்மை அது இறைவன் திருமேனி; தாமரை "பெரிய மலர்" எனப்பட்டது [7-52-8].

தாழை: கூட்டமாய் வளரும்; முள் வாய்ந்தது; மொட்டு அலர்ந்து நறுமணம் வீசுவது.

தெங்கு: குலை உள்ளது; தேன் தருவது; நீண்டு வளர்வது; பாளைகளை உடையது; குரங்குகள் தமக்குக் கிடைத்த பங்கு சிறிதென்று ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கூறிக், தென்னம் பாளை கொண்டு சண்டை செய்து தமது வீரத்தைக் காட்டும். தெங்கம் பழங்கள் மண்ணில் விழும்.

தொண்டை: (கொவ்வை) மகளிர் வாய்க்கு உவமை.

**நீலம்:** பொய்கையில், மடைகளில் மலரும் நீர்ப்பூ; அழகும் ஒளியும் கொண்டது; கருமணியின் நிறத்தது; தூயது; அன்னம் பயில்வது.

**நெய்தல்:** நீர்ப்பூ; கழனிகளில் மலரும்.

**நெல்:** கழனிகளில் கரும்பும் நெல்லும் நெருங்கி வளரும்; தழையுடன் கூடியது நெல்.

**நெல்லி:** நெல்லிக் கனியின் அமுது விசேடித்துக் கூறப்பட்டது. "(உள்) அங்கை நெல்லிக்கனி"—தெளிவு காட்டும் ஒரு வழக்குச் சொற்றொடர்.

**நொச்சி:** இதன் பச்சிலை பூசைக்கு உரியது; (இது பஞ்ச வில்வங்களுள் ஒன்று; ஏனையவை வில்வம், மாவிலங்கை, மூட்கிளுவை, விளா).

**பருத்தி:** விதைக்கப்படும்.

**பலா:** (வருக்கை—பார்க்க.) குறுகிய தாள்களை உடையது; தேன் விம்முவது.

**பனை:** ('பெண்ணை' பார்க்க.); நீண்ட மரம்; வன்மை உடையது, பனம்பழம் கடற்கரையில் மணலில் விழும், பனையின் மடல் கருக்கை (கூரிய பற்கள்) உடையது.

**புட்பம்** (பூ, போது, மலர் பார்க்க): *அட்ட புட்பங்கள் கொண்டு சந்திகள்தோறும் வழிபாடு செய்யப்படும்.

**புண்டரிகம்:** ('தாமரை' பார்க்க.)

**புல்:** கானகத்தில் வெயிலில் புல் தீந்துபோம்; மான் இனங்கள் புக்கு ஒளிக்கும் (புனவாயில்).

**புன்னை:** இதன் அரும்பு வெண்முத்துப் போலவும், சங்குமணி போலவும் இருக்கும்; மலர்—பொன் போலவும்,

---

* அட்ட புட்பங்கள்:—புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை.

ஞான பூசை செய்வார்க்கு:—கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு.

பவளம் போலவும் மிளிரும்; வளைந்த கால் உடைமையின் 'முடப்புன்னை' எனப்பட்டது.

பூ: (புட்பம், போது, மலர் பார்க்க). *தாமரை— 'பூ' என்றே குறிக்கப்பட்டது. 'பூ'மேல் திருமாமகள்' என வந்துள்ளது [7-41-4].

பெண்ணை: பனை—பார்க்க. †'அடும்பு' மருங்கில் வளரும்.

பெருமரம்: ஒருவகை மரம்.

போது: 'மலர்' பார்க்க.

மகிழ்: மகிழம்பூ மணம் வீசும்.

மந்தம்: சிவபிரான் சூடுவது; தேன் உடையது; குளிர்ச்சி கொண்டது.

மரவம்: (வெண்கடம்பு) மறைக்காட்டில் (வேதாரணியத்தில்) இருந்தது.

மல்லிகை: (பகலில்) மணம் கமழ்வது.

மலர்: வண்டு மொய்ப்பது; கண்ணுக்கு உவமை கூறப்படுவது; வழிபாட்டுக்கு உரியது; தாமரை—'பெரிய மலர்' எனப்பட்டது. நீர்ப்பூ, நிலப்பூ—கூறப்பட்டுள; கொன்றை, செருந்தி, புன்னை, வேங்கை—இவை பொன் போல் மலரும். காமனுடைய பாணங்கள்—மலர்கள் ஐந்து.

மா: மாம்பொழில் எரிவீசும் (மாந்தளிர்கள் எரி நிறத்த ஆதலின்); மாதர் கண்ணுக்கு மாவடு உவமை கூறப்பட்டது.

மாதவி: குளிர்ந்த மலர்; வண்டுகள் மொய்ப்பது; மலரில் தேன் அவிழும்.

---

* 'பூ எனப்படுவது பொறிவாழ் பூவே'—பொறி - இலக்குமி - நான்மணிமாலை.

† அடும்பு. அடம்பு - கொடிவகை.

மிளகு: கறிமிளகு எனப்பட்டது; கறிக்குப் பயன் படுவது; சிறு மிளகு, பெரிய மிளகு—என வகுப்பர்.

முண்டல்: முண்டகம்—இது கழிமுள்ளி, கடற் பாங்கில் உள்ளது.

முருக்கு: செந்நிறத்த இதன்மலர் சிவபிரான் திரு மேனிக்கு ஒப்பு கூறப்பட்டது.

முல்லை: முல்லை மாலைக்கு உரியவர் அமர்நீதி நாயனர் என்றதனால் அவர் வணிகர் என்பது பெறப்பட்டது. கொடி முல்லை கூறப்பட்டுளது; முல்லை நறுமணம் உடையது; திரு முருகன் பூண்டியில் மலர்ந்திருந்தது; மகளிர் பல்லுக்கு முல்லை உவமை கூறப்பட்டது.

வஞ்சி: வஞ்சி—மகளிர் இடைக்கு உவமை கூறப் பட்டது.

வருக்கை: 'பலா' பார்க்க.

வள்ளை: இதன் மலர் வெள்ளை நிறம் கொண்டது, இந்த வள்ளை மலரைக் குருகு எனப் பயந்து சள்ளை மீன் கலக்கம் கொண்டு துள்ளி ஓடி வாளை மீனின் வாயில் விழும்.

வன்னி: சிவபிரான் சூடுவது.

வாழை: வாழைப் பழத்தைக் கிளிகள் கீறி உண்ணும்; குரங்குகளும் உண்ணும்; மருகல் என்னும் தலத்தில் வாழைகள் வளர்ந்து காய்த்தன; குரங்குகள் தமக்குக் கிடைத்த பங்கு சிறிதெனக் கூச்சலிட்டு வாழைத்தண்டு கொண்டு ஒன்றோடொன்று சண்டை செய்து அகங்கரிக்கும் (திருவாஞ்சியம் என்னும் தலத்தில்); வாழைப் பழங்கள் தேன் சொரியும் (கருப்பறியலூர் என்னும் தலத்தில்).

வேங்கை: தளிர் தரும், மலர் பொன்னிறத்தது.

வேய்: மழையால் நன்கு நீண்டு வளர்ந்த மூங்கில்கள் (குழைக்கு) காதணிக்கு உபயோகப்படக்கூடிய முத்துக் களைச் சொரியும். மூங்கில் மலைகளில் வளரும், ஒளிவீசும்

முத்துக்களை உதிர்க்கும்; பழைய (முதிர்ந்த) மூங்கில் முழவு வாத்தியத்துக்கு உபயோகப்படும்.

(ii) கடற்கரை மரங்கள், செடிகள்

கண்டல் (நீர் முள்ளி), ஞாழல் (புலிநகக் கொன்றை), தமாலம் (ஒரு வாசனை மரம்), தாழை, தெங்கு, பனை.

## 209. மலை [227]

பொதியமலை—(அகத்தியர் இருப்பிடம்); கயிலை—(அழகு விளங்குவது); இமயமலை, பொன்மலை, மாணிக்க மலை, பவளமலை, கருமலை, குமணமாமலை (விகாரமான மலை அல்லது குமணனுடைய மலை)—கூறப்பட்டுள.

## 210. மழை, மேகம், மின், இடி [228]

ஏற்றின் (குரலுக்கும்), கூற்றத்துக்கும் இடி ஒப்பிடப்பட்டுளது; சிவபிரானுடைய கண்டம் கரிய மேகத்துக்கு ஒப்பிடப்பட்டுள்ளது; மாதர் இடைக்கும் சிவபிரானது செஞ்சடைக்கும் மின் ஒப்பிடப்பட்டுள்ளது; மாடங்களின் மீதும், பொழில்களின் மீதும், மலைமீதும் மேகங்கள் படியும்; மேகங்களின் இடையே மதி (நிலவு) விளங்கும்; மழை பெய்ய அருவிகள் பாயும்; 'வெண்முகில்' என்பது பெருமழை பெய்வது; மழைக்குக் கொன்றை அரும்பு விடும்; மழைபெய்ய வெள்ளம் பரவும்; தளிர்விடும் பயிர்க்கு உதவும் மேகத்தை நிகர்ப்பர் சிவபெருமான்.

## 211. மறை, வேதம், அங்கம் [229]

சிவனும் மறையும், சிவனும் வேதமும், சிவனும் அங்கமும்—என்னும் தலைப்பு 122-ம் பார்க்க.

அந்தணர்கள் எரி ஓம்பி மறை வளர்த்தனர்; அருமா மறை, 'ஞாலம் பரவப்படும் நான்மறை, (ஆறு) அங்கம்' என மறையும், அங்கமும் குறிக்கப்பட்டுள. வேத ஒலி,

வேத கீதங்கள்; இருக்குவாய் அந்தணர்கள்—என வேதமும் குறிக்கப்பட்டுளது.

## 212. மறையவர் [230]

ஆறங்கம், மறை நான்கு, வேள்விகள்—இவை பயின்றிருந்த அந்தணர்கள் எரி மூன்றும் ஓம்பும் இடம்—திருநனிபள்ளி.

கலியின் வலம்கெட, கற்ற நான்மறை விதிப்படி, அழல் ஓம்பப்படும் தலம் வலிவலம்.

கலியைக் கடியவல்ல அந்தணர்கள் செய்கின்ற ஓமப் புகையால் மேகக் கூட்டங்கள் பரந்துள்ளன போன்ற அழகு விளங்கும் தலம் கலயநல்லூர்.

கற்பாரும் கேட்பாருமாய் நிறைந்து கலை பயில்கின்ற அந்தணர்கள் வாழும் தலம் கலயநல்லூர்.

இருக்குமறை ஓதும் அந்தணர்கள் வேள்வி இயற்றிப் பெருநிதிகளை வழங்கும் நகர் கானாட்டுமுள்ளூர்.

திருவிளங்கும் செல்வத்தராய்த் தீ மூன்றும் வளர்த்த திருத்தக்க அந்தணர்கள் ஓதும் நகர் கானாட்டுமுள்ளூர்.

அந்தணர்கள் வாழும் ஊர் தில்லை.

நீதி வேதியர் நிறைபுகழ் கொண்ட உலகில் வாழும் இடம் திருநின்றியூர்.

நீங்குதற்கரிய வல்வினைகள் விலகி ஒழிய வேண்டிப், பாடியும் ஆடியும் சிவனுக்குக் குற்றேவல் ஒழியாது செய்து எப்போதும் வேதம் ஓதும் நாவினர் வாழும் இடம் கருப்பறியலூர்.

பொய்யர்த வாய்மையுடன் திருநீறணிந்து போற்றிசைத்துப் பூசை செய்து, எரி ஓம்பி, மறை வளர்க்கும் அந்தணர்கள் வாழும் ஊர் கருப்பறியலூர்.

தவறாது நாள்தோறும் நீர்மூழ்கிப் பூப்பறித்து மூன்று போதும் இண்டை கட்டி இறைவன் திருவடியிற் சேர்ப்பிக்கும் அந்தணர்கள் வாழும் ஊர் கருப்பறியலூர்.

வேத வேதியர், வேத நீதியர் ஓது திருப்பதி, நான்மறை தெரிந்த மறையோர் நிறைந்த ஊர்—திருவீழிமிழலை.

நிறைந்த சொல்லும் பொருளும் தெரிந்த மறையோர் விளங்கின ஊர்—நறையூர்.

அந்தணர்கள்-நாட்டகத்தேவர் (பூசுரர்) எனப்படுவார்; (அநுட்டானத்தின்போது) அவர்கள் கிழக்கே சலம்விடுபவர்கள்; குறையாத மறை நாவினர்; (நிரம்ப மறை ஓதுபவர் என்றபடி). அவர் தூய நெய்கொண்டு குண்டத்தில் எப்போதும் எரிவளர்த்தோம்பி மறை பயில்பவர். வேதப்புரவித் தேர்மிசைத் திரிபவர் (வேத நாவினர் என்றபடி).

## 213. மாதர்கள் [231]

### 1. குறிக்கும் சொற்கள்

கன்னியர், காரிகை, கோதைமார், தையலார், நல்லார், பாவையர், பெண், பெண்டிர், பெண்டுகள், மங்கைமார், மடந்தையர், மடவார், மாது-இவை பெண்களைக் குறிக்கும் சொற்களாக வந்துள்ளன.

### 2. மாதர்களின் அவயவ வர்ணனை முதலிய:

அடி: பஞ்சு.

அல்குல்: கலை (துகில்) பூண்டது, பரந்துள்ளது, அரவின் பை போன்றது.

இடை: அழகியது, நுண்ணியது, வளைவுள்ளது, மின் போன்றது, வஞ்சிக்கொடி போன்றது.

கண்: கயல்மீன், குவளை மலர், சேல்மீன், மான், வாள், வேல் போன்றது, அழகுள்ளது, விசாலமானது, குளிர்ச்சியுள்ளது, மை பூசியது, கூர்மையுள்ளது.

சூழல்: கருநிறத்தது, குராமலர் சூடியுள்ளது, நறுமணம் உள்ளது, நெருக்கம் உள்ளது, வட்ட வடிவினது, நீண்டுள்ளது, திரண்டுள்ளது, சுருண்டுள்ளது, நெய்ப்புக் கொண்டது.

கை: வளையல் அணிந்தது.

தோள்: மூங்கிலை ஒக்கும்.

நுதல்: பிறை போன்றது; ஒளி கூடியது.

பல்: வெண்ணிறத்தது.

முகம்: தாமரை போன்றது.

முலை: அழகு, இளமை, பருமை கொண்டது; குரும்பை (தென்னங் குரும்பை-இளநீர்), சிமிழ் போன்றது, பால் நலம் கொண்டது.

மொழி: அழகும், ஊடல் இனிமையும், தூய்மையும் கொண்டது; கரும்புபோல் இனிப்புள்ளது; இசை நிரம்பியது; நாகணவாய்ப்புள், கிளி - இவைகளின் பேச்சுப்போல் இனியது; கபடின்மை காட்டுவது.

வாய்: அழகியது; பவளம்-கொவ்வைக் கனி-போலச் சிவந்தது.

சாயல்: மயில்போலச் சாயல்.

உருவம்: அழகு: இலக்குமி போன்ற அழகு; மான் கன்றுபோல உருவம்.

## 3. மாதர்களின் பழக்கவழக்கங்கள்

(1) ஆடல்

திருக்கோயிலில் மாதர்கள் பாடலுடன் நடனம் ஆடுவர்; அப்போது முழவும், குழலும் ஒலிக்கும்; குழலும் முழவும் ஒலிக்க அரங்கிலும் ஆடுவர். அவர்கள் ஆடின தலங்களாகத் துறையூர், நாகை, பாச்சிலாச்சிராமம் (திருவாசி), வடதிரு முல்லைவாயில், வெஞ்சமாக் கூடல் -

கூறப்பட்டுள. திருவீழிமிழலையில் வான் அரமகளிர் வந்து ஆடினர்.

(2) நீராடல்

ஆற்றிலும், பொய்கையிலும், குளத்திலும், மடுவிலும், மாதர்கள் நீரிற் குடைந்தாடுவர்; ஆறு—காவிரி, கொள்ளிடம் கூறப்பட்டுள.

மடு-குளம்-பொய்கை: கலய நல்லூரிலுள்ள தாமரைப் பொய்கையும், திருச்சுழியலில் உள்ள கௌவைக் கடல் என்னும் திருக்குளமும், திருநறையூரில் உள்ள மடுவும் சொல்லப்பட்டுள.

(3) உறைவிடம்

மாடமாளிகைகள் (திருநின்றியூரில்).

(4) காதலர்ப் பிரிவு

இதனால் ஆடை சோரும், வளைகள் கழலும், கொங்கைகள் பீர் நிறம் (பசலை) கொள்ளும்; காமத்தீ நன்று மெய்யை உருக்கும்.

(5) தொழில், விளையாட்டு, வழிபாடு முதலிய

மாதர்கள் பந்தாடுவர்; கிளியுடன் பழகுவர்; மரப்பட்டை கொண்டு தாயம் (சூது) ஆடுவர்; திருக்கோயிலில் ஆடல்செய்து வழிபாடு புரிவர்; கூந்தலில் மலர் சூடுவர்; படுக்கை அறைக்கு நறுமணப் புகை ஊட்டுவர்; கவண் வீசிக் குருவி, கிளி ஓட்டிப் புனம் காவல் புரிவர்; வீட்டில் குருடாயுள்ளவர் எதற்கேனும் அழைத்தால், "போ! குருடா! அழையேல்" எனப் பழிப்பர்.

## 214. மாலை வகைகள் [232]

அலங்கல், ஆரம், இண்டை, கண்ணி, தார், தெரியல், மாலை, வாசிகை - இவை மாலை வகைகளைக் குறிப்பன.

## 215. முகஸ்துதி [233]

சுந்தரர் காலத்தில் செல்வர்களிடம் புலவர்கள்
பொருள் வேண்டி முகஸ்துதிசெய்த வகைகள்

1. ஓர் எள் கீழே விழுந்தாலும் அது எங்கே என்று தேடிப் பார்க்கும் இயல்புடையாரையும், ஈக்குக்கூட (ஒரு சிறிதளவு உணவு) கொடுக்க மனமில்லாதவரையும் 'வள்ளலே,' 'மைந்தனே' எனத் துதித்தல்.

2. கல்லாத மூடனைக் கற்று நல்லன் எனத் துதித்தல்.

3. நிலம் பெரிதுடையவன், காமதேவனை ஒப்பவன் நீ என்று போற்றுதல்.

4. குலமிலாதவனைக் குலவன் என்று சிறப்பித்தல்.

5. கொடுக்கிலாதானைப் பாரி வள்ளல் நீ என்று பாராட்டுதல்.

6. சுற்றத்தாரைப் பேணுபவன், விருந்து ஓம்புபவன் நீ எனப் புகழ்தல்.

7. பெண்களுக்கு நீ ஒரு காமதேவன், மிக்க அழகன், முருகன் என வியந்து கூறுதல்.

8. கிழவனை நீ இளைஞன் என்றும், மெய்தளர்ந்து நடுங்கும் கிழவனை நீ மலைபோலும் தோளை உடையவன் என்றும் பாராட்டுதல்.

9. நல்ல குணமில்லாதவனை நல்லன் என்று புகழ்தல்.

10. அற்பனை நீ புலவர்க்குச் சிறந்த தாய் என விசேடித்துக் கூறுதல்.

11. நோயாளியை நீ புஜபலம் உடையவன் எனச் சிறப்பித்துக் கூறுதல்.

12. வலிமையிலாதவனை நீ பீமன், நீ விஜயன் என உயர்த்திக் கூறுதல்.

13. முழுதும் இலாதவனை முழுதும் உடையாய் நீ எனப் புகழ்தல்.

14. வஞ்ச நெஞ்சனைத், தீயனைப், பாவியை, நீதியிலா தவனைப், பஞ்சமா பாதகனைச், 'சாது' என்று சிறப்பித்தல்;

[இங்ஙனம் எல்லாம் உயர்த்திப் பாடினாலும் கொடுப்பாரில்லை, ஆதலால் புகலூர் இறைவனைப் பாடுவீர்களாக, புலவர்களே! உங்களுக்கு உண்ண உணவும், உடுக்கத் துகிலும் இப் பிறப்பிலேயே கிடைக்கும், மறுபிறப்பிற் சிவலோகம் ஆளலாம் எனப் புலவர்களை எச்சரிக்கின்றார்-சுந்தரர். தாம் யாரையும் முகஸ்துதி கூறுவதில்லை என்றும் கூறுகின்றார் சுந்தரர்.]

## 216. முநிவர், பெரியோர் [134, 234]

### (i) பொது

1. முநிவர்களுள்—அருந்தவத்தினர்; குற்றம் அற்றவர்; மந்திரம் அறிந்தவர், முழுநீறு பூசியவர்; சனகாதி நால்வர்—போர்த்த நீள் செவியர்—கூறப்பட்டுளர்.

2. அருந்தவத்தினரும்,குற்றம் அற்றவரும்,போர்த்த நீள் செவியாளரும் ஆகிய(சனகாதி நால்வராம்)அந்தணர்க்கு ஆலின் நிழற்கீழ்ப் பெருமான் அறம் உரைத்தார்.

2. முநிவர்கள் வணங்கி ஏத்தப், பெருமான் அவரவர் வேண்டியதை அருள் செய்தார். பெருமான் 'முநிகள் முநியே' என்று அழைக்கப்பட்டுள்ளார் [7-4-5].

### (ii) சிறப்பு

(1) அகத்தியர்

காலை, உச்சி, மாலை மூன்று சந்திகளிலும் (இலிங்க) உருவம் அமைத்துப் பூசித்த அகத்தியருக்குப் பொதிய மலையில் இருக்கை தந்தார் பெருமான்.

(2) பரசுராமன்

முந்நூறு வேதியர்களுடன் முந்நூற்றறுபது வேலி நிலத்தை—அதற்குத் தக்க பொன்மணிக் கலசங்கள் ஏந்தி—

நின்றியூர் என்னும் தலத்தைப் பெருமானுக்கென்று அளித்துப் பத்தி செய்த அந்தப் பரசுராமற்குத் திருவடி தரிசனம் தந்த கிருபையாளர் சிவபிரான்.

(3) மார்க்கண்டேயர்

நிரம்பு பல்கலையின் பொருளாலே போற்றி, நறுமலர் கொண்டு பூசித்து வணங்கித் தஞ்சமென்று தம்பால் அடைக்கலம் புகுந்த அந்தணாளன் (மார்க்கண்டேயரின்) உயிரைப் பகைத்துப் போக்க வந்த காலனை உருண்டோட உதைத்து அவன் உயிரை மாய்த்தார் பெருமான்.

(iii) முனிவரும் சிவனும் (தலைப்பு 122-ஏ பார்க்க)

[சிவபிரான் அறம் உரைத்தது என்னும் தலைப்பு 62-ம் பார்க்க]

எந்த எந்த முனிவர்கள் யாது யாது வேண்டினரோ அந்த அந்த முனிவர்களுக்கு அவரவர் வேண்டினதைப் பிரான் அருள் செய்வார்; அவர் முனிவர்களுக்கு முனிவர். முனிவர்களெல்லாம் அவரை வணங்கித் தொழுவார்கள்.

## 217. முயலகன் [235]

முயலகனை "மூடாய முயலகன்" என்றார்; அதனால் மூடுதலைச் செய்யும் ஆணவமலத்தை 'முயலகன்' குறிப்பதாகும்; கூத்தப்பிரானுடைய திருஉருவத் தத்துவத்தில், (முயலகனை) ஆணவத்தை அது சாயும்படி பெருமான் தமது ஊன்று மலர்ப்பதத்தால் அமுக்கி அழுத்துகின்றார்.

## 218. முருகவேள் [236]

[தலைப்பு 141-ம் பார்க்க]

இவரைச் சிவபிரானுடைய 'பிள்ளை', 'பொருள்', 'சிறுவன்', 'மகனார்' என மனநெகிழ்ந்து கூறுவர் சுந்தரர்: இவர் அங்கையில் வேலைஉடையவர்; தேவசேனபதி; மயில்வாகனத்தையும் யானைவாகனத்தையும் உடையவர்; தாரகாசுரனைச் சங்கரித்தவர்; கடலிலிருந்த 'சூர்மாவைச்

சாய்த்தவர்; இவர் தாய் மலைமகள்; இவர் தந்தை சிவபிரான்; இவர் மனைவி குறவர் மகள்; இவர் சிவபிரானை வணங்குவர்.

2. இவர் திருநாமங்களாவன: குமரன், செட்டி, சேந்தன், மயிலூர்தி, முருகவேள், வேலன்.

3. குறவர் மங்கை, குறவர் மகள்—என வள்ளி குறிப்பிடப்பட்டுள்ளாள்.

## 219. யாக்கை, மூப்பு, வாழ்க்கை [237]

['பிறப்பு' என்னும் தலைப்பு 200-ம் பார்க்க]

(1) யாக்கை

உதிரம், இறைச்சியுடன் கூடிய ஒரு மாயக்கூரை, மாயப் போர்வை இந்த உடல். இது தொண்ணூற்றாறு தத்துவங்களுடன் கூடியது; நரம்பு, எலும்பு இவைகளாற் கட்டப்பட்டது; பாவத்துக்கு இடம் தருவது; பசி, பிணி, நரை, மூப்பு இவைகளுக்கு இடம் தருவது; கிழிபட்ட பறை போன்றது; உயிர் போனபின் நரி கீறுவதற்கு உரித்தானது; ஒரு நெல்லின்வால் ஊன்றினும் துன்பம் தருவது, பொய்த் தன்மையது, ஓட்டைகளுடன் கூடியது.

(2) மூப்பு

நரை வரும்; மெய் தளரும்; உடல் நடுங்கும்; நரம்புகள் நொறுங்கும்; உரை தளரும்.

(3) வாழ்க்கை

ஓடும் நீரின் கரைபோன்றது இளமை; வாழ்வானது—கவையற்ற பேதை வாழ்வு; நிலையிலாதது; சூரியனைக் கண்ட புல்நுனைப் பனி போன்றது வாழ்க்கை; மணக்கோலமே பிணக்கோலமாம் தகைமையது; மடந்தையர் தம்பால் மயல் தருவது; வஞ்சனைகளுக்கு இடமாயது; வீடு கட்டினர், [illegible]வினர், உடுத்தனர், நரைத்தனர், இறந்தனர் என [illegible]ளினர் கூறுவது; இந்த வாழ்வானது மாயம்; இது மண்ணாவது திண்ணம்; ஆதலால் மானுடப்பிறவி வாழ்வு வேண்டாம்

என்று இறைவனது சேவடியைச் சேர உணரும் வாழ்க்கையை அறிதல் வேண்டும்; இன்பம் உண்டேல் கூடவே துன்பம் உண்டு; தோற்றம் உண்டேல் மரணம் உண்டு; மாயப்போர்வையான இவ்வுடலை மெய்யென்று எண்ணும் வேடிக்கை வாழ்வு நமது வாழ்வு; இதை விரும்புதல் வேண்டாம்; மணம் என்று முன்னே மகிழ்வர்; பிணம் என்று பின்னே சுடுவர்; மானுடப் பிறவி வாழ்வு வேண்டாம்; நமது உயிர் வெய்ய வினைக்கடலில் தடுமாறுகின்றது; வேந்தராய் உலகினை ஆண்டவரும் துயர்க்கு ஆளாகி இறந்துபடும் பொய்வாழ்வு இது. படைகளுடன் பிரமாதமாய் ஆண்டாலும் ஈற்றில் தேரைவால் போல் வாழ்வு தேய்ந்துபோய் மறையும்.

## 220. யோகம் [238]

['சுந்தரரும் யோகமும்—' என்னும் தலைப்பு 142-ம்பார்க்க.]

1. தமது யோக நிலையை அழிக்க வந்த காமனைப் பெருமான் திருக்கண் விழித்துப் பொடியாக்கினர்.

2. சுந்தரர் யோகநிலையில் இருந்து பெருமானை எப்போதும் நாடினர்.

## 221. ராவணன்—ராவணனும் சிவனும் [239]

அரக்கன், இலங்கைக் கிறை, இலங்கைக் கோன், இலங்கை வேந்தன், இராவணன்—என ராவணன் குறிப்பிடப்பட்டுள்ளான். இவன் கரியமலை போன்ற உருவினன்; இவனுக்குக் கைகள் இருபது, தலை பத்து, பெருந்தோள்கள் இருபது, முடி பத்து, வாய் பத்து—என விளக்கப் பட்டுள்ளது. தனது தேர் ஓடுவதற்காகக் கயிலைமலையைப், பெருமான்மலை ஆயிற்றே இது என்று கருதாது, தனது மிடுக்கினால் எடுத்தான். வன்மையும், குற்றத்துக்கு இடம் தந்த திறலும், துன்மதியும் வாய்ந்த ராவணன் கயிலையை எடுத்த சமயத்தில், தேவி (பார்வதி) பெருமானுடன் மிகவும்

வாடியிருந்தாள்; மலை அசையவே தேவி அஞ்சினள்—(காணியாத ஊடல் தணிந்து பெருமானை அணைந்தனள்.)

தேவி அஞ்சுதலைக் கண்ட பெருமான், புன்னகை பூண்டு, ராவணனுடைய நீண்முடி பத்தும், தோள்கள் இருபதும் நெரிந்துபோம்படி தமது கால்விரல் ஒன்றை ஊன்றினார். நசுக்குண்ட ராவணன் பேயறைந்தாற்போலப் பேதுற்றான்; கலங்கினான்.

மெய்யும் வழிநாடிக், கைந்நரம்பு கொண்டு, பக்திப் பாடல்களை; வேதகீதங்களைத் திவ்யமான இன்னிசை கூட்டிப் பாடினான்; இன்னிசை கேட்டு மகிழ்ந்த பெருமான் இரக்கம் பூண்டு ராவணனுக்கு நாளும், வாளும், தேரும், பேரும் கொடுத்தருளினார்.

## 222. லோபிகளின் தன்மை [240]

[முகஸ்துதி என்னும் தலைப்பு 215-ம் பார்க்க]

தம்மைப் புகழ்ந்து விரும்பத்தக்க முகஸ்துதிகள் எவ்வளவு கூறினும் கொடுப்பார் இல்லை.

## 223. வயல்—கழனி [241]

வயல்—கழனிகளில்—அருவிகள் பாயும்; அன்னம் வீற்றிருக்கும்; நீர் மல்கும்; சங்குகள் கிடக்கும்; லக்ஷ்மீகரம் விளங்கும்; கழுநீர், காவி, குவளை, தாமரை, நீலம், நெய்தல் மலரும்; சேறு நிறைந்திருக்கும்; செந்நெல், பெருஞ் சாந்நெல், கரும்புகள் வளரும்; குருகுகள் பாயக், கரும்புகள் நெரிந்து சாறு பாயும்; குரங்குகள் குதிகொள்வதால் மலர்த்தேன் உகும்; நண்டுகள் விளையாடும்; கயல், கெண்டை, சேல், மலங்கு, வரால், வாளை ஆதிய மீன் வகைகள் உலவும்; விளையாடும்; குவளை களையப்படும்.

கரிய எருமைகள் செந்தாமரையை மேயும்; வயல்களில் அவை படிவதனால் சேலும், வாளையும் பாய்ந்தோடும்; பசுக் கூட்டங்கள் திடீரென்று இடிக்குரல் காட்ட அதற்கு அஞ்சி

வாளைகள் ஓடும்; கயல்மீன்கள் தாமரையின்கீழ் ஒதுங்கும். வயல்கள் வஞ்சியாது விளைவுதரும்; பொன்போன்ற விளைவைத் தரும்; தண்ணென்று குளிர்ந்திருக்கும்; கடற்கரையிலும் வயல்கள் இருந்தன; வயலருகே தாழை, மல்லிகை, சண்பகம் மலர்ந்திருந்தன; (நெற்) களங்கள், ஆலைகள் பொலிவுற்றன.

## 224. வர்ணனைகள் [242]

(1) எருமை

எருமைகள் திரளாய்க் குளத்திற் படிய, சேலும், வாளையும் அருகில் உள்ள வயலிற் பாயும்.

(2) கடல்

1. கடற்கரை மணலில் தெங்கின் பழமும் பனம்பழமும் விழும்; சங்குகள், சிப்பிகள், வலம்புரிகள் தள்ளுண்ண, உயர்ந்த பாய்மரங்கள் உள்ள கப்பல்கள் அணுகும் தலம் மறைக்காடு (வேதாரணியம்).

2. மணிகளும், சுறுமீனும் அலைகளால் தள்ளப்பட்டு வரும் தலம் மறைக்காடு.

3. கடற்கழியருகே மணம்வீசும் தாழையின் மடலில் வெண்குருகு அமரும் தலம் மறைக்காடு.

4 வலம்புரி, சலஞ்சலம் எனப்படும் உயரிய சங்கங்கள் கரையில் ஒதுக்கப்படும் தலம் மறைக்காடு.

5. தகரம், தாழை, ஞாழல் இவைகளின் கூட்டத்தின் இடையே முத்து, பவளம், மகரமீன், சுறுமீன் இவைகளைக் கடல் அலைகள் ஒதுக்கும் தலம் மறைக்காடு.

(3) கழனி [(பழனம்) வயல் பார்க்க]

1. தாமரை மலர்மேல் அன்னங்கள் விளையாடும்; பெருஞ்செந்நெல் கரும்புபோல உயர்ந்து நெருங்கி விளையும் கழனி(யைக் கொண்டது) காட்டுமுள்ளூர்.

2. நாரையும், குருகும் ஒருபுறம் ஒலிசெய்யக் கெண்டைமீன் கரைப்புறம் விளங்க, கயல்மீன் துள்ளி விளையாட, காவி (குவளை) மலரிலிருந்து வண்டு பண் செய்யக் கழனிகள் விளங்கும் காறைட்டுமுள்ளூர்.

(4) கன்றுகள்

கன்றுகளின் கூட்டம் கரும்பின் முளைகளைக் கடித்து உண்ணப், பசுக்கள் கழுநீர்ப்பூவைக் கவரும் கழனிகளைக் கொண்டது கலயநல்லூர்.

(5) காவிரி ['ஆறு' என்னும் தலைப்பு 14-ம் பார்க்க]

(6) குரங்குகள்

1. குட்டைக் குரங்குகள் தாழைப் பொழிலுக்குள் சென்று இடைவெளியில் நுழைந்து வாழைப் பழங்களை உண்ணும் (மறைக்காடு).

2. (கடுவன்) ஆண்குரங்கு உண்ண (மந்தி) பெண் குரங்கு மலைப்புறத்தில் முந்திச்சென்று தமது திருவடியைத் தொழநின்றார் முதுகுன்றர் (விருத்தாசலத்து ஈசர்).

3. கடுவன் (ஆண்குரங்கு) உண்ணப் பழங்களைத் தேடச் சென்ற மந்தி (பெண் குரங்கு) மலைப்புறத்திற் காலையும் மாலையும் தவறாது பூவும் நீரும் கொண்டு வழிபாடு செய்ய அதன் புத்தியில் விளங்குவார் இறைவர்.

4. வாழைப்பழம், தேன் நிறைந்த பலாச்சுளை — இவைகளை உண்ணப் பங்குசெய்தபோது தத்தமக்குக் கிடைத்த கூறு (பங்கு) சிறிது என்று குரங்குகள் ஒன்றுக் கொன்று சீறித் தாழைத்தண்டு, வாழைத்தண்டுகளைக் கொண்டு தம்முட் போரிட்டு வீறும் (திருவாஞ்சியம்).

(7) குவளையும் கமலமும்

பொழிலின் அருகில் கரும்பின் அண்மையில் கருங் குவளை மூடிக்கிடக்கத் தாமரை மலரும் (கலயநல்லூர்).

(8) சோலை [பொழில் பார்க்க.]

1. மாதர்கள் நாடுவதும், அருகில் உள்ள கிடங்கில் நீலோற்பலம் கண்வளர்வதும், நல்ல வாழை வனம் பொலிந்து விளங்குவதுமாய்த் திகழும் சோலையைக் கொண்டது காணாட்டுமுள்ளூர்.

2. பாளைக்கமுகு, இளந்தெங்கு இவைகள் தரும் கொழுந் தேனைப் பருகி வண்டு பாட, மயில் ஆடல் புரியும் சோலை(யைக் கொண்டது காணாட்டுமுள்ளூர்).

3. நீர்நிலையிற் கழுநீர் மலர, பக்கங்களிற் கரும்பின் தேன் வழிய, எங்கும் நறுமணம் வீசும் சோலை (விளங்கும் புறம்பயம்).

(9) திருப்பருப்பதம்

[தல வர்ணனை—'தலம்' என்னும் தலைப்பு 148-67 பார்க்க.]

(10) நண்டு

இளவாளைகள் பாயும் வயலில் உள்ள தாமரைப்பூவின் மேல் புள்ளி வாய்ந்த நண்டுகள் பள்ளிகொள்ளும் (புறம் பயம்).

(11) பரன்

நீர், தீ, முதலான பூதங்கள் ஐந்தாய்; நாளை, இன்று, நேற்று ஆகி; ஆகாயம், ஞாயிறு, திங்கள் ஆகி நிற்கின்றார் பரனார்.

(12) பழனம் [கழனி, வயல் பார்க்க.]

தழைமிக்க செந்நெலின் அயலில் முத்துக்களைச் சொரியும் கரும்புகள் வளரும் கிடங்கின் அருகில் உள்ள மூங்கில்களில் தேன்கூடு காணப்படும் கழனி—வயல்கள்.

(13) பாலாறு

சந்தன வேர்கள், அகில் துண்டுகள், மயில் பீலிகள், யானைத் தந்தங்கள், முத்துக் குவியல்கள், பவளக்கொடிகள் இவைகளை அடித்துக்கொண்டு வருவது பாலாறு.

(14) பாலை நிலம்

கள்ளிச்செடி வற்றிப்போய், புல் தீந்துபோய் நிற்கும் கானத்தை (காட்டை) விட்டு மானினங்கள் (வேற்றிடம்) போய்ப் புக்கு மறையும்.

(15) பிடி—ஆனை

1. ஆண் ஆனையின் கூட்டங்கள் பெண்யானைகளின் [illegible] சென்று திரிவதைக் கண்டு, அவைகளின் கூடப் போகமுடியாது தான் நின்ற இடத்திலேயே வருந்தி இருக்க தேடி வந்த பெண்யானை ஒன்றின் நிலையைக் கண்டு இரக்கங் கொண்ட நற்குண வேடர்கள் இலைகளால் தொன்னைசெய்து அதில் தேனைப் பிழிந்து அந்தப் பெண் யானைக்கு ஊட்டுவர் (திருப்பருப்பதம்—ஸ்ரீசைல மலையில்).

2. மலைச்சாரல், பொழிற்சாரல் ஆகிய இடங்களில் யானைக் கூட்டங்கள் திரியும்; அப்போது மலைப்பக்கங்களிற் கன்றுகளுக்குப் பெண்யானை பாலை ஊட்ட, அங்குப் பிரிந்த ஆண்யானையைக் காணாது (பெண்யானை) வருந்தித் (தனது) ஆண்யானையை அழைத்தோடிப் பிளிறித் தேடுகின்ற திருப்பருப்பதமலை.

3. தனக்குச் சொந்தமான பெண்யானை வேறொரு ஆண்யானையுடன் சென்றது என்று எண்ணி ஒரு மதங் கொண்ட ஆண்யானையானது மிகக் கோபித்து, முகம் சிவந்து மதத்தைப் பொழிய, அதைக்கண்ட அந்தப் பெண் யானை இங்ஙனம் என்னைத் தூற்றி இழிவுபடுத்துவதை என்னால் பொறுக்கமுடியவில்லை என்று கூறி அயலில் உள்ளவர் தன் கற்பை அறியும்படி பிரமாணம் செய்கின்ற மலை திருப்பருப்பதம்.

4. மூங்கில் முளைகளைப் பெண்யானைக்கு உபசாரம் பண்ணிக்கொடுத்தும், முதிர்ந்த மூங்கில்களை ஒடித்தும், ஆண்யானைக் கூட்டங்கள் சுனைநீர்களை மொண்டு மழை [illegible]த்துப் பொழியும் (கேதாரம்).

(16) புறு

பாலைநிலத்தில் தோன்றிய கள்ளிச்செடியின் நீண்ட (கவர்கொம்பு) கிளையில் ஏறி ஆண்புறு தனது பேடையைக் கூவி அழைக்கும் (புனவாயில்).

(17) புனம் காத்தல்

1. ஏ! கிளிகளே! அப்போது நான் அழையாமலே வந்து கதிர்களை உண்டீர்; நானும் உங்களை ஓட்டாது இருந்தேன். இதுவே தொழிலாக இப்போதும் வந்துள்ளீர் என்று கூறி ஓடிக் கிளிகளைக் கவண்கொண்டு எறிந்தனள் காவல் செய்யும் பெண் (திருப்பருப்பத மலையில்).

2. காவல் மடவாள் புனம்காத்தபோது ஒரு கிளி வந்து கதிரைக் கொய்ய, என்னை இந்தக் கிளி மதிக்க இல்லை, ஓஹோ! என்று கூறி கவண்கல்லை எறிய அந்தக் கிளி திரிந்து ஓடும் (திருப்பருப்பதத்தில்—ஸ்ரீசைலத்தில்).

3. 'ஆயோ' என்று கூறியும் கிளி போகாதிருக்க, காவற்பெண்—கவண்மணியை வீச, இரிந்து ஓடிய கிளி பாடும் சீபர்ப்பத மலை (ஸ்ரீசைலம்)

(18) பொய்கை

வள்ளைக்கொடியின் வெண்மலரை வெண்குருகு என அஞ்சி, சள்ளைமீன் கலங்கி ஓடி வாளைமீனின் வாயில் துள்ளி விழும் நீர்ப்பொய்கை.

(19) பொழில் ['சோலை' பார்க்க.]

1. குளிர்ந்த நறுமணம் வீசும் பொழிலில் வரிசையாய் நிற்கின்ற கமுகும், நீண்டு நிற்கும் தெங்கும், குறுகி நிற்கும் பலா மரமும் கலந்து விளங்கும்.

2. முகிழ்வாய்ந்த மடல்களை உடைய தாழையின் மொட்டு மலர்ந்து நறுமணம் வீசும் பொழில்.

(20) முல்லைவாயில் (வட—திரு)

வட திருமுல்லைவாயிலில்—கழனியின் புதிய நறு மணத்தை அநுபவித்து வண்டுகள் இசைபாடும்; தாமரையின் மீது உறங்கின நண்டுகள் உலவும் சேற்றையுடைய செந்நெல் வயல்கள் சூழ்ந்து பொலிவுறும்.

(21) வண்டு

1. கரிய எருமைகள் நீரில் இறங்கக், கயல்மீன்கள் தாமரைமலரை நெருங்கிப் பாய, (அம் மலரின் மீதிருந்த) வண்டின் கூட்டம் இரிந்து ஓடும் (கலயநல்லூர்).

2. அரும்பின் அருகே ஆண் வண்டுகள் (அருவ) நெருங்க, சில வண்டுகள் பாட, மயில்கள் நடமாடும் பொழில் சூழ்ந்த கலயநல்லூர்.

(22) வயல்

பகக்கூட்டத்தில்—ஏற்றின் (எருதின்) 'இடிகுரலை'க் கேட்ட வாளைகள் அஞ்சி ஓடக், கயல்மீன்கள் தாமரைக்குள் ஒதுங்கும் வயல்கள்.

## 225. வரலாறுகள் [243]

(1) கடல் கடைந்ததும் நஞ்சு பிறந்ததும்

(வாசுகி) கயிறாகவும், மந்தரமலை மத்தாகவும் கொண்டு, அசுரர்களும் தேவர்களும் கடலைக் கடைந்தனர். காளகூடவிடம்—எரிநெருப்பென எழுந்தது. தேவர்கள் அஞ்சி ஓடினர்; அது உலகை அழிக்கும் என்று கருதி அதை அமுதாகச் சிவபிரான் உண்டனர்.

(2) நீர் அமுதானது

நீர் எங்ஙனம் அமுதமாயிற்று, சொல்லியருளுக எனச் சிவபிரானைக் கேட்க அவர் அது அங்ஙனம் ஆன வரலாற்றைச் சொன்னார் (திருவீழிமிழலையில்).

(3) தொண்டைமானுக்கு அருளியது

தான் ஏறிவந்த யானையின் கால் முல்லைக் கொடியிற் சிக்கிக்கொள்ளத், தொண்டைமான் அக்கொடியைத் வெட்ட அங்கே குருதிவரக் கண்டு, அந்த இடத்தைச் சோதிக்க அங்கே இறைவனுடைய திருவுருவை அவன் கண்டான்; தான் செய்த அபசாரத்தை நினைத்து அஞ்சிப் புலம்பினன். இறைவன் வெளித்தோன்றி, "அன்ப! அஞ்சற்க! நீ வெட்டின வெட்டு என் முடிமீது சிரோ ரத்தினமாய் விளங்கும்" என்று கூறி நந்திதேவரை அவனுக்குத் துணைசெய்யும்படி அனுப்பி அவனுடைய பகைவர்களை அவன் வெல்லுமாறு உதவினர் (வடதிருமுல்லைவாயிற் புராண வரலாறு).

(4) நெடுமாறன்

வடபுல அரசர் நெடுமாறனுடன் நெல்வேலியில் போர்க்கு வர, இறைவன் தந்த படைகளின் உதவிகொண்டு பாண்டியன் அவர்களை வென்றனன் என்பது நெல்வேலிப் புராண வரலாறு.

## 226. வழிபட்டவரும் தலங்களும் [244]

| வழிபட்டவர் | வழிபாடு செய்த தலம் |
|---|---|
| 1. அக்கினி : | திருப்புன்கூர் |
| 2. அடியார்கள் : | திருக்கேதீச்சரம், திருவெண்பாக்கம் |
| 3. இந்திரன் : | திருநின்றியூர், திருமுதுகுன்றம் |
| 4. இயக்கர் : | திருப்புன்கூர் |
| 5. ஒருக்காலர்கள் : | திருக்கேதாரம் |
| 6. கணங்கள் : | திருக்கோளிலி |
| 7. கின்னரர் | திருப்புன்கூர் |
| 8. ஞாயிறு (சூரியன்) : | திருப்புன்கூர், மழபாடி, திருமுதுகுன்றம் |
| 9. தானவர் : | திருப்புன்கூர் |
| 10. திங்கள் (சந்திரன்) : | திருப்புன்கூர் |

| | |
|---|---|
| 11. திருமால் : | திருஆரூர், திருஆனைக்கா, திருக்கழுக்குன்றம், திருநின்றியூர், பாண்டிக்கொடுமுடி, திருமுதுகுன்றம், திருவாஞ்சியம், வாளொளிபுற்றூர், திருவீழிமிழலை |
| 12. தேவர்கள் : | திருஆரூர், திருக்காளத்தி, திருக்கேதீச்சரம், திருநெல்வாயில் அரத்துறை, திருப்புறம்பயம், திருப்புன்கூர், திருமழபாடி, திருமுதுகுன்றம், திருமுருகன் பூண்டி, திருவீழிமிழலை |
| 13. நாகம் : | திருப்புன்கூர் |
| 14. பார்வதி | கச்சி ஏகம்பம் |
| 15. பிரமன் : | திருஆரூர், கலயநல்லூர், திருக்கழுக்குன்றம், திருநின்றியூர், பாண்டிக்கொடுமுடி, திருமுதுகுன்றம், திருவீழிமிழலை |
| 16. புகழ்த்துணை நாயனூர்: | அரிசிற்கரைப்புத்தூர் |
| 17. புலி : | திருப்புன்கூர் |
| 18. பூமிதேவி | திருச்சுழியல் |
| 19. மறையோர் : | கடவூர் மயானம், திருவீழிமிழலை, திருவெண்பாக்கம் |
| 20. முனிவர்கள் : | திருச்சுழியல் |
| 21. முருகவேள் : | திருஆரூர் |
| 22. யமன் : | திருப்புன்கூர் |
| 23. ராகு—கேது : | திருக்கேதீச்சரம் |
| 24. வசுக்கள் : | திருப்புன்கூர் |
| 25. வருணன் : | ” |
| 26. வாயு : | ” |
| 27. வானரம் : | ” |

## 227. வழிபட்டுப் பேறுபெற்றோர் [245]

### சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றோர்

(1) தேவர், தேவதைகள், கணங்கள், கிரகங்கள் முதலியோருள்-

உமை, முருகவேள், திருமால், பிரமன், இந்திராதி தேவர்கள், சூரியன், சந்திரன், அக்கினி, யமன், வருணன், வாயு, இயக்கர், கின்னரர், கணங்கள், ஐராவதம், காமதேனு, தானவர், வசுக்கள்.

(2) முனிவருள் —

அகத்தியர், மார்க்கண்டேயர், பரசுராமர் முதலியோர்.

(3) மண்ணவருள்—

அரசர், மறையோர், அடியார்கள், சித்தர்கள் மாதர்கள்.

(4) ஊர்வனவற்றுள்—

சிலந்தி, நாகம்.

(5) விலங்குகளுள்—

புலி, வானரம்—மந்தி.

(6) நாயன்மார்களுள்

ஞானசம்பந்தர், நாவுக்கரசு, நாளைப்போவார், மூர்க்க நாயனார் (சூதன்), சாக்கிய நாயனார், கண்ணப்பர், கணம் புல்லர், சண்டேசுரர்.

(7) கிரகங்களுள்: ராகு—கேது.

### இவர்கள் வழிபட்ட வகை, பெற்ற பேறு

1. இயக்கர், கின்னரர், யமன், வருணன், அக்கினி, வாயு, சூரியன், சந்திரன், புலி, நாகம், வசுக்கள், வானவர், தானவர்—இவர்கள் சிவபிரானை அர்ச்சனை செய்து அவரது திரு அருளைப் பெற்றனர்.

2. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரையர், திருநாளைப்போவார், மூர்க்க நாயனார், சாக்கிய நாயனார், சிலந்தி, கண்ணப்பர், கணம்புல்லர்—இவர்கள் குற்றம் செய்யினும் பெருமான் அதைக் குணமாகக் கொண்டார்.

3 அகத்திய முனிவர் இலிங்கம் தாபித்து வணங்கித் திருப்பொதிகையில் இடம்பெற்றனர்.

4. அடியார்கள் :—மலரிட்டுப் பூசித்தும், தொழுதேத்தி வணங்கியும் வழிபட்டனர். நான்மறை வல்ல அந்தணாளர், வேதவேள்வியர் பெருமானது திருவடியை முறைப்படி போற்றி வணங்கினர்.

5. தேவர் வகையினரெல்லாரும், இருடிகளும், மன்னரும் எங்கும் நின்றேத்தித் தாம் வேண்டிய வரங்களைப் பெற்றனர்.

6. இந்திரன் :—மந்திரம் கூறிப் பூசித்து வணங்கி வானநாடு ஆளும் பேற்றினைப் பெற்றான்.

7. ஐராவதம் :—பூசித்து விண்மிசை வாழும் பெருமையைப் பெற்றது.

8. காமதேநு :—சூரியன் உதிப்பதற்கு முன்னரே எழுந்து பால்சொரிந்து சிவனுக்கு அபிஷேகம் செய்து அவரது திருவடியைத் தியானித்து அருள்பெற்றது.

9. சண்டேசுரர் :—மணலால் இலிங்கம் இயற்றிப் பால் அபிடேகம் செய்ய வைத்திருந்த பாலைக் காலால் இடறிய தம் தாதையின் தாளை இவர் துண்டித்தார்; சிவனார் தமது சடாமகுடத் திருந்த மலர் மாலையை எடுத்து இவருக்குச் சூட்டினார்.

10. சிலந்தி :—தனது வாய் நூலைக்கொண்டு பெருமானுக்குச் சித்திரப்பந்தர் அமைத்த புண்ணியத்தால் மறுபிறப்பிற் சோழனாகும் பாக்கியம் பெற்றது.

11. திருமால் :—அட்ட புட்பம் கொண்டு பிரானது திருவடியை மந்திரம் கூறிப் பூசித்து வணங்கினார்.

ஆயிரம் மலர்கள் கொண்டு பலநாள் பெருமானைப் பூசித்தார். ஒருநாள் ஒருமலர் குறையத் தமது கண் மலரையே பறித்துப் பூசித்துப் பெருமானிடம் பொருவிறல் ஆழி ஒன்று பெற்றார்.

12. தேவர்கள் :—இறைவன் என்று தேவர்கள் எம்பெருமானை முறைப்படி தூய மலரிட்டுப் போற்றுவர். ஒருக்காலர்களாம் தேவ சாதியினர் களிற்றினமாய் நின்று செம்பொற்பொடி சிந்திப் பூசிப்பர்.

தேவர்கள் செம்பொனும் மணியும் தூவி இரவிற் பூசிப்பர்.

13. பரசிராமர் :—நின்றியூர் என்னும் ஊரை 360 வேலி நிலத்துடனும் மணிக் கலசங்களுடனும் மூந்நூறு வேதியர்க்கும் சிவபிராற்கும் அளித்துப் பத்திசெய்து பெருமானுடைய பாத தரிசனத்தைப் பெற்றனர்.

14 பார்வதி :—தேவியின் தவத்தைக் கண்டு மகிழ்ந்து பெருமான் தேவியைத் திருமணம் செய்தனர்.

15. பிரமன் :—அட்ட புட்பம் கொண்டு பூசித்து மந்திரம் சொல்லி வணங்கினன்.

16. மந்தி :—கடுவனுக்கு (ஆண் குரங்குக்கு) உண்ணப் பழம் தேடிச்சென்ற - (காலை, உச்சி, மாலை-) முச்சந்தி நேரத்திலும் ஜலபுட்பம் இட்டு வழிபடப் பெருமான் அதன் புத்தியில் உறைவார்.

17. மார்க்கண்டேயர் :—நறுமலர் கொண்டு தமது அடியிணையைப் போற்றின மார்க்கண்டேயரின் உயிரைக் காக்கவேண்டி, யமனை உதைத்து அவன் உயிரைப் போக்கினர் சிவபிரான்.

18. முநிவர் :—எண்ணிறந்த முநிவர்கள் எங்கும் நின்று ஏத்தி அருள் பெற்றனர்.

19. ராகு-கேது :—அங்கம்-(மோகினித் திருமாலால்) ஒழியப்பெற்றவர்கள்.

## 228. வழிபாடு—பூஜை—துதிவகை [246(1)]

நறுமலரிட்டுப் பூசித்தும், நீர் கொண்டு ஆட்டியும், ஆயிரமலரால் பூசித்தும், பல தோத்திரம் சொல்லியும், அட்ட புட்பம் கொண்டு அடிபோற்றியும், மணலால் இலிங்கம் இயற்றியும், இருந்தும் - நின்றும் - கிடந்தும் - ஏத்தியும், இலைகொண்டு அன்புடன் பூசித்தும், காலை-உச்சி-மாலை ஆகிய முச்சந்திகளிலும் சலம் புட்பம் கொண்டு வழிபட்டும், கண்ணீர் அரும்பி நிற்கும் மனத்தொடு வணங்கியும், மறைகள் ஓதித் துதித்தும், செவ்விய புகையின் நறுமணம் பரப்பியும், பாடியும், துள்ளி நின்றாடியும், நெய்யும் - பாலும் - தயிரும் கொண்டு பூசனை செய்தும், நொச்சியம் பச்சிலை, நுரை தீர்ந்த புனல் இவை கொண்டு வழிபாடு புரிந்தும், பண்ணார் இசைபாடியும், திருநீறு பூசிப் போற்றிசைத்தும், எரியோம்பி மறை வளர்த்தும், மந்திரம் கூறி வணங்கியும், முட்டுப்படாது நாள்தோறும் நீரில் மூழ்கிப் பூப்பறித்து, மூன்றுபோதும் இண்டை மாலை கட்டிச் சேர்ப்பித்தும், வலம் செய்தும், புதியபுதிய வகையிற் சொன்மாலை கொண்டு ஏத்தியும் - இறைவனை இங்ஙனம் பல வகையால் - மண்ணவர் போற்றினர்.

தேவர்களும். தேவர் சாதி வகையினராகிய ஒருக்காலர்களும் செம்பொனும் மணியும் தூவி வழிபட்டனர்.

### 2. வழிபாட்டினால் வரும் பேறு [246(2)]

வழிபாட்டினால் உள்ளம் தூய்மை பெறும்; புகழ் பெருகும்; தீமைகள் விலகும்; மயக்கம் ஒழியும்; வினை விலகும்; தவநெறி கூடும்; முன்பு செய்த பாவம் அழிபடும்; மலங்கள் நசியும், வல்வினைகள் இம்மையிலும் மறுமையிலும் சாரா; புலவர்கள் திருப்புகலூரைப் பாடினால் நிச்சயமாய் மேலுலகம் ஆள்வர்; அமரர் உலகை ஆள்வர்; சிவலோகம் ஆள்வர், வினைச் சேற்றில் அழுந்தார்; மனநோய் இன்றி இன்புறுவர்; இம்மையிலேயே உணவும் உடையும் பெறுவர்.

### 3. வழிபாடு—பூசைக்கு உரிய சாதனங்கள் [246(3)]

அன்பு, இசை-(பண்நிறைந்த இசை), இருக்கு (மறை), இலை (நொச்சியம் பச்சிலை), சொன்மாலை - தோத்திரங்கள் - பாடல்கள், நறுமலர்கள், நீர், பால் (ஆவின்பால்), தயிர், நெய்.

தேவர்கள் பூஜைக்கு-செம்பொன், செம்பொற் பொடி, மணி, மந்திரம்.

### 4. வழிபாடு—வேளை [246(4)]

காலை, பகல், உச்சி மூன்றுபோதிலும் வழிபாடு புரிதல் வேண்டும்; இரவில் செம்பொன் கொண்டு தேவர்கள் தொழுவார்கள்.

## 229. வாத்தியங்கள்—வாத்தியங்களும் சிவனும் [247]

கல்லவடம், கிணை, குடமுழவு குழல், கொக்கரை, கொட்டு, கொடுகொட்டி, சங்கு, சல்லரி, தக்கை, தகுணிச்சம், தண்ணுமை, தத்தளகம், தமருகம், தாளம், துடி, துந்துமி, பறண்டை, பறை, பேரி, மணி, முரசு, முழவம், மோந்தை, யாழ், வீணை சொல்லப்பட்டுள.

இவற்றுள் - குழலும் யாழும் மாதர் மொழிக்கும், துடி-மாதர் இடைக்கும் உவமை கூறப்பட்டுள. முழவு பழைய மூங்கிலிற் செய்யப்படும்.

வண்டுகள் யாழ்போல ஒலிசெய்யும்.

திருவாரூரில் யாழ் ஒலியும், பனங்காட்டூரில் - பறை ஒலி - சங்கொலியும், திருமுதுகுன்றத்தில் முரசொலியும், திருமுருகன் பூண்டியில் மொந்தை வாத்தியத்தின் ஒலியும், நாவலூரில் - குழலொலி - முழவொலியும், திருக்கடவூரில் - பறையார் முழவொலியும், கலயநல்லூரில் பேரி ஒலியும், திருப்பனையூரில் - மாடமாளிகை கோபுரத்தின்மேல் முழவொலியும், யாழ் ஒலியும் நிகழ்ந்தவை கூறப்பட்டுள.

சிவபிரானிடம் கொடுகொட்டியும் வீணையும் உண்டு. அவர் திருக்கரத்தில் தமருகம் உண்டு. வீணையுடன் வீதியில் விடை ஏறிச் செல்வார் பெருமான்.

ii. பெருமானது நடனத்தின்போது

தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, தகுணிச்சம், கிணை, சல்லரி, கொக்கரை, குடமுழா, முழவு, பறை, குழல் ஒலிசெயும்.

iii. பெருமான் மகிழும் வாத்தியங்கள்

கொக்கரை, கொடுகொட்டி, தத்தளகம், துந்துமி, குடமுழா.

iv. திருவிழாவின்போது

முழவும் குழலும் (நறையூர்ச் சித்தீச்சரத்தில்) ஒலித்தன.

v. (அரங்கில்) மாதர்களின் நடனத்தின்போது

குழல், முழவு, ஒலி செயும்.

## 230. விசயன்—விசயனும் சிவனும் [248]

விஜயன், பார்த்தன், அருச்சுனன்-என்னும் பெயர்கள் வந்துள.

விற்போரில் விருப்பம் உள்ளவன் என்று பேர்பெற்ற விசயனுக்கு அருள் செய்யக் கருதிச் சிவபிரான் ஒரு வீர வேடன்போல உருக்கொண்டார்; கையில் வில் ஏந்தினர்; தேவியும் தாமுமாய் மகிழ்ச்சியுடன் காட்டில் நுழைந்தார். ஒரு மாயச் செய்கையை மேற்கொண்டார். ஒரு கொடிய கொம்புள்ள பன்றியை வேகமாய்த் துரத்திச் சென்றார்; விஜயன் தவமிருந்த இடத்தை அணுகினர்; தாம் இன்னா ரென்று விஜயன் நாடாத வகையில் அவனோடு உள்ளன்புடன் போர் புரிந்தார். அவன் தேர்ள்மீது பல கூரிய அம்புகளைப் பாய்ச்சினர்; அவன் தவத்தை அழித்தார்.

ஈற்றில் அவனுக்குப் பாசுபதம் என்னும் சிறந்த படையையும், ஆவநாழி (அம்பறாத்தூணி)யையும் தந்து அருள் பாலித்தார்.

## 231. விதி [249]

நாம் இறந்துபடும்போது நம்மைச் சிலர் சிரிப்பதன் முன்னர், நமக்கு இறைவனிடத்தில் வைத்த சிந்தை உண்டு, மனமுண்டு, மதி உண்டு. விதியின் பயன் உண்டு என்பது நினைவில் இருக்கவேண்டும்; (அந்த நினைவு கொண்டு இறைவனை மறவாதிருத்தல் வேண்டும்).

சிவபெருமானைச் சமணரும் சாக்கியரும் இழிவுபடுத்தி வாது செய்வது அவர்க்கு உறும் விதி காரணத்தால்.

கடவுள் நமது மேலை விதியின் பயனை ஊட்டுபவராய் விளங்குகின்றார்.

## 232. வியாபாரம் [250]

திருமறைக்காட்டு (வேதாரணியத்து)க் கடற்கரையை அணுகிப் பெரிய மரக்கலங்கள் இருந்தன. திருஒற்றியூர்க் கடற்கரையில் மரக்கலங்களும் மீன்படகும் காணக்கிடந்தன; மேற்குக் கடற்கரை (அரபிக்கடல்) மகோதை ஊர்த் துறை முகத்தில் பலவித நிதிகள் மரக்கலங்களிற் புகுத்தபபட்டு ஏற்றப்பட்டன இலங்கை மாதோட்ட நன்னகர்க் கரையருகே கப்பல்கள் நிறைந்து நின்றன. பெருங்குடி வணிகர் வாழ்ந்த வலம்புரத்துக் கடற்கரையில் மரக்கலங்களின் வரவு எதிர் பார்க்கப்பட்டன.

## 233. விழா [251]

திருஒற்றியூர் உத்திர நாள் விழா இறைவனுக்கு உகந்தது. நன்னிலத்துத் திருவிழாவில் சிவபக்தர்கள், தக்க சைவர்கள், தவசிரேஷ்டர்கள் நெருங்கிக் கூடினர்.

வெஞ்சமாக்கூடல் தெருக்களில் விழாக்கள் நிரம்ப நடந்தன. திருக்கற்குடியில் திருவிழாவை விரும்பின கலை வல்ல மாதவர்கள் கூடினர்.

## 234. விளங்காத இடம் [252]

*திருவிழிமிழலைப் பெருமானே! தூய நீர் எப்படி அமுதமாயிற்று, சொல்லி அருளுக என்று உமைக் கேட்க நீர் சொல்லினீர்.

## 235. விளையாட்டு—மகளிர் பொழுதுபோக்கு [253]

மகளிர் பொழுதுபோக்கு

(1) பந்து விளையாடுதல்.

(2) கிளியுடன் பழகுதல்.

(3) மரப்பட்டையினால் அமைக்கப்பட்ட கருவியைக் கொண்டு (பகடை) தாயம் விளையாட்டு ஆடுதல்.

(4) (கவண் கொண்டு) குருவி கிளி இவைகளைக் கடிதல்.

## 236. வினாக்கள் [254]

சிவபிரானுடைய தன்மை, பெருமை, செயல்களைக் குறித்துச் சில வினாக்கள் சிவபிரானிடத்தும் அடியார்களிடத்தும் சுந்தரர் வினவுகின்றனர். அவைதாம்:—

### 1. சிவபிரானை நேர்முகமாகக் கேட்கும் வினாக்கள்

(1) அடியார் பெறும்பேறு

பெருமானே! உனது திருவடிக்கு அன்பு பூண்டு பணி செய்யும் தொண்டர்கள் உன்னிடமிருந்து பெறுகின்ற பரிசுப்பொருள் யாது!

* இவ் வரலாறு இன்னதென்று தெரியவில்லை.

(2) ஆடல்

நீ ஏன் இரவில் இடுகாட்டில் எரியேந்தி ஆடுகின்றாய்?

(3) ஆலின்கீழ் அறம்

அருந்தவ முனிவர்க்கு ஆலின்கீழ் 'அறம்' ஓதுதற்கு இசைந்தது என்ன காரணம்?

(4) இருவர்க்கு அரியர்

அயன், மால் நணுகா வண்ணம் நீ வேடம் காட்டித் திரிவது ஏன்?

(5) கங்கையைச் சூடினது

மலைமங்கை ஒருத்தி இருக்கச், சடைமேற் கங்கையை நீ சூடியது ஏன்?

(6) கரிஉரி

தேவி அஞ்சக் கரியின் தோலை உரித்துப் போர்த்தது என்ன காரணம்!

(7) காமனை அட்டது

பெருமானே! உனது தவயோகத்தை அழிக்கும் பொருட்டு வந்த காமன் பொடியாம்படி கண்விழித்து அவன் தாதை காண அவனை எரித்த உன் வெற்றியை என்னென்றுரைப்பது!

(8) காலனை அட்டது

ஒரு பாலகனுடைய உயிரை அன்பின்றி வௌவ வந்த காலனை மாய்த்த உன் கருத்து யாதோ!

(9) சமணர், சாக்கியர்

ஆடையின்றித் திரியும் சமணரையும் சாக்கியப் பொல்லாரையும் நீ கலந்து நிற்பது ஏன்!

(10) சிங்கஉரி, புலிஉரி, கரியுரி

வேள்வியி னின்றெழுந்த சிங்கம், புலி, கரி அவற்றை அவையுடன் போர் புரிந்து அவைகளைப் பிளந்து உரித்து ஈர உரிவை நீ போர்த்த காரணம் யாது!

(11) தக்கன் வேள்வி

தக்கன் முதலான பலதேவர்களைத் தண்டித்து அவர்களுடைய அங்கத்தைச் சிதைத்தருளிய செய்கை எக்காரணம் பற்றி!

(12) தம்மான்

தமது தலைவரை அறியாத சாதியார் உண்டோ. (உன்னை அறியாதார் யார் உளர் - என்றபடி).

(13) தலைமாலை

தலையிற் தலைமாலை பூண்டது ஏன்?

(14) நஞ்சுண்டது

தேவி அஞ்சி, மனம் வருந்த விடத்தை ஏன் உண்டாய்!

(15) நாகக் கச்சு

நாகத்தைக் கச்சாகப் புலித்தோல் மேல் ஏன் கட்டியுள்ளாய்?

(16) நாகப் பூண்

ஒரு நாகத்தைப் பிடித்தாட்டிப் பூண்டதென்?

(17) நீறு பூசுதல்

மெய் முற்றும் நீறு பூசியதென்ன காரணம்!

(18) பலி

இறந்தார் தலையிற் பலி கொள்ளுதல் ஏன்? அதற்காக விடையேறித் திரிவது ஏன்? (உன்) தேவி உலகு உய்ய வைத்த கச்சிக் காமகோட்டம் இருக்கும்போது, நீ போய் ஊர்ப்பிச்சை கொள்வது என்ன காரணம்? வெண்டலையைக் கையில் ஏந்தி அழகிய நக்க உருவராய் மனைகள் தோறும் திரிகின்றது ஏன்?

(19) பாடும் புலவர்

பாடும் புலவர்க்கு நீ அருள்புரியும் பொருள் எது?

(20) பிறப்பு
*பிறப்பின் பயன் யாது?*

(21) பிறை சூடியது
*பிறையைச் சூடிய காரணம் யாது?*

(22) புரம்
*முப்புரங்களை எரித்தது ஏன்?*

(23) புலித்தோல்
*புலித்தோலை அணிந்துள்ள தேன்?*

(24) மறைநூல்
*மறைப்பொருளை உகந்து உரைத்தது ஏன்?*

(25) முருகன் பூண்டி
*முருகன் பூண்டியில் எதன்பொருட்டு இருந்தீர்!*

(26) யானையைச் செற்றது
*தேவி அஞ்ச யானையை அட்டது ஏன்?*

(27) விடைவாகனம்
*மதயானை இருக்க விடை ஏறுவது ஏன்?*

(28) விண்
*வானநாடர் ஏத்த விண்ணில் ஏன் உள்ளீர்!*

(29) வீடு
*'வீடு' என்பதன் பயன் யாது?*

(30) வேதம்
*வேதம் ஓதித் திரிவது என்ன காரணம்.*

2. பெருமானது அடையாளம் இதுதானோ என்றும், பிறவற்றைக் குறித்தும் தொண்டர்களை வினவுதல் [254(2)]

(1) அகப்பொருள்
*எனக்கு வந்துள்ள தளர்ச்சியைப் பெருமான் அறிவரோ!*

(2) அபிடேகப் பொருள்

தேன், பால், நெய் - இவை பெருமானுக்கு உகந்த அபிடேகப் பொருள்கள் அல்லவா!

(3) அறவர்

அறத்தின் வழியில் மிகவும் நிற்பவர்தானே பெருமான்!

(4) ஆடல்—நடம்

பெருமான் கொடு கொட்டி ஆடல் ஆடும் கழலரோ; அவருக்குக் காடுதான் அரங்கமோ! எட்டுக் கைகளையும் வீசித் தாளத்திற்கு ஒக்க ஆடுவரோ!

(5) ஆளும் தன்மை

பொய் கலவாத மெய்ம்மொழியால் நம்மை ஆள்வரோ!

(6) ஆறு

ஆறு தாங்கிய சடையரோ அவர்!

(7) ஆனைஉரி

தேவி அஞ்ச ஆனையின் ஈர உரியைப் போர்ப்பரோ!

(8) இருப்பிடம்

காடோ பதியோ அவரது இருப்பிடம்!

(9) இருவர்க்கு அரியர்

அயனுக்கும் மாலுக்கும் அரிய நெடியரோ அவர்!

(10) இன்மை உண்மை

இல்லாமையால் வறியரா அல்லது உடையராய் வறியரா அவர்!

(11) கண்

முக்கண்ணர் தாமே அவர்!

(12) கண்டம்

கறை பட்ட கண்டரா (கரிய கண்டரா) அவர்!

(13) காது

குழையணிந்த காதர்தானே !

(14) கொடி

இளஏறு கொண்ட கொடியை உடையவரா !

(15) சடை

ஆறு, பிறை தாங்கிய சடையரா !

(16) சடை

சடைமேற் கரந்தை மலர் சூடியுள்ளா ரல்லவா !

(17) சமணர்

சமணராற் பழிப்பு உடையவரா !

(18) சூலம்

கையிற் சூலம் ஏந்தியவரா !

(19) சுந்தரர்

(வன்றொண்டர் ஆகிய) தான் தீயனகிலும் தன்னை ஆள்வரோ பெருமான் !

(20) தேவி பாகம்

மலைமங்கையின் கூறு தாங்கிய குழகரா !

(21) நல்லர்

தம்மைப் பற்றினவர்க்கும் வாழ்த்தினவர்க்கும் நல்லவர் அல்லவா அவர் !

(22) நாகம்

நாகத்தை நாணகக் கட்டி உள்ளவரா !

(23) நிறம்

குன்றிபோல் (குண்டு மணிபோல) மிகச் சிவந்த நிறத்தரா !

(24) நீறு

வெள்ளை நீறு அணிந்தவரோ !

(25) படுதலை

படுதலை ஏந்தியவரோ!

(26) பலி

மனைகள் தோறும் சென்று பலிகொண்டு வந்து சமைத்து உண்ணவும் வல்லவரா!

(27) பாடும் அடியார்

பாடும் அடியார்களை உடையவரா?

(28) பிறை

பிறை தாங்கிய சடையரா?

(29) விடை

விடை ஏறும் பெருமானா!

(30) வீணை

வீணை தான் அவர் கருவியோ?

(31) வேதம்

வேத முதல்வரோ அவர்?

### 3. மாதர்களின் காதல் மொழி [254(3)]

பெருமானே! நீர் அக்கும், ஆமையும் பூண்டீரோ! ஆனையின் ஈர உரியைப் போர்த்திரோ! உமது மேனி அந்தி வானத்தின் நிறத்ததோ! அரவம் ஆட்ட வல்லீரோ! ஆடல், பாடல் வல்லீரோ! உமது ஆரமாவது நாகமோ! ஆறு தாங்கிய சடையரோ நீர்! ஏன் ஐயம் ஏற்கின்றீர் சொல்வீராக.

## 237. வினாவும் விடையும் [255]

வினாக்கள் :

1. இலக்குமி யாரை விட்டுப் பிரியாள், யார் அரசாளுவர்?

2. இறைவர் யாரை மறவார்?

3. உணர்வார் யார்?
4. கதியுட் செல்பவர் யார்?
5. சிவனது திருவடி யார்க்கு அறிவரியது, யார் அறிய வல்லார்?
6. நமன் தமர் யாரை நலியார்?
7. பழுதுள்ள உள்ளம் நிலையாதவர் யார்?
8. யார் துயரிலர்?
9. யார் நல்லார்?
10. யாருடைய வினை தீர்தல் எளிது?
11. வானத் துயர்வார் யார்?
12. வினை கழியும் வழி எது?

விடைகள்

1. திருச்சுழியற் பெருமானை வழிபாடு செய்பவர்களுடைய அடியைத் தொழுபவரை இலக்குமி பிரியாள்; அவர் அரசாகுவர்.

2. வஞ்சமற்ற மனத்தவரை இறைவர் மறவார்.

3. ஊனை வளர்ப்பதைக் கைவிட்டு இறைவனை நினைந்து மகிழ்பவர் உணர்ந்த ஞானிகள் ஆவர்.

4. திருச்சுழியற் பெருமான் திருநாமத்தைக் கற்றவர் கதியுட் செல்வர்.

5. சிவபிரானை நினைந்து அழுகின்ற அடியவர் தவிரப் பிறரால் இறைவனை அறியமுடியாது.

6. திருச்சுழியலை நாளுவிதமாக நினைவாரை நமன் தமர் நலியார்.

7. திருச்சுழியற் பெருமானைத் தொழுபவரிடம் பழுதான உள்ளம் நிலைபெறாது.

8. திருச்சுழியலில் தொண்டுசெய்ய வல்லவர் துயரிலர்.

9. திருச்சுழியலில் தொண்டுசெய்ய வல்லவர் நல்லவர்.

10. திருச்சுழியலை உண்மை அன்புடன் நினைபவருடைய வினை எளிதில் தீர்ந்துபோம்.

11. திருச்சுழியற் பெருமானைத் தொழுபவர் புகழுடன் வானத்தில் உயர்நிலை பெறுவார்.

12. திருஒற்றியூர் மேல் சுந்தரர் உரைத்துள்ள பாடலைக் கற்றுப் பாட வினை கழியும்.

## 238. வினை [256]

அகலும் வினை, அருவினை, ஈட்டும் வினை, உலகறி வினை, ஊழ்வினை, கொடுவினை, செய்வினை, தீவினை, தொல்வினை, நின்ற வினை, பண்டாழ் வினை, பண்டை வினை, பந்தித்த வினை, பழவினை, பறியா வினை, பறையாத வினை, பாழாம் வினை, பிணி வண்ணத்த வினை, முந்தி எழும் வினை, முன்செய்த வினை, மேல்வினை, வஞ்ச வல்வினை, வல்வினை, வெய்யவினை—என வினையின் வகையும் திறமும் விளக்கப் பட்டுள.

வினை நம்மை ஆள்கின்றது, வினையை நாம் தேடிக் கொள்கிறோம், வினையின் தன்மை உலகறிந்தது, வினை கொடியது, நீக்க முடியாதது, பாழாந் தன்மையது, பிடித்துள்ளது, முந்தி எழுவது, முன் செய்தது, வஞ்சிப்பது, பழையது, வன்மை வாய்ந்தது, கடல்போலப் பரந்துள்ளது.

அறிவை இழந்த வழியில் சென்று குழியில் விழுவதன் காரணம் வினைப்பயன்தான்.

## 239. வினை தீரும் வழி [257]

அவ்வத் தலத்துப் பதிகத்தை ஓதுவதாலும், தல தரிசனத்தாலும் வினை நீங்கும் என்கின்றார் சுந்தரர்.

**(1) திருவாரூர்**

முப்போதும் திருஐந்தெழுத்தை ஓதி, முந்தி எழுந்து மூடுத்த வருகின்ற பழைய வல்வினை நம்மை மூடுவதற்கு

முன்பாகத் திருவாரூர்ப் பெருமானை நாம் சென்று தெரிசிப் போமாக; மலரிட்டு, வலம்வந்து, மனம் குளிர அப் பெருமானைத் தொழுவோமாக.

(2) கச்சி அனேகதங்காவதம்

நமது வினையைத் தீர்க்கும் இடம் இந்தத் தலம்.

(3) கழுக்குன்றம்

பாவச் செயல்களால் நாம் ஈட்டியுள்ள வினைகள் பலவும் நீங்கக் கழுக்குன்றத்தை அடிக்கடி தரிசித்துத் தொழுவோமாக.

நம்மை ஆட்டி வருத்தும் வினைகள் ஒழிந்திடக் கழுக் குன்றத்துப் பெருமானைத் தினந்தோறும் நெடுநேரம் தொழுவோமாக.

(4) காளத்தி

காளத்தியீசர்மீது சுந்தரர் சாற்றியுள்ள செந்தமிழ்ப் பதிகத்தைச் செப்புவோரது வினை நீங்கிடும்; அவரும் விண்ணுலகில் நீங்காது நிச்சயம் இருக்கப் பெறுவர்.

(5) கூடலையாற்றூர்

சுந்தரர் அருளிய கூடலை யாற்றூர்ப் பதிகத்தைப் பாட வல்லவருடைய வினைப்பற்று அற்றுப்போம்.

(6) கேதீச்சரம்

சுந்தரர் திருவாய் மலர்ந்த கேதீச்சுரத்துப் பதிகத்தை ஓதுபவரை வினை அணுகாது.

(7) திருச்சுழியல்

திருச்சுழியலை உண்மையாக நினைத்து ஈசன் திருவடி யைத் தியானிப்பவருடைய வினை எளிதில் ஒழிந்து போம்.

(8) திருநாகேச்சுரம்

சுந்தரர் பாடியுள்ள திருநாகேச்சுரத்துப் பதிகத்தைப் பாட வல்லவருடைய வினைப்பற்று ஒழிந்துபோம்.

(9) திருநாவலூர்

நாவலூர் என்று ஓதிப் பாடிய சுந்தரருடைய தமிழைக் காதலிப்பவரும், கற்பவரும், கேட்பவரும் வினைக் கட்டினின்றும் நீக்கம் பெறுவர்.

(10) திருநின்றியூர்

சுந்தரர் பாடிய திருநின்றியூர்ப் பாடல் பத்தும் வல்லவர் வினை நீங்கப்பெறுவர்; பாரும் விண்ணும் அவரைத் தொழும்; பரமன் அடி கூடுவர் அவர்.

(11) திருப்புன்கூர்

திருப்புன்கூர் ஈசன்மீது சுந்தரர் உள்ளம் உகந்து அன்பு ததும்பப் பாடிய அருந்தமிழ்ப் பாட்டுப் பத்தும் வல்லவர் அருவினை இலராவர்.

(12) திருப்புனவாயில்

வல்வினை மாயவேண்டில் திருப்புனவாயிலை நினைப்போமாக. சுந்தரர் அருளிய அத்தலத்துப் பதிகத்தைச் சோம்பலின்றிக் கற்று இறைவனை ஏத்த வல்லவர்களின் வினை மாய்ந்து ஒழியும்.

(13) வெண்பாக்கம்

வெண்பாக்கத்துப் பெருமானைக் காதலித்து அன்புடனே சுந்தரர் அருளிய தமிழ்ப் பாடலை ஓத வல்லவரை வினை அணுகாது.

## 2. சொன்மாலை புனைய வினைபோம்

புதுப்புது விதமாகச் சொன்மாலை புனைந்து இறைவனைப் பத்துவோரின் வினை ஓடிப்போம்.

## 240. வீடு [258]

வீடுபெற விரும்பினோர் பல ஊழி காலமாக நினைக்கும் இடம் காசி அனேகதங்காவதம் என்னும் தலம்.

## 241. வேடர்களின் நாகரிக நிலை [192]

வழிப்போக்கர்களைக் குத்தி மோதி மனம் புண் படும்படி பேசி, அவர்களுடைய ஆடை உடைகளை வேடர்கள் கொள்ளை கொள்வர்.

## 241-ஏ. வேதம் - மறை [229]

[தலைப்பு 211 பார்க்க]

## 242. வேள்வி [259]

இறைவனைக் கருதாத தக்கன் வேள்வியில் அவி உண்ண வந்த தேவர்கள் உருண்டோட உதைத்து உகந்தவர் சிவபிரான். (தாருக வனத்து) மாதவத்தினர் செய்த தழல் வேள்வியி னின்றெழுந்த சிங்கம், புலி, யானை இவை அலறப் பிளந்து அவையிற்றின் ஈர உரியைப் போர்த்துக் கொண்டனர் பெருமான்.

இருக்கு மறை வல்ல அந்தணர்கள் ஏழு சுரங்களுடனும் ஓதி, எரி ஓம்பி, வேள்வி இயற்றி உலகுக்குச் செல்வத்தை வழங்கினர் கானாட்டுமுள்ளூரில்.

கலய நல்லூரில் கலைகள் வல்லவராய்க், கலியின் கொடுமையைக் கடிய வல்லவரான அந்தணர்கள் செய்த வேள்வியின் ஓமப்புகை மேகம்போல மேலெழுந்து அழகு தந்தது.

திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலத்தில்) வேள்வியின் முழக்கம் சதா ஒலித்தது.

திருநனிபள்ளியில் அந்தணர் வேள்விகள் இயற்றி எரி மூன்றும் ஓம்பினர்.

செம்பொன்போல விளங்கின மகளிர் வாசம் செய்யும் திருவீழிமிழலையில் நம்பிஞர்க் கருள் செய்யும் அந்தணர் நான்மறைக்கு இடமாய வேள்வியை இயற்றினர்.

## 243. வைதற் சொற்கள் [260]

[சுந்தரர் தம்மையே வைதுள்ள சொற்களைத் தலைப்பு 131-ல் பார்க்க]

குலமிலாதவன், நலமிலாதவன், நொய்யன், பஞ்ச துட்டன், பாவி, பொய்ம்மையாளன், மகாசழக்கன் (மகா குற்றங்களைச் செய்பவன்), முற்றிலாதவன் (அரைகுறைப் பேர்வழி), வஞ்ச நெஞ்சன், வழக்கிலி (நீதியிலி) எனவரும் வைதற் சொற்கள் காணக் கிடக்கின்றன.

## 244. ஜீவராசிகள் [261]

### I. ஊர்வன [261-I]

(1) அரவம்

அரவம், அரவு, சேடன், நாகம், படம், பணி, பன்னகம், பாந்தள், பாம்பு—இச் சொற்கள் பாம்பைக் குறிக்க ஆளப்பட்டுள்ளன.

அளைப்பை அரவு, ஆடரவம், ஊரரவம், ஐவாய் அரவம், கடிக்கும் அரவு, கொல்லை வல்லரவம், கோல அரவு, கோளரவு, செங்கண் அரவு, செருக்குவாய் அரவு, தீவாய் அரவு, நச்சரவு, நெருப்புமிழ் அரவு, பகுவாய் அரவு, பட அரவு, பருத்துத்தி அரவு, பணங்கொள் அரவு, பாரூரும் அரவு, புற்றுடரவு, பேழ்வாய் அரவு, பைகொள் அரவு, பொங்கண் அரவு, பையரவு, பொங்கரவு, பொறிகொள் அரவு, மூழைக்கொள் அரவு, வரியர, வாளரவு, விட அரவு, வெள் ளரவு, இளநாகம், கதநாகம், கோள் நாகம், துணைமாமணி நாகம், வன்னாகம், ஏகபடம், கரிய பாம்பு, செந்தழல் வாய பாம்பு, படமாடும் பாம்பு, பைத்த பாம்பு, மூக்கப் பாம்பு, வெய்ய பாம்பு—எனப் பாம்பின் இலக்கணங்கள் கூறப் பட்டுள்ளன.

1. சிவபிரானுக்குக் கச்சாகவும், பூணாகவும், அவர் வில்லின் நாண் ஆகவும் நாகம் விளங்குகின்றது. அவர் சென்னியில் (சடையில்) உள்ள பாம்பு—ஐவாய் அரவு,

தீவாயரவு, வாளரவு, பொங்காடரவு; அவர் கையில் உள்ள பாம்பு கரிய பாம்பு; செங்கண் அரவம்; பணிப்படும் அரவம்; அவர் காதில் உள்ளது கோளரவு; அவர் அரையிற் கட்டி உள்ளது, கச்சாகக்கட்டி யுள்ளது. ஒற்றைப்பட அரவு, பைங்கண் அரவு, பொங்கரவு, வெள்ளரவு, வெய்ய அரவு, செருக்கு வாயரவு, கதநாகம், மாமணி நாகம், படங்கொள் நாகம், வன்னுகம், வெய்ய பாம்பு; அவர் பல பாம்புகளைப் பற்றி ஆட்டுவர்; அவை படமுடை யரவு, புற்றுடு அரவு, பைகொள் வாளரவு என விளக்கப்பட்டுள்ளன. அவருடைய கண்டத்திலும், தோள்களிலும், கரத்திலும், சிரத்திலும், அரையிற் கச்சாகவும் அவர் புனைந்துள்ள பாம்புகள்- ஆடரவு, மூக்கப் பாம்பு பொறிகொள் அரவம். வாளரவு என விளக்கப்பட்டுள்ளன. அவரிடத்தில் ஆயிரம் படங்களையும், பரிய புள்ளிகளையும், பகுவாயையும், அழல் உமிழும் பற்களையும் கொண்ட விஷப்பாம்பும் உள்ளது. அவர் அரவாட அனல் ஏந்துவர். அவரை நாகம் பூசித்துள்ளது.

2. திருமால் பள்ளிகொண்ட பாம்பு, படமாடும் பாம்பு.

3. குராமலர் நறுமணம் வீசக், குயிலும் வண்டினமும் பாட, பொழில்களில் அரவம் ஆடும்; குருந்த மலரின் அரும்பும், குராமலரின் அரும்பும், அரவின் எயிற்றை ஒக்கும். மாதர்களின் இடைக்கும், அல்குலுக்கும் பை அரவும் பட அரவும் உவமிக்கப்பட்டுள்ளன.

(2) சிலந்தி

சிலந்தி செய்த குற்றத்தையும் குணமாகக்கொண்டார் சிவபெருமான். சிலந்தி தன் வாய்நூல் கொண்டு சித்திரப் பந்தல் ஒன்றைப் பெருமானுக்கு நிழல் தர அமைத்தது. அதைக் கண்டு மகிழ்ந்த பெருமான் அந்தச் சிலந்தியின் மறுபிறப்பில் அதைச் சுருண்ட செஞ்சடையுடைய சோழனைப் பிறப்பித்தார். இந்தச் சோழன்தான் கோச் செங்கட் சோழன்.

## II. நீர் வாழ்வன [261-II]

(1) ஆமை

சிவபிரான் அணிந்துள்ள (ஓட்டுக்கு உரிய) ஆமை இளஆமை, எழில் ஆமை என்று கூறப்பட்டுளது. அதை அவர் தமது மார்பில் தாலிபோல அணிந்துள்ளார்.

(2) தேரை

யானைப்படை முதலான படைகளுடன் உலகம் யாவற்றையும் ஆளும் ஆட்சியும் ஈற்றில் (பெண்) *தேரையின் வால்போல மறைந்துபோகும் தன்மையதே.

(3) நண்டு

அலவன், ஞெண்டு, நள்ளி—என்பன நண்டைக் குறிக்கும்.

கழனியில் வண்டு இசைபாடத், தாமரை மலரில் நண்டு உறங்கும்.

(4) மீன் வகைகள்

கயல், கிளி, குருவி, கெண்டை, சள்ளை, சுறவம், சேல், மகரம், மலங்கு, வரால், வாளை—எனும் மீன் வகைகள் குறிக்கப்பட்டுள.

(i) கயல்

கயலும் சேலும் வயல்நீரில் விளையாடும். எருமை நீரில் இறங்கக் கயல்மீன்கள் தாமரைமலரை நெருங்கி ஒதுங்கும்; அப்போது மலர்மீதிருந்த வண்டின் கூட்டம் கலைந்து ஓடும்.

எருதின் இடிபோன்ற முக்காரத்தைக் கேட்டு அச்சம் கொண்டு கயல்மீன் தாமரையில் ஒதுங்கி மறையும்; வண்டு மகிழ்வுண்டு 'பண்பாடக் கயல் மீன் வயலில்' துள்ளிப்பாயும்.

---

* தேரை பிறக்கும்போது மீன் உருவாய் வால் தெரியும்; பின்பு தவளை உரு வந்தவுடன் வால் மறைந்துபோகும் என்ப.

(ii) கெண்டை

கயல், சேல், இளவாளை இவை ஒன்றோடொன்று இணங்கி நீரிற் பாய அவையுடன் சேர்ந்து கெண்டையும் துள்ளி விளையாடும்; உமையம்மையின் கண்ணுக்குக் கெண்டை உவமை கூறப்பட்டுளது.

(iii) சள்ளை

வள்ளைக் கொடியின் வெண்மலரைக் குருகு (நீர்ப் பறவை) என அஞ்சிச் சள்ளைமீன் கலக்கம் அடைந்து துள்ளிப் பாய்ந்து வாளையின் வாயில் விழும்.

(iv) சுறவு, மகரம்

திருமறைக் காட்டில் (வேதாரணியத்தில்) கடல் அலைகள் சுறா மீனையும் மகர மீனையும் கரையில் உள்ள தகரம் எனப்படும் மரத்திடையிலும், ஞாழற் செடி (புலிநகக் கொன்றை) நீழலிலும் அடித்து வந்து ஒதுக்கும்.

(v) சேல்

சேல்மீன் கயல்களுடன் வயலில் விளையாடும்; அகழி களில் சேலும் வாளையும் பாய்ந்து ஓடும்; மாதர்களின் கண்ணுக்குச் சேல்மீன் உவமிக்கப்பட்டுளது. எருமைகள் சேற்றை எறிந்து நீர்நிலைகளிற் பாயச், சேலும் வாளையும் பாய்ந்து ஓடும்.

(vi) மகரம்

சிவபிரான் அணிந்துள்ள குழை மகர மீனின் வடிவு கொண்டது. மகர மீனும் சுறா மீனும் கடல் அலைகளாற் கரைக்குத் தள்ளப்படும் (வேதாரணியத்தில்).

(vii) மலங்கு

வாளை மீன் பாய்ந்தால் மலங்கு, இளங்கயல், வரால் எனப்படும் மீன்கள் குதித்து ஓட்டம் பிடிக்கும்.

(viii) வரால்

அகழிகளில் வரால்மீன் குதித்து விளையாடும்; வாளை மீன் பாய்ந்தால் வரால் மீன் குதித்து ஓடிவிடும்.

(ix) வாளை

வள்ளைக் கொடியின் வெண்மலரைக் குருகு என அஞ்சிக் கலங்கின சள்ளை மீன் துள்ளி ஓடி வாளையின் வாயில் விழும்.

நீரில் எருமை படிய வாளை யாதிய மீன்கள் பாய்ந்து ஒதுங்கும்.

வாளை வெண்ணிறத்தது; எருதின் முக்கார ஒலிகேட்டு அஞ்சி வாளையும் வராலும் குதிகொண்டு ஓடிவிடும்.

(5) முதலை

பெருமானே! உண்ட பிள்ளையை முதலை கொண்டு வந்து கரையிற் கக்கும்படி காலனுக்குக் கட்டளையிட்டருள் —எனச் சுந்தரர் இறைவனை வேண்டுகின்றார்.

(6) பல்லுயிர்

நீரில் பல்வகைத்தான உயிர்கள் வாழ்கின்றன.

## III. பறவைகள் [261-III]

(1) அன்றில்

திருவாரூர்ச் சோலைகளில் அன்றிற் பறவைகள் அடைந்திருந்தன.

(2) அன்னம்

நீர்நிலைகளில் தாமரை மலர்மீது அன்னங்கள் ஏறி விளையாடும்; பொழில்களில் நடைபயிலும்; அன்னப் பெடை சேவலொடு ஊடும், பின்பு கூடும். காவிரிக்கரையில் அன்னங்கள் இருந்தன.

கயல், சேல், வாளை, கெண்டை ஆகிய மீன் வகைகள் பாய்தலையும் துள்ளுதலையும் கண்டிருந்த அன்னம் வேதனையுற்றுப் பின்னர்த் தெளிவு அடையும்.

அன்னங்கள் அழகிய ஒழுங்கான நடையை உடையன.

குயில் கூவ அன்னத்துடன் மயில்கள் ஆடும். நெல்வாயில் என்னும் தலத்தில் அன்னப் பறவைகள் நிரம்ப இருந்தன.

பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்தில் 'அன்ன தீர்த்தம்' என்னும் பொய்கை விளங்கிற்று. அன்னம் (பிரமன்) எங்குத் தேடியும் காணுதற்கரியராய் நின்றார் இறைவர்.

ஆரூர்ப் பெருமானை உணர்த்தத் தலைவி அன்னத்தைத் தூது அனுப்புகின்றாள்.

(3) ஆந்தை

மரப்பொந்தில் ஆந்தைகளும் கோட்டான்களும் [கோடி (குழகர் கோயில்) என்னும் தலத்தில்] கூவின.

திருப்புகலூர், திருப்புனவாயில் என்னும் தலங்களில் (மரப்) பொந்துகளிலிருந்து ஆந்தைகளின் பாட்டு ஓயாது கேட்கப்படும்.

(4) ஈ

ஈக்குக்கூட ஈயாதவனை வள்ளல் என்று வாழ்த்தினும் அவன் கொடான்.

(5) காகம்

பொன்மலையைச் சார்ந்த காக்கை பொன்னும்–என்பது பழமொழி.

(6) கிளி

i. கிளி வாழைப் பழத்தைக் கீறி உண்ணும்; சொற் பயின்று (இறைவனைத்) துதிக்கும். திருநின்றியூர் என்னும் தலத்திற் கிளிகள் செந்தமிழ் பயின்றிருந்தன. தேவி திருக் கரத்திற் பந்தும் கிளியும் தங்கும்.

ஆரூர்ப் பெருமானை உணர்த்தத் தலைவி கிளியைத் தூது அனுப்புகின்றாள். கிளியின் பேச்சு மாதர்களின் பேச்சுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீசைலத்துத் தினைப்புனத்தில் காவல் காத்த பெண், கிளிகளை நோக்கி—

> "ஏ! கிளிகளே! அன்று வந்து உண்டீர்கள்; போனால் போகட்டும் என்று சும்மா இருந்தேன். நீங்கள் எப்போதும் இதுவே தொழிலாய் வந்து உண்பீராகில் என் உறவினர் என்மீது கோபிக்காது இருப்பார்களா!"

என்றுகூறி ஓடிக், கிளிமீது கவண்கல்லை விட்டு எறிவாள்.

கிளி கதிர் கொய்வதைக் கண்டு 'என்ன! இந்தக் கிளி என்னை மதிக்கவில்லையே' என்று கூறிக் கவண்கல்லை வீசிக் கிளியை வெருட்டி ஓட்டுவாள். 'ஆயோ' என்று கூச்ச லிட்டும் கிளி போகாவிட்டால் கவண்கல் வீசப்படும்; கிளிகள் பாடிக்கொண்டே ஓட்டம் பிடிக்கும்.

ii. கிளிகள்-கன்னிக்கிளி, செவ்வாய்க்கிளி, தென்னற் கிளி, பசுங்கிளி, பிள்ளைக்கிள்ளை, பைங்கிளி—என விளக்கப் பட்டுள்ளன.

(7) குயில்

(காவிரி நதியின் கரையில் உள்ள மரக் கொம்புகளின் மேல் இருந்து) குயில் கூவ, பாட, மயில் ஆடும்; கூவும்; குயில் தன் சேவலொடு விளையாடும்; பொழில்களில் குயிலும் வண்டும் பாடப் பாம்பு ஆடும்.

(வெஞ்சமாக் கூடல் என்னும் தலத்தில்) மா, புன்னை, ஞாழல், குருக்கத்தி ஆகிய மரங்களின் மேலிருந்து குயில் ஓயாது கூவும். குயிலின் குரல் கங்காதேவியின் மொழிக்கு உவமிக்கப்பட்டுள்ளது. ஆரூர்ப் பெருமானை உணர்த்தக் குயிலைத் தூது அனுப்புகின்றாள் தலைவி.

(8) குருகு (நீர்ப்பறவை)

வயல்களிற் பெண்கள் இறங்கி மீன்களைச் சேர்க்கக், குருகினங்கள் பறந்து ஓடிப்போம். கடலைச் சார்ந்த கழிக்கு

அருகில் உள்ள தாழைமடலிடையே வெள்ளைக் குருகுகள் தங்கும்; குருகுகள் பாய்வதால் கரும்புகள் நெரிதலுண்டு சாறுதரும். சள்ளை எனப்படும் மீன்கள் வள்ளைக் கொடியின் வெண் மலரை வெள்ளைக் குருகு என அஞ்சும். ஆரூரரை உணர்த்தத் தலைவி குருகைத் தூது அனுப்புகின்றாள்.

(9) குருவி

புனங்களில் குருவிகள் ஓட்டப்படும்.

(10) கூகை

மரப்பொந்தில் ஆந்தையுடன் கூகைகள் (கோட்டான்கள்) கூச்சல் இடும்.

(11) கொக்கு

கொக்கின் இறகை இறைவர் தமது சடையிற் சூடியுள்ளார்.

(12) கோழி

புதர்களில் மேய்ந்த கோழி புற்றின்மேல் ஏறிக் கூகூ என்று கூவி அழைக்கும் (திருப்புனவாயிலில்).

(13) சக்ரவாளம்

சக்ரவாளப் பறவையை (பேடையையும் சேவலையும்) ஆரூரரை உணர்த்தத் தலைவி தூது அனுப்புகின்றாள்.

(14) சேவல்

அன்னச் சேவல், குயிற்சேவல், சக்ரவாளச் சேவல் கூறப்பட்டுள.

(15) நாரை

நாரைகள் சோலைகளில் தங்கும். நாரையின் சிவந்த கால்கள் தினையின் தாள்போல இருக்கும்.

ஆரூரர்க்குத் தனது நிலையை உணர்த்தத் தலைவி நாரையைத் தூது அனுப்புகின்றாள்.

நாரை - செங்கால் நாரை, தூவி வாய் நாரை, வெண் நாரை என விளக்கப்பட்டுளது.

(16) **பறவை** (பொது)

பறவைகள் பேடையுடன் சோலையில் தங்கும், ஒலி செய்யும். ஒரு புள்ளின் வாயைத் திருமால் கிழித்தார்.

(17) **பாறு** (பருந்து)

பரணர் கையில் உள்ள வெண்டலையைப் பருந்து நெருங்கும்.

(18) **பிள்ளை** (நாகணவாய்ப்புள்)

இதன் பேச்சு பெண்களின் பேச்சுக்கு உவமை கூறப் படும்.

(19) **புறு**

கள்ளிச் செடியிடையே பிறக்கும்; அதன் கிளையில் ஏறித் தன் பேடையை அழைக்கும்.

(20) **பூவை** (நாகணவாய்ப்புள்) 'பிள்ளை' பார்க்க

ஆரூரர்க்குத் தன் நிலையை உணர்த்தத் தலைவி பூவையைத் தூது அனுப்புகின்றாள்.

(21) **மயில்**

யானை சுனைநீரைத் துதிக்கையால் மொண்டு மழை போலச் சொரிய (ஈரமான) நிலத்தை மயில் கிளைக்க மணிகள் (வெளிப்பட்டு) சிந்தும் (திருக்கேதாரத்தில்); மயில் இனங்கள் மேய்ந்து சுனைநீரைப் பருகித், (தினவுபோக) மரங் களில் உராய்ந்து பொழிலினுள் நுழைந்து மாஞ்சோலை நிழலில் துயில் கொள்ளும் (ஸ்ரீசைலத்தில்); அவை பொழிலில் உள்ள தேனைப் பருகும்.

மயிலின் அழகிய பீலிகள் ஆற்று வெள்ளத்தில் அடி பட்டு வரும்; அழகிய பொழில்களில் கூரிய வண்டுகள் பண்பாட, அழகிய மயில்கள் நடனம் புரியும்; வன்பார்த்

தான் பனங்காட்டூரிலும், கானாட்டு முள்ளூரிலும் சோலைகளில் மயில்கள் நிறைந்திருந்து கூவின. தோகை மயிலின் சாயல் கொண்ட மாதர்கள் நாகபட்டினத்தில் நடனம் ஆடினர். மயிலின் சாயல் மாதர்களின் சாயலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது; மாதர்கள் கலாப மயிலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளார்: நெல்வாயில் அரத்துறையில் நிகரிலா மயிலின் சாயல் கொண்ட மாதர்கள் வாழ்ந்தனர்; (வட) திருமுல்லைவாயிலில் மயிலின் சாயலைக்கொண்ட மாதர்கள் அருமையான நடனங்களை ஆடினர். மயில் முருகவேளுக்கு ஊர்தி. மரங்களின்மீது இருந்து மயில்கள் கூவும்.

அணிமயில், ஆலும் மயில், கலவ மயில், கான மஞ்ஞை, தணிமயில், நிகரில் மயில், நிலவும் மயில், பேடை மஞ்ஞை, மாதார் மயில், மாமயில்—என மயில் வர்ணிக்கப்பட்டுளது.

## (22) வண்டு

### (i) வண்டும் இசையும்

*சுரும்பும் வண்டும் இசை முரலும்; *தேனும் வண்டும் மதுவுண்டு இன்னிசை பாடும்; பொழில்களில் வண்டுகள் நாதகீதம் ஓதும்; தேனை விரும்பி இசை மிழற்றும்; வயல்களில் புதிய நறுமணத்தை நுகர்ந்து இசைபாடும்.

### (ii) வண்டும் எருமையும்

நீரில் எருமை இறங்கக் கயல் மீன்கள் தாமரையை நெருங்கி அண்டும்; அப்போது தாமரை மலர்மீதிருந்த வண்டினம் பறந்து ஓடிப்போம்.

### (iii) வண்டும் குயிலும்

குயிலும் வண்டினங்களும் பாடப் பாம்பு ஆடும்.

### (iv) வண்டும் தேவியும்

தேவியின் கூந்தலின் நறுமணத்துக்காக வண்டுகள் மொய்க்கும்.

* சுரும்பு - ஆண் வண்டு; தேன் - பெண் வண்டு.

(v) வண்டும் மயிலும்

வண்டு பண்பாட அழகிய மயில்கள் நடனம் ஆடும்.

(vi) வண்டும் மலரும்

அல்லி, காவி, குரா, குருக்கத்தி, குல்லை (துளசி), கொன்றை, செண்பகம், தாமரை, புன்னை, மல்லிகை, மவ்வல், மாதவி, முல்லை, வகுளம் ஆதிய மலர்களின் நறுமணத்தை நுகரவும், தேனை உண்பதற்காகவும், வண்டுகள் நெருங்கிச் சேரும், திரியும், தங்கும்; தேனைஉண்டு பண்பாடும், யாழ் செய்யும்; மலரிடை உறங்கும்.

(vii) வண்டும் யானையும்

யானையின் (மதநீர்க்கருகே) வண்டு மகிழ்ந்து ஒலி செய்யும்.

(viii) வண்டு விடு தூது

தன்னைக் காமத்தீ உண்பதை ஆரூர்ப் பெருமானுக்கு உணர்த்தத் தலைவி வண்டைத் தூதாக அனுப்புகின்றாள்.

(ix) வண்டு பாடுதல், மதுவுண்டு பாடுதல், பண்பாடுதல்

மதுவுண்டு தாமரை மலர்மீது வண்டு பண்பாடும்; வண்டுபாட அதன் ஒலி விண்ணில் கேட்கும். வண்டுபாட கொன்றை மலரும். பாளைப் பைங்கமுகு, இளந்தெங்கு பூவைகளின் மதுவைப் பருகிக் காளை வண்டுகள் பாட மயில் ஆடும்.

(x) வண்டு யாழ் பாடுவது

கேதீச்சரம் - மாதோட்டத்தில், திருஆரூரில் வண்டு யாழ் செய்யும்.

(xi) வண்டின் வர்ணனை

அறுகால் வண்டு, களியார் வண்டு, காரூர்க் களிவண்டு, காளை வண்டு, கொங்கணை வண்டு, கோதிய வண்டு, சிறை வண்டு, தேன் வண்டு, நீலவண்டு, பாடல் வண்டு, பூ ஞுலா

வண்டு, பெடை வண்டு, பொறி வண்டு, வரிவண்டு—என வண்டு வர்ணிக்கப்பட்டுளது.

(xii) வண்டைக் குறிக்கும் சொற்கள்

அளி, அறுகால், அறுபதம், *ஞிமிறு, சுரும்பு, தேன். சுரும்பொடு வண்டு, தேனும் ஞிமிறும் தேனும் வண்டும்—என வருவதால், சுரும்பு, தேன், ஞிமிறு - இவை வண்டின் வகைய என்பது பெறப்பட்டது.

## III-ஏ. மக்கள்

[தலைப்பு 206 பார்க்க]

## IV. விலங்குகள் [261-IV]

(1) ஆளி

குகையுள் இருந்து முழங்கும்; யானையைக் கொல்லும் திறம் கொண்டது.

(2) எருமை

குளங்களிற் படிந்து கண் அயரும்; கழனியில் உள்ள செந்தாமரை மலர்களை மேயும்; எருமைகள் நீரில் இறங்க, நீரில் உள்ள கயல் மீன்கள் தாமரை மலர்களை அணுக, மலர்களில் உள்ள வண்டுகள் சிதறிப் பறந்துபோம். எருமைகள் சேற்றைச் சிதறிக் குளத்திற் படிய அங்குள்ள சேல் மீன் கூட்டமும், வாளைகளும் பக்கத்தில் உள்ள வயல்களிற் பாயும்.

(3) கரடி

தினை வளரும் மலைச்சாரலில் திரியும்; பொழில்களிற் கிடைக்கும் தேனை உண்ணும்.

(4) கவரி

இதன் மயிர் ஆற்றில் அலையுண்டு வரும்.

---

* ஞிமிறு - தேனீ; பொன்வண்டு.

(5) கழுதை

உயர்ந்த குங்குமத்தைச் சுமந்து இளைப்புறினும் கழுதைக்குப் புகழ் கிட்டாது.

(கழுதையை உலகோர் புகழமாட்டார் என்றபடி).

(6) குதிரை

பரிமா, புரவி, மா - என்பன குதிரையைக் குறிப்பன. காற்றின் வேகம் கொண்ட கடிய குதிரைகள் உண்டு. (திரிபுரம் எரித்தபோது) வேதங்கள் குதிரையாய் அமைந்தன.

(7) குரங்கு

1. கடுவன், கலை, திரங்கல் முகவன், மந்தி, முசுக்கலை, வானரம் - என்பன குரங்கைக் குறிப்பன.

2. கூழைக் குரங்கு, கூழை வானரம் - என்பன குட்டையாயுள்ள குரங்குகளைக் குறிக்கும்.

3. (i) குரங்குகள் சோலைகளிலும் வயல்களிலும் குதி கொள்ளும்.

(ii) குட்டைக் குரங்குகள் தாழைப் பொழில்களில் உள்ள இடைவெளியில் நுழைந்து வாழைப் பழங்களைப் பறித்து உண்ணும் (வேதாரணியத்தில்).

(iii) மரங்களில் இருந்து மயில்கள் ஓசை செய்யக், குரங்குகள் மண்டபத்தின் மீதும், மாடமாளிகை மீதும், கோபுரத்தின் மீதும் பாய்ந்து புகும் (திருப்பனையூரில்).

(iv) ஆண் குரங்கு உண்ணப் பழங்களைத் தேடிச் சென்ற மலைப்புற மந்திகள் (பெண்) குரங்குகள், முன்ன தாக இறைவனை அடி தொழும் (விருத்தாசலத்தில்); சில புட்பம் இட்டுச் சந்திகள் தோறும் இறைவனை வழிபடும் (அவிநாசியில்).

(v) மூலைகளை உண்டு தழுவும் குட்டியுடன் முசுக் கலைகள் (கருங்குரங்குகள்) சிறு காட்டிடையே பாய்ந்து ஓடும் (திருக்கழுக்குன்றத்தில்).

(vi) திருமுருகன் பூண்டியில் கருங் குரங்குகள் போன்ற பல வேடர்கள் வாழ்ந்தனர்.

(vii) கிடைத்த வாழைப் பழங்களையும், தேன்நிறைந்த பலாச் சுளைகளையும் குட்டை வானரங்கள் கூறுபோட்டுப் பங்கிட்டதில் என் பங்கு சிறிது, (உன் பங்கு பெரிது) என்று கூறித் தமக்குள்ளே வாதம்செய்து தாழைத் தண்டு, வாழைத் தண்டு கொண்டு ஒன்றை ஒன்று அடித்துப் போரிட்டுத் தத்தம் வீறுப்பைக் காட்டும் (திருவாஞ்சியத்தில்).

(8) சிங்கம் - சீயம் - மடங்கல்

சிங்கத்தைப் பிடிப்பது கஷ்டமானது. இறைவனைத் 'தேவர் சிங்கமே' என அழைக்கின்றார் சுந்தரர் [இறைவனைப் பிடிப்பது அருமையாதலின் போலும்]. மாதவர்களின் வேள்வியில் வந்த சிங்கத்தை உரித்து, உரியை இறைவர் போர்த்துள்ளார். திருவீழிமிழலையில் இறைவன் வீற்றிருக்கும் விமானம் சிங்க ஆசன விமானம்.

(9) நரி - ஓரி

சுடலையில் வெண்டலைகளை ருசிபார்த்து உமிழும்; பிணங்களின் உடலைக் கீறும்; காடுகளில் வசிக்கும்; (சுடலையில்) பேய் மகிழ்ந்தாட ஓரி (முதுநரி) ஊளையிடும்; தனது கள்ளக் குணத்தால், பேராசையால், நரி கையில் இருந்த உணவையும் இழந்த கதை—*நரி விருத்தக் கதை—குறிக்கப்பட்டுளது.

---

* "நரிவரால் கவ்வச் சென்று நற்றசை இழந்த தொத்த,"
"நரி விருத்தம தாகுவர் நாடரே"

—அப்பர் 4-27-5; 5-100-7.

தசையைக் கவ்விச் சென்ற நரி நீரில் அத்தசையின் நிழலைப் பார்த்து, அதைக் கௌவவேண்டி, வாயில் இருந்த தசையைக்

(10) நாய்

கோலின் நுனியை வாயிற் கவ்விச் சென்று குருடர்க்கு வழிகாட்டும்; வீட்டு வாசலின் முன்னிலையில் சென்று குலைக்கும்; நடுவே அங்கும் இங்கும் திரியும்.

(11) பசு - ஆ - ஆன் - பெற்றம்

பசுக்களைக் கொன்று தின்னும் பாவிகள் - அச் செயல் பாபச் செயல் என்று அறியாதவர்.

பசுவிற் கிடைக்கும் பால் - தயிர் - நெய், கோசலம், கோமயம் எனப்படும் ஐந்து பொருள்களும் இறைவனுக்கு உகந்தவை; அவை கொண்டு ஆட்ட இறைவர் உகப்பர்.

கறவைப் பசு கழனிகளில் உள்ள கழுநீர்ப் பூவைக் கவர்ந்து உண்ணும்; கன்றுகள் முட்டி உண்ணப் பால் சுரக்கும்; கன்றுகள் கரும்பின் முளையைக் கறித்து உண்ணும்.

பிரான் பசு வாகனம் உகந்து ஏறுவர்.

(12) பன்றி-ஏனம்-கேழல்-கோலம்

பன்றி பூமியைத் தோண்ட மணிகள் எரிபோலச் சிதறும்; பன்றியின் எயிற்றை (கொம்பை)ச் சிவபிரான் அணிவர்; பெருமானும் பன்றியாய்த் திருவிளையாடல் செய்தனர்.

(13) புலி - வேங்கை - உழுவை

காட்டில் வசிக்கும்; பாயும் திறத்தது; கொல்லும் குணத்தது; சிவபிரான் புலித்தோல் ஆடையர்.

---

கரையில் வைத்துவிட்டு நீரிற் குதித்தது; ஒரு காகம் கரையிலிருந்த தசையைக் கவ்விப் பறந்தது. நரி நீரில் தசையைக் காணாது, கரையில் வைத்த தசையையும் இழந்து, ஏமாற்றம் அடைந்தது.

—தேவார ஒளிநெறி அப்பர் தலைப்பு 176-5 பார்க்க.

இது அன்றி, ஒருநரி ஆடுபோல வேடம் பூண்டு ஆட்டு மந்தையிற் புக்குக் கேடு விளைத்தது; அதைக் கண்டவர்கள் நரியை நையப் புடைக்க அது இறந்தது—என்பதும் ஒரு கதை.

(14) மான்

1. மா, உழை, கருமான், கலை, புல்வாய், புள்ளிமான், மரை, மறி, மான்கன்று, மான்பிணை, மான்மறி—கூறப் பட்டுள.

2. மகளிர் கண்ணுக்கு மான் உவமை:

3. சிவபிரான் தனது இடது கையில் மானை (மான் கன்றை) ஏந்தியுள்ளார். கருமானின் (ஆண்மானின்) உரியையும் கொண்டுள்ளார். மான் தோலை உடுப்பார்.

4. மான் கொம்பு கூறப்பட்டுளது.

5. பெண் மான்கள் நிலத்தைக் கிளைக்க மணி சிந்தும்; மான் வகைகள் மேய்ந்தபின் சுனைநீரைப் பருகும்; மரத்தில் உராய்ந்து தினவைப் போக்கிக்கொள்ளும்; பொழிலில் நுழைந்து மாமர நீழலில் தூங்கும் (ஸ்ரீசைலத்தில்).

6. வேட்டுவரின் வில் அம்புக்கு அஞ்சி மான்கள் போய் ஒளித்துக்கொள்ளும்; கள்ளியும் வற்றிப், புல்லும் தீந்துபோம் கானத்தைவிட்டுப் புள்ளிமான் இனம் எங்கேனும் போய் ஒளிக்கும் (புனவாயிலில்).

(15) முயல்

'முயல் வலையில் யானை படும்' என்பது ஒரு பழமொழி.

(16) யானை

1. அத்தி, ஆனை, கரி, கருமான், களிறு, குஞ்சரம், பகடு, பிடி, மா, வேழம் - என்னும் சொற்கள் யானையைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

2. கரியானை, கொலைக்கை யானை, சிரமலி யானை, மத்த யானை, மதயானை, மால்யானை, வெள்ளை யானை; அழகானை, கான ஆனை, வெங்கண் ஆனை, வெஞ்சின ஆனை; கம்பமரும் கரி, கும்பமா கரி, கோலமார் கரி, செழுமால் கரி, வெம்மான மதகரி, போராரும் கரி, மதகரி, வெய்ய மாகரி; கம்பக் களிறு, கவளக்களிறு, கோடுயர் வெங்களிறு, துளைக்கைக்

களிறு, மும்மதக் களிறு, மூரிக்களிறு; கோளாளிய குஞ்சரம், பருத்தாள் வன்பகடு, கடமா, கைம்மா, மதமா, மைம்மா, முளைக்கைப்பிடி, மதவேழம்-என யானை விளக்கப் பட்டுளது.

3. யானைகள் காடுகளிலும் மலைகளிலும் உலவும்; கூட்டமாய்க் கன்றுகளுடன் திரியும்; முழக்கம் செய்யும்; போர் செய்யும்; கோபம் கொள்ளும், கொல்லும், (மும்) மதம் பொழியும்; பொழிகின்ற மதநீரில் வண்டுகள் மொய்த்து ஆரவாரம் செய்யும்.

(இந்திரனுடைய யானை) நான்கு தந்தங்களை உடையது; திருமால் ஓர் ஆனையின் கொம்பைப் பறித்தார்: தவமுனிவர் வேள்வியில் எழுந்த யானையைச் சிவபிரான் பிளந்து உரித்துத் தோலைப் போர்வையாகக் கொண்டார்; தொண்டைமா னுடைய யானையை முல்லைக் கொடியிற் சிக்கவைத்து அவனுக்கு அருள்புரிந்தார் இறைவர் (வட திருமுல்லை வாயிலில்); சுந்தரரைக் கயிலைக்கு அழைக்க வெள்ளை யானையை அனுப்பினார் சிவனார்; முருகவேளுக்கு ஆனையும் ஊர்தியாம். யானையின் தந்தம் (மருப்பு) வெண்ணிறத்தது.

'முயல் வலையில் யானை படும்' என்பது ஒரு பழமொழி.

4. யானையும் பிடியும் - அவைகளின் செய்கை.

(i) ஆண் யானைகள் எல்லாம் பெண் யானைகளின் கூட்டத்திற் சேர்ந்து திரியும், அப்போது அவைகளுடன் போகமுடியாமல் தனது இடத்தே இருக்கவேண்டி வந்த ஒரு பெண் யானை செவி தாழ்த்தி வருந்தி நிற்கும்; அதன் துயரத்தைக் கண்ட வேடர்கள் இலைகொண்டு (கல்லை) தொன்னை தைத்து, அந்தத் தொன்னையில் தேனைப் பிழிந்து அந்தப் பெண் யானைக்கு ஊட்டுவர் (ஸ்ரீசைலத்தில்).

(ii) ஸ்ரீசைலத்தில் ஆண் யானைகளும் பெண் யானைகளும் தேன் உண்டு களித்துத் திரியும்.

(iii) மலையிடையே ஆளி (சிங்க வகை) ஓர் ஆண் யானையைக் கொல்லக், குறவேடிச்சிகளின் கூவைவாயிலில்

இருந்த பிடி (பெண் யானை) அதை அறிந்து மனம் வருந்தி நின்றது (முதுகுன்றத்தில் - விருத்தாசலத்தில்).

(iv) திருக்கழுக்குன்றத்தில்: மும்மதம் கொண்ட ஆண் யானைகளின் பிளிறு அடங்கப் பெண் யானைகள் உடன் செல்லும்.

(v) மதவேழங்கள் மணிகளை வாரி எறியக் கிண் என்ற ஓசை எழும் (திருக்கேதாரத்தில்.)

(vi) மலைச் சாரல், பொழிற் சாரல் புறமாக வரும் யானைகள் (பிடிகள்) மலைப் பக்கங்களில் தம் மடிகளைக் கன்றுகள் இடிக்கப் பால் சுரந்து ஊட்டும்; தனக்கு உரிய ஆண் யானையை அழைத்துத் தேடி ஓடிய பெண் யானை பிளிறும்; அந்தப் பிளிறுதலைக் கேட்ட ஆண் யானை திகைத்து ஓடித் தன்னை விளித்த பெண்யானையைத் தேடி வரும் (ஸ்ரீசைலத்தில்).

(vii) நெடிய மலையிடத்தே மதயானைகளின் முழக்கமும் குகைகளில் உள்ள ஆளிகளின் முழக்கமும் ஓயாது கேட்கும் (திருமுதுகுன்றத்தில் - விருத்தாசலத்தில்).

(viii) "என்னைவிட்டு வேறோர் ஆண் யானையுடன் நீ சென்றாய்" என்று ஓர் ஆண் யானை தனக்குரிய பெண் யானைமீது கோபித்து, முகம் சுளித்து, மதம் பொழிய, அச் செயலைக் கண்ட பெண் யானை "இவ்வாறு என்மீது பழி சுமத்தலை என்னால் பொறுக்க முடியவில்லை, என் கற்புக்கு அயலார் சாட்சி உண்டு" எனத் தெளிவுபெறக் கூறிச் சத்தியம் செய்யும் (ஸ்ரீசைல மலையில்).

(ix) பெண் யானைகள் உபசார வார்த்தையுடன் முளை போன்ற துதிக்கையால் முதிர்ந்த மூங்கில்களை ஒடித்து ஆண் யானைக் கூட்டத்துடன் இருந்து சுனை நீர்களைத் தமது துதிக்கையால் மொண்டு மழைபோலப் பொழிய, (அந்த ஈரம் பட்ட) நிலத்தில் மயில்களும், பெண் மான்களும் கீறித் தோண்ட மணிகள் சிதறும் (திருக்கேதாரத்தில்.)

(x) வெள்ள நீரில் வெள்ளப் பெருக்கால் விளைக்கப்பட்டு வருந்தின ஆண் யானையின் முழக்கம் ஓயாத திருமுதுகுன்றம் (விருத்தாசலம்).

5. முருகவேளுக்கு ஊர்திகள் ஓர் அழகிய ஆனையும் மயிலும்.

(17) விடை

1. எருது, ஏறு, சே, பூணி, வேழம் - என்னும் சொற்கள் 'விடையைக்' குறிப்பனவாம்.

2. ஏறுவிடை, காய்சின விடை, கொல்லை விடை, செங்கண் விடை, பாயும் விடை, பொங்குமால் விடை, பொரு விடை, வெள் விடை; செழுங் கோட்டெருது, நடையுடை நல்லெருது, வெள்ளை எருது; குறுங்கோட்டிளஏறு, கொல்லைச் சில்லை வெள்ளேறு, ஆனிள ஏறு, நரை ஏறு, பட்டி ஏறு, புரை வெள்ளேறு, பைங்கண் ஏறு, போரேறு; செங்கண் சே; என விடை வர்ணிக்கப்பட்டுளது.

3. இறைவனை 'ஏறே' என அழைக்கின்றார் சுந்தரர்.

(18) விலங்குகள்

(i) மான் இனங்களும் மயில் இனமும் கலந்து, எங்கும் மேய்ந்து, சுனைநீர் பருகி, மரங்களில் உரிஞ்சித் தினவு போக்கி, பொழிலிற் புக்கு மாஞ்சோலை நீழலில் துயில் கொள்ளும் (ஸ்ரீசைலத்தில்)

(ii) மலைச்சாரலில் திரியும் கரடியும், மான் வகைகளும், பிற விலங்குகளும் பொழில்களில் தேன் உண்ணும்.

திருச்சிற்றம்பலம்

# அநுபந்தம்

சுந்தரர் வரலாற்றுச் சம்பந்தமாய்ப் பிற நூல்களினின்று கிடைக்கும் சில முக்கிய குறிப்புக்கள்:

## I

(திருவிசைப்பா-திருவாலி யமுதனார் அருளியது)

நெடிய சமணு மறைசாக் கியரு நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோ ரடையாத் தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
அடிக ளவரை யாரூர் நம்பி யவர்க ளிசைபாடக்
கொடியும் விடையு முடைய கோலக் குழக ளாடுமே.

[ஆரூர்நம்பி இசைபாடப் பெருமான் ஆடினர் என்னும் அரிய விடயம் இப் பாடலால் தெரிகின்றது.]

## II

ஞான ஆரூரரைச் சேரரை யல்லது நாமறியோம்
மானவ ஆக்கை யொடும்புக் கவரை வளரொளிப்பூண்
வானவ ராலு மருவற் கரிய வடகயிலைக்
கோனவன் கோயிற்பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்திலே.
—நம்பியாண்டார் நம்பி-திருத்தொண்டர் திருவந்தாதி. 86.

சுவாமிகள் மாநுட ஆக்கையொடுங் கயிலை சென்றனரென்பது இதனாலும்,

"களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவ ரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் னாடரங்கே."

எனவரும் திருவிசைப்பாவினாலும் தெளிவுறப் பெற்றாம்.

## III

தேவாரத்திலும், திருவந்தாதியிலும், பெரிய புராணத்திலுட 'சுந்தரர்' என்னும்பெயர் குறிக்கப்படவில்லை. ஆதலின், "சுந்தரர்," "சுந்தரமூர்த்தி" என்னுந் திருநாமங்கள் சுவாமிகள் கயிலையிற் கொண்டிருந்த 'ஆலாலசுந்தரர்' என்னும் திருப்பெயர்க் காரணமாக வந்தன போலும். கயிலையிலிருந்தபோது இறைவனுக்குச் சுந்தரர் செய்துவந்த திருத்தொண்டு கவரிவீசுதல் என்பது,

"அந்தகனை அயிற்சூலத் தழுத்திக் கொண்டார்
அருமறையைத் தேர்க்குதிரை யாக்கிக் கொண்டார்
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்
சுடுகாடு நடமாடு மிடமாக் கொண்டார்
மந்தரநற் பொருசிலையா வளைத்துக் கொண்டார்
மாகாளன் வாசல்காப் பாகக் கொண்டார்
தந்திரமந் திரத்தரா யருளிக் கொண்டார்
சமண்தீர்த்தென் தன்னையாட் கொண்டார் தாமே."

என்னவரும் அப்பர் சுவாமிகள் திருப்பாடலால் தெரியக் கிடக்கின்றது. [6-96-5]

## IV

(1)

* வேட்டுவ வேட மெடுத்து வழித்துணை மேவியிளங்
காட்டு முருங்கை யிலைகாய்நெய் பெய்து கறிசமைத்துப்
பாட்டு முழக்குவன் றொண்டருக் கன்னம் படைத்துநரை
மாட்டுதிப் போன் துடி சைப்பதி யுங்கொங்கு மண்டலமே.

—கொங்கு மண்டல சதகம்.

(2)

* சொல்லருங் கிராத வேடந் துணைவியுந் தானுங் கொண்டு
மெல்லவே நடந்து வந்து மேதினி புகழ வன்று
ஒல்லுநர் தம்மை நோக்கி யுயங்குத லொழித்தி யென்று
வல்லுரர் தன்னி னல்ல வழிதனைக் காட்டி யாங்கே.

* கடிய தான முட் கான முருங்கையி
னெடிய காயட காதிய நெய் சுவைப்
பொடி விராய பொறித்த புளிக் கின
முடிவி லாத முதிர்கறி பாகரோ.

—துடிசைப் புராணம்.

(3)

* நெட்டிசையின் தமிழ்முனிபூ சனையுகந்த
துடிசையில்வாழ் நிமலற் போற்றி
அட்டில்வினைப் புனமுருங்கை யடகவிநல்
லமுதுவிருந் தளிக்க வுண்டார்.

—அவிநாசிப் புராணம்.

---

* இது இறைவன் வேட்டுவர் உருக்கொடு ஆரூரருக்கு முன் தோன்றி வழிகாட்டித் துடியலூர்க்குள் புகுந்த சரித்திரத்தைக் குறிக்கின்றது. "செங்கண் வேடனு யென்னெடும் வந்து மருவி

* கிழவே தியவடி வாகி 'விருத்தையைக் கிட்டியென் றன்
அழகாகு மக்க ளடகுகொண் டம்பொ னருடி யென்றேற்
றெழுகாத லாற்றமிழ் பாடிய சுந்தரற் கீந்தவொரு
மழுவேந் தியவிகிர் தேசுரன் வாழ்கொங்கு மண்டலமே.

—கொங்கு மண்டல சதகம்.

* கொள்ளைவண் டிமிரு நாட்பூங் கோதையோர் பாகர் முன்பு
கள்ளமி லுள்ளத் தன்பு கனிந்துள கிழவி யார்பாற்
பிள்ளைக ளீடு காட்டிப் பெற்றசெம் பொன்னை யெல்லாம்
தெள்ளிய தமிழ்ப்பாச்சொன்ன திருத்தொண்டர்க்
குவந்தளித்தார்.

—வெஞ்சமாக்கூடற் புராணம்.

## VI

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

வழிவிடுத்த தொரு நதி[1]; யொண் பொன் கொணர்ந்த
தோ[2] ராறு; வரும்பொன் வாங்கிக்
கழிகொடுத்த தொரு [3]பொய்கை ; யளித்ததொரு
[4]கயங்கரவு கரந்த சேயை
மொழிவசத்திற் கவையோ, இப்[5]பரவை
யிணங்குவதரிது முதல்வா என்று
விழிதரித்தும் அரிகாணுப் பாதனைத்தூ
தேவினனை விழைந்து வாழ்வாம்.

—திருக்கழுக்குன்றப் புராணம்.

---

ஞன்தனை" என வாளொளி புற்றூர்த் தேவாரத்தில் வருவதும் ஈண்டு கவனிக்கற்பாலது. துடியலூரில் முருங்கைக்காய், முருங்கை யிலை இவைதமைக் கறிசெய்து சுவாமி சுந்தரருக்கு விருந்து அளித்ததும் இதனால் தெரிகின்றது.

*வெஞ்சமாக்கூடல் என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் விகிர் தேசுரர், தம்மாட்டுப் பத்தி முதிர்ந்த கிழவியிடம் தமது பிள்ளைகளை ஈடுகாட்டிப் பொன் வாங்கிச் சுந்தரருக்கு அளித்த சரித்திரத்தை இப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

1. திருவையாற்றுக்குப் போம் வழியிலுள்ள ஆறு. 2. மணி முத்த நதி. 3. திருவாரூர்க் கமலாலயம். 4. திருப்புக்கொளியூர் ஏரி. 5. கடல் என்னும் பொருள்படும் பரவை (நாச்சியார்.)